ஓம்

ஸ்ரீ ஸாயி பாபா

அருளிய

சாஸனுமிருத திரு மொழிகள்

ஸ்ரீ B. V. நரஸிம்ம ஸ்வாமிகள்
ஆங்கிலத்தில் எழுதிய

Sri Sai Baba's Charters என்னும் புத்தகத்திற்கு
வேலூர் வக்கீல் ஸ்ரீ சந்தானம் அய்யங்கார் அவர்கள்
தமிழ் மொழி பெயர்ப்பு

1943

...hed by
ALL INDIA SAI SAMAJ
MADRAS

 [Re. 1—4—0

ஓம்

ஸ்ரீ ஸாயி பாபா

அருளிய

சாஸனும்ருத திரு மொழிகள்

ஸ்ரீ B. V. நரசிம்ம ஸ்வாமிகள்

ஆங்கிலத்தில் எழுதிய

Sri Sai Baba's Charters என்னும் புத்தகத்திற்கு

வேலூர் வக்கீல் ஸ்ரீ சந்தானம் அய்யங்காா் அவா்கள்

தமிழ் மொழி பெயர்ப்பு

1943

Published by

ALL INDIA SAI SAMAJ

MADRAS

Re. 1-4-0

The
Liberty Press,
Madras.

ஸ்ரீ ஸாயி நாதர் சுபோதன மாலா

1-வது அத்தியாயம்

பாபாவின் உறுதி மொழிகள்

1. நீங்கள் இப்பொழுது உட்கார்ந்து கொண்டிருப்பது நம்முடைய துவாரகமாயி. இவள் தன் குழந்தைகளின் துன்பங்களையும் கவலைகளையும் போக்கடிக்கிருள். இந்த மசூதி ஆயி மிகவும் கருணையுள்ளவள். அவளிடம் பூர்ண நம்பிக்கைவைப்பவர்களுக்கு அவள் தாயாகிருள். அவர்களை அபாயங்களின்றும் காப்பாற்றுகிருள். அவள் மடியில் ஏறின மாத்திரத்தில் ஒருவன் கஷ்டங்கள் தொலைந்து விடுகின்றன. அவள் நிழலில் உறைபவள் ஆனந்தம் அனுபவிக்கிருள்.

*2. துவாரகாமாயியின் குழந்தைகளைப் பாம்புகள் ஏது செய்ய முடியும்? பாம்பு காணப்பட்டால், குழந்தைகள் களிப்புடன் பார்க்கின்றன. துவாரகாமாயி காப்பாற்றும்போது, பாம்பு குழந்தைகளைக் கடிக்குமா?

3. நாம் பயப்படத் தேவையில்லை. அது உன்னைக் கடித்து எப்படிக் கொல்ல முடியும் என்று நான் பார்க்கிறேன்.

---

* இதன் முழுவிவரம் 535-ல் பாபா சொல்கிருர்.

4. இது வெறும் மசூதி இல்லை. இது தான் துவாரகை. அவளிடத்தில் சரணமடைந்தவர் துன்பமடைவதில்லை.

5. இம் மசூதியின் படிக்கட்டுகளில் ஒருவன் ஏறும் போதே, அவனுக்குக் கர்மத்தால் ஏற்பட்ட துன்பங்கள் முடிவடைந்து, இன்பம் ஆரம்பமாகிறது. அந்தப் பக்கிரி (ஆண்டவன்) அளவிலாக்கருணை உள்ளவர். அவர் உன் கஷ்டங்களை நிவர்த்திக்கிறார்.

6. எப்போது ஒருவன் இந்தத் துவாரகாமாயிக்குள் பிரவேசிக்கிறானோ, அப்போதே அவன் எண்ணம் நிறைவேறுகிறது.

7. இந்த இடம் (துவாரகாமாயி) ரக்ஷிப்பதற்கு இருப்பது. தண்டிப்பதற்கு இல்லை.

துவாரகமாயி = மசூதி ஆயி = ஸாயி.

8. நான் எதுவும் செய்வதில்லை. எதுவும் வாங்குவதும் இல்லை. தத்தர் தம்முடையதைக்கேட்கிறார். அவர் தமக்குரியதான 15 ரூபாயைக் கேட்டு மசூதி ஆயிக்குக் கொடுத்தார். ஆகையால் அது என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

பாபாவின் உறுதி மொழிகள்

9. என் கண்ணோக்கம் எப்போதும் என்னை விசுவாசிப்பவர்மேல் இருக்கிறது. நீ எது செய்தாலும், எவ்விடத்தில் இருந்தாலும், இதைமாத்திரம் எப்போதும் கருத்தில் வை. நீ செய்யும் ஒவ்வொன்றையும், நான் எப்போதும் அறிகிறேன்.

10. எவன் என்னையே தியானித்து, என் நாமத்தையே ஜபித்து, என் லீலைகளையே பாடி, அதனால் என்மயமாகிறானோ, அவன் கர்மங்கள் நசிக்கின்றன. அவனருகில் நான் எப்போதும் இருக்கிறேன்.

11. நீ எப்போதும் சத்தியத்தை நாடி இருக்க வேண்டும். அப்போதுதான், நான் உன்னிடம் எப்போதும் இருக்கமுடியும். (நீ எங்கிருந்தாலும் சரி, எக்காலத்திலும் சரி.)

12. நீ என்னைக் குறித்து நினைக்கும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் நான் உன்னுடன் இருக்கிறேன்; பயப்படாதே.

13. ஒருவன் எப்போதும் என்னையே எண்ணி, என்னையே அடைக்கலமாக அடைந்தால், நான் அவன் கடன்காரனாகிறேன். அவனைக் காப்பாற்ற என் தலையையும்கூடக் கொடுக்கிறேன்.

14. எவனொருவன் தன் மனதில் என்னையே எண்ணி, எனக்கு அளிக்காத அன்னத்தைத் தொடானோ, அவனுக்கு நான் அடிமை. அவ்விதமே என்னைப் பசியும் தாகமுமாகக்கொண்டு, என்னைத்தவிர இதர வஸ்துவை முக்யமானதாகக் கொள்ளானோ, அவனுக்கு நான் அடிமை.

15. நான் பக்த பாரதீனன்; நான் பக்தர்களின் அடிமை; நான் விரும்புவது பக்தியே.

16. எவனொருவன் தன் மனைவி, மக்கள், பெற்றோர் முதலியோர் மேலுள்ள அபிமானத்தை (என்னிடம்) திருப்பி என்னையே நேசிக்கிறானோ, அவனே என் உண்மையான நண்பன். கடலில் கலக்கும் நதிபோல அவன் என்னுள் கலக்கிறான்.

17. (பாபா தம்மிடம் வந்த ஓர் பக்தனை நோக்கி)

பாபா:—என் பொக்கிஷத்தின் சாவி இப்போது உன் கையில் இருக்கிறது. உனக்கு வேண்டிய எதையும் கேள். மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய் அல்லது நூறு ரூபாய், வேண்டுமானாலும் உனக்கு நான் தருவேன்.

(பக்தன் ஒன்றும் கேட்காமல் இருக்க மறுபடியும்)

பாபா :—ஏதாவது ஒன்றைக் கேள். உனக்குக் கொடுக்கப் பிரியப்படுகிறேன்.

பக்தன் :—நான் கேட்கும் எதையும் நீர் கொடுப்பதான ஏற்பாடு தானே ?

பாபா :—ஆம்.

பக்தன் :—ஆனால், பாபா! இதைத் தான் நான் விரும்புகிறேன். இந்த ஜன்மத்திலும், இனி நான் அடையும் எந்த ஜன்மத்திலும், நீர் என்னை விட்டுப் பிரியக் கூடாது. என்னுடன் எப்போதும் இருக்கவேண்டும்.

பாபா :—சரி. நான் உன்னுடன் எப்போதும் இருப்பேன். நீ எப்படியிருந்தாலும், என்ன செய்தாலும் நான் உன் உள்ளிலும் வெளியிலும், இருப்பேன்.

18. என் பக்தன், என்னை உன்னிலும், தன்னிலும், சகல ஜீவராசிகளிடத்தும், பார்க்கிறான். ஆகையால்சர்வத்தையும் குருவாகப் பாவிக்கிறான். அவனே நானாகிறான்.

19. உன் கோரிக்கையின் லக்ஷ்யத்தையும், எண்ணங்களின் லக்ஷ்யத்தையும், என்னையே கொண்டாயானால், நீ பரமார்த்தமடைவாய். என்னை விரும்பி நோக்கினால் நான் கடாக்ஷித்தருளுகின்றேன். குருவினிடம் பூரண விசுவாசம் வை. அதுதான் சாதனம். குருவே தெய்வம்.

20. எவனொருவன், பூர்ணபக்தியுடன் முழு மனதையும் என்னிடம் வைத்து, என்னிடம் குடிகொண்டிருக்கிறானோ, அவன் தேகத்துக்காகட்டும், ஆத்மாவுக்காகட்டும், எவ்வகையிலும் பயப்பட வேண்டியதில்லை. எவன் எப்பொருளிலும் என்னையே பார்த்தும், என்னைக் குறித்த பேச்சுக்களைக் கவனித்தும். என்னையே தொழுதும் வருவானோ, அவன் சைதன்னியத்தை (கடவுளை) அடை

கிறான். எவன் என்னை நித்தியனுகவும், சுதனுகவும், புத்தனுகவும் தொழுகிறுனே, அவன் என்னையே அடைகிறுன்.

21. எவர் எப்போதும் என் நாமத்தை ஜபிக்கிறுர்களோ, அவர்கள் முக்தி யடைகிறுர்கள்.

22. உன் பூர்ணப் பிரேமையுடன், "ஸாயி" என்று மாத்திரம் சொல்; போதும். வெளி படாடோபத்தையும் முறைகளையும் நான் கவனிப்பதில்லை. உண்மையான பக்தனிடமே நான் வசிக்கிறேன்.

23. என் நாமத்தை ஜபி. என்னிடம் சரணமடை. ஆனுல் நான் யார் என்று மாத்திரம் அறிய விரும்பினுல், ஸ்ரவணமும் மனனமும் வேண்டும்.

24. நான் அசரீரியாகவும் சர்வ வியாபியாகவும் இருக்கிறேன்.

25. எவனொருவன் தன் சுமையை என்மேல் ஏற்றி, என்னையே எண்ணி இருக்கிறுனே, அவன் விஷயங்கள் யாவற்றையும் நான் ஏற்றுக்கொண்டு கவனித்துக் கொள்கிறேன். योगक्षेमं वहाम्यहम्

26. ஆம். உன் சுமையை என்மேல் ஏற்றலாம்.

27. என் பக்தர்களின் வீடுகளில் உணவுக்கும் உடுப்புக்கும் குறையொன்றுமில்லை.

28. பக்தர்களாகிய நீங்கள் என் குழந்தைகள். நான் உங்கள் பிதா. என்னிடமிருந்தே ஒவ்வொன்றையும் நீங்கள் அடையவேண்டும். ஆகையால் நீங்கள் அவ்விதமாகப் பேசக்கூடாது. (ஸாயி-கடவுள் இல்லை யென்று)

29. நீ ஏன் கவலைப்படுகிறுய்? - உன்னை நான் பாதுகாக்கிறேன்.

30. ஒன்றும் செய்யாமல் உட்காரு. தேவையானதை நான் செய்கிறேன். உன்னைக் கடைசி வரையில் நான் அழைத்துச் செல்வேன்.

31. (பகுபீர் என்பவரை நோக்கி) "பகுபீர்! போ. தேவையான ஒவ்வொன்றும் அளிக்கப்படும்."

(கானு என்பவரை நோக்கி) "கானு! உனக்கு வேண்டியதைக் கொடுப்பேன். மாங்கரின் பிள்ளைகளுக்கும் வேண்டியவை அளிக்கப்படும்.

32. நீ ஏன் பயப்படுகிறாய்? நான் அங்கே இல்லையா?

33. இவ்விடமே தங்கு. உன் வீடுபோல் பாவித்துக்கொள். கவர்னர் (G. S. K. யை) ஈட்டியால் குத்த வந்தான். அவனுடன் போராடி, வெருட்டித் துரத்தினேன். பிறகு, சமாதானம் செய்தேன். நான் இவ்விடம் இருக்கும்போது, எவரும் ஏன் பயப்படவேண்டும்?

34. இந்தக் குழந்தை தூங்கும்போது அதன் அருகில் நின்று விழித்திருந்து காவல் புரியவேண்டும்.

35. என் அடியார்களைத் தீங்கிற்கு ஆளாக்க மாட்டேன். (எப்போதும் என் அடியார்கள் எண்ணமே எனக்கு) ஒருவேளை என் அடியார்களில் எவனாவது விழ ஏற்பட்டால், என்கரங்களை நீட்டி, இவ்விதமாக நான்கு—(எண்ணிறந்த) கரங்களால், அவனைத் தாங்குகிறேன். அவனைக் கீழே விழவிடமாட்டேன்.*

36. நான் இதன் (தவளையின்) தந்தை. நான் இங்கே இருக்கிறேன். அதை அந்தப் பாம்பு விழுங்க விடுவேனா? அதன் விடுதலையை எப்படிச் செய்கிறேன் பார். பாம்பை நோக்கி, "ஓ! வீர பத்திரப்பா! வெட்கமில்லையா? உன்குரோதத்தை விட்டுவிடு" இது சொன்னவுடன் தவளையைக் கவ்வியிருந்த நாகம் விட்டு விட்டது. "என் சொல்லை நிறைவேற்றி, பசப்பாவை (தவளையை) வீரபத்திர (நாகம்) னிடமிருந்து காப்பாற்றி

* 301 சுலோகத்தில் முழுவிவரம் பார்க்க.

னேன். என்னைக் கடவுள் இங்கே அனுப்பி அவனைக் காப்பாற்றினார்.''

பசப்பா :—வீரபத்திரப்பா விஷயம் பாபா விவரமாய்க் கீழ்கண்டபடி 473-ல் சொல்கிறார்.

பாபா :—'' ஒருவனுடைய பாபங்கள் சாதுக்களின் அடி பணியும் வரையில் அவனை விடுவதில்லை. அதற்கு ஓர் கதை உண்டு'' என்று சொன்னார்.

ஒருநாள் காலை எட்டு மணி இருக்கும். நான் உலாவ வெளியே போனேன். ஆழமான ஓர் ஆற்றுக்கு வந்தேன். பக்கத்தில் ஒருவண்டிப் பாதையும், கால் நடைப்பாதையும் மரநிழல் அடர்ந்த ஓர் தோப்பும் இருந்தன. மிருதுவான காற்று வீசிக்கொண்டிருந்தது. மரநிழலில் உட்கார்ந்து, அடர்ந்திருந்த இலைகளின் பசுமையைப் பார்த்தேன். புகைபிடிக்கும் துணியை நீரில் நனைத்துக்கொண்டிருக்கும்போது, ஓர் தவளையின் கூக்குரல் கேட்டது. சக்கிமுக்கிக்கல்லால் குழாயில் நெருப்புப் பற்றவைத்தேன். அப்போது, அவ்வழியே ஒரு வழிப்போக்கன் வந்தான். என் அருகில்வந்து உட்கார்ந்து, என்னை நமஸ்கரித்து, தன் வீட்டுக்குவந்து சாப்பிட அழைத்தான். நானும் ஒப்புக்கொண்டேன். பிறகு அவன் என் குழாயில் நெருப்புப் பற்றவைத்து என்கையில் கொடுத்தான். தவளையின் கூக்குரல் அவன் காதில் விழவே, அதன் காரணத்தை அறிய விரும்பினான். நான் அவனை நோக்கி, "ஒரு தவளை ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. தன் சொந்த கர்மத்தின் கசப்பை ருசிபார்க்கிறது. நாம் முன் ஜன்மத்தில் எது செய்கிறோமோ, அதன் பலனை இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறோம். ஏன் விதியைக் குறித்துப் பிரலாபிக்கவேண்டும்'' என்று சொன்னேன் காரணத்தை அறிய அவன் கூக்குரல் வரும் பக்கமாகப்

போய்ப்பார்த்தான். "அந்தத் தவளே ஒரு பெரிய சர்ப்பத்தினிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதனுல் கூக்குரலிடுகிறது. அவர்கள் இருவரும் முன்பிறவியில் மிகவும் குரூரர்களாக இருந்தனர். அதன் பலனே அடைய, இந்த உருவத்துடன் இருக்கிருர்கள்" என்று சொன்னேன். வழிப்போக்கன் என்வார்த்தையின் உண்மையை அறிந்துகொன்டான். ஒரு பெரிய கருநாகம் ஒரு பெரிய தவளேயைத் தன்வாயில் கவ்விக்கொண்டிருந்தது. "இன்னும் பத்து அல்லது இருபது நிமிஷங்களில் இந்தத் தவளே முடிந்து விடும்" என்றுன். நான் பிரதியுத்தரமாக "நான் அதன் (தவளேயின்) தந்தை; இங்கே இருக்கிறேன். அந்தப் பாம்பு அதை விழுங்க விடுவேஞ? நான் அதை எப்படி விடுவிக்கிறேன், பார்!" என்று சொன்னேன். அவனேயும் அழைத்துக்கொண்டு கருநாகம் இருக்குமிடம் சென்றேன். அம்மனிதன் முன்னேபோய், கருகாகத்தைக் கண்டு, பயத்தால் நடுநடுங்கி என்னே நோக்கி, "அந்தப் பாம்பு இங்கேயும் வந்து நம்மையும் எதிர்க்கும். நாம் இவ்விடத்திலிருந்து ஓடிப்போவோம். நீர் அங்கே போகாதேயும்" என்றுன். பிறகு நான் சென்று, இரண்டையும் நோக்கி, "ஓ, வீர பத்திரப்பா! இப்போதும் உன் எதிரி பசப்பா, தவளேயின் உருவமான பின்பும், இன்னுமா உனக்கு அனுதாப மில்லே. நீயும் கருநாக மானுய். இன்னும வெட்கமின்றித் துவேஷம் பாராட்டுகிருயே. துவேஷத்தைவிட்டுச் சாந்தமடை" என்றேன்.

இந்த வசனத்தைக் கேட்டவுடன் கருநாகம் தவளேயை விட்டுவிட்டு அந்த ஆழமான நீரில் மூழ்கி மறைந்து விட்டது. தவளேயும் பறந்தோடி, மரப் பொந்தில் ஒளிந்து கொண்டது.

வழிப்போக்கன் அளவிலா ஆச்சர்யமடைந்தான். நடந்த சம்பவங்களின் விவரம் விளங்கவில்லை யென்றும் என் வசனத்தைக் கேட்ட கருநாகம் ஏன் தவளையை விட்டுவிட்டதென்றும், அவ்விருவரில் எவன் வீரபத்திரப்பன் என்றும், எவன் பசப்பன் என்றும், அவ்விருவருக்கும் இருந்த கக்ஷி என்னவென்றும், தனக்குச் சொல்லும்படியும் கேட்டான். நாங்கள் மறுபடியும் நிழலுக்குச் சென்று புகை பிடித்துக்கொண்டு, அவனுக்கு எல்லா விவரத்தையும் சொன்னேன்.

நான் இருந்த இடத்திலிருந்து 2 அல்லது 3 மைல் தூரத்தில், புனிதமான ஸ்தலம் ஒன்று இருந்தது. அவ்விடத்தில், பாழடைந்த மஹாதேவன் கோயில் ஒன்று இருந்தது. அதைச் சீர்படுத்த அவ்வூர் ஜனங்கள் தீர்மானித்தார்கள். தேவையான பணமும் சேகரித்தார்கள். ஒருபெரிய தனிகனைப் பொக்கிஷதாரனாக நியமித்தார்கள். அவன் சரியாக வரவு செலவுக் கணக்கு வைத்திருப்பவன். ஆனால் மகா அழுகண்டன். கட்டடம் பூர்த்தியாகவில்லை. திரவியம் மேலும் தேவையாயிருந்தது. ஆகையால் திரவியம் சேகரிக்க ஆரம்பித்தார்கள். ஓரிரவு ஆண்டவன் அழுகண்டன் மனைவிக்கு ஓர் கனவு உண்டாக்கினார். "இந்தக் கோயில் கட்ட நீ எவ்வளவு பணம் செலவு செய்கிறாயோ, அதற்கு நூறுமடங்காகச் சிவன் உனக்களிப்பார்" என்பதாகக் கனவு கண்டாள். அவள், தான் கண்ட கனவைத் தன் கணவனிடம் சொன்னாள். இது தன்னைச் செலவுக்கு ஆளாக்கும் என்று, அழுகண்டன் பயப்பட்டான். ஆகையால் இது வெறுங் கனவென்றும் அதன்படி நடக்க வேண்டியதில்லை யென்றும் சொல்லிப் பரிகசித்தான். "இல்லாவிட்டால் அந்தத் தெய்வம் ஏன் என்னிடம் சொல்லக்கூடாது? நான்

உனக்குத் தூரத்தில் இருக்கிறேனா?'' என்றான். மறுபடியும் ஆண்டவன் அவள் கனவில் தோன்றி, அவள் கணவனின் பணத்தைக் குறித்துக் கவனிக்க வேண்டியதில்லையென் தனக்குப் பிரியமிருந்தால், தன்னுடையதான ஏதாவது சிறியது ஒன்றைக் கொடுக்கலாம் என்றும் சொன்னார். அவளுக்குச் சொந்தமாய் ஸ்ரீதன நகைகள் இருந்தன. தான் மறுபடியும் கண்ட கனவைக் கணவனிடம் சொல்லி, தன் நகைகளை ஆண்டவனுக்குக் கொடுக்கும் தன் எண்ணத்தை வெளியிட்டாள். அந்த அழுகண்டன் இந்த வியாபாரத்திலும், கடவுளை ஏமாற்ற எண்ணங் கொண்டான். நகைகள் ஆயிரம் ரூபாய் பெறும். ஆகை யால், தானே அந்த நகைகளை எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாகக் கடவுளுக்கு ஓர் நிலத்தை விடுவதாகச் சொன்னான். ஆனால் அந்த நிலத்தில் அவனுக்கு அடமான பாத்தியந்தான் இருந்தது. துபாகி என்ற ஓர் எளிய ஏழை அந்த நிலத்தை அவனிடம் சுவாதீன அடமானம் வைத்திருந்தான். அதுவோ ஒன்றும் விளையாத கட லோரம் சார்ந்த கரம்பு நிலம். நன்றாய் விளையுங் காலத்தி லேயே ஒன்றும் விளையாது. இதை அவன் கோயில் பூஜாரி உபயோகப் படுத்திக்கொள்ளக் கொடுத்து விட் டான். பிறகு அவ்வூரில் கடுமையான காற்றுமழை உண்டாயிற்று. அவன் வீட்டின் மேல் இடி விழுந்து எரிந்து விட்டது. கணவனும் மனைவியும் இறந்தனர். மறு பிறவியில் அப் பணக்காரன் மதுராவில் பிறந்து வீரபத்திரன் என்று பெயர் கொண்டான். அவன் மனைவி ஒரு சிவன் கோயில் பூஜாரிக்கு மகளாய்ப் பிறந்தாள். கௌரி என்ற பேர் அடைந்தாள். துபாகி என்ற பெண் இறந்து புருஷனாய்ப் பிறந்து பசப்பா என்ற பெயருடன், பூஜாரிக்கு அபிமான புத்திரன் ஆனான். சிவன் கோவில்

பூஜாரி, எனக்கு ஆப்த நண்பன். புகை பிடிக்க என்னிடம் வருவான். அவன் குமாரத்தியான கௌரியும், என்னிடம் விசுவாசமாக இருந்தாள். பூஜாரி கௌரியை யாருக்குக் கலியாணம் செய்து கொடுப்பது என்று சிந்தித்தான். நான் சொன்னதாவது "கவலைப்படாதே. அவளைக் கலியாணம் செய்துகொள்ள ஒருவன் வருவான்" வீரபத்திரன் தன் ஏழைப் பெற்றோர்களை விட்டுச் சென்ற இடங்களிலெல்லாம் பிச்சை எடுத்துக் கொண்டு, முடிவில் பூஜாரி வீட்டுக்கு வந்து சேர்ந்தான். பிறகு கௌரியையும் கலியாணம் செய்து கொண்டான். வீரபத்திரனும் என் பக்தனுனன். ஆனல் அவன் கருத்து முழுவதும் பணத்தின் மேலேயே இருந்தது. தன் கலியாணத்துக்கு நான்தான் காரணன் என்றும், திரவியம் அடையவும் உதவ வேண்டுமென்றும் கேட்டான். "நிதானி. நற்காலம் வரும்" என்று சொன்னேன். கடலோரம் இருந்த கரம்பு நிலம் திடீரென்று விலையில் உயர்ந்தது. ஒரு லக்ஷம் ரூபாய்க்கு விற்றது. பாதிப் பணம் ரொக்கமாகச் செலுத்தி விட்டார்கள். மீதி தவணை ஒன்றுக்கு 2000 ரூபாயாக, 25 தவணைகளில் கட்டவேண்டியதாய் ஒப்புக் கொள்ளப்பட்டது. எல்லோரும் சந்தோஷத்துடன் சம்மதித்தார்கள். இந்தப் பணத்தைக் குறித்து பசப்பனுக்கும், வீரபத்திரப்பனுக்கும் சச்சரவு ஏற்பட்டது. பூஜாரியின் ஆஸ்திக்கு, சொந்தக்காரி கௌரியே என்று நான் சொன்னேன். தானே அதை அடையவேண்டியதென்றும், யாரும் அதில் பாத்தியம் கொண்டாடக் கூடாதென்றும் அவளும் கனவு கண்டாள். கௌரி என் உதவியை நாடினுள். அவளுக்கு உதவி செய்ய ஏழு கடலையும் தாண்டுவதானுலும் செய்வதாக வாக்குறுதி கொடுத்தேன். வீர

பத்திரப்பனும் பசப்பனும் சொத்து விஷயமாய்ச் யிட்டுக் கொண்டு என்னிடம் வந்தார்கள். வீரபத்திரப் ரப்பனைச் சமாதானப் படுத்த என் முயற்சி முற்றிலும் வீணாயின. என்னிடம் கோபங் கொண்டதோடு, வெறியனாகிப் பசப்பனைக் கண்டதுண்டமாக வெட்டி விடுவ தாகப் பயமுறுத்தினான். பசப்பனோ, பயங்காளி - பல ஹீனன். என் ஆதரவை அண்டினான். வீரபத்திரப்ப னின் கோபத்தினின்றும், பசப்பனைக் காப்பாற்றுவ தென்று தீர்மானித்தேன். வீரபத்திரப்பன் கோபவெறி கொண்டு என்னையும் மற்ற ஒவ்வொருவரையும் நிந்தித் தான். பிறகு வீரபத்திரப்பன் இறந்து இப்பிறவியில் நாகமாய்ப் பிறந்தான். பசப்பனும் இறந்து தவளையாகப் பிறந்தான். பசப்பனின் பரிதாபக் கூக்குரலைக் கேட்டும், என் சொல்லை நிறைவேற்றவும் எண்ணி, சர்ப்பமான வீரபத்திரப்பனிடமிருந்து, தவளையான பசப்பனைக் காப் பாற்றினேன். கடவுள் என்னை அனுப்பி, தன் பக்தனான ப்சப்பனைக் காப்பாற்றினார். இவை யாவும் கடவுள் லீலை.

37. பார்! உன் பொருட்டு உன் பாபங்களை நீக்க நான் அவஸ்தைப்பட வேண்டியதாய் இருக்கிறது. நீ சாக நான் விடேன். உன்னைச் சாக விடுவதற்குமுன் நான் இறப்பேன்.

நானா (ஓர் பக்தன்) சாக இருக்கிறான். ஆனால் நான் அவனைச் சாக விடுவேனா?

பக்கிரி (ஆண்டவன்) தாதா சாஹேபைக் (G. S. கபார்தே) கொல்ல எண்ணுகிறார். ஆனால் நான் இடங் கொடேன்.

(அன்னா என்னும் ஒரு பக்தரைப் பார்த்து) அன்னா! நான் ஒரு நிமிஷம் தாமதித் திருந்தால், இந்த மனிதன் S. B. நச்னே என்பவர்) நிச்சயமாய் இறந்திருக்க

வேண்டும். அந்தப் பித்தன் தன்கைகளால் அவன் தொண்டையைப் பிடித்துக்கொண்டான். ஆனால் நான் விடுவித்தேன். என்ன செய்வது? எனக்குச் சொந்த மானதை, நான் காப்பாற்றாவிட்டால், வேறுயார்தான் காப்பாற்றுவார்கள்?

38. அவன் என்னுடையவன்; என்னுடையவனே. அவனைச் சுமந்துகொண்டுபோக நான்தான் உத்தரவாதம். என்னைத்தவிர வேறுயார் அவனுக்கு?

39. (காலரா தேவதையைத் துரத்தியடித்தபிறகு) இப்போது நீ பயமில்லாமல் போ.

40. பகலும் இரவும் என் பரிஜனங்களை எண்ணி எண்ணி இருக்கிறேன். மேல்மேலும் அவர்களின் பெயரைச் சொல்லுகிறேன்.

பாபா :—(துமால் என்னும் பக்தரைநோக்கி,) பாவ்! நேற்று இரவு முழுவதும் நான் தூங்கவேயில்லை. உன்னையே எண்ணி எண்ணிப் படுத்திருந்தேன். அடிக்கடி உன்னை நான் பாதுகாக்கிறேன். இல்லாவிட்டால் என்ன நடக்குமோ—கடவுள்தான் அறிவார்.

41. நான் அவனை ஒருபோதும் மறக்கமாட்டேன். அவன் இரண்டாயிரம் மைல் தூரத்திற்கப்பால் இருந்தபோதிலும், நான் அவனை நினைத்திருப்பேன். அவன் இல்லாமல் நான் எதுவும் சாப்பிடுவதில்லை.

42. ஒருவரிடமும் நான் கோபம்கொள்வதில்லை. தன் குழந்தைகள் மேல் பெற்றதாய் கோபம் கொள்வாளா? சமுத்திரம் (தன்னைச்சேரும்) பல ஆறுகளுக்கு நீரைத் திரும்பி அனுப்புமா? நான் பக்தியை விரும்புகிறேன். நான் என்பக்தனின் அடிமை. பக்த பராதீனன்.

43. என் குழந்தைகள் உபவாசம் செய்யவும், பசியால் வருந்தவும், நான் எப்படி விடுவேன்?

44. வாருங்கள். ஐயா. மூட்டைகளாக உதியைக் கொண்டு போங்கள். வாருங்கள். உங்கள் அன்னையின் நிதியை வண்டிகளில் வாரிக்கொண்டு போங்கள்.

இங்கேபார். ஜனங்கள்வந்து (என்னை நோக்கி) "பாபாவே! கொடும்" என்கிறார்கள். "எடுத்துக்கொண்டு போங்களென்று நான் சொல்கிறேன். ஒருவரும் எடுத்துக்கொண்டு போவதில்லை."

45. என் ஆண்டவன், கேட்பவர் எல்லாருக்கும் தாராளமாகக் கொடுக்கும்படி எனக்குச் சொன்னார். ஆனால் ஒருவரும் நான் சொல்வதையாவது, புத்திமதியை யாவது கேட்பதில்லை. என் நிதி திறந்திருக்கிறது. அதிலிருந்து எடுத்துக் கொண்டுபோக ஒருவரும் வண்டிகளைக் கொண்டுவரவில்லை. தோண்டு என்று நான் சொல்கிறேன். ஒருவரும் எவ்விதக் கஷ்டமும் எடுத்துக்கொள்ளுவதில்லை. நிதியைத்தோண்டிஎடுத்துவண்டியில்ஏற்றிக்கொண்டுபோ என்று நான் சொன்னேன். அன்னையின் உண்மையான சரியான புத்திரர்களாய் இருந்து, உங்கள் களஞ்சியங்களைப் பூர்த்தியாகச் சேகரித்துக்கொள்ளுங்கள். நம்மால் (தேகவாழ்வால்) ஆவதென்ன? மண், மண்ணுடன் சேருகிறது: காற்று, காற்றுடன் சேருகிறது. இந்த வசதி மறுபடியும் வராது.

यात्येव यमुनापूर्णं समुद्रमुदकार्णवम् ।
अन्वेति रजतो या तु सा न प्रतिवर्तते ॥

46. <u>என் சொற்களில்</u> பூரண நம்பிக்கை வை. உன் எண்ணம் நிறைவேறும்.

"சமாதியிலிருந்துங்கூட ஸாயி பேசுகிறார்".

47. 15-10-18-ல் லக்ஷ்மணன் என்பவருக்கு பாபா சொன்னதாவது.

"நான் இறந்துவிட்டதாக ஜோக்
நினைக்கிறான் நான் ஜீவித்திருக்கிறேன்.
வந்து காலே ஹாரத்தியைச் செய்."

48. என்னுடைய ஒன்றே கால்ரூபாயை என்னிடம் கொடு.

49. என்னையே எவன் தஞ்சமாகச் செய்துகொள்வானோ அவனுடன் என்சமாதி பேசும்; அசையும்.

50. என் சமாதியிலிருந்தும் நான் ஊக்கத்துடனும் அதிக சக்தியுடனும் லீலைகள் புரிவேன்.

51. என் மஹா சமாதிக்குப் பின்னும், நீ என்னை நினைத்த க்ஷணத்திலேயே எவ்விடத்திலும் நான் இருப்பேன்.

52. உள்ளன்போடு ஒரு பக்தன் என்னைக் கூப்பிட்டவுடன், நான் பிரத்தியக்ஷமாகிறேன், பிரயாணம் செய்ய எவ்வித வண்டியும் எனக்குத் தேவையில்லை.

பாபாவின் காரியம்

53. சாதுக்கள் பக்தர்களுக்கு இம்மைக்குரியதும், மறுமைக்குரியதுமான நன்மைகளைக் கொடுக்க ஜீவித்திருக்கிறார்கள். டாக்டர் பிள்ளை இதற்காகப் பத்து ஜன்மங்கள் எடுக்கவேண்டியதில்லை. எல்லா நோவையும் பத்து நாளைக்குச் சகித்துக்கொள்ளலாம்.

54. பக்தர்களுக்கு அவ்வித நன்மைகளைக் கொடுக்க திருவருட்பேறு நான் வந்திருக்கிறேன்.

55. ஆசீர்வாதம் செய்வதேதான் என்காரியம்.

56. ஜனங்கள் பாபாவிடம் இவ்வுலக சாதனங்களுக்காகவும், (அதாவது, உத்தியோகம், திரவியம், குழந்தைகள், ரோக நிவாரணம் முதலியன) போவதை ஒரு பக்தன் ஆக்ஷேபனை செய்தான். பாபா அவனை

“ அப்படிச்செய்யாதே. என் மனிதர், அவைகளுக்காகத் தான் என்னிடம் வருகிறார்கள். அவர்கள் தங்கள் உள்ளங்களின் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். பிறகு உலக சவுக்கியம் ஏற்பட்டதும், என்னைப் பின்பற்றி, மேன்மேலும் அபிவிருத்தியடைகிறார்கள். அநேக காரணங்களால், என் ஜனங்களை வெகுதூரத்திலிருந்து கொண்டுவருகிறேன். அவர்களைத்தேடி, என்னிடம் கொண்டுவருகிறேன். அவர்கள் தாங்களே வருவதில்லை. அவர்களை என்னிடம் நான் கொண்டுவருகிறேன். எவ்வளவு தூரத்திலிருந்தாலும்,—ஆயிரம் மைல்களுக்கப்பால் என் மனிதர் இருந்தாலும், பக்ஷிகளின் கால்களில் நூலைக் கட்டி இழுப்பது துபோல அவர்களை நான் என்னிடம் இழுத்துக்கொள்கிறேன்.

57. (பாபா தம்மைச் சுட்டிக் காட்டிக் கொண்டு) (இங்கு இருக்கும்) இவன் ஒரு பிராம்மணன். சுத்தமான பிராம்மணன். பரிசுத்தமான பிராம்மணன். இந்தப் பிராமணன் லக்ஷக் கணக்கான ஜனங்களை சுப்ர மார்க்கத்திற்கு நடத்திச்சென்று, முக்தியடையச் செய்வார். இது ஒரு பிராம்மண மசூதி.

பாபாவின் மொழிகள்

பாபாவின் தன்மை, குணம், சக்தி முதலியவைகளை விளக்குவது

58. நான் கடவுள். (அல்லவா)

நான் மஹாலக்ஷ்மி. இந்த மசூதியில் உட்கார்ந்தபடியே நான் உண்மையையே பேசுகிறேன்.

(நான் பண்டரியில் இருக்கும் விடோபா.) போ. நான் பண்டரியில் இருக்கிறேன்.

(நான் கணபதி. தாயே!) கணபதிக்காக நீ கொடுத்த நைவேத்தியம் என்னைச் சேர்ந்தன.

நான் தத்தாத்ரேயர். நீ சர்வம் நிரம்பியா இருக்கிருய்? உன் ஊழ்வினையால் உனக்கு ஆண் சந்ததி ஏது? (கங்காபுரியில் தத்தர் முன் நீ செய்த பிரார்த்தனைக் கிணங்கி) இந்த தேகத்தைக் கிழித்து உனக்கு ஓர் மகனைக் கொடுத்தேன்.

நான் லக்ஷ்மி நாராயணன். கங்கைக்காக மற்ருேரிடம் போவானேன்? என் பாதங்களில் உன் கையைப் பிடி. இங்கே கங்கை பாய்கிறது.

உன் தியானத்தில் இந்த "ஸாயி" உருவத்தைக் கண்டாலென்ன? அல்லது லக்ஷ்மி நாராயணனின் உருவத்தைக் கண்டாலென்ன? (வித்தியாசம் ஒன்றுமே இல்லை என்றபடி)

(நான் மாருதி.) என் தந்தை என்னை மாருதிக்கு அர்ப்பணம் செய்து விட்டார். நான் அவருடைய சகோதரன் என்று சொல்லி, அவர் தேவாலயத்திற் கெதிரில் (ஜாடைகளால் அவர் சகோதரன் என்று தெரிவிக்கிறேன்.)

59. (நான் கிருஷ்ணன்). ஸாயி பாபா துவாரகாமாயியில் உட்கார்ந்தவராய், உத்தேசவ புவா என்பவரை நோக்கி, "ரூபாய் 11. எனக்குத் தக்ஷணையாகக் கொடு"

உத்தேசவ புவா :—அப்படியே பாபா, என் பத்து இந்திரியங்களையும், மனதையும் அர்ப்பணம் செய்து விட்டேன்.

பாபா :—இல்லை. அவைகளைக் கொடுக்க நீ யார்? அவைகள் ஏற்கனவே என்னுடையவை. (போதியை) பாராயணம் பண்ணு.

உ. பா :—எந்தப் புராணத்தை?

பாபா :—இதுவரை நான் உனக்கு எதில் சொல்லி யிருக்கிறேனோ இப்பொழுதும் நான் உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேனோ அதை.

உ. பா :—கீதையா ? ஞானேஸ்வரியா ?

பாபா :—போய், பாபு சாஹேப் ஜோக் படித்துக் கொண்டிருப்பதைக் கொண்டுவா.

உத்தேசவர் போய், ஜோக்கிடமிருந்து ஸ்ரீமத் ப்ாகவதத்தில் பதினோராவது ஸ்கந்தத்தைக் கொண்டு வந்தார்.

பாபா :—(புஸ்தகத்தில் சடிதியாகத் தமது விரலை வைத்து) இதைப் படி. (கிருஷ்ண உத்தேவ, ஸம்வாத மாக இருந்தது) தினந்தோறும் இதைப் படி. பிறகு என்னடியில் உட்கார்ந்துகொண்டு தியானம் செய்.

(அந்தத் தியானம்தான் ஹிருதயத்திலிருக்கும் ஸாயி கிருஷ்ணருக்கு அர்ப்பணம்)

60. அவை யாவும் (எல்லா தெய்வங்களும்) அல்லா.

61. ஒருவன் பாபாவை நோக்கி, “பாபா, நீர் யார் ? எங்கிருந்து வந்தீர் ?” என்றான்.

பாபா பிரதியுத்தரமாக (கேவல அத்வைதத்தில்) நான் நிர்குணன். எனக்கு நாமம் ஒன்றும் இல்லை. உறை விடமும் ஒன்றுமில்லை. (துவைதத்வைதபாவத்தில்) நான் கர்மத்தால் கலக்கப்பட்டு இந்தத் தேகத்துக்குள் வந்தேன். ஆகையால் ஒரு பெயரையும் இருப்பிடத்தை யும் அடைந்தேன். தேஹி என்பது என் பெயர். இந்த உலகமே என் இருப்பிடம். பிரம்மன் என் தந்தை. மாயை என் தாயார். அவர்கள் சேர்க்கையால் (ஒன்றுக் கொன்று பிசிறிக்கொண்டதால்,) நான் இந்த தேகத்தை அடைந்தேன். உலகம் அழிந்து போகிறதாயும், மாறக் கூடியதாயும் இருக்கிறது.

62. நான் பர்வர்த்திகார் (கடவுள்) நான் சீரடியிலும் எவ்விடத்திலும் இருக்கிறேன். என் வயது, லக்ஷக் கணக்கான வருஷங்கள். என் காரியம் ஆசீர்வதிப்பது. எல்லா வஸ்துக்களும் என்னுடையவை. நான் எல்லாவற்றையும் எல்லோருக்கும் கொடுக்கிறேன்.

63. நான் கங்காபுரத்திலும், பண்டரிபுரியிலும், எல்லா இடங்களிலும் இருக்கிறேன், பூகோளத்தின் ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறேன்.

64. எல்லாப் பிரபஞ்சங்களும் என்னில் இருக்கின்றன.

65. நீ பூஜிக்கும் தெய்வம் எதுவோ அதையே அண்டி இரு. சீக்கிரமாகக் கடவுள் உன்னை ரக்ஷிப்பார்.

பாபா சர்வ வியாபி

66. நான் உருவமில்லாதவன். நான் எல்லாவற்றிலும் இருக்கிறேன். நான் எல்லாவற்றிலும் அவைகளைக் கடந்தும் இருக்கிறேன்.

நான் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறேன். நீ காணும் ஒவ்வொரு வஸ்துவும், எல்லாம் சேர்ந்தும், நான்தான். நான் அசைவதில்லை. ஆடுவதில்லை.

67. எறும்பும், ஈயும், அரசனும், தரித்திரனும்—இன்னும் காணப்படும் சர்வமும் என் உருவங்களே.

68. நான் நீரில் இருக்கிறேன். உலர்ந்த இடங்களிலும், அடவிகளிலும், ஜன சமூகத்திலும், தனிமையான காடுகளிலும் இருக்கிறேன். நெருப்பிலும், ஆகாச நுண்ணணுவிலும் இருக்கிறேன். ஒரு இடத்திலும் கட்டுப்பட்டவனல்ல.

69. பசியுடன் இருக்கும் நாய்க்குப் பசியாற்றுவது என் பசியை யாற்றுவதே. அதன் பசியாறினுல் என் பசியாறின திருப்தி ஏற்படுகிறது.

ஒரு சமயம், பாபா, லக்ஷ்மி பாய் சிந்தே என்பவரை நோக்கி,

பாபா :—நான் பசியாய் இருக்கிறேன்.

லக்ஷ்மி பாய் :—நான் போய் ஆகாரம் கொண்டு வரலாமா ?

பாபா :—செய்.

லக்ஷ்மி பாய் .—ஆகாரம் கொண்டு வந்தாள். பாபா அதிலிருந்து ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. தன்னெதிரில் பசியோடிருந்த ஓர் பெண் நாய்க்கு வைத்து விட்டார்.

லக்ஷ்மி பாய் :—பாபா ஏன் அப்படிச் செய்தீர் ?

பாபா :—இந்தப் பெண் நாயும் ஜீவனில்லையா ?

நாம் பேசுகிறோம். நாய்கள் பேசுவதில்லை. அது பசியாய் இருக்கிறது. அதுவும் நானும் ஒன்று. அது சாப்பிட்டால் நான் சாப்பிட்டதுபோலவே.

70. இன்று காலை அந்த நாய்க்கு நீ கொடுத்த கனத்த ஆகாரத்தால் நான் இன்னும் உப்பசத்துடன் இருக்கிறேன். உன்னிடம் வந்தபோதும், நீ ஆகாரம் அளிக்காத சேற்றினுல் பூசப்பட்ட பன்றியும் நானே.

(என்னைச் சேவிப்பதற்கு வித்தியாசங்களை ஒழிக்க வேண்டும்.) எனக்குத் தொண்டுபுரிய பேத புத்தியை ஒழிக்கவேண்டும்.

71. சில சமயங்களில் நாயாக நான் வருகிறேன். சில சமயங்களில், பன்றியாகவுங்கூட நான் வருகிறேன்.

எந்தபக்தன் ஒவ்வொரு உருவத்திலும் என்னை அறிந்து, சமானமாக உபசரிக்கிருனே அவனே பாக்கியவான்.

72. (நானுவைப் பார்த்து) நீ என்னுடன் 18-வருஷங்களாக இருந்தாய். உனக்கு "ஸாயி" என்பவர், 3½ முழம் உயரமுள்ள தேகமென்றுதான் தோன்றிற்று? நான் எறும்பிலும், ஈயிலும் இருக்கிறேன். எப்போது இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளுகிருயோ அப்போது நான் அவ்வவ்விடங்களில் இருப்பதாகவும், எறும்புகளாலும், ஈக்களாலும் உணவைச் சாப்பிடுவேன் என்பதை உறுதியாய் ஞாபகத்தில் வை. (முழு விவரம் 199-ல் வருகிறது).

73. பாபா ஒரு மனிதனைச் சுட்டிக்காட்டி, "இவனைக் காப்பாற்ற, ஒரு பூனை உருவோடு இந்த மனிதன் தயிரைக் குடிக்கப் போனேன். ஆனுல் அவன் இன்று என்னைப் புடைத்தான்.

நான் கருப்பு நாயாக விருந்தேன்.

நான் நோயுள்ள சூத்திரனுகவிருந்தேன்.

நான் சர்வத்திலும் அதற்கப்பாலும் இருக்கிறேன்.

பம்பாயில் உன்னிடம் யாசகத்துக்கு வந்த பக்கிரி நான்தான்.

நடுநிசியில் மரத்தினடியில் நீ கண்ட தோற்றம் நான்தான்.

(நான் அக்கல்கோட் மகாராஜ்) பிட்ளே! உனக்கு 2 ரூபாய் கொடுத்தது நான்தான்.

பாபாவும் இதர சாதுக்களும்

74. அக்கல் கோட் மஹாராஜ் 1878-வருஷம் சமாதியடைவதற்கு முன்பு அவரிடம் சிஷ்யராயிருந்த கேசவ நாயக் என்பவர் குருவைநோக்கி "மகாராஜ் தாம்

போய்விட்டால், எங்களுக்கு என்ன ஆதரவு இருக்கிறது?" என்றார்.

அ. ம:—(தமது பாதரக்ஷையைப் பூஜிக்கக்கொடுத்து) "என்னை அஹமத் நகர் ஜில்லா சீரடியில் காணலாம் எப்போதும் அங்கே போ. அங்கே பக்தி யுள்ளவனாய் இரு. அப்படி இருந்தால், என்னைக் குறித்தே சிந்தித்து இருக்கமாட்டாய். சந்தோஷப்படுவாய்."

அக்கல்கோட் மஹாராஜ் சமாதியடைந்த பிறகு, கேசவ நாயக்கும், அவர் குமாரர் ராமசந்திர நாயக்கும் இரண்டு வைதீக பிராம்மணர்களுடன் சீரடியில் இருந்த சாயி பாபாவிடம் சென்றார்கள். வழியில் அப்பிராம்மணர்கள், பாபாவை ஓர் பித்தம்பிடித்த முஸ்லிம் பக்கிரி என்றும், எந்தப் பிராம்மணனும் தலைவணங்கமாட்டான் என்றும் சொன்னார்கள். நால்வரும் பாபாவைச் சேர்ந்த போது, பாபா கேசவ நாயக்கை நோக்கி, "நீயும் உன் குமாரனும், வந்து, பிரியமிருந்தால் என்னுடன் தங்கியிருக்கலாம்" என்றார். பிராம்மணர்களைச் சுட்டிக்காட்டி "இவர்கள் கர்மடப் பிராம்மணர்கள்" என்றார். ராமசந்திர நாயக்கை நோக்கி, "வேப்ப இலை கொண்டுவா" என்று சொன்னார். அவ்விதமே ராமசந்திர நாயக், வேப்ப இலைகளைக் கொண்டுவந்தான். நால்வருக்கும்வேப்பிலையை விநியோகம் செய்தார்.

பாபா :—சாப்பிடுங்கள். அவை எந்த ருசியுடன் இருக்கிறன்ன.? பிராம்மணர்கள் சுளித்த முகத்துடன், "அதிகக் கசப்பு" என்றார்கள்.

இரு நாயக்கும் :—இந்த இலைகள் அதிக இனிப்பாய் இருக்கின்றன. இலைகளை நிறைய நாங்கள் சாப்பிட்டோம். இவ்விதமாக இருவருக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டினார்.

ஒரு சமயத்தில் பாபா, "நான் மிர்ஜ்கரமில்" இருக்கும் புவா என்னும் பக்கிரி. இவ்விடம் ஏன் வருகிறாய்.?" என்று ஒரு மனிதனை நோக்கிச் சொன்னார்.

மற்றொரு சமயம் "நான் பந்தராவில் இருக்கும் மௌலானா."

நான் நான்டேடு மௌலானா நீ எனக்கு ஏற்கனவே ரூ. 3-14-0 கொடுத்திருக்கிறாய்" என்று ஒருவரை நோக்கிச் சொன்னார்.

75. நீ எவ்விடத்திலிருந்தாலும், நான் உன்னுடன் இருக்கிறேன். என்னை எடுத்துக்கொண்டுபோக, நான் வாகனங்களை வேண்டுவதில்லை.

76. 1914-வருஷத்தில் தம்மைச் சேவிக்கவந்த பந்தராவில் இருந்த **Mrs. T.** என்ற ஸ்திரீயையும், அவள் குமாரன் **Master T.** என்பவரையும், பாபா நோக்கி, "தாயே. ஒரு தினத்திற்கு மூன்றுதரம் உன் வீட்டிற்கு வரவேண்டியதாயிருக்கிறது."

மாது:—ஆம். பாபா.

சீரடியில் இருந்த ஓர் மாது இதைக்கேட்டு, பாபாவை தினந்தோறும் சீரடியிலேயே பார்த்திருந்ததால் ஆச்சர்யமடைந்து, பாபாவை நோக்கி, "பாபா. தாம் சொல்லும் இந்த ஆச்சரிய விஷயம் என்ன" என்றாள்.

பாபா:—நான் அசத்தியம் பேசுவதில்லை. நான் மஹாலக்ஷ்மி. தாயே! நான் உன் வீட்டிற்கு வருகிறேன். நான் சாப்பிடப் பண்டங்கள் கொடுக்கிறாய். அது உண்மையல்லவா?

பந்தரா மாது:—ஆம். பாபா.

சீரடி மாது:—பந்தரா மாதை நோக்கி, உண்மையாகவா? பாபா உன் வீட்டுக்குப் போகிறாரா, அவரை நீ புசிக்கச்செய்கிறாயா"?

பந்தரா மாது :—ஆம்.

பாபா, குமாரனை நோக்கி, "உன் வீட்டுக்கு நான் வருவதில்லையா?

Master. T :—ஆம் பாபா.

பாபா சீரடி மாதை நோக்கி, "தாயே. நான் சுலபமாக அவர்கள் வீட்டிற்குப் போகிறேன். மத்தியில் ஒரு சுவர் இருக்கிறது. அதைத்தாண்டிக்கொண்டால், அடுத்த படியாக ரயில்வே பாதை வருகிறது, பிறகு அவர்கள் வீடு. நான் சுவர்களின்மேலும் பள்ளங்கள்மேலும் பறக்க வேண்டியதாய் இருக்கிறது.

77. ஒரு சமயம், பந்தராவில் இருந்த டென்டுல்கார் என்பவரின் மனைவி, தன் வீட்டில் 2 மாதங்களாக பாபாவின் படத்திற்குப் புஷ்பமாலைகளைக் குவித்து, பிறகு சீரடிக்கு வந்தாள்.

பாபா :—"ஆ. (H. S. தீக்ஷித் என்பவரை நோக்கி) காகா. இந்த இரண்டு மூன்று மாதங்களாக, நான் சீரடியிலேயே இல்லை" அம்மாதை நோக்கி, "இந்த அம்மா புஷ்பங்களால் என்னைத் திக்கு முக்கடையச் தாள். நான் தலைச்சுற்றல் அடைந்து உணர்ச்சியற்றவனானேன். நான் இப்போதுதான், நிதானமாகச் சரியாய்க்கொண்டு வருகிறேன்.

78. நான் பந்தராவுக்குப்போய், எனக்கு ஒன்றும் வைக்காமல் தின்று விட்டிருப்பதைப் பார்த்து, பசியுடன் திரும்பி விட்டேன்.

79. நீ சாப்பிடும்போது, என்னை நினைக்கிறாயா? உன்னருகில் நான் இல்லையா? எனக்கு ஒரு கவளம் அன்னம் கொடுக்கிறாயா?

80. நான் சீரடியில் மாத்திரமல்ல, சர்வத்திலும் இருக்கிறேன்.

81. எவன் ஸாயி பாபா சீரடியில் மாத்திரமே இருக்கிறார் என்று எண்ணுகிறானோ, அவன் முற்றிலும் பாபாவை அறியாதவன்.

82. ஒருவர் பாபாவைத் தரிசித்துப் போகு போது, அன்பு மேலிட்டவராய் கண்ணீர் விட்டு துக்கித்தார். அவரை நோக்கி பாபா, "நீ ஏன் புலம்பி, பித்தனைப்போல் நடிக்கிறாய்? நான் உன்னருகில் பம்பாயிலும் இல்லையா?" என்றார்.

83. அவர் ஒரு சமயம், மச்சேந்திரக்காட் என்னும் இடத்தில் சேவிக்க வந்தார். பாபா அவருக்குத் தரிசனம் கொடுத்து அவரை நோக்கி, "இப்போது சீரடியில் இருப்பவர் ("ஸாயி") மச்சேந்திரக் காட்டிலும் இருக்கிறார். இதை உனக்குக் கற்பிக்கவே உன்னை இங்கு அனுப்பினேன்" என்றார்.

84. இப்போதுதான் நான் காசிக்குச் சென்று சீராடி வந்தேன்.

நான் ஜெஜூரியில் இருந்தேன்.

நான் டேலியாவில் இருந்தேனே. நீ என்னைக் காண வில்லையா? என் குரலை நீ கேட்டும் ஏன் சந்தேகிக்கிறாய்? தாழ்போட்ட கதவுகளும் என் வரவைத் தடுப்பதில்லை.

85. நான் உன்னுடன் வருகிறேன். தொல்லைப் படாதே தாயே. உன் குடும்பத்தைப் பற்றிய சிந்தனை எனக்கு. சரி. போ. உன்னருகில் நான் இருக்கிறேன்.

86. நானே பிறர் அறியாமல் உட்கார்ந்து உன்னையும் (புரந்திரன் என்பவரை) உன் மனைவியையும் பாதுகாத்து வருகிறேன்.

87. நீ எங்கிருந்தாலும், என்னை நினை. உன் பக்கத்தில் நான் இருக்கிறேன்.

88. நீ எவ்விடத்திலிருந்தாலும், என் பக்தர்கள் எது நினைத்தாலும், செய்தாலும், அந்த க்ஷணமே, நான் அதை அறிகிறேன்.

89. நான் எல்லோரையும் சுமதிருஷ்டியுடன் பார்க்கிறேன். என் அருளாலன்றி ஒரு அணுவும் அசைவதில்லை.

பாபாவின் காரியம்

90. நான் கடவுளின் அடியன்.

கடவுளே யஜமானர். பிரபு அவர்.

91. கடவுள் எல்லா இடத்திலும் பிரதிநிதிகளை வைத்திருக்கிறார். அவர்கள் அளவற்ற சக்தியுள்ளவர்கள். எனக்கு அபார சக்தி உண்டு.

92. (இவ்வசனம் பசப்பாவின் வரலாற்றில் சேர்ந்துள்ளது).

93. இந்த இறந்த இப்பிள்ளையின் ஆவியை அது புதிதாய் அடைந்த உடலைக் கொன்று, சவமான இந்த உடலில் மறுபடியும் கொண்டு வந்து உயிர்ப்பிக்க என்னால் முடியும். ஆனால், அது புதிய தேகம் செய்ய வேண்டிய உபயோககரமான பயனைப் பங்கப் படுத்துவதாகும்.

94. இறந்து ஆவியான அவள் என்னிடம் வந்து சேர்ந்தாள்.

95. சீரடியிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் என் பக்தன் சாக நேர்ந்தாலும், அவன் சாகும் போது நான் அவனை என்னிடம் சேர்த்துக் கொள்ளுகிறேன்.

96. என் பக்தன் நாசமடைய நான் விடமாட்டேன். என்னிடம் ஒப்படைக்கப் பட்டவர்களைக் குறித்து, ஆண்டவனுக்கு நான் உத்திரவாதியாகிறேன்.

97. 1918-வருஷத்தில் ஒரு சமயம் **Mrs. T.** என்பவரும், அவர் குமாரரும் பாபாவைத் தரிசிக்க வந்தார்கள். பாபா அம்மாதை நோக்கி, "தாயே. இக்காலத்தில் நான் அதிக தொந்திரவு அடைகிறேன். சிலர் ஐஸ்வர்யத்தை வேண்டுகின்றனர். சிலர் ஸ்திரீகளையும், சிலர் மக்களையும் (வேண்டுகிறார்கள்) ஹா—நான் எதை வைத்திருக்கிறேனோ, அதை ஒருவரும் வேண்டுவதில்லை. நானும் காத்துக் காத்திருக்கிறேன். ஒருதினம் திடீரென்று மறைந்து விடுவேன். நான் அதிக அருவருப்பாய் இருக்கிறேன்.

Mrs T:—பாபா! தாம் ஏன் அப்படி சொல்லுகிறீர்? அப்படியானால், நாங்கள் எப்படியாவது?

பாபா:—நீ ஏன் கவலைப்படுகிருகிறாய்? உன் க்ஷேமலாபத்தைக் குறித்து கடவுள் எண்ணாமல் இருக்கிறாரா? என் குழந்தைகள் என்னிடம் வரும்போது, நான மிகவும் திருப்தி யடைகிறேன். அப்போது நான் உண்ணும் இரண்டு கவளங்களை இன்பமாய் உண்டு, சரீர பூரிப்பை அடைகிறேன்.

Master T:—தாம் எதை வைத்திருக்கிறீரோ அதைக் கேட்க நாங்கள் வந்தோம். அதைத் தாம் அறிவீர்.

பாபா:—சரி. நீங்கள் அதை அடைவீர்கள்.

Master T:—சரி. அதைப்பற்றி நாங்கள் நிச்சயமாய் இருக்கிறோம்-ஆனால் எப்போது?

பாபா:—வெகு சீக்கிரத்தில்.

Master T:—நான் அதை அடைவதற்கு எத்தனை ஜன்மங்கள் எடுக்கவேண்டும் என்பதை உம்மிட மிருந்து உறுதி மொழியாய் நான் வேண்டுகிறேன்.

பாபா:—மூன்று ஜன்மங்கள் போதுமானவை.

Master T:—ஆனால், பாபா-எங்களுடன் நீர் எப்போதும் இருக்க மாட்டீரா?

பாபா:—ஹா! ஹா! ஏற்கனவே எத்தனையோ ஜன்மங்கள் உங்களுடன் இருந்தாய்விட்டது. நாம் மேன் மேலும் சந்திக்கலாம். என் குழந்தைகளை இரவும் பகலும் பாதுகாத்து கடவுளுக்கு நான் சரிவரக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவனாய் இருக்கிறேன்.

98. ரோஹில்லா, பிஷ்யா, ராவ்சாஹேப் கல்வாங்கர் இவர்கள் ஒவ்வொருவரையும் அவருடைய தாயின் கர்ப்பத்தில் வைத்தவன் நானே.

99. ஒரு சமயம அக்கல்கோட் சபத்னேகர் என்பவரை நோக்கி, "இறந்த உன் மகன் ஆத்மாவை, உன் மனைவியின் கர்ப்பத்தில் மறுபடியும் கொண்டு வருவேன்" என்று சொன்னார். மறு வருஷத்தில் சபத்னேகர் மனைவி கர்ப்பம் தரித்து ஆண் மகவைப் பெற்றாள்.

100. மற்றொரு சமயத்தில் காக்காவை (தீக்ஷித் என்பவரை) விமானத்தில் எடுத்துக் கொள்வேன் என்று சொன்னார் - தீக்ஷித் அனாயாசமாய் உயிர் நீந்தார்.

பாபா—கடவுளிடம் பிரபத்தியடைந்த கருவி (பிரபன்னன்)

101. கடவுளின் உத்திரவில்லாமல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது.

102. உனக்கு ஒரு குப்னி கொடுக்கவில்லை என்று என்னைக் குறை கூறாதே. "அந்த பக்கிரி" (கடவுள்) எனக்கு உத்திரவு கொடுக்கவில்லை.

103. ஆ! நான் ஒவ்வொருவரிடமும் தக்ஷிணை கேட்கிறேனா? "அந்த பக்கிரி" யாரைச் சுட்டிக் காட்டு

கிறாரோ, அவர்களிடமே நான் கேட்பது (இதன் முழு விவரம் 255-ல் பார்க்க).

104. தத்தரைப் போன்ற தெய்வங்கள் வழியிலே சுலபமாய் அடையக் கூடியதாயிருந்தும் ஒருவன் அவர்களைத் தரிசனம் செய்யாவிட்டால், நான் எப்படி அவர்களுக்கு உதவி செய்ய முடியும்?

பாபாவின் தன்மை

105. நான் கடவுளைத்தோற்றுவித்தவன். என்னைச் சுத்த ஆனந்த நிராகாரமாகத் தியானம் செய்; ஆனால் அவ்விதம் செய்ய முடியாவிட்டால், (பாபா தம்மைச் சுட்டிக்காட்டி) இந்த "ஸாயி" தேகத்தை, அது எப்படி இருக்கிறதோ அப்படியே (ரூபத்திலே) தியானம் செய்.

106. நான் தேகம் அல்லது இந்திரியங்கள் அல்ல. நான் இவைகள் எல்லாவற்றின் சாக்ஷியாக இருக்கிறேன். நான் எதுவும் செய்வதில்லை. எதுவும் வாங்குவதுமில்லை.

107. ஒரு சமயம் பாபாவின் கையில் தீப்பட்டு ரணமாய் விட்டிருந்தது. அப்போது ஒரு பக்தன் அவரை நோக்கி, "பாபா, உம்முடைய கையில் இருக்கும் ரணத்தை ஆற்றவிடும். அது உமக்கு எவ்வளவோ நோவை உண்டாக்கும்" என்றான்.

பாபா :—முட்டையும், கட்டையும், அடுக்கி எரியும் சிதையில், இந்த முழு தேகம் எரிந்து கொண்டிருப்பதை அருகில் நின்று பார்க்க எனக்கு எவ்வளவு வேடிக்கையாக இருக்கும்? என்றார்.

ஆத்ம விசாரம்

108. என்னை அறிவதற்கு, இடைவிடாமல், "நான் யார்" என்பதை ஸ்ரவணத்தாலும், மனனத்தாலும்

சிந்தித்திருக்கவேண்டும். நான் யார்? நான் என்ன? நான் எங்கே இருக்கிறேன்? நீ எங்கே இருக்கிறாய்? எல்லா உலகமும் எங்கே இருக்கிறது? (தம்மிடம் பக்தியாய் இருந்த ஓர் ஸ்திரீயை நோக்கி) உன்னுடைய புருஷன் சொன்ன எல்லாவற்றைக் குறித்தும் ஆலோசி. (அதாவது, உண்மையில் நீயும் கடவுளும் வேறில்லை என்பது).

109. நம்முடைய உண்மை நிலையை நாம் அறிய வேண்டும்.

பேதம் உண்மையல்ல

110. ஒருவனைக் குறித்தும், அவன் பகையாளி என்று சொல்லாதே. யார் யாருக்குப் பகைவன். யாரிடத்திலும் விரோதத் தன்மை கொண்டிராதே. எல்லாரும் ஒன்றே.

111. ஜனங்கள் தங்களை மற்றவர்களிடமிருந்தும், தங்களுடைய ஆஸ்திகளை இதரர்களுடைய ஆஸ்திகளிடமிருந்தும் வேறுபடுத்திக் கொள்கிறார்கள். இது பிசகு. நான் உன்னுள் இருக்கிறேன். நீ என்னுள் இருக்கிறாய்

உன்னையும் என்னையும் பிரித்திருப்பச் செய்வது இந்தச் சுவர் தான். இந்தச்சுவரை இடித்துத் தள்ளு. பிறகு ஒருவருடைய முகத்தை மற்றொருவர் தெளிவாகக் காணலாம்.

சாதுக்கள் இவ்வித வேற்றுமையை ஒப்புக் கொள்ளுவதில்லை. என்னைச் சேவிக்க இந்த வேற்றுமையை அகற்று. இவ்விதமே இடைவிடாமல் சிந்தித்தால், அதன் உண்மையை உணர்வாய். வேத சாஸ்திர நூல்களை நன்றாய் ஆராய்ச்சி செய்து ஆத்மா ஒன்றா பலவா என்பதை அறிந்துகொள்.

(2) ஸடாராவில், வாயி என்னு மிடத்திலுள்ள நாராயணுச்ரமத்திலுள்ள பெரியார் (பூர்வாச்ரமத்தில் டோஸர்) என்பருக்கு வஸ்துக்கள் பேதத்தன்மையற்றவை என்ற உண்மை 1941-ல் உணர்த்தப்பட்டது. பிறகு அவர் சீரடியில் இருக்கும்போதும் அவருக்கு இந்த அபேத உணர்ச்சி தெளிவாகத் தெரிந்தது.

(3) இந்த உணர்ச்சியின் விவரத்தை 200-ல் பார்க்கவும்.

112. ஒரு சமயம் உத்தேசவ புவா என்னும் ஓர் பக்தர் பாபாவை நோக்கி, "நான் யார்" என்று கேட்டார். அதற்குப் பாபா சொன்னதாவது, "நீநானே. நானே நீ. எனக்கும் உனக்கும் ஒரு வித்தியாசமும் இல்லே. எதால் நான் ஆக்கப்பட்டிருக்கிறேனே அதலாலேயே நீயும் ஆக்கப்பட்டிருக்கிருய்.

மோக்ஷ மார்க்கம்

अहं भवान्नचान्यस्त्वं त्वमेवाहं विचक्ष्व भोः ।
न नौ पश्यन्ति कवयः छिद्रं जातु मनागपि ॥

113. ஒரு சமயம், சந்தோர்க்கர் என்னும் ஒரு பக்தர், பாபாவை நோக்கி பின்வருமாறு கேட்டார். எனக்கு இந்தச் சம்ஸாரம் போதும். சாஸ்திரங்கள் விவரிக்கிறபடி சம்ஸாரம், உண்மையாகவே, ஸாரமாற்றதாய் இருக்கிறது. அதனுடைய தளேகளே என்னிடமிருந்து தரித்துப்போடும். எது முதலில் இன்பமாக காணப்படுகிறதோ, அது முடிவில் துன்பமாகவே இருக்கிறது. விதி எங்களே இங்குமங்கும் நேர்த்தியான ஆட்டுவிக்கிறது. இந்தச் சம்சாரத்தில், ஓர் அணுமாத்திரம் கூட ஆனந்தம்

என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் அதிக வெறுப்புடையவனா யிருக்கிறேன். பாபா இனி, அதில் கொஞ்சமும் எனக்கிஷ்டமில்லை.

பாபா பீஷ்மருக்கு உலகம் எல்லாம் தன்மயமாகக் காணும் பாவம் தெளிவாகக் காட்டப்பட்டது. ஒரு நாள் காலையில் பீஷ்மர் தன் நிழலை நோக்கும்போது இவ்வித உணர்ச்சி அவருக்குத் தோன்றியது.

பாபா :—உன்னுடைய வசனம் எவ்வளவு பைத்தியமானதாகவும், மித்தையாதாகவும் இருக்கிறது. அதில் சிறிதளவு உண்மையுண்டு. ஆனால் பிழையுடன் கலந்திருக்கிறது. இந்த தேகம் இருக்கும்பரியந்தம் சம்ஸாரம் இருக்கத்தான் செய்யும். அதையாரும் விலக்க முடியாது. உன்னால் எப்படி முடியும்? நானும் அதற்குள் அகப்பட்டிருக்கிறேன். சம்சாரம் பலவகையானது. அது தேகத்தின் மேல்புறம்போன்றது காமக்குரோத மூதலியவைகளின் கதம்பத்தால் ஆனது சம்ஸாரம். மனதிற்குரியதும் தேகத்திற் குரியதுமான எல்லாவற்றாலும் உண்டானது சம்ஸாரம் காட்டிற்கு போய் விடுவதினாலேயே, நீ சம்சாரத்தினின்றும் தப்புவது முடியாது. உன்னுடைய தற்கால நிலை உன்னாலேயே ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. அதைக்குறித்து மனவருத்தப்படுவதில் என்ன பிரயோஜனம்? இந்த தேஹ பிராரப்தமானது முன் ஜன்மங்களில் உன்னால் செய்யப்பட்ட கர்மங்களின் பலன். ஆகையால் தேகம் உண்டானது. ஜீவனானவன் முன் ஜன்மத்தில் தான் செய்த கர்மத்தை அனுபவிக்கத்தக்கதாக ஓர் உடலை அடைகிறான். பிராரப்த கர்மத்தின் பலன்களை அனுபவியாமல், நீ அதை விலக்குதல் முடியாது. எல்லா ஜனங்களும், எல்லா ஜீவராசிகளும் உருவத்தில் வித்தியாசப்படுகின்றன. ஏன்? ஏனென்றால்,

ஒவ்வொன்றினுடைய முன் கர்மத்தால். (வித்தியாசம் ஏற்படுகிறது). பிராணிவர்க்கங்களின் வித்தியாசங்களும், அதே காரணத்தால் தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் உள்ள வித்தியாசங்கள்போல் ஏற்படுகின்றன. ஒரு பணக்காரனுடைய நாய் சோபாவில் சோம்பலுடன் சாய்ந்துகொண்டிருக்க ஓர் ஏழையின் நாய் எச்சலைத் தேடி இங்குமங்கும் அலைந்துகொண்டிருக்கும். வித்தியாசத்தைப்பார். இது தேஹப் பிராரப்தத்தால் உண்டானது.

உண்மையானந்தம்

114. சந்தோர்க்கர் பாபாவை நோக்கி, "சம்சாரத்தின் சுக துக்கங்கள் ஒருவனை எவ்வளவோ கலங்கச் செய்கின்றன. ஆகையால் நாம் சம்சாரத்தை ஒழிக்க வேண்டாமா?

பாபா :—சுகமும் துக்கமும் வெறும் பிரமை ; உலக சுகத்தின் வெறுந் தோற்றம் உண்மையானந்தமில்லை. சம்சாரி அதை உண்மையானந்தமென்று நம்புவதால் அதனிடம் பலாத்காரமாக இழுக்கப்படுகிறான். ஒவ்வொருவருடைய பிராரப்தப்படி ஒருவன் பஞ்சாம்ருதத்தையும், ஒருவன் ஊசின எச்சிலையும், மற்றொருவன் கூழையும் அடைகிறான். இப்படி (வித்தியாசம்) ஏற்படுவதால் பின்னவர்கள் சந்தோஷமில்லாதவர்களாகவும், முன்னவர், தனக்குத் குறைவு இல்லாதவனாகவும் மனோபாவம் அடைகிறார்கள். ஆனால் இவைகளில் எது சாப்பிட்டாலும் பசி ஆறுவது தான். உண்மை. சிலர் சரிகை சால்வைகளை போர்த்துக்கொள்கிறார்கள். மற்றவரோ மரப்பட்டைகளை சுற்றிக்கொள்கிறார்கள். இரண்டும், தேகத்தை மூடுவதான ஒரே காரியத்திற்கு உபயோகப்படுவது. இந்த

3

சுகமும், இந்த துக்கமும், ஜாலமானதும் கெடுதலுமான அபிப்பிராயத்துக்குரியது. சுகத்தைக்குறித்தோ, துக்கத்தைக்குறித்தோ, உன் மனதில், பாவனை உண்டாகுமானால் அதைத் தடு. அதற்கு இடங்கொடாதே. அது வெறும் பிரமை.

காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாற்சரியம் ஏமாற்றத்தக்கவை. அவை பொய்யானவைகளை மெய்போல் காணச்செய்விக்கின்றன. ஓர் பணக்காரன் ஓர் தங்க நகையை அணிந்துகொண்டால், ஏழையானவன் பொறாமைகொண்டு, தனக்கும் ஒன்று வேண்டுமென்று எண்ணுகிறான். இதுதான் லோபத்தன்மை. எல்லாம் இதுபோன்றதுதான். ஆகையால் ஒவ்வொருவரும் இந்த ஆறு விரோதிகளைக் அடக்க வேண்டும். அவைகள் அடக்கப்பட்டால் சித்தவிகாரத்தின் அலைகள் எழும்பாது. இல்லாவிட்டால் அவைகள் உன்னை அடிமையாக்கும். அவைகள் கீழ்பட்டு, விவேகம் தளகர்த்தன் ஆனால், ஏமாற்றும் இன்ப துன்பங்களுக்கும் உன் மேல் இருக்கும் ஆட்சி அற்றுவிடும்.

பேரின்பம்

115. முக்தியே உண்மையான பேரின்பம். ஜனன மரணத்தில் ஊர்ந்துபோவது துக்ககரமானது. சம்சாரத்தின் சுகதுக்கமானது பொய்யானது.

சம்சாரத்தில் இருக்கவேண்டிய விதம்

116. சம்சாரத்தில் நீங்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டியது என்பதை நான் சொல்கிறேன். சம்சாரம் தேக பிராரப்தத்தால் உண்டாவதால், விவேகிகள், ஜீவியத்தில் தமக்கு ஏற்பட்ட நிலைமையைக்குறித்து,

திருப்தியுடையவர்களாய் இருக்கவேண்டும். அதன் கஷ்டங்களுக்காக நொந்து கொள்வதில் என்ன பயன்?

ஐஸ்வர்யத்துடன் இருந்தால் அடக்கமுள்ளவனாய் (கர்வப்படாதவனாய்) இரு. செடிகள் பழங்களை பெற்றிருக்கும்போது தலை பாரத்தால் வளையவில்லையா? ஆனால் அடக்கம் எல்லாரிடத்தும் இருக்கக்கூடாது. பொல்லாதவரிடத்தில் ஊடாடும்போது கடுமை வேண்டும். ஆனால் சாதுக்களிடத்தில் அடக்கமுள்ளவனாய் இரு. அவர்களிடம் பயபக்தியுடன் இரு.

தானத்திலும் தர்மத்திலும் திரவியம் செலவு செய். ஆனால் வீண் செலவு செய்யாதே. உலகம், நிச்சயமாய் அழியும்—ஆனால் தேஹ ஆரோக்கியத்திற்கு பித்தம் அவசியம் போல் ஆயுள் உள்ள பரியந்தம், திரவியம் அத்தியாவச்யமானது. ஆனால் செல்வம்தான் முக்கியமானதென்று அதனிடம் சிக்கிக்கொள்ளாதே. லோபியாகவும் இராதே. தயாளமாகவும் உதார குணமுள்ளவனாவும் இரு. ஆனால் வீண் செலவும் அழி செலவும் செய்யக்கூடாது.

உன் உலக நடவடிக்கைகளைச் சந்தோஷமாய் செய். ஆனால் கடவுளை மறவாதே. "இந்தச் சம்சாரம் என்னுடையதல்ல; கடவுளுடையது" என்று நீ விழித்திருக்கும்போதெல்லாம் எண்ணியிரு. ஏழையிடத்தும் கஷ்டப்படுகிறவரிடத்தும் தயையுள்ளவனாய் இரு. அவர்களுக்கு இடைஞ்சல் பண்ணாதே. தொந்தரவு செய்யாதே. "நான் யார்?" என்பதை எப்போதும் விசாரணை செய்.

பக்தி—ஒன்பது விதம்

117. ஒரு சமயம் அனந்தராவ் படங்கர் என்னும் பக்தர் பாபாவை நோக்கி, "பாபா, நான் அநேக சாஸ்திரங்களைப் படித்திருக்கிறேன். ஆனால் மனச்

சாந்தி நான் அடையவில்லை. எனக்கு ஆசீர்வாதம் அளிக்க பிரார்த்திக்கிறேன்.'' என்றார்.

பாபா :—பூர்வம் ஒரு வியாபாரி இங்கே வந்தான். அவனெதிரில் ஒரு நாற்கால் மிருகம் வயிறு கழிந்து—ஒன்பது உருண்டை புட்டைகளைப் போட்டது. தான் தேடி வந்ததை அடைய ஆவலுள்ள அந்த வியாபாரி, தன் துணியை அதன் வாலின் கீழ் பரப்பி, ஒன்பது உருண்டைகளையும் சேர்த்து, எடுத்துக்கொண்டு போய் விட்டான். அவன் சித்த ஒருமையும், மனச் சாந்தியும் அடைந்தான்'' என்றார்.

அனந்தராவுக்கு இந்த உவமைக் கதையின் மறை பொருள் விளங்கவில்லை. ஆகையால் தாதாகேல்கரை நோக்கி, பாபாவின் கருத்தென்ன என்று கேட்டார்.

தாதாகேல்கர் பிரதியுத்தரமாக, "அந்த நாற்கால் மிருகம் ஆண்டவன் அருள். ஒன்பது உருண்டைகள் ஒன்பதுவித பக்தி. நீ அந்த வியாபாரிபோல் இருந்து, ஒன்பதுவித பக்தியைத் தொடர்ந்தால், சாந்தியடைவாய்'' என்று சொன்னார்.

மறுபடியும் பாபாவிடம் ஆனந்தராவ் சென்றார். பாபா அவரை நோக்கி, "ஒன்பது உருண்டைகளைச் சேர்த்தாயா?'' என்று கேட்டார்.

ஆ. ரா :—அதற்கு தம்முடைய அருள் நான் அடையவேண்டும்.

பாபா :—கடவுள் அனுக்கிரகிப்பார்.

ஞானமும் பக்தியும்

(i)

118. பாபா:—ஞானமார்க்கம் ராம பழம் போன்றது. பக்தி மார்க்கம் சீதா பழம் போன்றது.

சுலபமாய் அடையத் தகுந்ததும், அதி ருசிகரமாகவும் உள்ளது: ராம பழம் சதை உள்ளே இருப்பது சுலபமாய் அடையக் கூடியது அல்ல. ராம பழம் மரத்திலேயே பழுக்கவேண்டும். பழுத்தபோது பறிக்கவேண்டும். அது கீழே விழுந்தால் கெட்டுவிடும். அப்படியே ஒரு ஞானி விழுந்தால் சீர் குலைவான். ஞானிக்கும் விழத் தகுந்த அபாயமுண்டு.''

வினு:—நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்?

விடை:—(அத்வைத பாவத்தில்) எனக்கு இருப்பிடம் எதுவும் இல்லை. நான் நிற்குணன். கேவல நிற்குணன். (துவைத பாவத்தில்) கர்மத்தினல் கிடைத்த இந்தச் சரீரத்திற்குதேஹி என்பது எனப்பெயர். இவ்வுலகமே என் இருப்பிடம். பிரும்மன் என் தந்தை. மாயை என் அன்னை. அவைகளின் சேர்க்கையினல் உண்டானது இந்தச் சரீரம், உலகம் மாறக்கூடியது, அழியக்கூடியது.

119. பாபா:—"அல்லா—அந்த நிர்குண (பரப்ரும்ஹம்) சகுண பிரும்மமாகி, நிவாசியில், மோஹினி ராஜாவாக இருக்கிறர். போய் அவரை வணங்கு. பக்தர்களின் நன்மைக்காக கடவுள் தம்முடைய எல்லா சக்திகளையும் வெளிப்படுத்துகிறர்.

நான் யார்? நாம் யார்?

(ii)

120. பாபா அடிக்கடி "நாம் யார்? என்பதை இரவும் பகலும் சிந்தியுங்கள்'' என்று சொல்லுவார்.

1915–வருஷத்தில், ஓர் யந்திரச்சாலையின் நிர்வாகி, R. A. தர்கட் என்பவர், மன்மாட் ஸ்டேஷனில், இருட்டாய் இருந்த ரயில் வண்டி வகுப்பில் ஏறி, உட்கார இடத்துக்கு ஒரு போலீஸ்காரனுடன் சண்டை

யிட்டு, பிறகு சீரடியில் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டவுடன், பாபா அவரை நோக்கி, "நீ இன்று காலை எவருடன் பிடிவாதமாகத் தர்க்கித்துக்கொண்டிருந்தாய்? சகோதரா! அவ்வித ஜனங்களுடன் நாம் வாதம் செய்யக் கூடாது! "நாம் யார்? என்பதை நாம் விசாரித்தறிய வேண்டும்" என்றார். முதலில் தர்கட், தனக்கும் அந்த போலீஸ்காரனுக்கும் உள்ள குல வித்தியாசத்தைக் குறிப்பிட்டார் என்று எண்ணி, பிறகு பிரம்மத்துடன் ஒன்றயிருக்கும் வேதாந்தத்தின் பொருளைக் கண்டு கொண்டார்.

(iii)

பாபா—பாபாவைநோக்கி—நாம்யார் என்பதைத்தான் பார்த்து நம்மை அறியவேண்டும்

(iv)

121. 1917 வருஷ அக்டோபர் மாதத்தில் பாபா, ஒரு பம்பாய் ஸ்திரீயை நோக்கி,

பாபா :—தாயே, உனக்கு என்ன வேண்டும்? அதைக் கேள்.

ஸ்திரீ :—"இந்த பிரப்பு சாவு ஆகிய சுழலிலிருந்து என்னை விடுவியும்."

பாபா :—(சிரித்துக் கொண்டே) நீ கேட்பது இவ்வளவு தானு? என்ன! நீ சாக வந்தாயா?

ஸ்திரீ :—(திகைத்தவளாய்) பாபா-நீங்கள் சொல்வதை நான் அறியவில்லை.

பாபா :—நீ யார் என்பதை சிந்தித்துப் பார்.

ஸ்திரீ :—எனக்கு விளங்கவில்லை.

பாபா.—(அவள் கணவனைச் சுட்டிக் காட்டி), அவர் சொல்லுவார்.

பிறகு அந்த ஸ்திரீ தன் கணவனுடன் சென்று, பாபா சொன்னதைப் பற்றி விசாரித்தாள்.

கணவன் :—பாபாவின் வசனங்கள் வெகு விசித்திரமானவை. அவருடைய கருத்தை நான் அறிந்து கொண்டதாக நிச்சயிக்க முடியாது. ஒருவேளை அவர் இவ்விதமாக குறிக்கலாம். ஜீவனானவன் சாக்ஷாத்காரம் (கடவுளை அறியும் தன்மை) பெறும் வரையில், அநேக தடவைகளில் மறுபிறப்பு எடுத்துக் கொண்டுவருகிறான். பாபாவே கடவுள். ஆனால் அவரைக்கண்ட ஜனங்கள் பரிபூர்ண விசுவாசம் இல்லாதவர்களாய், கடவுளாகக் காண்பதில்லை. ஆகையால் அவர்கள் முக்தியடைவதில்லை. ஜீவனும் சிவனும் ஒன்று என்று சாஸ்திரங்களிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும். நீ, உன்னை ஒரு ஜீவனாக எண்ணுகிறாய் இல்லையா ?

ஸ்திரீ :—ஆம்.

அவள் புருஷன் :—பாபாவும் சாஸ்திரங்களும், நீயும் சிவனும் ஒன்று, என்பதை உணரவேண்டும் என்கிறார்கள்.

ஸ்திரீ :—இல்லை. இல்லை. நான் ஒர் அற்பமான பாவி. ஜீவனாயிருக்கலாம்-ஆனால் உன்னத சிவபெருமான் இல்லை.

புருஷன் :—அது உன்னுடைய உணர்ச்சி. ஆனால் பாபாவின் கருத்து, (யாதெனில்) நீயே பரம்பொருளாக இடைவிடாமல் கருதி யிருக்க நீ ஒரு எல்லையுள்ள ஜீவன் என்னும் உன் தீர்க்கமான அபிப்பிராயம் மெள்ள மெள்ள அகன்றுவிடும். இதே பத்ததியை, விடாமல் தொடர்ந்தால் பல பிறப்புகள் ஆனாலும், சாதுக்களின் சேர்க்கையால் பல மூட்டப்பட்டும், அவர்களின் ஆதரவை அடைந்தும், நீயே பிரம்மம் என்னும் உறுதியான நம்பிக்கை உனக்குண்டாகும். இதுதான் பாபாவின் கருத்து.''

பிறகு இருவரும் துவாரகாமாயிக்கு வந்தார்கள்.

பாபா அந்த ஸ்திரீயை நோக்கி, "தாயே. உன்னிடம் உன் புருஷன் சொன்ன யாவற்றையும் இவ்விடமிருந்தே நான் கேட்டேன். அதைச் சித்தத்தில் வை.

கடவுள் யார்

(v)

122. ஒரு சமயம் N. G. சந்தோர்க்கர் என்னும் பக்தன் பாபாவைப் பார்த்து,

(1) கடவுள் யார் (2) அவர் எதைப்போல் இருக்கிறார். (3) எங்கே இருக்கிறார். (4) நாம் எப்படி அவரைப் பார்ப்பது என்று கேட்டார்.

பாபா :—நான் பிற்பாடு உனக்குச் சொல்கிறேன். பிற்பாடு பாபா சொன்னதாவது :—

பத்தர்கள் (அதாவது உலகத்தில் பற்றுடையவர்கள்) நீதிக்கும் அநீதிக்கும் உள்ள வேற்றுமையை அறிவதில்லை. கவனிப்பதுமில்லை. கடவுள் உண்டு என்பதையும் அறியார்கள். நீதிக்குறியவழியும் அவர்களிடமில்லை.

எப்போதும் உலக (விஷயங்களில்) த்தில் ஈடுபட்டவர்களாய் சுத்தமில்லாத ஹிருதயத்துடன் சாஸ்திரங்களிடத்தும், சாதுக்களிடத்தும் நம்பிக்கையில்லாதவர்களாய், கடவுளை அணுகுவதே யில்லை. நரகத்திற்கே போகிறார்கள்.

முமுக்ஷுக்களோ பத்த நிலையில் அருவருப்பு அடைந்தவர்களாய் கடவுளின் காக்ஷி அடைய, விசாரணை, விவேகம், இவற்றில் ஈடுபட்டு கடவுளிடம் சிரத்தையுடையவர்களாய் நீதி முறைகளை அனுசரிக்கிறார்கள்.

அவர்கள் நாம ஜபத்தையும் தியானத்தையும் ஏகாந்தத்தில் செய்துகொண்டும் தங்கள் மனதை இந்திரிய

விஷயங்களிலிருந்து திருப்பி, முடிவில் சாதகர்களா கிறார்கள். சாதுக்களின் சங்கத்தில் இருக்கப் பிரியப்படு கிறார்கள்.

இவர்கள் பரிபூர்ணரானால், சித்தர் எனப்படுவர். அந்தப் பருவத்தில் கடவுள் மனிதனாகவேயாகிறார். அவர் களுக்கு புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றே. விருப்பங்கள் எதுவும் அவர்களுக்கு இல்லை. தேகமே அவர்கள் என்னும் அபிப்பிராயம் கடந்தவர்களாகிறார்கள். தாங்க ளும் பரம்பொருளாகவே யிருக்கும் ஒற்றுமைப்பான் மையை அடைகிறார்கள். "நானே பிரம்மம்" என்பது அவர்களின் உணர்ச்சியாகிறது.

கடவுளை அறிய, மேற்கூறிய முறை எப்படி வர்ணிக் கப்பட்டிருக்கிறது. படிப்படியாக கவனி.

முடிவாக கடவுள் எல்லாவித உருவங்களிலும், ஸ்தாவரத்திலும் ஜங்கமத்திலும் பிரத்தியக்ஷமாகிறார். கடவுள் எங்கும் இருக்கிறார். அவர் இல்லாத இடமேஇல்லை.

ஆனால் எல்லாரும் ஈஸ்வரனைக்காணவும் அறியவும் முடியாமல் செய்துவரும், மாயையின் சக்தியைப் பாருங் கள்! நானும், நீயும் இந்த உலகம் முழுவதும் கடவுளின் அம்சங்கள்.

ஆகையால் எவரும் மற்றொருவரை வெறுக்கவேண் டாம். கடவுள் சர்வ இடத்திலும் இருக்கிறார் என்பதை மறவாதேயுங்கள். இதிலிருந்து அன்பு (வெறுப்பின்மை) ஏற்கனவே இருக்கிறது. அது தோன்றிய உடன் எல் லாம் சித்திக்கிறது.

நாம் எப்படி கடவுளைக் காண்பது

123. மனம் அமைதியற்றது. அதை நிலையாகச் செய்யமுயலவேண்டும். எப்படி ஈயானது பறந்து எல்லா

வஸ்துக்கள் மேலும் உட்கார்ந்து நெருப்பை அணுகியவுடன் திரும்பிவிடுமோ, அவ்விதமே அடக்கப்படாத மனதும் இந்திரியவிஷயங்களை மிக விரும்பி, கொண்டாடி, அதிலேயே அமிழ்ந்து விடுகிறது. ஆனால் பிரம்மத்தைக் கண்டவுடன் தன் முகத்தை திருப்பி ஓடிவிடுகிறது. இப்படியாக, அடங்காத மனம் எதுவரையில் கடவுளிடம் லயமாகவில்லையோ, அதுவரையில் புனர்ஜன்மம் தவிர்க்கமுடியாது. மனம் அடங்கும்வரையில் மறு பிறவி எடுத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் பிறவிகளில் மானிடப்பிறவி அதிக அருமையானது. ஆகையால் மனதை நிலைப்படுத்தவும், ஒருமுகப்படுத்தவும், கடவுளை, உருவத்துடன் சேர்ந்த விக்ரக மூர்த்தியாக ஆராதனைசெய். அந்த விக்ரகம் கடவுள் தான். விக்கிரகங்களை மறுக்காதே. தீவிர பக்தியுடன் விக்ரகத்தை பூஜிக்க, மனம் ஒருமுகமடைகிறது. அடுத்தபடியாக மனனமும் (நினைவு கூறுதல்) தியானமும், ஆத்ம சம்பந்தமான கிரந்தங்களை சோதிக்கவும் வேண்டும். அவைகளில் சொல்லியிருப்பவையைக் கையாளவேண்டும். ஆத்மவித்தையே உத்தமமானது. அதில் ஒருவன் தேர்ந்துவிட்டால் முக்தி கைகூடினதே. ஹரி அவனுடைய ஸேவகன் (அடியவன்) ஆகிறார். மோக்ஷமடைய இவைகளே சுலபமான மார்க்கங்கள்.

மோக்ஷம் எப்படி அடைவது?

சதுர்வித சாதனங்களைப் பெற்றிரு. அதாவது நித்ய அனித்ய விவேகம் (என்றால் எது மெய், எது பொய் என்று விசாரித்தறிதல்). வைராக்கியம் முமுக்ஷுத்வத்திற்கு சமமனோநிலை இன்னும் இதர ஐந்து குணங்களையும், ஒன்பதுவித பக்தியும் பெற்றிருக்க வேண்டும். (ஒன்பதுவித பக்தியானவை, ஸ்ரவணம், கீர்த்தனம்,

ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்மநிவேதனம். கடவுளிடம் சரணுகதியடை.

அனுதினமும் சித்தர்களின் தரிசனம் வேண்டும். நீதி நெறியுடன் கூடிய வாழ்வு வாழவேண்டும். அப்படி இருந்தால் உயிர் விடும்போதும் நீ பரிசுத்தமாகவே இருப்பாய். சாகும்போது எவ்வித இச்சையும் பெற்றிராதே. மனதை உன் இஷ்ட தேவதையிடம் இருத்தி ஒரு முகப்படுத்தி இரு. மோக்ஷம் அடைவாய்.

கடவுளை அடையும் வழி

124. சந்தோர்க்கர் மறுபடியும் பாபாவை நோக்கி. "பாபா, மறுபடியும் மூன்றும் தடவையாக, கடவுள் யார் என்று கேட்கிறேன். எம்மாதிரி இருக்கிறுர். எவ்விடத்தில் இருக்கிறுர்?''

பாபா :—நான் முன்னேயே சொன்னேன். நான் சொன்னவிதம் நடந்துகொண்டால், நீ நான்குவித சாதனங்களுடன் பரிபக்குவ மடைவாய்.

சந்தோர்கர் :—அவை யாவை ?

பாபா :—முதலாவது நித்ய அனித்ய விவேகம் அதாவது எது மெய் எது பொய் என்று ஆராய்ந்தறியும் பகுத்தறிவு வேண்டும்.

சிலர் தம்மை ஞானிகள் என்று அயலார் மெச்சிக் கொள்ள திவ்ய க்ஷேத்திர யாத்திரை செய்கிறுர்கள். ஆனுல் ஹரி யார் என்றுவது, எப்படி இருக்கிறுர் என்றுவது எவ்விடம் இருக்கிறுர் என்றுவது அறியார்கள். இவர்கள் யாத்திரை செய்வது உண்மை பக்தியால் உண்டாவதில்லை. ஆனுல் அயலார்களிடமிருந்து கௌரவமடையச் செய்துகொள்ளும் உபாயம்.

ஹிருதய பரிசுத்தம் செய்து கொள்ளாமல், கிரந்தங்களை மனப்பாடமாகப் பாராயணம் செய்து, தர்க்கத்தில் சூத்திரங்களை வாயால் கொட்டுகிறார்கள். அயலாரிடம் குற்றம் கண்டு பிடித்து தம்மைத் தாமே புகழ்ந்துகொள்வர். இப்படிப்பட்டவர்கள் விவேகிகள் இல்லை. அவர்கள் பிரம்மஞானம் அடைவதில்லை.

வைராக்கியம்—இரண்டாவது சாதனம்

உண்மை வைராக்கியமுள்ளவன் இகலோகத்தின் உசிதமானவைகளைக் குறித்தாவது, பரலோகத்தின் உசிதமானவைகளைக் குறித்தாவது கவலைப்படுவதில்லை.

பாபா இரண்டு உதாரணங்கள் சொல்கிறார். ஒரு சமயம், தாமியா-ருசேனே என்பவர் பாபாவுக்குத் தாம் ஆரம்பிக்கப்போகும் ஒரு வியாபாரத்தின் லாபத்தின் ஓர் பகுதியைக் கொடுப்பதாக எண்ணினார். அதற்கு பாபா, "எதிலேயும் சிக்கிக்கொள்ளமாட்டேன்." என்றார் மற்றோர் சமயம், பாபாவைக் காணவந்த, விஜயானந்த சுவாமியை நோக்கி பாபா சொன்னதாவது "உம்முடைய தாயிடத்தில் உமக்கு அவ்வளவு அதிகப் பிரீதி இருந்தால், இந்தச் சன்னியாசியின் ஆடையை ஏன் கைக்கொண்டீர். காஷாயமும் மமதையும் ஒன்றுக்கொன்று சேர்ந்துபோவதில்லை. போய் உமது விடுதியில் இருங்கள். அங்கே திருடர்கள் அநேகர் உமக்கு இருக்கிறார்கள். எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுபோய் விடுவார்கள். உங்கள் கதவுகளைத் தாளிட்டு, காவல் புரியுங்கள். தவிர்க்க முடியாதது நேரும். திரவியமும் உற்றார் உறவினரும், சர்வமும், அநித்தியமானவை. பயத்திற்குள்ளானவை. சர்வத்தையும் துறத்தலே பேரானந்தத்திற்குவழி. பாகவத சப்தாஹத்தை தீவிர தியானத்துடன் மும்முறை

செய்யும். அது எல்லாவாசனைகளையும் நீக்கும் மாயை எல்லாம் ஒழியும்'' என்று புத்திமதி சொல்லி யனுப்பினர்.

சமம் முதலியவை—மூன்றும் சாதனம்

சமம் என்பது இந்திரிய விஷயங்களில் போய்க் கொண்டிருப்பதைத் தடுத்து சமநிலையில் நிறுத்துவது. தமமென்பது விஷயங்களை மனம் பற்றியிருக்கும்போது பின் இழுக்கச்செய்வது. திதிக்ஷை என்பது முணுமுணுக் காமல் பிராரப்த கர்மத்தால் ஏற்படும் சங்கடத்தைப் பொருத்துக்கொள்வது. உபரதி என்பது, தனம், ஸ்திரீகள், பிள்ளைகள், மித்திரர் முதலியவர் நித்யரல்ல என்று உணர்ந்து, மாயையினின்றும் தப்புவது. சிரத்தை எனப்படுவது திடபக்தி. சமம் என்பது சமசித்தம் அதாவது சுகத்தையும் துக்கத்தையும் சமானமாய். குழப்பமில்லாத ஸ்திரபுத்தியுடன் நோக்குவது.

முமுக்ஷுத்வம்—நான்காவது சாதனம்

அது என்ன? அதை எப்படி அடைவது? மோக்ஷம் வேண்டும் தீவிர அவாவுடன் இருப்பதே முமுக்ஷுத்வம்.

அபரோக்ஷ ஞானத்துடன் (அதாவது பிரம்மத்தை அறிவதே வழி என்ற ஞானம்) மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற தீவிர சித்தம் முமுக்ஷுத்வம் எனப் படுவது. மோக்ஷம் என்பது சொர்க்கம் என்பதாவது கைலாசம் என்பதாவது வைகுண்டம் என்பதாவது இல்லை. அது சூக்ஷ்மமானது. ஸ்தூலமில்லை. பிரபஞ் சத்தின் அகோசரமான (காணக் கூடாத) உற்பத்தி ஸ்தானம். சுத்த உணர்ச்சி. சுத்த சத்து. சுத்த சைதன்னியம். சுத்த சைதன்யமாவதும், சுத்த சைதன்யமாய் இருப்பதும் தான் மோக்ஷம். அதுதான்

சிரஞ்சீவித்துவம். இதுதான் மானிட வாழ்க்கையின் முடிவான நோக்கம். இதைத் தவிர (மானிட வாழ்க்கையின்) எல்லாவித நோக்கமும் கேவலமானது.

125. சந்தோர்க்கர் பாபாவை நோக்கி, "சுத்த சைதன்யத்தைப் பற்றி எங்களுக்குச் சொல்லும்" என்று கேட்டார்.

பாபா பிரதி யுத்தரமாக "அதுதான் சகல பிரபஞ்சத்திலுள்ள, உணர்ச்சி யுள்ளவை, உணர்ச்சியில்லாதவைகளின் ஆதியும், அவைகளின் வித்தும், அழியா ஸாரமும், பிரபஞ்ச முழுவதும் வியாபித்திருப்பதும், அவைகளின் முடிவும் ஆகும். அதன் உற்பத்தி ஸ்தானம் (முதற் காரணம்) சுத்த சைதன்யம். உன்னால் சைதன்னியத்தைத் திட்டமாக விவரித்துச் சொல்லமுடியாது. ஆனால் ஒவ்வொரு க்ஷணமும் உன்னுடைய வாழ்க்கையில் அது இருந்து கொண்டிருக்கிறது. அது இல்லாத இடம் ஒன்றும் இல்லை. ஆனால் அதற்கு உருவமும், நாமமும் இல்லை. தன்னில் அது காற்றை ஒத்திருக்கிறது. அதைக் காணத்தக்க நிறமும் உருவமும் இல்லை. (ஆனால் அதன் இருப்பு நிலை சந்தேகத்திற்கு இடமில்லாதது.) சுத்த சைதன்யமே பிரம்மன் எனப்படும். ஞானிகள் அதைப் பிரம்மன் என்ற நாமத்துடன் உபாசிக்கிறார்கள். ஆதலால் அவர்கள் பிரம்ம வித்துகள் எனப்படுவர். கந்தமூல, ஜந்து, மனித வர்க்காதிகளும், இதர ஜீவராசிகளும் அதனுள் அடக்கம். சகலவித வெளித்தோற்றங்கள், இந்திரிய உணர்ச்சி, விஷயஞானம் இவைகளின் ஆதிகாரணம். பலவற்றுக்கும் அதுவே வேர். அது சகலத்திலும் பரவி இருக்கிறது. அதைத் தான் சத் சித் ஆனந்தமென்றும் ஏகத்வ இணை யிருப்பு என்றும் வர்ணிக்கலாம். நாம் எல்லோரும் அதுவே. அதைவிட்டு நாம் வேறு இல்லை.

சந்தோர்க்கர் :—பாபா. பிரம்மன் பேரின்பம் என்கிறீர். ஏகரீதி (பலவிதங்கள் இல்லாதது) என்றும் சொல்கிறீர். மேலும் அதே பிரம்மன் ஜகத்திலுள்ள எல்லாம் என்றும், ஒவ்வொன்றும் என்றும் சொல்கிறீர். பிரபஞ்சம் பலவிதங்களாக காணப்படுவதோடு துக்கத்தோடும் இருக்கிறது. பேரானந்தம் எப்படி சங்கடமாகவும், ஒரே வஸ்து பல விதங்களாகவும் புலப்படும் ? மெய்யானது எப்படிப் பொய்யாகத்தோன்றும்? மேலும் நாம் ஒவ்வொருவரும் சைதன்யமாக அல்லது பிரம்மனாக எண்ணினால், அநேகர் இருப்பதால், அநேக பிரம்மன்களாக இருக்கவேண்டும். அன்றியும் நாம் எல்லோரும் ஒரே பிரம்மன் என்று எண்ணினால், மற்றொருவன் படும் சுகதுக்கத்தை இதராளும் அனுபவிக்க வேண்டுமே. ஆனால் அப்படி அனுபவிப்பதில்லை. நம்முடைய தேகம் எப்படி வெவ்வேறோ, அப்படியே ஆத்மாவும் வெவ்வேறாகவே இருக்க வேண்டும். ஒன்றாக இருப்பதற்கில்லை. கிருபை செய்து இதை விளக்கவேண்டும்.

பாபா :—நீ சொல்வது தப்பிதமானது. சரியாய்க் கேள். சிவப்பு, கருப்பு, வெண்மை, நீலம், மஞ்சள் முதலிய நிறங்கள் வெவ்வேறானவை. அவற்றைத் (தனித் தனியாக) நீரில் கரைத்தால் வெவ்வேறு வர்ணமுள்ள ஜலம் காணப்படுகிறது. ஆனால் நீர் மாத்திரம் ஒன்று தான். அதுபோல் ஆத்மா அல்லது பிரம்மன் ஒன்று தான். ஆனால் அது அடைந்திருக்கும் ஹிருதயங்களோ பலவகையானவை. ஆனால் எல்லா ஹிருதயத்தைப் பற்றி இருப்பது ஒரே ஆத்துமா தான். சுக துக்கம் என்றால், இவைகள் பிரம்மனுடைய அல்லது ஆத்மாவினுடைய காரியம் இல்லை. ஆனால் ஆத்மாபற்றி யிருக்கும் ஹிருதயத்திற்குச் சம்பந்தப்பட்டது. இவ்விஷயத்தை

இன்னும் விவரமாய் சொல்கிறேன்-கேள். சைதன்ய மானது மூன்று குணங்கள் மூலமாய் தோன்றுகிறது. அதாவது பரமார்த்திக சத்யம்-வியவஹாரிக சத்யம்-பிர திபாசிகசத்யம்-எப்படி தேகத்திற்கு கௌமாரம், வாலி பம், வயோதிகம் உண்டோ, அவ்விதமே சத்யமும் மூன்று விதமாகவுண்டு. பரமார்த்திக ஸ்திதியில் இருப்ப வன் சாது. சத்தியத்தைச் சத்தியமாகவேகண்டு சாஸ்திர சம்மதமாய் நடக்கிருன். வியவ ஹாரிக ஸ்திதியில் இருப்ப வன் நல்ல தன்மை யுடையவன். சாஸ்திரங்களின்படி நடக்க முயன்று, ஆனுல் ஒவ்வொரு பத்தியிலும் ஆராய்ந்து, நல்லவையை எடுத்துக் கொண்டு கெட்டவை களை ஒழிக்கிருன். பிரதி பாஸிக ஸ்திதியில், விஷயங்களை அறியாதவனுயும், சத்யத்தைத் தனியாகவோ, சேர்க்கை யுடனே காணுதவனுய், சத்யத்தை தலைகீழாகக் கண்டு, வியவஹாரிகள் பார்ப்பதற்கு நேர்விரோதமாக அறிகி ருன். நல்லதைக் கெட்டதாகவும், கெட்டதை நல்லதாக வும் காண்பான்.

ஆனுல், ஆத்மன் அல்லது பிர்ம்மன் இவை எல்லா மூன்று ஸ்திதியிலும், பொதுவாகவே இருக்கிருன்.

இன்னொரு உதாரணம் கேள். அரசன், அரச பிரதி நிதி, அரச தூதன் என்ற மூவரும் இருக்கிருர்கள். இம் மூன்றிலும் ராஜரீகம் பொதுவாக இருக்கிறது. ஆயினும், மூன்றும் வெவ்வேறு. அவ்விதமே பிரம்மமும், மூன்று குணங்களில் வேறுபட்டிருப்பதாகத் தென்பட்டாலும், முத்துக்களின் நூல்போல மூன்றிலும் கலந்திருக்கிறது.

சந்தோர்க்கர் :—பாபா! ராஜத்வத்தை எப்படி வகுக்க முடியும்? அது பிரிக்கக்கூடாதது.

பாபா.—உண்மையே. ராஜத்வம் ஒன்றுதான். பிரிக்கப்படாததுதான். ஆயினும் ராஜத்வத்தின் வகுப்

பை, மேற்சொன்னவைகளாலும், ஒன்றுக்கொன்றுக் குள்ள பேதாபேதத்தாலும் அறியலாம். அவ்விதமாகவே, சைதன்னியம் அளவில்லாதது; ஆயினும் ஒவ்வொரு எல்லையுள்ள தான் "நான்" என்பது, சைதன்னியத்தைத் தான் பெற்ற பரிமாணப்பிரகாரம், அதாவதுசக்திப் பிரகாரம் பங்குகொண்டதாய் வெளியே தெரியக் காட்டு கிறது. மற்ெறாரு உதாரணம் எடுத்துக்கொள். ஆகாச மானது அல்லது இடைவெளியானது எல்லை இல்லாதது. ஆயினும் ஒரு சிறிய குடத்திலும் இருக்கிறது. அப் போது அதற்குக் கடாகாசம் என்று பெயர். ஒரு பெரிய குடத்தில் இருக்கும் ஆகாசத்திற்குக் கும்பாகாசம் என்று பெயர். அந்தஸ்துக்குத் தக்கபடி சர்வமும் ஆகாசத் தைப் பெற்றிருக்கிறது. அவ்விதமாகவே பிரம்மனும் இவ்வுலகில் பலவிதங்களாகத்தென்படுகிறான். அதுதான் மாயையின் நாடகம். பிரம்மமும் மாயையும் சந்தித்துப் பிரம்மாண்டம் உண்டாயிற்று.

126. சந்தோர்க்கர் :—பாபா : இந்த மாயை எனப் படுவது யார்? அவளை யார் உண்டாக்கினது? எது மாதிரி இருக்கிறாள்? உலகத்தின் அடிவேர் சைதன்னியம் என்று இப்போதுதான் சொன்னீர். அப்படியானால் மாயை என்பதற்கு இடமேது?

பாபா :—அவள் எப்படி, எங்கிருந்து வருகிறாள் என்பதைவிவரிக்கிறேன். சைதன்யத்தின் சக்திக்கு மாயை என்று பெயர். அது சைதன்னியத்தை வெவ்வேறு வித மாக காணச்செய்கிறது. சைதன்னியத்தை, சக்தியிட மிருந்து பிரிக்கமுடியுமா? வெல்லத்திலிருந்து எப்படி இனிப்பையும், சூரியனிடமிருந்து எப்படி தேஜஸையும் பிரிக்கமுடியாதோ, அவ்விதமே சக்தியை சைதன்னிய மிடமிருந்து பிரிக்கமுடியாது. மாயையின் முடிவில்தான்

பிரித்தல் ஏற்படும். சைதன்னிய சித்தியோடு மாயை முடிவடைகிறது. சைதன்னியம் முடிவில்லாதது. அது வும் மாயையும் ஆதியில்லாதது. மாயையைப் பிரக்ருதி என்றும், சைதன்னியத்தை புருஷன் என்றும் வர்ணிப் பார்கள்.

சைதன்னியம் ஓர் குகை. அதனுள் பிரவேசித்த வர்கள் மறுபடியும் திரும்புவதில்லே. தாங்களும் குகை யாகவே மாறிவிடுகிறுர்கள்.

மாயையின் காரியம், அதன் குணங்கள் விசித்திர மானவை. நான் பலானவன்—நீ பலானவன் என்று ஏற்படு வது மாயையின் விளைவு. இவ்வித வித்தியாசங்கள் உண்மை யல்ல. நீ மாயையின் கீழ் இருக்கும்போது, உண்மை தென்படுவதில்லே. மாயைக்கு இரண்டுவித சாயல்கள் உண்டு முதலாவது ஆவரணம். அதாவது ஆத்மாவின் தன்னறிவை மறைப்பது. இரண்டாவது விக்ஷேபம். அதாவது பொய்த் தோற்றங்களை உண்டாக்கிக் காண் பிப்பது. இதற்கு ஒரு உதாரணம் கேள். ஒரு கூலி யானவன் தான் ராஜாவானதாகக் கனவு கண்டான். அதனுல் தன் கூலி நிலேயை மறந்தான். கூலி நிலே மாயை யால் மறைக்கப்பட்டது. அதற்கு மேல் ராஜத் தன்மை யான காக்ஷியை உண்டாக்கிற்று. அவ்விதமாகவே, பிரம் மத்தை மாயையானது மறைத்து, உலகத் தோற்றங்களை உண்டாக்குகிறது. உண்மையில் உலகம் என்பதே இல்லே. உண்மையான சத் என்பதே ஜீவித்திருக்கிறது. ஆனுல் வெளித்தோற்றங்கள் உண்மையாக் கொள்ளப் படுகிறது. இது மாயையின் குறும்பு. மாயையை உதைத்துத் தள்ளி, பிரம்மத்தைத் திரும்ப பெறவேண்டும். பிரம் மத்தை எப்படித் திரும்பப் பெறுவது. உன்னேச் சுத்த சைதன்யமாகக் கொள். நீரில் உள்ள அசுத்தம் நீங்கினுல்

சுத்தமாகிறது. அவ்விதமே, இவ்வுலக வெளித் தோற்றத்திலிருந்து, அசுத்தமாகிற மாயையை அகற்று. பிறகு தோற்றமானது உண்மை ஆகும்.

இதுதான் சத் வஸ்துவின் உபாசனை. இதைப் பற்றி எப்போதும் சிந்தித்திரு. எல்லோருக்கும் என் உபதேசம் இதுதான். சத் வஸ்துவைப்பற்றிய இடைவிடாத சத்வஸ்து நினைவு அத்யாத்மம் எனப்படும். இந்த ஆத்மா நீயேயென்று அறிந்து இந்த ஜீவியத்திலேயே முக்தனுவாய்.

தெய்வ சித்தி–சாக்ஷாத்காரம்–கடவுள் என்பது என்ன ?

(சாக்ஷாத்காரம் என்பதும், கடவுளைக் குறித்த அபிப்பிராயமும், அதன் காரணமாக சாக்ஷாத்காரத்தின் பாவனைகளும் வேறுபடுகின்றன.) அதாவது கடவுளை உருவத்துடன் சேர்ந்த தோற்றமாய் தரிசிப்பதோ, அல்லது பார்ப்பதோ தான் சாக்ஷாத்காரம் என்பதும், ஆத்ம சம்பந்தமான ஏற்றத்தில், அதியுன்னத பரண் அதுதான் என்பதும் ஒரு சாரருடைய அபிப்பிராயம். இரண்டாவதாக, உருவத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, சாக்ஷாத்காரம் என்பது, தங்களுடைய வியக்தியை ரூபமில்லாத தனித்ததோடு (கடவுளோடு) மறைபொருளாய் லயமாய் விடுவதே என்பது. இவ்விருவர்களில், தாஸ்கணு முதல் வகுப்பைச் சேர்ந்தவர்.

தாஸ்கணு மகாராஜ் என்பவர் ஓர் பக்தர். பண்டரிபுர—வர்க்காரியைச் சேர்ந்தவர். இவருக்குக் கடவுள் என்னும் பாவனை பண்டரிநாதன், செங்கல்களின்மேல் நின்றுகொண்டு, விரிந்த கைகளுடன் வரவேற்பது. (ஆசிரியர் நரஸிம்ஹ ஸ்வாமி அவர்களின் குறிப்பு.)

127. ஒரு சமயம் தாஸ்கணு பாபாவை நோக்கி, "பாபா! எனக்கு சாக்ஷாத்காரம் வேண்டும். நீர் என்னைப் பாகவத சப்தாகத்தை படிக்கச் சொன்னீர். அதன் பலனாக எனக்கு சாக்ஷாத்காரம் அளியும்" என்றார்.

பாபா தாஸ்கணுவை நோக்கி, "விட்டல் பிரசன்னமாவார். ஆனால் தீவிர உபாசனை வேண்டும்."

தாஸ்கணு பாகவத சப்தாகத்தைப் படித்தும் சாக்ஷாத்காரம் அடையவில்லை.

128. 1916-ம் வருஷம் தாஸ்கணு பண்டரிபுரம் போவதில் அதிக ஊக்கங் கொண்டிருந்தார். ஆனால் சந்தோர்க்கர் அவரைச் சீரடிக்கு அழைத்துக் கொண்டு வந்து கீர்த்தனங்களை பாடும்படி செய்து பாபாவின் உத்திரவின்பேரில் நிருத்தி யிருந்தார். இதைக் கண்ட தாஸ்கணு "கடவுளை நான் தரிசிக்க பண்டரிபுரம் போகும் என் வழியில் தடையாக நிற்கும் இவர் (பாபா) எப்படி குருவாக இருக்கமுடியும்" என்று நினைத்தார். பாபா சந்தோர்க்கரைப் பார்த்து, "நானா! பண்டரிபுரம் போகும் அவனை நிருத்தாதே" என்று சொன்னார். பிறகு கணுவை பாபா நோக்கி, "பண்டரிபுரம் போகலாம்" என்றார். ஆகையால் கணு சந்தோஷத்துடன் அஸ்வனிக்கு பண்டரிபுரம் போனார். அவருக்குப் பண்டரிநாதன் தான் ஈஸ்வரன் என்பதும் பாபா இல்லை என்பதும் தாத்பரியம். பிறகு கணு சீரடிக்குத் திரும்பி வந்தார்.

129. தாஸ்கணு பாபாவை நோக்கி, "பாபா, என் வேண்டுகோளை வெகு நாளாக தவணைசெய்து கொண்டு வருகிறீர். சாக்ஷாத்காரம் எப்போது எனக்குக் கொடுப்பீர்?

பாபா:—என்னை நீ தரிசனம் செய்கிறாய். அதுதான் சாக்ஷாத் காரம். நான்தான் ஈஸ்வரன்.

தாஸ்கணு:—"நீர் இப்படிச் சொல்லுவீர் என்று தான் நான் எதிர்பார்த்தேன். ஆனால் அதில் நான் திருப்தியடையவில்லை." தாஸ்கணு தான் கோரிய விட்டலின் சாக்ஷாத்காரத்தை தன் ஜன்மத்தில் அடைய முடியாது என்று நினைத்தார்.

130. ஒரு சமயம் ஓர் பக்தர் (H. S. D.) விட்டலின் தரிசினம் அடைந்தார். ஆனால் எந்தக் கடவுளின் ரூபம் என்று அவரால் நிச்சயித்துக் கொள்ள முடியவில்லை. பாபாவிடம் போனார்.

அவரைக் கண்டவுடன் பாபா, "விட்டல் பட்டேல் வரவில்லையா? நீ அவரைக் காணவில்லையா? அந்த விட்டல் மிகவும் பிடிபடாதவர். அவரைத் திடமாகக் கட்டு. ஒரு வேளை அஜாக்கிரதையாய் அவர் மேல் இருக்கும் பார்வை தவறினால், அவர் நொடியில் மறைந்து விடுவார்.

131. பாபா ஒரு சமயம் பானைகளைக் கழுவி, அவைகளின் வாய் கீழே படியும்படி வைத்துக் கொண்டிருந்தார். அதைக்கண்ட, அவரிடம் நம்பிக்கையில்லாத ஒருவன் அவரை நோக்கி, "பாபா இதெல்லாம் என்ன?" என்று கேட்டான். அதற்கு பாபா பிரதி யுத்தாரமாக, "என்னிடம் வரும் பாண்டம் ஒவ்வொன்றும வாயை கீழே வைத்துக்கொண்டே வருகிறது"

132. ஒரு சமயம் பாபாவைத் தரிசிக்க வந்த ஒருவன் அவரை நோக்கி, "பாபா! கடவுள் எப்படி இருக்கிறார்" என்றான். பாபா, அருகில் இருந்த வேறொரு பக்தனைப் பார்த்து, "பாக்சந்த் மார்வாடியிடம் போய், பாபாவிக்கு நூறு ரூபாய் வேண்டுமென்று சொல்லி,

பணத்தை வாங்கிக்கொண்டுவா" என்றார். சென்றவன் திரும்பி வந்து, "மார்வாடி, தன்னிடம் பணம் இல்லையென்று, தன்னுடைய நமஸ்காரங்களைக் கொடுத்தான்" என்றான்.

பாபா:—அடுத்த வியாபாரியிடம் போய் எனக்காக நூறு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டுவா என்றார். மறு நிமிஷத்தில் மறுபடியும் அவன் திரும்பி வந்து, தன்னிடத்தில் பணம் இல்லையென்றே சொல்கிறான் என்று சொன்னான்.

பாபா:—போய் நானா சாஹிப் சந்தோர்க்கரை அழைத்துக்கொண்டுவா. (நானா வந்தார்)

பாபா:—நானா! எனக்கு நூறு ரூபாய் வேண்டும். பிறகு நானா பாக்சந்த் மார்வாடிக்கு ஒரு சீட்டு எழுதினதில் பணம் வந்தது.

பாபா:—இவ்விதமாகவே இவ்வுலகத்தில் இருக்கிறது.

பிறகு தரிசிக்க வந்தவன் தாஸ்கணு மஹாராஜை நோக்கி, "பாபா, ஏன் என் கேள்விக்கு உத்தரம் சொல்லவில்லை"

தாஸ்கணு:— அவர் சொல்லியிருக்கிறார்.

தரிசிக்க வந்தவர்:—எப்படி?

தாஸ்கணு:—அயலார் பணம் கேட்டால் வரவேயில்லை. நானா சாஹிபு அதைக்கேட்டு, உடனே அடைந்துவிட்டார். அவ்விதமே, பிரம்மத்தைச் சும்மா தெரிந்துகொள்ள வேண்டுகிற மனிதன் அதை அடைவதில்லை. எவன் அதைத் தெரிந்து கொள்ளத் தகுதியானவனோ, அவனே அடைகிறான். பாபாவின் உத்தரம் யாதெனில் "பிரம்மத்தை விரும்புமுன், அதற்கு வேண்டிய யோக்யதையை சம்பாதித்துக் கொள்" என்பதே.

பிரம்மத்தை வேண்டினால் ஐந்தை தியாகம் செய்யவேண்டும்

133. ஒரு தனவந்தன் பாபாவிடம் தன் பை நிறைய பணத்துடன் வந்து அதிகநேரம் சீரடியில் தங்குவதால் வண்டிக்காரன் அதிக பணம் கேட்பதைத் தவிர்க்க வேண்டி, அவசரமாய்ப் பாபாவை நோக்கி, "பாபா! எனக்குக் கடவுளைக் காட்டும். இதற்காகவே நான் வெகு தூரத்திலிருந்து வருகிறேன். சீரடி பாபா வெகு சீக்கிரத்தில் பிரம்மத்தை வெளிப்படுத்துகிறார் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்" என்றான்.

பாபா:—ஹா-பயப்படாதே. தக்ஷணமே விளக்கமாக உனக்கு நான் காண்பிக்கிறேன். தவணை சொல்ல வேண்டிய விஷயம் இது அல்ல. ஏனெனில் உன்னைப் போல் ஞானோதயம் வேண்டி கேள்விகேட்பவர் கிடைப்பது அதிக துர்லபம். அநேகமாய் ஜனங்கள் சம்பத்து, ரோக நிவாரணம், கஷ்டம் அகற்றுதல், கீர்த்தி, பதவி, இடைவிடாத இன்பம், இதர லௌகிக பொருள்களையே வேண்டுகிறார்கள். எவரும் ஈஸ்வரனை வேண்டுவதில்லை. ஹா! ஈஸ்வரனைக் காண உருகுபவர்களைக் காண நான் எவ்வளவு விரும்புகிறேன். இந்த ஜகத்தின் ஆதி காரணம் பிரம்மன். சூரியம் முதலிய இதர கிரகங்களின் கமனங்களுக்கும் பருவங்களின் மாறுபாடுதல்களுக்கும், கடவுளின் தொழில் வகுப்புகளுக்கும் அதுதான் காரணம். ஒருவன் தான் சாகுமுன் பிரம்மத்தை அறியவேண்டும். இல்லாவிடில், ஜனன மரண காலசக்கரம் இருந்துகொண்டே தான் இருக்கும். (பிரம்ம) சித்தியானது கேவல அத்வைத சுகத்தைத் தருகிறது. குருவானவர் அதைத் தருகிறார் குருவினால்தான் அதைத் தர முடியும்.

பிறகு பாபா, சிலரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒரு பையனிடம் நந்தலால் மார்வாடியிடம் போய், பாபாவுக்கு அவசரமாய் கைபதிலாக ரூபாய் ஐந்து தேவை என்று சொல்லி, பணத்தைப் பெற்றுக்கொண்டு வா, என்று சொல்லி யனுப்பினர். அந்தப் பையன் போய், மார்வாடி வெளியே போயிருப்பதாக வந்து சொன்னன். மறுபடியும் வெளியே போயிருந்த மனிதர்களுக்குச் சங்கதி சொல்லி யனுப்பினர்.

திரும்பும் பிரயாணத்துக்குங் கூட டோங்காவாலாவை அப்பணக்காரன் ஏற்படுத்திக்கொண்டு வந்திருந்ததால், ஆத்மஞானம், அல்லது கடவுளின் தரிசனம் கொடுப்பதில் பாபா அசட்டையாய் இருக்கிறுர் என்றும், அதனல் வெகுநேரம் ஆனல் அதிகமான வண்டி வாடகை கேட்பானே என்று அப்பணக்காரன் அமைதியற்றவனுக ஆனன். பாபா வேண்டியது ஐந்து ரூபாய் என்பதையும் பார்த்தான். தன்னிடம் இருந்த ரூ. 250-ல் ஒரு ஐந்து ரூபாய் எடுத்துக் கொடுத்து, பாபாவின் வேண்டுகோளைத் தீர்த்திருக்கலாம். ஆனல் கைபதிலாகத் தான் கொடுத்தால் மறுபடியும் அது திரும்பி வராது என்ற பயத்தால் வருத்தப்பட்டான்.

பணக்காரன் பாபாவை நோக்கி, "பிரம்மத்தைப் பிடிக்க உதவி செய்வீரா"—என்ருன்.

பாபா:—நீ உட்கார்ந்திருக்கையிலேயே, நான் இவ்வளவு நேரம் செய்துகொண்டிருந்தது எல்லாம், நீ கடவுளைக் காண உதவி செய்யவே. நீ ஒன்றும் அறிந்து கொள்ளவில்லையா? எனக்கு ஐந்து வேண்டும். பிரம்மத்தைப் பெறவேண்டுமானல் அந்த ஐந்தையும் தியாகம் செய்யவேண்டும். பஞ்சேந்திரியங்களையும், பஞ்சப் பிராணன்களையும், மனது, புத்தி, அகங்காரம் இவைகளைத்

தியாகம் செய்யவேண்டும் பிரம்மஞானத்தின் வழி கரடு முரடானது. நடக்கக் கஷ்டமானது. எல்லாராலும் வழி நடக்க முடியாதது. அது உதயம் ஆகும்போது வெளிச்சம் உண்டாகும். எவன் இவ்வுலகத்துக்குச் சம்பந்தமானதும் சொர்க்கத்துக்கு சம்பந்தமுமான விஷயங்களில் பற்று அற்றவனே, அவனே பிரம்மஞானத்துக்கு தகுதியானவன்.

பிரம்மஞான உபதேசம் பெறுவதைக்காட்டிலும் ஐந்து ரூபாய் மேல் தனக்குள்ள அதிகப் பற்றை பாபா அறிந்துகொண்டார் என்பதைப் பணக்காரன் தெரிந்துகொண்டான்.

எல்லோரும் பாபாவிடம் போய் நலமடைகிறார்களா?

134. ஒருசமயம் தாமோதர-ராஸ்னே என்னும் ஓர் பக்தன், தன் மனதில், எல்லோரும் பாபாவிடம்போய் நலமடைகிறார்களா என்று எண்ணி, பாபாவிடம்போய் உட்கார்ந்தார். அவர் மனதையறிந்த பாபா அவரை நோக்கி, "புஷ்பித்திருக்கிற அம்மாமரத்தைப்பார். எல்லாப் புஷ்பங்களும் பழங்கள் ஆனால், எவ்வளவு சிறப்பான விளைச்சல் ஆகும். ஆனால் அப்படி ஆகிறதா? அநேகமாய் புஷ்பங்களாகவோ பிஞ்சுகளாகவோ விழுந்து போய், சுவல்பமே நிற்கின்றன.

சம்பூர்ண சரணாகதி

135. ஒரு சமயம் பாபா பூடி என்பவரை நோக்கி "எனக்கு தக்ஷிணையாக 16½ ரூபாய் கொடு" என்றார்.

பூட்டி :—"என்னிடம் இப்போது பணம் இல்லையே" என்றான்.

பாபா :—நீ காகாவிடம்போய் அவனிடம் கேள். அவன் போதி படிப்பதையும் கேள் என்றார்.

அப்படியே பூட்டி காகா என்பவரிடம் வந்து 16½ ரூபாய் கேட்டான்.

காகா:—என்னிடம் ஒரு ரூபாயே இருக்கிறது 16½ ரூபாய் கொடுக்கமுடியாது.

பூட்டி:—நீ படிக்கும் போதியைக்கூட கேட்கும்படி பாபா சொன்னார்.

பிறகு காகா பாகவதத்தைப் படித்தார். அப்போது வந்த முதல் சுலோகமாவது "காயேன வாசா" என்பது. பாபா ஈஸ்வரன் ஆதலால் பரிபூர்ண சரணுகதி கோருகிறார். ஆனுல் அந்தச் சுலோகத்தில் 16½ இல்லை. 17 தொடர்மொழிகள் தான் இருக்கின்றன. பரித்யாகம் செய்யவேண்டிய விஷயங்கள் 16. ஆனுல் சுலோகத்தில் சித்தம் என்பது விடப்பட்டிருக்கிறது என்று வியாக்கியானத்தில் குறிப்பிட்டிருக்கிறது. ஆனுல் சித்தம் ½ தான். ஆகையால் 16½ விஷயங்கள் பரித்யாகம் செய்ய வேண்டியது.

அன்ஞ சாஹேப் தபோல்கர்

136. அன்ஞ சாஹேப் தபோல்கர் என்பவர், சாக்ஷாத்காரம் அடைய அதிக ஆவல்கொண்டு, பாபாவின் எதிரில் உட்கார்ந்து, "எனக்கு ஒருநாள் பாபா உபதேசம் கொடுக்கமாட்டாரா?" என்று மனதில் நினைத்தார்.

இதை அறிந்த பாபா, அவரை நோக்கி "எழுந்திருந்து சாமாவிடம்போ. அவனிடமிருந்து 15 ரூபாய் கொண்டுவா. அவனிடம் கொஞ்சநேரம் உட்கார்ந்து, பேசி, பிறகு தக்ஷிணையாக 15 ரூபாய் கொண்டுவா. அவன் உனக்குக் கொடுப்பான்" என்று சொன்னுர்.

அப்படியே தபோல்கர் போய் சாமாவிடம் நடந்த வரலாற்றைச் சொன்னுன்.

சாமா :—ரூபாய்க்கு பதிலாக, பாபாவுக்கு என் 15 நமஸ்காரங்களைச் செலுத்து. அதுதான் தக்ஷிணை என்று சொல்.

தபோல்கர் :—பாபா உன்னுடன் உட்கார்ந்து கதை பேசிவிட்டு, பிறகு நீ கொடுக்கும் தக்ஷிணையைக் கொண்டு வரச் சொன்னார். இது ஏனென்றால், நான் பாபாவின எதிரில் உட்கார்ந்துகொண்டு, எனக்கு உபதேசம் கொடுக்கவேண்டுமென்று நினைத்தேன்.

த :—சாதாரணமாக பாபா எவருக்கும் உபதேசம் செய்வதில்லை. அதாவது மந்திரங்களைக் காதில் சொல்வதில்லை. அவர் உபதேசம் செய்வது இல்லை என்பதற்கு ஓர் உதாரணம் கேள்.

பிறகு சாமாவும் தபோல்கரும் பேச ஆரம்பித்தார்கள்.

சாமா :—ஒரு சமயம் ராதாபாய் தேஷ்முகின் என்ற ஓர் மாது பாபாவிடம் உபதேசத்திற்கு வந்தாள். உபதேசம் ஒன்றும் கிடைக்காததால் சத்தியாக்கிரகம் செய்யத் தீர்மானித்தாள். முதலில் உண்ணாவிருதம் ஆரம்பித்து, உபதேசமோ அல்லது சாவோ இரண்டில் எது முதலாக வருமோ அதுவரையில் உண்ணாவிருதம் இருக்கத் தீர்மானித்தாள். உபயோகம் ஒன்றுமில்லாமல் மூன்றுநாள் உபவாசமானபிறகு, அவளுக்காக, நான் பாபாவிடம் மத்தியஸ்தம் செய்து, அவளெதிரில் ஒரு தெய்வபெயரைச்சொல்லி அவளையனுப்பும்படி பாபாவை வேண்டினேன். பாபா அவளை வரவழைத்து, அவளை நோக்கி, "அம்மா—நீ ஏன் வேதனைபட்டு இறக்க எண்ணியிருக்கிறாய்? என்னிடம் அனுதாபம் கொள். நான் உன் குழந்தையல்லவா? நான் ஒரு வறிஞன்; என்னைப் பார். என் குரு ஒரு பெரிய மகான். அதிகக் கருணை யுள்ளவர்.

அவருக்குத் தொண்டு செய்து நான் களைத்துப் போயும், ஒரு மந்திரத்தையும் என் காதில் ஊதவில்லை. அதற்குப் பதிலாக என்னைச் சுத்தமாய் மொட்டையடித்து, என்னை இரண்டு பைசா கொடுக்கும்படிக் கேட்டார். பைசா என்றால் உலோக நாணயம் அல்ல. தங்க நாணயமும் இல்லை. முதலாவது நிஷ்டை, விசுவாசம். இரண்டாவது ஸபூரி அஞ்சாத பொறுமை. உடனே நான் சமர்ப்பித்தேன். திருப்தி யடைந்தார்.

தாயே! தைரியத்தை விலக்காதே. கடைசிவரையிலும் அது உன்னைக் கொண்டுபோய்விடும். ஆண்களுக்கு அது வீரத்தைக் கொடுக்கிறது. பாவத்தையும் சோர்வையையும் வேரோடு அழிக்கிறது. எல்லா பயங்களையும் வெல்கிறது.

12 வருஷ காலம் என் குருவின் அடியில் காத்திருந்தேன். அவர் ஒப்பில்லாதவர். அன்புள்ளவர். அவருக்கு என்னிடம் இருந்த அன்பை எப்படி என்னால் விவரிக்க முடியும்? அவர் தியானத்தில், (மெய்மறந்த அன்பின் பரவச நிலையில்) இருந்தபோது, அவரெதிரில் நான் உட்கார்ந்து, அவரைக் கண்கொட்டாத பார்வை கொண்டேன். நாங்கள் இருவரும் பேரின்பத்தால் நிறைக்கப்பட்டோம். வேறு எந்த வஸ்துவின் பேரிலும் என் நோக்கத்தைச் செலுத்த பிரியப்படவில்லை. இரவும் பகலும் பசியையும் தாகத்தையும் விரட்டி யடிக்கும் அன்பின் உற்சாகத்தோடு அவர் முகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஒரு விநாடிகூட என் குரு இல்லாமல் இருக்க எனக்கு அமைதியில்லாததாய் இருந்தது. என் குருவைத் தவிர வேறு ஒன்றின் பேரிலும் நான் தியானம் செய்ததில்லை. என் குருவைத் தவிர வேறு ஒரு வஸ்துவும் எனக்கு லக்ஷியமும் இல்லை. இடைவிடா

மல் என் மனது அவரிடமே நிலை பெற்றிருந்தது. என் குருவின் திறமை என்ன விநோதம்! என் குருவைத் தவிர வேறு ஒன்றையும் நான் கோரினதில்லை. அவரும் என் அன்பைத் தவிர வேறு ஒன்றையும் கோரவில்லை. வெளிக்கு ஒன்றும் செய்யாதவர்போலக் காணப்பட்டாலும் அவர் என்னை எப்போதும் பராமுகம் செய்ததில்லை. அவர் கண்ணோட்டத்தால் என்னை அவர் கடாக்ஷித்தார்.

அந்த குரு—இந்த மசூதியில் உட்கார்ந்துகொண்டு, நான் சொல்வது சத்தியம்—என் காதில் ஒரு மந்திரத்தையும் ஊதவில்லை. உன் காதிலும் நான் ஊத முடியாது. அவ்விதமே நீயும் போய் செய்.

நீ என்னையே உன் எண்ணங்களின் ஒரே லக்ஷ்யமாகச் செய்து கொண்டால் பரமார்த்த மடைவாய். ஒரே சிந்தனையுடன் என்னையே பார். அப்படியே நானும் உன்னைக் கடாக்ஷிப்பேன். இந்த ஒரே உண்மையை என் குரு உபதேசித்தார். நான்குவித சாதனங்களும், ஆறு சாஸ்திரங்களும் தேவையில்லை. பூர்ண விசுவாசத்துடன் உன் குருவை நம்பியிரு. அதுவே போதுமானது.

சாமா :—அந்த ஸ்திரீயானவள், பாபாவின் மொழிகளைக் கேட்டதும், வணங்கி வந்தனஞ் செய்து, போதனையை ஏற்றுக்கொண்டு, தன் சத்தியாக்ரகத்தை விட்டுவிட்டாள்.

பிறகு தபோல்கர் பாபாவிடம் வந்து, தான் சாமாவிடம் கேட்ட வரலாறுகளைச் சொன்னான்.

138. பாபா :—எங்கள் கலை மிகவும் அபூர்வமானது. இதைக் கவனி. ஆத்ம ஞானம் அடைவதற்குத் தியானம் அதாவது மனதைச் சமாதானப்படுத்தி, சமாதியில் இருந்து நிலைநிருத்தும் ஆத்ம அனுஷ்டானம்,

தேவை. ஆகையால் எல்லா விருப்பங்களையும் விட்டு மனதை கடவுளிடம் தங்கி யிருக்கச் செய். மனமானது இவ்விதமாய் நிலைநிறுத்தப்பட்டால் உன் நோக்கம் கை கூடும்.

தியானத்திற்கு, என்னை இந்த உருவத்தோடாவது, உருவமில்லாமலாவது, அல்லது ஆனந்த மயமாகவாவது சிந்தித்திரு. உருவமில்லாத நிலையாகச் சிந்தனை செய்வது கஷ்டமாயிருந்தால், நீ இப்போது பார்க்கும் இந்த உருவத்தையே தியானித்திரு. இரவும் பகலும் அதே சிந்தனையில் இருக்க, மனமானது ஏகத்வதில் லயமடைகிறது. அந்த ஸ்திதியில் நான், நீ என்னும் பேதாபேதங்களும், தியான ரீதியும் மறைந்துவிடும். இந்நிலை, சைதன்னியத்திலும், பிரம்ம சாக்ஷாத்காரத்திலும் முடிகிறது. குருவின் கருணாநோக்கம், சிஷ்யனுக்கு பாலும் சோறுமாகிறது.

139. பாபா, பிறகு தபோல்கருக்குக் கற்கண்டு பிரசாதம் அளித்து, "இந்தப் போதனையை மனதில் வைத்துக் கொண்டால், இந்தக் கற்கண்டுபோல் இனிக்கும்" என்றார். ஆனந்த கானத்துக்கு அனுகுணமான ஆராய்ச்சி செய்யவும் சொன்னார். காணப்படுபவை மாயையால் பிரதரிசனம் செய்யப்படும் பிரம்மமே. மறுபடியும் பிரம்மத்திலேயே லயமாகி விடுகிறது. ஆறு சாஸ்திரங்களையும், ஆத்மா ஒன்று அல்லது ஜீவன்களின் எண்ணிக்கையா என்று பார். ஞானத்தின் பூர்த்தி ஆத்மாவை அறிவதே. அதிலிருந்தே ஒவ்வொன்றும் உண்டாயிற்று.

140. ரிணானுபந்தத்தால் என்னிடம் நீ வந்திருக்கிறாய். ரிணானுபந்தத்தைக் கவனி. எவராயினும், எந்தப் பிராணியாயினும், உன்னிடம் வந்தால், அதை விரட்டி அடிக்காதே. ஆனால் தகுந்தபடி அதை வரவேற்று.

பசித்தவருக்குப் புசிக்க அன்னங் கொடு. தாகந் தணிய நீர் கொடு. வஸ்திரமில்லாதவருக்கு வஸ்திரம் கொடு. இதனுல் ஈஸ்வரன் திருப்தி யடைகிருர். ஜனங்களுக்கு எதிரில் குலேக்காதே. சண்டையிடத் தயாராக இராதே. அயலாரின் தூஷணைகளைப் பொறுத்துக்கொள். சாத்வீக வார்த்தைகளைப் பேசு. இதுதான் இன்ப மார்க்கம். இதராரும், இந்த உலகமும் தலைகீழாகப் போனுலும், கவலைப் படாதே. உன் நேர்வழியையே கடைப்பிடி. இவ்வுலகம் சுவற்றைப் பெற்றிருக்கிறது. அதுவே பேதச் சுவர். அது ஒருவனுக்கும் மற்றவருக்கும், உதாகரணமாக உனக்கும் எனக்கும் உள்ள பேதத்தைக் காண்பிக்கிறது. அந்தச் சுவற்றை இடித்துத் தள்ளு. ஈஸ்வரனே அதி சிரேஷ்டமான ஆண்டவன். அல்லா—மாலிக். (அதாவது எல்லாம் வல்லவர்) அவருடைய வேலைகள், ஆச்சர்யமும், அருமையுமானதும் நீடித்ததுமானவை. உன் கருத்து நாளடைவில் ஈடேரும். அன்னியோன்னிய அன்பினுல் நாம் இருவரும் பேரானந்தமடையலாம்.

—

சாதனங்கள்

1-வது தேய்வபக்தி

141. 137 ல் அடக்கம்.

142. பாபா புரந்தரன் என்னும் ஓர் பக்தனை நோக்கி, ', புரந்தரா ! எனக்கு 2 ரூபாய் தக்ஷிணை கொடு. நான் கேட்பது இவைபோன்ற ரூபாய்கள் அல்ல. நான் கேட்பது "நிஷ்டை" பக்தி ஒன்று. இரண்டாவது "ஸபூரி" தைர்யத்தோடு கூடிய பொருமை.

143. சந்தோர்க்கர் ரயிலுக்குப் புறப்பட வேண்டியிருந்தது. சாப்பிட்டுப் போக காலம் இருக்குமோ என்று சந்தேகப்பட்டார். பாபா அவரை நோக்கி: நானு! சாப்பிட்டு விட்டு, ரயிலுக்குப்போ. காலம் இருக்கிறது. அப்படியே நானு சாப்பிட்டு விட்டுப்போனார். அன்று ரயில் கால தாமதமாய் வந்தது நானுவுக்குக் கிடைத்தது. பாபாவின் சொற்களில் விசுவாசம் இல்லாமல் வண்டி தவரிவிடும் என்று ஹரிதாஸ் என்பவர் சாப்பிடாமல் முன்னதாகவே ஸ்டேஷனுக்குப் போனார். அவருக்குப் பலன் ஊணிழந்தது.

ஹிந்து தெய்வங்களிடம் பாபாவுக்கு இருக்கும் மரியாதை

144. ஒரு சமயம் பாபா உட்கார்ந்திருந்த சாவடியின் உள் பக்கம் மழைச்சாரல் அடித்துக்கொண்டிருந்தது. அவ்விடத்தைக் காட்டிலும் உயரமாய் இருந்த ஓர் இடத்துக்கு மாறி உட்காரச் சொன்னார்கள். அவ்விடத்தில் இருந்த ஓர் மாருதி விக்ரத்தைக்கண்டு,

பாபா :—"கடவுளுக்குச் சரியாய் நாம் எப்படி உட்காரக்கூடும்" என்றார்.

145. பாபா ஒரு சமயத்தில் அப்பா குல்கர்னி என்பவரை நோக்கி "நிவாஸில் இருக்கும் மோஹினிராஜ் சகுண பிரம்மம். டிப்டி கலக்டரைப் போய் பார்ப்பதற்கு முன்பு, அவரைத் தரிசித்து விட்டுபோ."

சாமாவும் மற்றவரும் பாபாவை நோக்கி, "புராணங்கள் உண்மையானவைகளா" என்று கேட்டார்கள்.

பாபா :—ஆம்.

சியாமா :—ராமரும், கிருஷ்ணரும் எப்படி ?

பாபா :—"அவர்கள் பெரிய ஆத்மாக்கள். கடவுளாக இருந்தார்கள். அவதாரங்கள்"

விட்டலிடம் பாபாவுக்கிருந்த மதிப்பு

146. பல்வந்த ராவ் க்ஷீரசாகர் என்பவர் சீரடிக்கு வந்த போது, பாபா அவரைக் கண்டு, " இவன் தந்தை செய்ததுபோல், விட்டலுக்குப் பூஜையும் நிவேதயமும் இந்தக் குமாரன் அளிப்பதில்லை. விட்டலையும் என்னையும் பட்டினி போடுகிறான். அவன் தந்தை என் நண்பன். ஆகையால் அவனை இங்கே இழுத்தேன். அவன் தகப்பனார் பூஜையை மறுபடியும் தொடங்க ஞாபகப் படுத்துகிறேன்.

பாபாவும் ஹிந்து தேய்வங்களும், அவதாரங்கள் முதலானவைகளும்

பாபா, அப்துல் பாய் எதிரில் இவ்விதமாகச் சொன்னார்.

விசுவம் ?

முதலில் ஓம்காரம் இருந்தது ?

ஓம்காரத்திலிருந்து பாவகாரம்

பாவகாரத்திலிருந்து அத் (Adh)

அத்திலிருந்து அலக்

அலக்கிலிருந்து நிரஞ்சன்

நிரஞ்சனிலிருந்து நிராகாரம்

நிராகாரத்திலிருந்து நில்

நில்லிலிருந்து அநில்

அநில்லிலிருந்து சுன்னே

சுன்னேயிலிருந்து

கேசவனிலிருந்து

அம்ருவிலிருந்து

உத்தர

உத்தரவிலிருந்து

பூர்வாவிலிருந்து
ரக்ஷாவிலிருந்து
மத்ஸ்யாவதாரத்திலிருந்து
மனுயத்திலிருந்து
அஸ்மித்ராவிலிருந்து
ஜம்ரித்திலிருந்து பாகீரத்?
பாகீரத்
பாகீரத்திலிருந்து தேகாயத்?
உச்சாயத்திலிருந்து பலி?
பலின்தாரத்திலிருந்து
திர்மக்ளவிலிருந்து திருவிக்ரம?
கச்சாவதாரத்திலிருந்து
உச்சாயத்திலிருந்து தேகாயத்?
பிரஜாபதியிலிருந்து
உக்ரசேனலிருந்து
கடனிலிருந்து
தல்பார்க்ஷ்கஷாரிலிருநது
வராஹவதாரத்திலிருந்து
காலேபட்டிலிருந்து
கோட்ராம்லிருந்து கௌதம?
விஷ்ணுவிலிருந்து
ஹரிதாக்கிலிருந்து
பாப்ரேஸரிலிருந்து
நரஸிம்ஹாவதாரத்திலிருந்து
சேஜ்பாரிலிருந்து
ரீபாக்கிலிருந்து
பங்தோபஸ்திலிருந்து
பெய்ல்சங்த்திலிருந்து
சூரஸிப்பிலிருந்து காஸ்யப?

வாமனவதாரத்திலிருந்து
சான்னுவிலிருந்து
மயானத்திலிருந்து
நூரிலிருந்து
தேஜ்ஜிலிருந்து
கமால்லிருந்து
கட்ராய்மிலிருந்து
அட்புட்டிலிருந்து
குஸ்தவாவிலிருந்து
கவ்வையிலிருந்து கவில்?
ஹரிப்ரவவிலிருந்து
அனூர்த்திலிருந்து
ஜயாவ்விலிருந்து
அவ்வியிலிருந்து
அதஸ்தாவிலிருந்து
மந்தாதாவிலிருந்து
விஷ்ரான்னிலிருந்து
ஜமதக்னியிலிருந்து
பரசுராமனிலிருந்து அவதாரம்.
ராஜாஜியிலிருந்து ஜடி.
கவாதிக்கிலிருந்து
ராஜாவிலிருந்து தசரதன்.
ராமசந்திராஜிலிருந்து அவதாரம்.
அங்குள்ளிலிருந்து
பத்மபுருஷனிலிருந்து
ஹிர்பாலிலிருந்து
பஜாலிலிருந்து
பிர்துவிலிருந்து
இதர்துஸ்வீலிருந்து

சுரேசன்லிருந்து
வாசுதேவனிலிருந்து
ஸ்ரீ கிருஷ்ணஜீ அவதாரம்
பிறகு பிரதிமதன் (பிரத்யும்ன ?) அனுருத்தாஸ் (அனிருத்தா ?) இஸிதார் புத்தா=(புத்தர் ?) கலி அவதார்=(கலிகாவதாரம்) பிரம்மன் இருந்தார். ராஜ்புத் (க்ஷத்திரிய) இருந்தார். கௌளி (வைஸ்ய) இருந்தார். அடுத்தபடி முஸல்மன் இருந்தார்.

நான்கு அவதாரங்கள் கிருத யுகத்திலும், மூன்று திரேதாயுகத்திலும், இரண்டு துவாபர யுகத்திலும் ஒன்று கலியுகத்திலும் உண்டாயின.

அடுத்தபடி தசாவதாரங்கள். மத்ஸ்ய, கச்ச (கூர்ம) வராஹ, நரசிம்ஹ, வாமன, பரசுராம, கிருஷ்ணஜீ, புத்தோ, ம். கல்கி.

இப்ராஹீம் நான்கு வேதங்களை தகுதியாக்கினர். இதை உறுதிப்படுத்த கலாம் ஷ்ரீப் உண்டாக்கப் பட்டார். தெய்வீக ஏற்பாட்டை ஈஸ்வரனே அறிவார்.

ஒவ்வொரு வேதத்திலும் ஆயிரம் அவதாரங்கள் உண்டாயின. ஆனல் ஒவ்வொரு ஜன்மத்திலும் பிரத்தியக்ஷம் வெவ்வேருனது. இந்துஸ்தானத்தில் எட்டு யூப் சக்ரவர்திகள் அரசாளுவார்கள். இது 18-வது புராணத்தில் (குரான்) இருக்கிறது.

ஹிந்து ஆராதனையின் ஒழுங்கில் பாபாவுக்கு இருந்த மதிப்பு

148. பாபா சகுணமேரு நாயக் என்பவனைப் பார்த்து "உன் அன்னத்தில் நெய் வார்த்து, அக்னிக்கு அர்ப்பணம் செய்து பிறகு எனக்கு நிவேதனம் செய்.

கடவுளைப்பற்றி பேசுவதில் உபயோகமில்லை; கடவுளை அறிய வேண்டும்

149. ஒரு சமயம் கடவுளைப்பற்றி பேசிக்கொண்டே இருந்த ஒருவனை நோக்கி, "கடவுள், கடவுள் என்று மாத்திரம் ஏன் பேசுகிறாய்? கடவுள் என் பையில் இருக்கிறார்."

150. "எவன் கொல்லுகிறானோ அவன் காப்பாற்றுகிறான். எவன் காப்பாற்றுகிறானோ அவனே கொல்லுகிறான்."

151. பாபா கார்னிக் என்பவரைப் பார்த்து கடவுள் அவ்வளவு தூரத்தில் இருக்கிறாரா? அவர் ஆகாயத்தின்மேல் இல்லை. பாதாள நரகத்திலும் இல்லை. அவர் எப்போதும் உன் அருகிலேயே இருக்கிறார். அவரைத் தேடுவதற்கு எவ்விடத்திற்குப் போகிறாய்?

இந்நாட்களில் பக்தி க்ஷீணிக்கிறது

152. பாபா :—காலம் சீர்கேடாய்க் கொண்டு வருகிறது. ஜனங்கள் தீங்கையே எண்ணி மற்றவரைக் குறித்தும் தீங்கையே பேசுகிறார்கள். ஆனால் நான் பதில் சொல்வதில்லை அவ்வித சம்பாஷணையைக் கேட்க நான் பிரியப்படவில்லை.

ஜனங்கள் மேன்மேலும் விசுவாஸிக்காதவர்களாகிறார்கள். அவர்கள் அநேகமாய் துன்மார்க்கப் பக்கமாகவே பார்க்கத் தூண்டப்படுகிறார்கள்.

பக்கிரிகளும் அரிதாக பற்றற்றவர்களாக இருப்பது அரிது.

ஒரு நல்ல பக்கிரியையும் கண்டு பிடிப்பது அரிதாக இருக்கிறது.

153. நீண்ட காலமாக ஆலோசித்துக் கொண்டும், இரவும் பகலும் சிந்தித்துக் கொண்டும் இருக்கிறேன். எல்லாரும் திருடர்கள் இருந்தாலும் அவர்களுடனே நாம் ஊடாடவேண்டி யிருக்கிறது. இரவும் பகலும் அவர்களின் அபிவிருத்தி அல்லது அகற்றிவிடுவது இவைகளில் ஒன்றுக்கு பிரார்த்தித்திருக்கிறேன். ஆனால் ஆண்டவன் தாமதிக்கிறார். என் மனப்பான்மையை அவர் அங்கீகரிக்க யில்லை. பிரார்த்தனையை ஒத்துக்கொள்ள யில்லை. இரண்டொரு மாதங்கள் நிதானித்து பார்க்கிறேன். ஆனால் உயிர் இருந்தாலும், இறந்தாலும் நான் பிரார்த்தித்துக் கொண்டிருந்தவையை நான் அடைவேன். தேவியிடமாவது வாணியிடமாவது நான் போகவும் யாசிக்கவும் மாட்டேன். ஜனங்கள் நல்லவர்களாகவும் பக்தியுடையவர்களாகவும் இல்லை. மனம் நிலைகுலைந்தவர்களாய் இருக்கிறார்கள். சில நண்பர்கள் சேர்ந்து தெய்வீக ஞானத்தைக் குறித்துப் பேசுவார்கள், உட்கார்ந்து சிந்திப்பார்கள்.

154. ஜனங்கள் கெட்டவர்களாகி தொந்தரவு கொடுக்கிறார்கள். தனத்திற்காக என்னை அலட்டுகிறார்கள். மேலும் வெட்கங் கெட்டவர்களாய் இருக்கிறார்கள். நான் வெறுத்திருக்கிறேன்.

சாதனங்கள்—(இரண்டாவது) ஆராதனம்

155. 145-ல் அடக்கம்.

156. தன் பக்தர்களின் நன்மைக்காக, ஆண்டவன் தன் சக்தியையும் உபயோகிக்கிறார்.

157. மேகா! இந்த லிங்கத்தைப் பூஜை செய்ய எடுத்துக் கொள்.

158. மேகா! காண்டோபனைக் கோயிலில் பூஜை செய்வதை விட்டு, என்னைப் பூஜைசெய்ய ஏன் வந்தாய்? போ. காண்டோபாவை இப்போதே பூஜை செய். அது திறந்திருக்கிறது.

பாதுகை

159. நச்னே! இந்தப் பாதுகையை வைத்துப் பூஜித்துவா.

ஒரு சமயம் ஆத்மாராம் H. சவுபால் என்பவர் வெள்ளி பாதுகைகளைப் பாபாவிடம் கொண்டு வந்தார். அவைகளின் மேல் பாபா தமது திருவடிகளை வைத்து, "அவைகள் நேர்த்தியானவைகள். பூஜையில் வை" என்று சொல்லி திருப்பிக்கொடுத்தார். அவைகள் ஒரு சமயம் காணுமல் போய் அற்புதமாய்க் கிடைத்தன.

161. Mrs. பிரதான் என்னும் ஸ்திரீ பாபாவின் திருவடிகளில் இரண்டு வெள்ளி நாணயங்களைச் சமர்ப்பிக்க உத்திரவிட்டு பிறகு அவைகளை அவளிடம் கொடுக்கும் போது "நானு! பார். இந்தத் தாய் என் பாதங்களை வெட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டாள்" என்று சொன்னார்.

நாணயங்கள்

162. 1908 வருஷத்தில பாலகிருஷ்ண கைரிகார் என்பவர், மசூதிக்குப் போய்கொண்டிருக்கும்போது ஒரு காலணவை மெதித்து, பிறகு அதைப் பொருக்கி பாபா விடம் கொடுத்து, "பாபா! இது உம்முடைய நாணயம். பத்திரமாய் வைத்துக்கொள்ளும்" என்றார். பாபா, அதைத் திருப்பிக் கொடுத்து, "சரி. இந்த நாணயத்தை வீட்டுக்குக் கொண்டுபோ. உன் பூஜையில் நீ ஆராதனை செய்யும் விக்ரகங்களோடு வை" என்றார். கைரிகார் 3 வருஷங்கள் பூஜித்து நல்லதிருஷ்டம் அடைந்தார்.

153. நீண்ட காலமாக ஆலோசித்துக் கொண்டும், இரவும் பகலும் சிந்தித்துக் கொண்டும் இருக்கிறேன். எல்லாரும் திருடர்கள் இருந்தாலும் அவர்களுடனே நாம் ஊடாடவேண்டி யிருக்கிறது. இரவும் பகலும் அவர்களின் அபிவிருத்தி அல்லது அகற்றிவிடுவது இவைகளில் ஒன்றுக்கு பிரார்த்தித்திருக்கிறேன். ஆனால் ஆண்டவன் தாமதிக்கிறார். என் மனப்பான்மையை அவர் அங்கீகரிக்க யில்லை. பிரார்த்தனையை ஒத்துக்கொள்ள யில்லை. இரண்டொரு மாதங்கள் நிதானித்து பார்க்கிறேன். ஆனால் உயிர் இருந்தாலும், இறந்தாலும் நான் பிரார்த்தித்துக் கொண்டிருந்தவையை நான் அடைவேன். தேவியிடமாவது வாணியிடமாவது நான் போகவும் யாசிக்கவும் மாட்டேன். ஜனங்கள் நல்லவர்களாகவும் பக்தியுடையவர்களாகவும் இல்லை. மனம் நிலைகுலைந்தவர்களாய் இருக்கிறார்கள். சில நண்பர்கள் சேர்ந்து தெய்வீக ஞானத்தைக் குறித்துப் பேசுவார்கள், உட்கார்ந்து சிந்திப்பார்கள்.

154. ஜனங்கள் கெட்டவர்களாகி தொந்தரவு கொடுக்கிறார்கள். தனத்திற்காக என்னை அலட்டுகிறார்கள். மேலும் வெட்கங் கெட்டவர்களாய் இருக்கிறார்கள். நான் வெறுத்திருக்கிறேன்.

சாதனங்கள்—(இரண்டாவது) ஆராதனம்

155. 145-ல் அடக்கம்.

156. தன் பக்தர்களின் நன்மைக்காக, ஆண்டவன் தன் சக்தியையும் உபயோகிக்கிறார்.

157. மேகா! இந்த லிங்கத்தைப் பூஜை செய்ய எடுத்துக் கொள்.

158. மேகா! காண்டோபனேக் கோயிலில் பூஜை செய்வதை விட்டு, என்னைப் பூஜைசெய்ய ஏன் வந்தாய்? போ. காண்டோபாவை இப்போதே பூஜை செய். அது திறந்திருக்கிறது.

பாதுகை

159. நச்னே! இந்தப் பாதுகையை வைத்துப் பூஜித்துவா.

ஒரு சமயம் ஆத்மாராம் H. சவுபால் என்பவர் வெள்ளி பாதுகைகளேப் பாபாவிடம் கொண்டு வந்தார். அவைகளின் மேல் பாபா தமது திருவடிகளே வைத்து, "அவைகள் நேர்த்தியானவைகள். பூஜையில் வை" என்று சொல்லி திருப்பிக்கொடுத்தார். அவைகள் ஒரு சமயம் காணுமல் போய் அற்புதமாய்க் கிடைத்தன.

161. Mrs. பிரதான் என்னும் ஸ்திரீ பாபாவின் திருவடிகளில் இரண்டு வெள்ளி நாணயங்களேச் சமர்ப்பிக்க உத்திரவிட்டு பிறகு அவைகளே அவளிடம் கொடுக்கும் போது "நானு! பார். இந்தத் தாய் என் பாதங்களே வெட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டாள்" என்று சொன்னர்.

நாணயங்கள்

162. 1908 வருஷத்தில பாலகிருஷ்ண கைரிகார் என்பவர், மசூதிக்குப் போய்கொண்டிருக்கும்போது ஒரு காலணுவை மெதித்து, பிறகு அதைப் பொருக்கி பாபா விடம் கொடுத்து, "பாபா! இது உம்முடைய நாணயம். பத்திரமாய் வைத்துக்கொள்ளும்" என்ருர். பாபா, அதைத் திருப்பிக் கொடுத்து, "சரி. இந்த நாணயத்தை வீட்டுக்குக் கொண்டுபோ. உன் பூஜையில் நீ ஆராதனே செய்யும் விக்ரகங்களோடு வை" என்ருர். கைரிகார் 3 வருஷங்கள் பூஜித்து நல்லதிருஷ்டம் அடைந்தார்.

பிறகு நாணயம் காணுமல் போய்விட்டது. அதிருஷ்டமும் மறைந்தது

163. பாபா ஒரு தரம் S. B. D. என்பவருக்கு நாணயங்கள் கொடுத்து, "இதை ஜாக்கிரதையாய் காப்பாற்று. எவருக்கும், கொடுக்காதே. செலவும் செய்யாதே" என்று சொல்லிக் கொடுத்தார்.

கோரி ஆராதனை

பாபா:—எவர் என் குருவின் கோரியை, பசுஞ் சாணத்தினுல் சுத்தஞ்செய்து, வியாழக்கிழமை, வெள்ளிக் கிழமைகளின் அஸ்தமனத்தில் தூபம் போடுகிறுர்களோ, அவர்கள் கடவுளின் பேரின்பமடைவர்.

பாபாவின் சித்திரத்தை ஆராதனை செய்வது

165. S. B. துமால் என்பவர் பாபாவின் பெரிய படம் ஒன்றை மசூதி பக்கமாய் எடுத்துக்கொண்டு போனுர். பாபா அவரைக் கூப்பிட்டு,

பாபா:—" அது என்ன "

S. B. D. நீர் இங்கே இருக்கிறீர்.

பாபா:—அதை என்னிடம் கொடு.

பிறகு பாபா அதை எடுத்து எல்லா பக்கங்களிலும் உற்றுப் பார்த்து அவரிடம் கொடுத்தார்.

பாபா:—இதை வைத்துக்கொள்.

S. B. D. அந்தச் சித்திரத்தை வைத்து ஜீவிய பரியந்தம் ஆராதனை செய்து வந்தார்.

பாபாவின் சித்திரத்தைத் தொழுத பால பூவாசுதார்

166. பால பூவாசுதார் என்பவர் ஓர் பஜனைக்காரர். இவர் பம்பாயிலிருந்து முதல் தடவையாகச் சீரடிக்கு 1917 வருஷத்தில் வந்து பாபாவை நமஸ்கரித்தார்.

பாபா :—அங்கிருந்தவர்களில் ஒருவரை நோக்கி, "இந்த மனிதனை எனக்கு 4 வருஷங்களாகத் தெரியும்" என்றார். பால பூவா, பாபாவை அதற்கு முன் எப்போதும் நேரில் சந்தித்ததில்லை ஆயினும் 4 வருஷங்களுக்கு முன் பம்பாயில் பாபாவின் படத்துக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தது அவன் ஞாபகத்துக்கு வந்தது.

பக்தி

தேவதைகளிடம் இருக்கும் பக்தியை பாபா பலப்படுத்துகிறார்

167. மேகா! திரிசூலத்தை எழுது.

மேகா! இந்த லிங்கத்தைத் தொழு.

மேகா! எல்லாக் கிராம தேவதைகளையும் தொழுது விட்டு என்னை ஆராதனை செய்.

168. நச்னே! தியோல்புரம் போய், உன் முன்னோர்கள் வணங்கி வந்த சிலைகளை ஆராதி.

169. சாமா! சப்த சிருங்கிக்குப் போய் வாணி தேவிக்கு உன் வெள்ளிக் காம்புகளை சமர்ப்பி.

170. குஸாபாவ்! போய் மூன்று முகங்களுடையவரைப் பார் (தத்தர்)

171. ராவ்பஹதூர் M. V. பிரதான் என்பவரை நோக்கி "பூஜைக்கு உன் கணபதியைக் கொண்டு வரலாம்."

விக்ரக ஆராதனை

172. பந்தராவில் இருந்த Mrs. J. என்னும் மாது 7 வருஷங்களாக தலைவலியால் அவஸ்தைப்பட்டுக்

கொண்டிருந்த பாபாவின் எதிரில் வந்து உட்கார்ந்தாள்.

பாபா (அவள் தலையை மெதுவாகத் தடவிக் கொடுத்து) "உன் தலை நோகிறது. இல்லையா" என்றார்.

ஸ்திரி :—ஆம். ஆனால் இப்போது நின்றுவிட்டது. அதற்குப் பிறகு அவளைத் தலைவலி விட்டுவிட்டது.

பாபா :—இத்தனை வருஷங்களாக ஆகாராதிகளால் என்னைப் போஷித்தாய்.

ஸ்திரீ :—இப்போது தான் நான் உம்மைப் பார்க்கிறேன்.

பாபா :—ஆனால் உன் சிறு வயது முதல் உன்னை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ஸ்திரீ :—கலக்க மடைந்தாள்.

பாபா :—உங்கள் வீட்டில் யாரை ஆராதிக்கிறீர்கள்.

ஸ்திரீ :—கணபதியை.

பாபா :—உன் தாயார் வீட்டில்?

ஸ்திரீ :—கணபதி, எல்லா புஷ்பங்களையும், பழங்களையும், தின்பண்டங்கள் எல்லாவற்றையும் கணபதிக்கே கொடுத்தேன்.

பாபா :—அவை எல்லாம் என்னைச் சேர்ந்தன. ஆகையால் உன் கன்னிப் பருவம் முதல் நான் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

173. ஸ்திரீ :—பாபா, என் கணபதி வலது கை மாத்திரம் உடையவர் என்றும், அவர் இடது கை உடைந்து போனதால், அவரை எறிந்துவிட வேண்டியதென்றும் ஜனங்கள் சொல்கிறார்கள். அது சரிதானா?

பாபா :—உன் குழந்தை அதனுடைய கையை உடைத்துக் கொண்டால், அதை நீரில் எறிந்து விடுவாயா? அனுதினமும் அதைப் பூஜித்துவா.

பூர்வாசார பாலனம்—விக்ரகத்தை மாற்ருதே

174. ஒரு சமயம் கவ்லேபடில் என்பவன், தன் மம்லத்தார் B. V. தேவ் என்பவனுடன் ஷாமா மூலமாகப் பாபாவிடம் அணுகி, தான் புதிதாய்க் கட்டும் கோயிலில், பழைய விக்ரகத்தையே பிரதிஷ்டை செய்யலாமா அல்லது தன் குருவின் உத்திரவுபடி புதிதாக ஒன்று பிரதிஷ்டை செய்யலாமா என்று கேட்டான்.

ஷாமா :—"பாபா, கவ்லேபடில் தான் புதிதாய்க் கட்டின கோயிலில் எதைப் பிரதிஷ்டை செய்வதென்று தெரிந்துகொள்ள கோருகிருர்."

பாபா :—அவர் குடும்பத்தார் புராதனமாகத் தொழுதுவந்த புராதன சிலேகளேயே வைக்கட்டும். நூதன சிலே வேண்டாம்.

ஷாமா :—வாணியிலிருந்து ஒரு விக்ரகத்தைக் கொண்டுவர என்ன ஆக்ஷேபணை?

பாபா :—உன் இஷ்டம். அதைப் பிரதிஷ்டை செய்தால் செய். இல்லாவிட்டால் வேண்டாம்.

ஷாமா :—தயவுசெய்து, திட்டமாகச் சொல்லவும். வாணி விக்ரகம் பிரதிஷ்டை செய்யலாமா செய்யக் கூடாதா?

பாபா:—அந்தச் சிலே வேண்டுமானுல், அதன் கைகளேயும், கால்களேயும் அவன் உடைத்துவிட்டு, பிறகு பிரதிஷ்டை செய்து, ஆராதிக்கட்டும். அடிக்கடி என்னேக் கேட்காதே. ஒருதரம் ஒரு கூட்டாளியோடு கிராமம் கிராமமாகப் போனேன். ஒரு பசு வாங்க அவன் பிரியப்பட்டான். "வேண்டாம்" என்று நான் சொன்னேன். ஆனுல் அதை அவன் வாங்கி, ஒரு கிராமத்துக்கு கொண்டு வந்தான். அங்கே பெருவாரி நோய் உண்டாகி, அநேகர் இறந்தனர்.

ஷாமா :—(மத்யானமானவுடன்) பாபா. அந்தச் சிலையைக் கொண்டு வருவதால் என்ன தீங்கு.

பாபா :—புராதனச் சிலைகளையே ஆராதிக்கட்டும். நூதனமாக ஒன்றும் தொடங்க வேண்டாம்.

ஷாமா :—புதிதாகத் தொடங்குவதில் என்ன தீங்கு பாபா. (கோபங் கொண்டவராய்) என் வாயினால் நான் பேசுகிறேன். வேறு ஏதுவானும் இல்லை.

கவேல்பட்டேலுக்கு பாபாவிடம் விசுவாசம் இல்லை. தன் குருவின்மேல் அதி விசுவாசம் கொண்டு, ஒரு வாணி விக்ரகத்தைத் தன் குருவின் கிராமத்துக்கு கொண்டு வந்தான். அவ்வூரில் தொற்றுநோய் உண்டாகி, அநேகர் இறந்தனர். ஏற்கனவே 300,400 வரையில் பெற்றுக்கொண்ட குரு தனக்கு ரிஜிஸ்டர் தானமாக ஓர் பூமியைக் கொடுத்தாலொழிய அவன் சாகும்படி சபிப்பதாக சொல்லி யனுப்பினர். படேல் கண் திறந்தவனாய், பாபாவின் சுயநலம் கருதாமையையும், குருவின் கொடூரத்தையும் அறிந்து கொண்டான்.

சாதனம்—மூன்றுவது

குருஸாயிநாதரின் பூர்வ குருமஹிமை

175. பாபா, தாம் எவ்விதமாக, தமது பூர்வ குருவைச் சந்தித்தார் என்பதை அவரே விவரிக்கிறார்.

ஒருகாலத்தில் நானும் மற்ற மூவரும் எங்கள் போதி, புராணங்கள், சில கிரந்தங்கள் முதலியவற்றைப் படித்து எவ்விதமாகச் சித்தியடைவது என்பதைக் குறித்து தர்க்கித்துக்கொண்டிருந்தோம்.

எங்களில் ஒருவன் கீதையில் "உன்னை நீயே உயர்த்திக் கொள்ளவேண்டும்" என்று சொல்லியிருப்பதால்

நமக்கு நாமேதான் ஆதாரம். (குரு உபயோகமில்லை) என்றான்.

இரண்டாமவன் :—"முக்கியமாக, சித்தங்களை அடக்கி, சந்தேகங்களையும் நீக்கி, மனதை நமக்கு அடங்கினதாகச் செய்துகொள்ளவேண்டும். நாமே ஒவ்வொன்றிலும், எல்லாவிடங்களிலும் இருக்கிறோம்" என்றான்.

மூன்றாமவன் :—உருவம் அதாவது உலகத்தின் தோற்றம் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. உருவமில்லாதது மாறுபடாமல் இருக்கிறது. ஆகையால் நாம் எப்போதும் எது நித்தியம் எது அநித்தியம் என்பதை விசாரணை செய்யவேண்டும் என்றான்.

நான்காமவன் சொன்னதாவது :—நமக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்வோம் நம்முடைய தேகத்தையும், வாக்கையும், வாழ்க்கையையும், எங்கும் நிரம்பிய குருவுக்கு அர்ப்பணம் செய்வோம். அவரிடம் விசுவாசமே தேவையான விஷயம்"

நாங்கள் காட்டில் சுற்றித்திரியும்போது, ஒரு வனஜாரியைச் (உப்பு, தானியம் முதலியவற்றைக் கொண்டு போகும் ஓர் வகுப்பாரியை) சந்தித்தோம். "இந்த வெய்யிலில், காட்டுக்குள் எங்கே போய்கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டான். நாங்கள் நேராக பதில் சொல்லவில்லை. அந்த வழியில்லாத கானகத்தில், காரணமில்லாமல் செல்வதைக் குறித்து அன்புடன் எச்சரித்து, தமது உணவிலும் பங்கெடுத்துக்கொள்ளச் சொன்னார். அவர் போதனையைப் புறக்கணித்து மேலே நடந்தோம்.

ஆனால் அந்த விஸ்தாரமான, அடர்ந்த அடவியில் எங்கள் வழி காணவில்லை.

அந்த மனிதர் மறுபடியும் எங்களைச்சந்தித்து,எங்கள் கெட்டிக்காரத்தனத்தை நம்பியதால், பிசகான வழியில்

வந்துவிட்டோமென்றும், வழியைக்காட்ட ஓர் வழிகாட்டி தேவையென்றும் சொன்னார். "அன்னம் அளிப்பதை அசட்டை செய்யாதே. தானாகவே மேற்கொண்டு வருவது ஒருவருடைய பிரயத்தனங்களின் ஐயக்குறிகள்" என்றார். மறுபடியும் தம்முடன் சாப்பிட அதை அழைத்தார். மறுபடியும் நாங்கள் மறுத்துபோய்விட்டோம். விரைவில் நான் பசியோடிருந்ததால், நான் போய், ஒரு துண்டு ரொட்டியைப் பெற்றுக்கொண்டு, அதைத்தின்று, கொஞ்சம் நீரும் குடித்தேன்.

குருவானவர் வந்து "உங்களுடைய தகரார் என்ன? என்று கேட்டார். நாங்கள் பேசின யாவற்றும் சொன்னேன் மற்றவர்கள் அவரையிட்டு போய்விட்டார்கள். அவரை அவர்கள் கவனிக்கவேயில்லை. ஆனால் நான் பணிவுள்ளவனாய் அவருக்குத் தலைவணங்கினேன். பிறகு அவர் ஓர் கிணற்றுக்கு என்னை அழைத்துக்கொண்டு போய், என் கால்களை கயிற்றால் கட்டி, தலைகீழாகக் கிணற்றின் ஓரமாக மரத்தில் தொங்கவிட்டார். என் தலையானது ஜலத்துக்கு சுமார் 3 அடி உயரத்தில், நான் எட்டமுடியாமல் இருந்தது. என் குரு என்னை அங்கேயே விட்டுவிட்டு (கடவுளுக்குத் தான் தெரியும்.) எங்கேயோ போய்விட்டார். அவர் 4 அல்லது 5 மணி நேரம் கழித்துத் திரும்பிவந்து நான் எப்படி இருந்ததாகக் கேட்டார். "பெரிய பேரின்பத்தில் என் காலம் கழிந்தது" என்று பதிலுரைத்தேன். குரு, என்னிடம் அத்தியந்தப் பிரியமுடையவராகி, தமதருகில் என்னை அழைத்துக்கொண்டு, என் தலைமேலும் உடல் மேலும் தமது உள்ளங்கையால் தடவி, அன்பு ததும்பும் இனிய வசனங்களால் அவர் பள்ளியில் என்னைச் சேர்த்தார். என் தந்தை, தாய், சகல

பற்றுகள், விருப்பங்கள் யாவற்றையும் மறந்தேன். அவரை உற்று நோக்கவே விரும்பினேன். காண்பதற்கு அவர் இல்லையாயின், கண்களைப் பெற்றிருக்க பிரியப்படயில்லை. மறுபடியும் திரும்பிப் போக நான் இஷ்டப்படயில்லை. என் குருவைத் தவிர மற்ற எல்லா வஸ்துக்களையும் மறந்தேன்—என் பார்வையிலேயே என் ஜீவியம் ஒருமுகப் பட்டிருந்தது. அப் பார்வை அவரிடமே குடி கொண்டிருந்தது. என் தியானத்தின் லக்ஷியம் அதுவே மவுனத்தில் நான் (அவருக்கு) தலை குனிந்து நமஸ்காரம் செய்தேன்.

(ஜீவியத்தின்) உண்மை என்னில் திடீரென்று உதித்தது. தானுகவே-எவ்வித முயற்சியும், ஆராய்ச்சியும் இல்லாமல் - கேவலம் அவர் அருளால் - உண்டானது.

குருவின் கருணையே நமக்கு ஒரே சாதனம் - அதன் அனுபவத்தால் ஞானம் உண்டாகிறது.

குரு (அவசியம்)

176. ஒரு பக்தன் :—"பாபா! ஒருவன் எங்கே போகவேண்டும்"?

பாபா :—இதற்கு மேலே.

பக்தன் :—வழி எது?

பாபா :—ஒவ்வொரு இடத்திலிருந்தும் அநேக வழிகள் போகின்றன. உனக்கு இதுதான் வழி - இவ்விடத்திலிருந்து - ஆனுல் மார்க்கம் கரடு முரடானது. வழியில் புலிகளும் கரடிகளும் இருக்கின்றன.

தீக்ஷித் என்பவர் பாபாவை நோக்கி, 'பாபா' ஒருவர் ஒரு வழிக்காட்டியைப் பெற்ருல் (குருவை)

பாபா :—ஒருவர் வழிக்காட்டியைப் பெற்ருல், ஒரு கஷ்டமும் இல்லை. கரடிகளும், புலிகளும், பக்கத்தில்

போகின்றன. வழிக்காட்டி இல்லாவிட்டால், வழியில் ஒரு ஆழமான வாய் அகன்ற குழி (நரகம்) இருக்கிறது. அதில் விழும் அபாயம் இருக்கிறது.

177. குறையாத விசுவாசத்தோடு உன் சொந்த குருவினிடம் சேர்ந்திரு. இதர குருமார்கள் அதிக யோக்யதைபெற்றும் உன் குரு சிறு யோக்யதை பெற்றிருந்தாலும் சரி.

178. (137 ல் அடக்கம்).

என் பக்கிரியின் மனைவி என்னைச் சேலுவில் இருந்த "வெங்குஸா" விடம் விட்டாள். அவருடன் நான் 12 வருஷங்கள் இருந்து பிறகு சேலுவை விட்டேன். இந்த செங்கல் (பாபா தம்முடைய கரங்களையும், சிரஸை யும், தாங்கிக் கொள்ளமிகவும் அன்புடன் உபயோகிப்பது) என் குருவின் பிரசாதம். என் ஜீவிய தோழன். இப்போது உடைந்தது இந்த செங்கல் இல்லை. ஆனல் என் கர்மம் (பிராரப்தம்). இந்த கல் உடைந்த பிறகு நான் வாழேன். (இதை பாபா 1918 வருஷம் அக்டோபர் மாதத்தில் சொன்னர். மாதவ பஸ்லே என்பவர் செங்கல்லைத் தூக்கி, அஜாக்கிரதையாய்க் கீழே விழ விட்டு விட்டார். அப்போது அது இரண்டாக உடைந்து விட்டது. உடைந்த துண்டுகளைக் கண்டு பாபா - தமது விசனத்தைத் தெரிவித்தார்).

179. நானு! நான் உன்னிடம் கோபப்படயில்லை. என் குழந்தைகளாகிய நீங்கள் என்னிடம் கோபம் கொள்ளலாம். வெங்குஸா உயிருடன் இருந்தாரானல் அவரிடம் நான் கோபம் கொள்ளுவேன்.

180. சாதுக்கள் தூஷிக்கப்படும் இடத்தில் எவரும் நிற்கப்படாது.

பூர்வ குரு - கபீர் - உபாசனம்

வேப்பமர அடி கபீருடைய சமாதி. கபீருடைய தேகம் புஷ்பங்களாக மாறியது.

181. கபீர் என் குரு. அந்தக் காரணத்தால் அந்த மரத்தடியில் வசிக்கிறேன்.

குருவானவர் பக்தனுல் நயந்தேடுக்கப்படுகிறூர்

182. செல்வமிகுந்த ஸ்திரீ ஒருவள், தட்டு நிறைய ரூபாய்களைக் கொண்டுவந்து, பாபாவின் எதிரில் நான்கு தினங்களாக நின்றாள். ஆனால் பாபா அவளைத் தக்ஷிணை ஒன்றும் கேட்கவில்லை.

ஸ்திரீ :—(நான்காம் நாள்) பாபா! நான் ஒரு குருவுக்கு இங்கே வந்தேன். இப்போது என் தக்ஷிணையை எடுத்துக்கொள்ளும். உம்மை என் குருவாகச் செய்துகொண்டு, எனக்கு உபதேசம் கொடும்.

பாபா:—குருவானவர் தாமே உன் குருவாகச்செய்துகொள்ளமாட்டார். அவரை குருவாக நீயே பாவிக்கவேண்டும். அதாவது, அவரிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டும். ஒரு சட்டி ஓட்டை எடுத்துக்கொண்டு, அதை உன் குருவாகப் பாவி. உன் கருத்து நிறைவேறுகிறதா இல்லையா பார்.

ஞானம் அல்லது பிரம்மத்தின் தன்மையும், குருவின் மூலம் அதை அடையும் வழியும்

183. ஒரு சமயம் சமஸ்கிருதத்தில் நன்கு தேர்ந்தவரும், கீதையில் சங்கர பாஷ்யத்தைப் படிக்கிறவரும், வித்தியா பட்டம் பெற்றவருமான N. G. C. என்பவர் பாபாவின் கால்களை மசூதியில் பிடித்துத் தேய்த்துக் கொண்டிருந்தார்.

பாபா :—நானு! என்ன வாய்க்குள் சொல்கிறுய்?

வித்யார்த்தி :—ஒரு சமஸ்கிருத ஸ்லோகம்.

பாபா :—என்ன ஸ்லோகம் ?

வி :—கீதையில் ஒரு ஸ்லோகம்.

பா :—அதை உரக்க ஒப்பி.

கீதையின் 4-வது அத்தியாயம் 34-வது ஸ்லோகத்தை ஒப்பித்தார்.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्वदर्शिनः ॥

பா :—நாணு ! இதை நீ அறிந்து கொண்டாயா ?

வி .—அறிந்துகொண்டேன்.

பா :—ஆனல், அதன் அர்த்தம் என்ன சொல்.

வித்யார்த்தி அதன் அர்த்தத்தைச் சொன்னர்.

பா :—பொதுவான கருத்தை நான் கோரவில்லை. பதத்துக்குப் பதமாக, வேற்றுமை யுருபு, வினைப் பகுபாடு, வினையின் காலம், இன்னும் இதர இலக்கணப் பகுதிகளுடன் அர்த்தம் சொல்லு.

பாபாவுக்கு சமஸ்கிருத இலக்கணத்தில் ஏதாவது தெரியுமோவென்று ஆச்சர்யப்பட்டார் வித்யார்த்தி. அவ்விதமே இலக்கணத்திலேயே, வியாக்கியானம் செய்ய பாபா அவரைக் கடுமையாக விவித விசாரணை செய்ய ஆரம்பித்தார்.

பாபா :—"தத்வித்தி" என்ற பதத்தில் "தத்" என்பது எதைக் குறிக்கிறது ?

வி :—ஞானத்தை.

பா :—எந்த ஞானத்தை அல்லது எதைப் பற்றிய ஞானத்தை ?

வி:-முன் ஸ்லோகங்களில் குறிக்கப்பட்ட ஞானத்தை.

பாபா :—'ப்ரணிபாத' என்பதற்கு என்ன அர்த்தம்?

வி :—நமஸ்காரம்.

பா :—"பாத" என்பதற்கு என்ன அர்த்தம் ?

வி :—அதுவே.

பா :—"ப்ரணிபாத" என்பதும் "பாத" என்பதும் ஒன்றையே சொன்னால், வியாஸர், அவசியமில்லாத இரண்டு அசைச் சொற்களைக் கூட்டி வைப்பாரா ?

வி :—அவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசம் எனக்குத் தெரியாது.

பா :—"பிரச்ன" என்பது என்ன அர்த்தம் ?

வி :—கேள்விகள் கேட்பது என்பது.

பா :—"பரிப்ரச்ன" என்பது என்ன ?

வி :—அதுவே.

பா:—இவ்விருவாக்ய பகுதிகளும், ஒன்றையே சொன்னால், (குட்டையானதை விட்டு விட்டு) நீளமான வாக்ய பகுதியை உபயோகிக்க, வியாசருக்குத் தலைச் சுற்றலா ?

வி :—எப்படியான போதிலும், ஒரு வித்தியாசத்தையும் நான் காணவில்லை.

பா :—"சேவ" என்பது என்ன ?

வி :—"பணி", அதாவது கை கால்களைப் பிடிப்பது போல.

பா :—வேறொன்றும் இல்லையா ?

வி :—அது வேறு எதைச் சொல்லுகிறதோ அதை நான் காணவில்லை.

பா :—அது போகட்டும். கடைசி இரண்டு பாகங்களில், தத்வ தர்சி ஞானிகளிடமிருந்து ஞானம்பெற, கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு சொல்கிறார். கிருஷ்ணரும் ஒரு ஞானியில்லையா ?

வி :—ஆம்.

பா :—ஆனால், தாமே ஞானமளிக்காமல், அர்ச்சுனனை இதரர்களிடம் ஏன் காண்பிக்கிறார் ?

வி :—நான் சொல்ல முடியவில்லை.

பா :—அர்ச்சுனனும் சைதன்யத்தைச் சேர்ந்த ஒரு ஜீவன் தானே?

வி :—ஆம்.

பா :—ஏற்கனவே சைதன்னியமான, அதாவது ஞான மான, ஒரு ஜீவனுக்கு, ஞானம் (மறுபடியும்) எப்படி அளிக்க முடியும்?

வி :—நான் சொல்ல முடியவில்லை.

பா :—அது இருக்கட்டும். இரண்டாவது பாதி சுலோகத்தில், அதிகமாக ஒரு அக்ஷரம் வைத்து படிக்க முடியுமா?

வி :—ஆம்.

பா :—எப்படி?

வி :—"ஞானம்" என்ற பதத்திற்கு முன்னால் ஒரு அவக்ரஹம் சேர்த்துக் கொள்வதால்.

பா :—அப்போது அது எப்படியாகும்?

उपदेक्ष्यन्ति तेऽज्ञानं

வி :—"உபதேச்யந்திதே அஞ்ஞானம்"—

ஆனால் சங்கரரின் வியாக்கியானத்தில் இவ்வித வாக்கியார்த்தம் காணவில்லை.

பா :—இல்லாவிட்டால் என்ன? அது மிக மேலான அர்த்தம் கொடுத்தால், அதனால் தீங்கென்ன?

வி :—அது எவ்விதமாக மேலான அர்த்தம் கொடுப்பது நான் காணவில்லை.

பா :—நீ காண்பாய்.

பிறகு வித்யார்த்தி, பாபா கேட்ட கேள்விகளுக்கே விடையளிக்கவும், அவர் கருத்துப்படியே விளக்கவும் வேண்டினார்.

பா :—இந்த சுலோகம், உண்மைப் பொருளை அறிய, எப்படி சிஷ்யனானவன் குருவை அணுகவேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது. சிஷ்யனானவன், தன் குருவுக்கு, தன் தேகம், மனம், ஜீவன், உடமை, முதலிய யாவற்றையும், பூர்ணமாக ஒப்புவித்து, அவரை அணுகவேண்டும். தலைவணங்கும் பாவத்தோடு கூடிய "ப்ரணிபத்ய" அல்லது நமஸ்காரமாக இருக்கவேண்டும். "பரிப்ரச்ன" என்பது மேன்மேலும் கேட்பது. அது பயனற்ற கேள்விகளாகவாவது, அல்லது தெரிந்து கொள்ளும் ஆவலுடனாவது, அல்லது தகாத நோக்கம், அதாவது குருவின்மேல், கண்ணி வைத்து, பிழைக்குள் இழுத்து கவ்விக்கொள்வது கூடாது. அபிவிருத்தியையும், விடுதலையடைவதையும், பரிசுத்த ஆவலுடன் கூடிய நோக்கத்துடன் கூடியதாய், ஞானவொளி பெறும் வரையில் மென்மேலும் தாழ்மையுடன் கேட்கவேண்டும். "சேவ" என்பது கேவலம் உழைப்பு: அதாவது கை கால்களை பிடிப்பது மாத்திரம் இல்லை. (உழைப்பு பயன்படுவதானால்) குருவுக்கு பணி செய்வதற்கோ, அல்லது பணி செய்ய மறுப்பதற்கோ ஒருவருக்கு சுயேச்சையுண்டு என்றும் எண்ணமே கூடாது. தன்தேகம் குருவுக்கே சொந்தமென்றும், கேவலம் அவர் திருப்பணிக்கே நிலைத்திருப்பது என்றும், தேகத்தின் அதிகாரி தான் இல்லை என்பதையும் உணரவேண்டும்.

பிறகு குருவானவர் சிஷ்யனுக்கு அஞ்ஞானம் அளிப்பதைக் குறித்து பார்ப்போம்.

பா :—பிரம்மன், ஞானம் அல்லது சத்வஸ்து இல்லையா ?

வி :—ஆம்.

பா :—அது தவிற மற்றதெல்லாம் அசத் அல்லது அஞ்ஞானமல்லவா ?

வி :—ஆம்.

பா :—வாக்கினுலும், மனதினுலும் பிரம்மத்தை அடைய முடியாது என்று சாஸ்திரங்கள் முறையிட வில்லையா?

வி :—ஆம்.

பா :—ஆனால், குருவினுடைய அந்த வாக்கு பிரம்மன் அல்லது ஞானம் இல்லை அல்லவா?

வி :—இல்லை. அது இல்லை.

பா :—அப்படியானால், குரு சொல்வது ஞானமில்லை, அஞ்ஞானம் இல்லையா?

வி :—அப்படிதான் ஏற்படுகிறது.

பா :—குருவின் போதனை அஞ்ஞானத்தினுடையது. சிஷ்யனின் அஞ்ஞானத்தை, அஞ்ஞானத்தால் அகற்றுவது முள்ளை முள்ளாலேயே எடுப்பது போன்றது. இல்லையா?

श्रतं सर्वमसद्विद्धि वेदं सर्वमसत् सदा ।
गुरु शिष्यामसद्विद्धि गुरोर्मन्त्रमसन्ततः ॥

வி :—ஆம்.

பா :—சிஷ்யன் ஒரு ஜீவன். அதன் முக்யமான தன்மை ஞானம் இல்லையா?

வி :—ஆம்.

பா :—அப்படியானால் அவனுக்கு ஞானம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அந்த ஞானத்தை மறைக்கும் அஞ்ஞானமாகிற திரையை எடுப்பதே (அவசியம்) இல்லையா?

வி :—ஆம்.

சிஷ்யனுடைய ஜீவன் நெடுங்காலமாக அஞ்ஞானத்தில் அமிழ்ந்து இருப்பதால், ஒரு பிரயத்தினத்தால்

அது முடிவதில்லை. ஜன்ம ஜன்மங்தோறும், மென்மேலும் போதிக்க வேண்டியதாகவும் இருக்கும்.

வாக்குக்கு எட்டாததைக் குறித்து, வாக்கினல் செய்யும் போதனையின் தன்மை என்ன? கேவலம் ஒரு திரையை அகற்றுவது போன்றது. ஜலத்தைப் பாசி கவர்ந்திருப்பதுபோல், ஞானத்தை அஞ்ஞானம் மூடியிருக்கிறது. பாசியை அகற்று. சுத்த ஜலம் உனக்குக் கிடைக்கிறது. நீ ஜலத்தை உண்டாக்க வேண்டியது இல்லை. ஜலம் அங்கேயே இருக்கிறது. கிரகணத்தின் போது சூரியன் அல்லது சந்திரன் அங்கேயே இருக்கிறார்கள். ஆனல் ராகு அல்லது கேது நம் பார்வையிலிருந்து அவர்களை மறைக்கிறார்கள். ராகு அல்லது கேது கடந்துவிட்டால், தொடர்ந்திருக்கும் சூரியனுடைய அல்லது சந்திரனுடைய பிரகாசம் நம்மால் பார்க்கப் படுகிறது.

வேறொரு உதாரணம் எடுத்துக்கொள். நம் கண்ணால் வஸ்துக்களைப் பார்க்கிறோம். அவைகளின்மேல் கண் படலம் உண்டானல், கன்கள் காணமுடியாது. கண் படலத்தை அகற்று. பிறகு கண்கள் பார்க்கின்றன. அஞ்ஞானம் கண் படலம் போன்றது.

இப்பிரபஞ்சமானது வர்ணிக்கமுடியாத மாயையின், அதாவது அஞ்ஞானத்தின் நுரைப்பு. ஆனலும், அஞ்ஞானமே அஞ்ஞானத்தை விளக்குவது.

அறியவேண்டிய வஸ்து ஞானம். நேருக்கு நேராகப் போதிக்கத் தக்க வஸ்து இல்லை.

நமஸ்காரம், தர்க்கம், ஸேவை இவைகள் குருவின் அருளைப் பெற விருக்கும் சாதனங்கள்.

வெளித் தோற்றம் உண்மை என்னும் மனோபாவம் வெறும் பிரமை. இதுதான் ஞானத்தை மறைக்கும்

இருள்போன்ற திரை. அந்த திரையை கிழித்தெறி. பிறகு பிரஜ்ஞான பிரமமன் பிரகாசிக்கும்.

அஞ்ஞானம் என்பது சம்சாரத்தின் விதை. குருவின் கிருபை என்கிற மை கண்களில் தீட்டப்பட்டால், மாயையாகிற திரை எடுபட்டு, ஞானம் மிஞ்சுகிறது. ஞானம் என்பது காரியம் இல்லை. அது எப்போதும் தானாகவே நிலைத்திருக்கிறது. ஆனால், அஞ்ஞானத்திற்குக் காரணமும் முடிவும் உண்டு. "கடவுள் ஒன்று. பக்தன் வேறு". இதுதான் அஞ்ஞானத்தின் வேர். அதை அகற்று. ஞானம் மிச்சமாகிறது. ஒரு கயிற்றைப் பாம்பாக அஞ்ஞானம் காண்கிறது. அஞ்ஞானத்தை அகற்று. பிறகு கயிறு கயிறாகவே தென்படும். கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குத் தாமே ஞானத்தை வெளியிடாமல், இதர குருமார்களிடம் ஒப்புவித்தது ஏன் என்றால்—இதைக் கவனி—ஞானிகளை தம்மில் வேறாக கிருஷ்ணர் எண்ணினாரா? ஞானிகளும் தாமும ஒன்றே என்று சொல்லவில்லையா? அவர்களுடைய போதனை அவருடையதே. இல்லையா?

வி:—ஆம். பாபா எனக்குக் கீதை பூராவும் போதிக்க பிரார்த்திக்கிறேன்.

பா:—அனுதினமும் ஒரு அத்தியாயம் படித்து, வந்து என்னெதிரில் உட்காரு.

வி:—அப்படியே.

அதுமுதல் நானு ஒவ்வொருதினமும் ஒரு அத்தியாயம் படித்து, பாபாவின் திருவடிகளில் உட்கார, பாபா கீதையின் தாத்பர்யத்தை உபதேசித்தார்.

முதற் பாகம் முற்றிற்று.

Printed at The Liberty Press, G.T., Madras.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	10	அபாயங்களின்றும்	அபாயங்களினின்றும்
,,	12	உறைபவள்	உறைபவன்
,,	13	அனுபவிக்கிருள்	அனுபவிக்கிருன்
3	18	பாரதீனன்	பராதீனன்
10	3	வேண்டியதில்லையென்	வேண்டியதில்லையென்றும்
12	1	விஷயமாய்ச்	விஷயமாய்
,,	2	யிட்டுக்கொண்டு	முறையிட்டுக்கொண்டு
,,	13	கேட்டும்	கேட்டதும்
16	12	துபோல	போல
,,	15	இருக்தும்	இருக்கும்
19	19	வியாபித்நிருக்	வியாபித்திருக்
22	24	இருக்கிறன்ன	இருக்கின்றன
25	4	போகு	போகும்
26	4	சுமதிருஷ்டியுடன்	சமதிருஷ்டியுடன்
31	4	1941	1914
,,	25	நேர்த்தியான	நேர்த்தியாக
33	23	தனக்குத்	தனக்குக்
36	7	வாலீன்	வாலின்
37	12	தேஹி என்பது	தேஹி
38	9	ஒன்றயிருக்கும்	ஒன்ருயிருக்கும்
40	27	நாம்	நாம
44	19	சன்னியாசிபின்	சன்னியாசியின்
45	9	உபரதி	உபாதி
,,	17	வேண்டும்	வேண்டும் என்று
57	23	பூடி	பூட்டி
58	28	சொன்னுன்	சொன்னுர்
64	6	வந்தது	வந்ததால்
68	14	புத்தோ, ம்	புத்தோ,
69	24	பக்கிரிகளும் அரிதாக	பக்கிரிகளும்
76	5	தீங்கு	தீங்கு.
,,	6	பாபா	பாபா
78	12	அவரையிட்டு	அவரைவிட்டு
79	4	யில்லை	வில்லை
,,	5	யில்லை	வில்லை
80	23	கோபப்படயில்லை	கோபப்படவில்லை

இண்டூர்

ஹைகோர்ட் ஜட்ஜ் M. B. ரேகே

அவர்களின்

முன்னுரை

இந்த பாபா சாஸன மொழிகளுக்கு முன்னுரை எழுதுவது என்றால் சூரியனைக் காண்பிக்க விளக்கேற்று வதுபோலாகும். இது எனக்கு நன்றாய் தெரியும். ஆகி லும் என் பூஜ்ய சகோதரர் பி. வி. நரசிம்மஸ்வாமி இந்த பாபா சாஸனங்களையும் மொழிகளையும் ஒன்று சேர்த் தவர் அதற்கு முன்னுரை நான் எழுதாமலிருக்கக்கூடாது என்கிறார். பாபாவின் திவ்ய அருளால் ஸம்ஸார குகை யின் இருளிலிருந்து அதற்கப்பால் பிரகாசிக்கும் பாஸ்கர னைச் சேரும் வழியை ஒருக்கால் இந்த முன்னுரை தீபம் பிரகாசப்படுத்தலாம். அப்படி செய்தால் பாபாவின் அனுக்ரக சாஸனங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஆத்யாத்மீக முயற்சியின் நோக்கம் ஆத்மநிலை யுணர் தலே. ஆனால் அவர் அவருக்கு ஏற்ற மார்க்கத்தையே அவரவர் கைப்பற்றவேண்டும். பக்தர்கள் பாபாவை உருவெடுத்த கடவுள் என்றே எண்ணினார்கள். அவர் மொழி செயல் ஒவ்வொன்றாலும் தங்கள் தங்கள் சிறப் புக்கு வேண்டிய ஞானத்தையடைந்தார்கள். அந்த ஸாயி தேகம் மறைந்துவிட்டது. அதிலிருந்து லீலைகள் செய்த பாபா இப்பொழுது பரமாத்மாவாக விளங்கி தம்மை அண்டின பக்தகோடிகளுக்கு மஹாசமாதிக்கு முன்னமே

எவ்வாறு உதவி செய்தாரோ அவ்வாறே இப்பொழுதும் சூக்ஷ்ம தேஹியாய் (அபாந்தராத்மாவாய்) உதவி செய்கிறார். ஸாதகர்கள் பக்தி செய்ய ஓர் உரு வேண்டும். இப்பொழுது சுவாமிகள் இயற்றிய சாஸன மொழிகள் அந்த பரமாத்மாவின் வாங்மய உருவாகும். பகவத் கீதையால் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உஜ்வலிப்பது போலவே இந்த சாஸனத் திருமொழிகளில் பாபா உஜ்வலிக்கிறார்.

சாதகர்களுக்கு வழிகாட்ட இக்கிரந்தம் ஓர் சுடர் வெளியாகும். அதுவும் தவிர பாபா தேகத்துடனிருக்கும் பொழுது அவர் மலரடியை சேர்ந்து என்னைப் போல் அந்த மகான் ஸான்னித்யத்தில் ஆனந்தம் பருகியவர்களுக்கு பழய ஞாபகத்தை புதிப்பித்து இப்புத்தகம் இன்ப மளிக்கும்.

இந்த சாஸனத் திருமொழிகள் இகத்திற்கு மட்டுமல்ல பரத்திற்கும் வேண்டிய புத்திமதிகளைக் கொடுக்கும். பாபாவை தேகமாக சிலகாலம் எண்ணி சிற்சில காலம் ஓர் ஜீவனென்றும் மற்ற காலங்களில் சிவம் (பரமாத்மா) என்றும் எண்ணும் தீவிர பக்தியும் அன்பும் இந்த புத்தகத்தில் வெளிப் படுகின்றன. சிற்சில சமயம் பாபா தாம் பக்தருடைய தாஸானு தாஸன் என்பர். சிற்சில சமயம் தாம் அல்லா (ஈசுவரன்) உடைய ஊழியன் என்பர். மற்றும் சில சமயம் தாமே பரமாத்மா என்பர். இதை அறிய, மானிட புத்திக்குத் திறமையில்லை. ஆனால் மனோ புத்திகளுக்கு அப்பாலுள்ள ஆன்ம சக்திக்குத் திறமை யுண்டு. தேஹி என விளங்கும் போது பாபா ஒரு சிறிய பிராணிதான். அந்த பிராணிக்கும் சிவனுக்கும் இடையே நின்று உலக வியவஹாரங்களை ஒழுங்காய்

நடத்தி வைக்கும் ஸித்தபுருஷரும் அவரே, இவ்விரண்டையும் கடந்து நிற்கும் தாக்கற்ற பரமனும் அவரே. இது மூன்றையும் எப்படி ஒன்று சேர்ப்பது என்பதை நாளுக்கு நாள் விருத்தியடைந்து வரும் சாஸ்திர விசாரம் ஒரு நாள் கண்டு பிடிக்கலாம்.

இப்புத்தகத்தில் வரைந்திருக்கும் அத்புத அமானுஷ்ய லீலைகளை ஈசுவர பக்தியில்லாதவர்கள் நம்பமாட்டார்கள். ஆனல் ஸாயீசன் பாதகமலங்களை யண்டின பக்தர்களுக்கு இவைகள் ஜனங்களுடைய மேம்பாட்டுக்காக பாபாவால் செய்யப்பட்ட சாதாரண லீலைகள் என்பதும் பக்தியும் அன்பும் மிகுந்தால் இவைகளை சுளுவில் அறியலாம் என்பதும் சுலபமாய் விளங்கும்.

பாபாவின் இத்தகைய மஹத்துவத்தையும் ஸ்வரூபத்தையும் அன்புடனே இப்புத்தகத்தில் விளங்கச் செய்த இன்னூலாசிரியருக்கு எவ்வளவு நன்றி பாராட்டினும் தகுமே. நான் இறுதியில் சொல்வது இது தான். ஸாயி கிஷ்ண பரமாத்வின் கீர்த்தி ஓங்குக! அவரை வியாசர் போல் ஜனங்களுக்கு வெளிப் படுத்தும் நரசிம்மஸ்வாமி கீர்த்தியும் ஓங்குக! இந்நூலால் தேசமெங்கும் பக்தி சிரத்தை பிறந்து செழித் தோங்குக!!

ஓம் ஸ்ரீ ஸாயி

பொருளடக்கம்

ஜஸ்டிஸ் M. B. ரேகே அவர்கள் முன்னுரை ... iii

சாஸனமொழிகள்

1—8 - பாபா அருளிய சாஸனம். 9—16 - பாபா தமது சொந்த பேரால் வாக்குத்ததம் செய்தவை. 17—31 - இதர வாக்குறுதிகள். 32—33 - அபயம். 34—6 - பாபா காவல். 37—41 - உயிரை பாபா காத்தல். 42—44 - பாபா சவரக்ஷணே, கிருபை. 45—6 - பாபா ஞானமளித்தல். 47—52 - விதேகியாகியும் பாபா இன்னும் பக்தஸவரக்ஷணே. 52—75 - பாபா ஆகாச ஸஞ்சாரி. 53—57 - பாபா அவதரித்த கார்யம். 58 - பாபாஸ்வரூபம், தன்மை, குணம், சக்தி. 59 - பாபாவே ஸ்ரீ கிருஷ்ணன். 60 - பாபா ஸமதர்சனம். 62—64 - பாபா அத்வைதானுபவஙிலே. 65 - பாபா மதமாருதலே வெருத்தல். 66—73 - பாபாவே அகிலமும். 74 - இதர மஹான்களும் பாபாவே. 76—8 - பாபா தூரத்திலிருந்து நைவேத்யம் முதலியன புசித்தல். 80—8 - பாபா எங்குமுள்ளவர். 89 - பாபா ஸர்வாந்தர்யாமி. 90—97 - பாபாவின் கார்யம். 98—100 - இறந்தவர்களுக்கும் செய்யும் உதவி. 101—104 - ஈசன் செயலே பாபா செயல். 105—6 - பாபா தன்மை ஸர்வஸாக்ஷி அகர்த்தா. 107 - பாபா தேஹமல்ல. 108—9 - ஆத்ம விசாரம். 110—112 - அபேதம். 113 - மோக்ஷ மார்க்கம். 114—5 - உண்மையான பேரின்பம். 116 - ஸம்ஸாரத்தில் இருக்க வேண்டியவிதம். 117 - பக்தி நவவித பக்தி. 118 - பக்தியும் ஞானமும். 119 - ஆத்ம விசாரம். 120—1 - நாம் யார்? 122 - ஈசன் யார்? 123 - ஈசனே எப்படி காண்பது? (ஸாஷாத்காரம்) மோக்ஷவழி. 124 - ஈசனே யடைய வழி. 124—5 - சாதன சதுஷ்டயம் விவேக, வைராக்யம், சமாதிமுமுக்ஷுத்வம். 126 - மாயை என்பதென்ன? ஆத்மதரிசனம், ஸாஷாத்காரம். 127—130 - சாமான்ய ஸாக்ஷாத்காரம் மறைந்துவிடும். 131—3 - ஆத்மஞான அதிகாரி. ஆத்மஞானத்திற்காக ஐந்தையும் விட்டவன். 134 - பாபாவை கண்டவரெல்லாரும் நலமடைந்தார்களா? 135 - ஸம்பூர்ண சரணுகதி. 136—140 - A. S. தாபோல்கர்

சாதனங்கள்

I தெய்வ பக்தி 141—3. 144—6 - இந்து தெய்வங்களையும், ஆராதனைகளையும் மதித்தல். 149—151 - கடவுளை அறியவேண்டும். 152 - தற்கால பக்திக்குறைவு. II ஆராதனம் 155—166 - பாதுகை, நாணயம், சமாதி, படம் இவைகளை தொழுவது பக்தி. 167—171 - பாபா தேவதா பக்தியை விருத்தி செய்வது. 172—4 - விக்ரஹ ஆராதனை சரி. III குரு பக்தி 175 - பாபாவின் பூர்வகுரு. 176 - குரு அவசியம். 180 - பூர்வகுரு கபீர் உபாசனம். 182 - குருவை வரித்தல். 183 - ஞானம் அடைய குருசேவை எவ்விதம். 184 - 191 IV கிரந்த பாராயணம், 192 - 198 நாம ஜபம் 199, V ஸாயியை சகலத்திலும் பார்த்தல் 200 VI ஆத்ம தரிசனம் 201 VII ஸங்கிதத்தால் லயம் 203 நீதி புகட்டல் துராசை 205 காமம், 207 - 218 கோபம் 219—கர்வம் 219—224 - ஜாதி, பலம், கல்வி செருக்கு. 225 - மாற்சரியம். 226 - லோபம் பேராசை. 231 - படே பாபா. 233 - திரவியம், காஞ்சனம். 235 - பாபா தக்ஷிணை கேட்பதேன். (1) முழுபந்த மருக்க. 237 - (2) வரும் செய்தி சூசிப்பிக்க. 242 - (3) முதல் வருமான சமர்ப்பணம். 243 - (4) பணம் வாங்கினது சரியல்ல என. 244 - (5) எண்ணத்தை நிறைவேற்ற. 245—8 - (6) தத்துவ கூடார்த்தம். 249 - (7) அகங்காரத்தை அடக்க. 251 - (8) வைராக்கிய தீ வளர்க்க. 252—5 - பாபாவின் வைராக்யம். 256—262 - அனுஸக்தி யடைய. 263 - நீதிநெறி போதனை. 264—6 - பாபா கடவுளைப் பிரார்த்தித்தல். 267 - சரண் புகுதல்—மன நிம்மதி. 268 - சகல பிராணிகளிடம் அன்பு. 269 - சோம்பல் & இதர நீதிபோதங்கள். 272 - பூத பிசாசங்கள். 274—5 - சாந்தம், பொருமை. 277 - வீண் ஆசாரம். 281—4 - வெங்காயம் தள்ளல். 285 - விருந்தோம்பல். 289 - இன்னிசை. பொருமை, முயற்சி. 293—4 - பாபாவின் தபசு, சாதகர் தபசு. 295—300 - அவதூறு, அஹிம்ஸை. 301—5 - பாபாவின் பணிவு. 306—9 - தானதர்மம். அதிதி என்றால் யார். 311—3 - கர்ம பலன் அனுபவியாமல் முடியாது. 314—316 - மரணம் விசனிக்கத் தக்கதல்ல. 320 - மரண பயம்,—பாபா தேர்ச்சியளித்தல். 327 - மரணத்தை பாபா தடுத்தது. 328—331 - பாபாவின்முடிவு. சமாதி. 332—7 - சத்கதி, மனிதருக்கும், எருமைக்

கும். 338 - சித்திகள். 360—388 - த்ரிகால ஞானம். 371 - கர்ம தர்மம் மாறுது. 389 - பாபாவின் ஸம்ஸ்க்ருத ஞானம். 391—7 - பாபா வைத்ய முறை. 398 - சரணுகதியால் கர்மம் அகலும். 402—8 - மனத்தை யிழுத்தல். 409—454 - மனத்தை அறிதல். செய்கை அறிதல். 455—472 - பூர்வஜன்ம செய்திகளை வெளிவிடல். 473—495 - பாபாவின் சொந்த பூர்வஜன்ம செய்திகள். 496 - பாபாவின் பூர்வஜன்ம சாதனம்.

ருணனுபந்தம்

500 - I. ருணனுபந்தத்தால் பாபா தம்மிடம் இழுத்தல். 505 - பாபா இந்த ஜன்மத்தில் பிராமணர். 507—523 - II. பக்தர் மேல் பாராட்டும் அன்பு. 524—531 - III. பக்தர் மனம் நோவாமலிருக்க. 532—536 - IV. பக்தரை அன்புடன் பாதுகாத்தல். 537—8 - V. பக்தர்களுக்கு ஆரோக்யம் குஷ்டருக்கும் கருணை. 539—545 - VI. ஸந்தான வரம். ஸாடே, ஸபத்னேகர், அரங்க பாத்கர், சிந்தாமணிராவு, மஹல்ஸாபதி, ரதன்ஜீசேட். 546—7 - VII. குடும்ப விஷயங்களில் உதவி. (ஸாடே, நிமோன்கர்). 548—550 - VIII. தொழில் வியாபாரத்தில் உதவி. ரஸனே, பையாஜி, துமால். 551 - IX. பாபா பூஜைக்கு சம்மதித்தது. 552 - X. பாபா குருபூஜை. 553—557 - XI. பக்தர்கள் பேரில் அருள் பார்வை. (N. G. C. ஜோஷி, புரந்தரே) 558—9 - XII. பக்தர்களை பாதுகாத்தல். ப்ளேக். 560 - பாபாவே மேலதிகாரி. 563 - குற்றவாளிக்கும் உதவி. 564—574 - பிரயாணத்தில் உதவி. 575 - கல்லியாணத்துக்கு உதவி. 578 - சகலத்துக்கும் உதவி. 579—80 - உயிர் காத்தல்—நாசனே, நிமோன்கர் குழந்தை.

பாபாவுடைய பயமற்ற நிலை

581 - தூலியா கமிஷன் : கர்டிஸ் வரவு. 586—95 - பாபா சம திருஷ்டி. 596—600 - பாபா கடவுளை வேண்டல். 600 - (a) பாபாவின் உலகானுபவம். 608 - பாபாவின் தந்திர முறை. 609 - ஜீவ்ய சரித்திரம் எப்படி எழுதவேண்டும். 612—618 - விசித்ரப் பேச்சு. 619—622 - பாபா வேடிக்கை செய்தது. 623—5 - பாபாவின் மௌன உபதேசம். 626—34 - பாபாவின் கூடார்த்தப் பேச்சு.

ஸ்ரீ ஸாயி நாதர்

சுபோதன மாலா

IV. சாதனம் நான்காவது

கிரந்தங்கள்-போதி-பாராயணம்

184. H. S. தீக்ஷித் என்பவரை நோக்கி,

பாபா :—காகா-இவைகள் போதும். அவசியமானவை. (1) அத்யாத்ம ராமாயணம் (2) ஏகநாத பாகவதம். இவைகளைப்படி. இதற்கப்பால், தீக்ஷித்தின் குமாரத்தி இறந்து விட்டாள். அப்பொழுது அவரை பாபா அத்யாத்ம ராமாயணத்தில் மண்டோதரிக்கு—ராமர் சொன்ன ஆறுதலைப்படிக்கச் செய்தார்.

185. லக்ஷ்மண் என்பவரை நோக்கி.

பாபா :—இது (திலகரின் கீதா ரஹஸியம்) நல்லது. புத்தகத்தோடு அவருக்கு பாபா ரூ. 1 கொடுத்தார்.

குசாபாவ் என்பவரை நோக்கி, "இவ்விடம் (மசூதிக்கு) வந்து, குரு சரித்திரத்தைப்படி" என்று சொன்னார்.

186. G. G. நார்கே என்பவருக்கு,

பாபா :—நீ ஒரு திவ்வியமான கிரந்தத்தைப்படிக்கிறாய். (யோக வாஸிஷ்டம்) அதிலிருந்து எனக்கு 15 ரூபாய் தக்ஷிணைகொடு (அதாவது யோகவாஸிஷ்டத்தில், 15 வஸ்துக்களைப் பற்றி படித்து, சிந்தித்து, ஹிருதயத்தி

லழுந்தும்படி செய்து கொள்ளவேண்டியது தான் பொருள்.)

187. உபாஸினி மகாராஜ் என்பவரை நோக்கி,

பாபா:—இது (பஞ்ச தஸி) நம் நிதி. (அதாவது தேவையானது எல்லாம் அதில் இருக்கிறது)

188. பாபா:—முகுந்தலேலே சாஸ்திரியைக்கண்டு, "பத்து நாள்களுக்கு இந்தத் துவாரகா மாயியில், நாராயாண உபநிஷத்தில் தைத்ரேய கட்டத்தைப் பாராயணம் செய்." (அவ்விதமே செய்யப்பட்டது.)

189. பாபா:—(B. V. தேவ் என்பவரைக் கண்டு) ஞானேஸ்வரி (பகவத் கீதையை மாராட்டி பாஷையில் எழுதியிருக்கும் ஒரு வியாக்யான கிரந்தம்)யைப்படி.

190. பாபா (தமது கடைசி நாட்களில்.):—ராம விஜயத்தை இங்கே படியுங்கள். அதனால் ம்ருத்யுஞ்ஜயன் திருப்தி யடைவான் (அப்படியே செய்யப்பட்டது.)

ஒரு சமயம் பாபா ரே என்பவரிடம் சொன்னதாவது:—ஒரு புஸ்தகத்தையும் படிக்கவேண்டாம் ஆனால் என்னை உன் ஹிருதயத்தில் வைத்திரு.

191. பாபா ஒவ்வொரு குரு பௌர்ணமி தினத்திலும் துவாரகா மாயியில் உட்காருவார். பக்தர்கள், ஒவ்வொருவரும் கையில் பாராயண கிரந்தம் ஒவ்வொன்றைப் பாபாவிடம் கொடுத்து, பாராயணத்தின் பலனை அடைய, பாபாவின் ஆசீர்வாதத்துடன் பெற்றுக்கொள்ள வருவார்கள். சாதாரணமாக புஸ்தகங்களைக் கொடுத்தவர் கையிலேயே கொடுத்து விடுவார். சில சமயங்களில் ஒருவன் கொடுத்த புஸ்தகத்தை மற்றொருவனிடமும், அவனுக்கு வேறு ஒரு கிரந்தமும் கொடுப்பார். ஒரு சமயத்தில் ரே என்னும் ஒரு பக்தன் கிரந்தம் ஒன்றையும் கொண்டு வரவில்லை.

பாபா :—(அவரை நோக்கி) நீ செய்வது சரி. (எந்தக் கிரந்தத்தையும் படிக்காதே. இந்த ஜனங்கள், இந்தப் புஸ்தகங்களில் பிரம்மனைக் (கடவுளை) காண்பதாய் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அவைகளில் பிரமை (கலக்கம்) தான் காண்பார்கள். உன் ஹிருதயத்தில் என்னை வைத்து உள்ளமும் மனமும் ஒன்றுபடுத்தி யிருந்தால் போதும்.

நாம ஜபம்

192. N. R. S. என்பவரை நோக்கி, "ராம் நாமி கியா" அதாவது ராமனுடைய நாமத்தை ஜபி.

193. Mr. G. S. K. என்பவரை நோக்கி, 'எப்போதும் "ராஜாராம்-ராஜாராம்" என்பதாகவே சொல். அப்படிச் செய்தால், உன் ஜீவன் பலனடையும். நீ சாந்தியும், எல்லையற்ற நன்மையும் பெறுவாய்"

194. ராவ் பகதூர் M. W. ப்ரதான் என்பவரை நோக்கி :—"நாம் என்ன சொல்ல வேண்டியது? ஸ்ரீராம் ஜயராம்-ஜயஜயராம்" என்றுதான்.

195. H. S. D. என்பவரைக் கண்டு, நான் எப்போதும் "ஹரி, ஹரி" என்று சொல்லிக் கொண்டிருந்தேன். பிறகு ஹரி எனக்கு பிரசன்னமானார். நான் மருந்து கொடுப்பதை நிறுத்தி விட்டு, விபூதி கொடுத்தேன்.

196. ஒருவரைப் பார்த்து 'ராம், ராம்' என்று சொல். கடவுள் அருள் செய்வார்."

197. பாபா:—(ஒரு பந்தரா சிறுவனைப் பார்த்து) "பாராயணம் செய், நாம ஜெபம் பண்ணு." பையன்:—பாபா : நான் செய்ய மாட்டேன். ஒரு சமயம் இவைகளில் தவறி விட்டால் நான் பாவம் செய்தவனாவேன்.

பாபா :—(அவன் தாயை நோக்கி) அம்மா அவனுக்காக நான் பூர்ண பொருப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது.

198. பாபா :—நான் ஹிருதய நோயால் வருந்தினேன். என் மார்பில் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை வைத்திருந்தேன். அதிலிருந்து ஹரி இறங்கினர். நான் குணமாக்கப்பட்டேன்.

"ஸாயி" நாம ஜபம் ரே என்பவர் செய்வதை பாபா அனுமதித்தார்.

V. சாதனம் ஐந்தாவது

பாபாவைச் சர்வத்திலும் உள்ள தெய்வமாக வணங்கு

199. ஒரு சமயம் நானுவைப் பார்த்து,

பாபா :—நானு ! நான் பூர்ண போளி விரும்புகிறேன். நிவேத்தியத்துக்கு அதைத் தயார் செய்து கொண்டு வா.

நானு :—வெகு நாழிகையாய் விட்டது. சமையல்காரனும் இல்லை.

பாபா :—கவலை யில்லை. (செய்து கொண்டு வா) பிறகு நானு எட்டு பூர்ண போளிகளுடன் சில உணவுகளைக் கொண்டுவந்து பாபாவின் எதிரில் வைத்தார்.

நானு :—பாபா, ருசி பாரும்.

பாபா கொஞ்சநேரம் நிதானித்தார். எரும்புகளும் ஈயும் போளிகளை மொய்த்தன.

பாபா :—நல்லது. தட்டுகளை எடுத்துக்கொண்டுபோ.

நானு :—(தட்டுகளைத் தொடாமலே) ஏன் அவைகளை எடுத்துக் கொண்டு போகச் சொல்கிறீர். தாங்கள் சாப்பிட வேண்டியதில்லையானல், இவைகளை தயார் செய்ய

ஏன் சொன்னீர்கள்? கொஞ்சமாவது எடுத்துக்கொண்டாலொழிய, நான் தட்டுகளை எடுத்துக் கொண்டு போகவு மாட்டேன். சாப்பிடவு மாட்டேன்.

பாபா :—நான் போளி சாப்பிட்டாயிற்று. தட்டுகளை எடுத்துக் கொண்டுபோ. நீயும் சாப்பிடு.

நாணு :—எடுத்துக் கொண்டீர்களா? எப்போது? தட்டுகளில் கொண்டு வந்தது அப்படியே இருக்கின்றது. தாங்கள் சாப்பிட்டாலொழிய, இவைகளை நான் எடுக்க மாட்டேன்.

நாணு துவாரகா மாயியை விட்டு, சாவடிக்குப் போய் பசியோடு படுத்துக் கொண்டார்.

நாணுவின் அவஸ்தையை பாபா தாங்க முடியாமல் அவரை வரவழைத்து,

பாபா :—நாணு, ஒரு சமயத்தில் உன் போளியை உட்கொண்டேன். நீ பிடிவாதமாய் இராதே. தட்டுகளை கொண்டுபோய் நீ சாப்பிடு.

நாணு மறுபடியும் தவித்த மனத்துடன் சாவடிக்குப் போனார். மறுபடியும் நாணுவை பாபா வரவழைத்து,

பாபா :—என்ன, நாணு! 18 வருஷங்களாக என்னுடன் இருக்கிறாய். நீ அறிந்தது இவ்வளவு தானா? என்னைப்பற்றிய மதிப்பு உனக்கு இவ்வளவு தானா? பாபா என்பவர் கண்களில் காணப்படும் 3½ மார் உயரமுள்ள தேஹி தானா? அவ்வளவு தானா?

ஹா! எரும்பின் உருவத்துடன் நான் சாப்பிடுகிறேன். ஈயின் ரூபமாக உண்கிறேன். எனக்குத் தோன்றும் ரூபத்தை எடுத்துக் கொண்டு, அவ்வுருவத்துடன் நான் உண்கிறேன். உன் போளியை எவ்வளவோ காலத்துக்கு முன்னால் உண்டு ஆயிற்று. வீண் பிடிவாதம் பண்ணாதே.

நாளு :—இதை தாங்கள் சொல்லியும், நான் ஒன்றும் அறியவில்லை. நான் ஏது செய்வேன்? அதை என்னை தாங்கள் அறியச் செய்தால் பிறகு தட்டுகளை எடுத்துக் கொண்டு போய் போஜனம் செய்வேன்.

பிறகு பாபா ஒருவித ஸம்ஞை செய்து நாளுவின் கோப்பியமான பரம ரகஸியத்தைத் தாம் அறிந்ததை வெளியிட்டார். நாளு ஹிருதயத்தில் ஆழமாகப் பதிந்தது. வேறொருவரும் அறியார் அந்த ரகஸியத்தை அதனால் பாபா தன்னுடைய அந்தர்யாமியே என்றும், ஈ எறும்பு ஈராகவுள்ள சகல ஜீவகோடி பிராணிகளின் சர்வாந்தர்யாமி என்பதையும் நாளு அறிந்துகொண்டார்.

நாளு :—இந்த தட்டுகளை எடுத்துக்கொண்டு போகிறேன்.

பாபா :—நாளு, நான் செய்யும் இந்த அடையாளத்தை நீ காணும்போது, அந்த அந்த உருவங்களில் நான் உணவு உண்பதை அறிவாய்.

VI. சாதனம்—ஆறுவது

ஆத்ம தரிசனம்

200. பாபா சிற்சில சமயம் அஸ்தமிக்கும் சூரியனை கண் கொட்டாமல் பார்ப்பதுண்டு.

ஒரு சமயம் பெரியவையான கிளிகளைக் கண்டு அவைகளின் அழகைமெச்சினர்.

ஒரு சமயம் K. G. பீஷ்மா என்பவரும் பல்வந்த் கபார்தே என்பவரும் சிரடியில் சாலையில் வெளியே போனர்கள். அப்போது பனி பெய்து கொண்டும், சூரியன் உதித்துக்கொண்டும் இருந்த சமயம். பீஷ்மா மேற்கு,

பக்கமாகத் திரும்பிப் பார்த்தார். தம்முடையநிழல், வெகு நீளமாக தம்முடைய பாதத்திலிருந்து ஆரம்பமாகி முடிவில்லாமல் மேற்கு திக்கில் சென்று மேற்கு அடிவானத்தில், சோபையுள்ள வட்டமான வானவில்களால், முடிசூட்டி சூழ்ந்திருப்பதாக கண்டார். இந்த தரிசனம் அவரை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. பிரத்யக்ஷமாக அவருடைய உருவச்சாயை முடிவில்லாததாகவும், மேன்மையுடையதகவும், இருந்தது. கண்டம் அகண்டமாய்க் கொண்டிருந்தது. பரமாத்மாவில் ஜீவனானவன் ஐக்யமானான். ஒருக்ஷண காலம் வாக்கினால் சொல்ல முடியாத ஆனந்த பரவசமானார். பல்வந்தரும் தம் நிழலைக் குறித்து அவ்வித காக்ஷியேகண்டு, அவ்வித அனுபவமே அடைந்தார். தெருவில் இருந்த ஜனங்கள் எவருக்கும் அவ்வித அனுபவம் இல்லை. இருவரும் வீடு திரும்பியதும் பாபா தமக்கு ஆத்ம தரிசனம் அளித்தார் என்று சொன்னார்கள். பிறகு அவ்விருவரும் பாபாவிடம் வந்தபோது. பாபா அவர்களைக் கண்டு, தாம் ஆமோதித்ததாக புன்னகை புரிந்தார்.

VII. சாதனம்—ஏழாவது

சங்கீதம்

201. ஒரு சங்கீதக் கல்விப்பிரியனை, ஒரு சமயம் பாபா வரவழைத்து. “ஆரம்பி, பாட்டு பாடு” என்றார். பக்தன் பாட ஆரம்பித்தான். பாபா பிழைகளை த்திருத்தி சில ராகங்களைப் பாட சில விஷயங்களை கொடுத்தார். இரவுகளில் பாபா அடிக்கடி பாடுவார். 1890-க்குப் பின்னால் அவ்வளவு அதிகமாக இல்லை.

202. அப்துல் ரஹீம் ரங்காரி என்பவரை பாபா நோக்கி, "நீ நேற்று வந்திருந்தால், நன்ருய் இருந்திருக்கும் என்ருர்.

அப்துல் :—ஏன் ?

பாபா :—சங்கீதம் இருந்தது. இரவு பூராவும் கண்ணீர் விட்டேன். அவர்கள் என்னை திட்டினர்கள்.

அப்துல்:—அவர்கள் ஏன் தங்களைத் திட்டவேண்டும்?

பாபா :—அவர்கள் திட்டினர்கள் என்று சொன்னல், ஜனங்கள் அறியமாட்டார்கள். நீ அறிந்துகொள்வாய்.

அப்துல் :—கடவுளை நேசிக்கிற ஒவ்வொருவரும் கண்ணீர் விடுவார்கள், சிறிப்பார்கள், நடனமாடுவார்கள் சங்கீர்தனம் நடக்கும்போது.

பாபா :—அது தான். நீ சரியாய் சொன்னய். உனக்கு சொந்த குரு உண்டா ?

அப்துல் :—ஆம். பாபி பலீஷா சிஷ்டி நிஜாமி.

பாபா :—அதனல் தான் நீ அறிகிருய்.

சிஷ்டிகுரு போகும் இடங்களிலெல்லாம் சங்கீதம் கூடவே போகவேண்டும். மெய் மறப்பதற்கு சிஷ்டி சம்பிரதாயத்தார் சங்கீதத்தை பிரயோகிப்பர்.

தியாகராஜ கீர்த்தனை "மோக்ஷமு கலதா" என்பது இதே தாத்பர்யத்தையுடையது.

யாக்ஞவல்கியஸ்மிருதி (74) ஸ்ரீ பாகவதம் VI 5 (22) சுலோகமும், தியாகராஜருடைய "கீதார்த்தமு—சங்கீதானந்தமு—நீதா" அவ்விதமே.

நீதிநெறி விளக்கமும் திருத்தமும்

203. பாபு சாஹேப் ஜோக் என்னும் பக்தர் பாபாவுக்கு நெடுங்காலமாகத் தொண்டு செய்து வந்தார். ஒரு

சமயம் ஜோக் பாபாவை நோக்கி, "பாபா? இவ்வளவு காலமாக, தங்களுக்கு நான் அனன்ய பாவத்துடன் தொண்டு செய்தேன். பலப்ராப்தி எப்போது வரும் என்பதை எப்படி அறிவது.

பாபா :—நம்முடைய ஹிருதயங்களை சந்தோஷிக்கச் செய்யும், உன் சேவையின் பலப்ராப்தி, எப்போது நீ என்போலவே கோவணத்துடன் உணவு இரந்து வருவாயோ அப்போது (அதாவது உன்னை என்னுடன் அபேதமாகக்கண்டு எல்லாவிதப் பற்றுகளையும் விட்ட போது என்பது கருத்து.)

துராசை

204. பாபா, ஒரு சமயம், தேவதாஸ் என்கிற துறவியை நோக்கி, "1. வைராக்யத்தை விடாது பிடி. 2. ஸ்திரீகள் துறவிக்கு பெரிய அபாயம். 3. உபாதிகளை அதாவது மோஹத்தையும், ஆடம்பரத்தையும் விலக்கு. 4. ஈஸ்வரனை எண்ணி நான் என்னும் அஹம் பாவத்தை அழி." துராசையை வெல்லாவதன் ஈஸ்வரனைக் காண மாட்டான்.

சிற்றின்ப இச்சை

205. இரண்டு முஸ்லீம் ஸ்திரீகள், முக்காடிட்டுக் கொண்டு பாபாவின் தரிசனத்துக்கு மசூதிக்கு வந்தார்கள். N. G. சந்தோர்கர் என்பவர் பாபாவுடன் உட்கார்ந்திருந்தார். (ஸ்திரீகளைக் கண்டவுடன்) N. G. C. எழுந்து போகப் புறப்பட்டார்.

பாபா :—நீ தங்கியிருக்கலாம்; அவர்கள் தரிசனமடைய விரும்பினால் வரட்டும்.

அந்த ஸ்திரீகள் வந்தார்கள். அவர்களில் வயதானவள் தன் முகமூடியை எடுத்துவிட்டு தரிசித்தாள். அவ

ளுக்கு இளையவளும், முகமூடியை எடுத்து தரிசனம் செய்துவிட்டு, மறுபடியும் முக்காட்டைப் போட்டுக் கொண்டாள். இளையவள் அழகால் மனம் கவரப்பட்ட நானு தனக்குள், "அந்த திவ்வியமான முகத்தைக் காண மறுபடியும் ஒரு சமயம் வாய்க்காதா?" என்று எண்ணினார். ஆனால் வெளியில் ஒன்றும் சொல்லவில்லை. அவருடைய துடையில் பாபா தட்டினார். பிறகு ஸ்திரீகள் போய் விட்டார்கள்.

பாபா :—நானு, நான் ஏன் தட்டினேன் என்பதை அறிந்தாயா ?

நானு :—எல்லாமுணர்ந்த என் குருவினிடம் நான் எதைத்தான் மறைக்கமுடியும்? ஆனால், தங்களுடைய நெருங்கிய சன்னிதானத்தில் நான் இருக்க, இவ்வித இழிவான எண்ணங்கள் எப்படி என் மனதை சுழற்றி விட்டன என்பதுதான் நான் அறியவில்லை.

பாபா :—நீ, என்னவானாலும் ஒரு மனிதன் தானே! இந்திரிய விஷயங்கள் அருகில் நெருங்கியவுடன், துள்ளிக் குதித்து எழும் இச்சைகளுடன் இருப்பது இந்த தேகம். ஆயினும், பார்க்கக் கண்களைக் கவரத்தக்கவையும் நல்ல வர்ணங்களுடன் கூடியவையுமான கோயில்கள் உலகத்தில் அருமையானவைகளா? அவ்வித கோயில்களுக்கு நாம் போகும்போது, வெளிப்புறத்தைக் கண்டு அதிசயிக்கவா, அதனுள் இருக்கும் கடவுளைக் காணவா போகிறோம்? கோவிலில் கடவுளை தரிசிக்கும்போது அந்த கட்டடத்தின் வெளிப் புறத்தின் அழகைக் குறித்து எண்ணுகிறாயா ? அல்லது உள்ளேயிருக்கும் பரமாத்மாவின் பிரதிமையின் மகிமையைக் குறித்து சிந்திக்கிறாயா ? கடவுள் கோவில்களில்தானா இருக்கிறார் ? கோவில்கள் போன்ற உலகத்தில் உள்ள ஒவ்வொரு வஸ்துவிலும்

இல்லையா ? வெளித்தோற்றத்தின் அழகையோ அல்லது அவலக்ஷணத்தையோ குறித்து, நாம் கவனிக்கத் தேவையில்லை. முக்யமாக, கடவுளை வெளிப்படுத்தும் உருவத்தின்மேல் மனதை நிலை நாட்டவேண்டும்.

வெளிப்புறத்தைக் காண்பது ஒரு தப்பிதமல்ல. ஆனால், ஒருவர் அதைக் காணும்போது, அவ்வளவு சுந்தரமான இருப்பிடத்தை உண்டாக்கி, அதில் வாசம் செய்துகொண்டிருப்பவர் எவ்வளவு நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டவர் எவ்வளவு திறமை யுடையவராயும், சக்தி வாய்ந்தவராயும் இருக்கவேண்டும் என்பதை நினைக்க வேண்டும். நானா ! இம்மாதிரியாக உன் எண்ணங்களை திருப்பியிருந்தால், அந்த அழகிய முஸ்லீம் முகத்தை மறுபடியும் காணும் எண்ணம் உனக்கு வந்திராது. இதை எப்போதும் உன் மனதில் வை.

206. ஸாடேவாடாவில் H. V. ஸாடே என்னும் ஒரு செட்டில்மெண்ட் ஆபீஸர் இருந்தார். அவர் பாபாவின் பக்தர். அவ்வூரிலேயே இருந்த பெயர் கெட்ட ஒரு ஸ்திரீயைப் பார்க்க ஆவல் கொண்டார். ஆனால் அவளும் பாபாவிடம் அதிக பக்தியுள்ளவள். அன்று காலை ஸாடே பாபாவிடம் வந்தார். அவர் மனத்திலுள்ள எண்ணத்தை பாபா அறிந்து கொண்டார்,

பாபா :—சாஹேப் ! "ஸ்கூலுக்கு"ப் போனாயா ? (அந்த ஸ்திரீ இருக்கும் இடத்துக்கு "ஸ்கூல்" என்று அந்த ஊரில் பெயர் உண்டு: இதை அவர் அறியவில்லை.

ஸாடே :—என்ன பாபா ! ஸ்கூலுக்குப் போகாமல் என்னை ஒரு டிப்டி கலெக்டர் ஆக்கிவிட்டீரா (ஸ்கூல் என்பது பள்ளிக்கூடம் என்று எண்ணினார்). அவர் அறியாமையை தெரிந்துகொண்டு, பிறகு அதைப் பற்றி பாபா பேசவில்லை.

பிறகு ஸாடே அந்த ஸ்திரீயிடம் போனர். அவளுடன் பேசிக் கொண்டிருக்கும்போது காம விகார எண்ணங்கள் அவர் மனதில் எழும்பின. அவர் அபாயத்தில் விழ விருந்தார். அப்போது சடுதியாக வெளிக் கதவு திறந்தது. பாபா கதவினிடம் நின்றுகொண்டு "என்ன, உன் குருவினிடம் இவ்வளவு தூரம் வந்தாய். நரகத்துக்கு இறங்கிக் கொண்டிருக்கிருயா ? என்ன சிரேஷ்டமான வரிசை !'' என்பதுபோல் சைகை காட்டினதை ஸாடே கண்டார்.

பிறகு பாபா மறைந்து விட்டார் ஸாடே சமயத்தில் காப்பாற்றப்பட்டார். உடனே ஸ்கூலே விட்டுப் போய் அதற்கு பிறகு அந்த ஸ்திரீயிடம் போகவில்லை.

கோபம்—ராமதாஸி

207. ஒரு சமயம் ராமதாஸி என்பவரை நோக்கி,

பாபா :—நீ அத்யாத்ம ராமாயணத்தை இடைவிடாமல் பாராயணம் செய்கிருய். ஆனுலும் உன் ஹிருதயம் சுத்தமாயில்லை. நீ சஹஸ்ர நாமத்தை ஜபம் செய்கிருய், ஆயினும் உன் கஷ்டங்கள் போகவில்லை. உன்னை ராம தாஸி என்று சொல்லிக் கொள்கிருய். நீ அப்படியிருநதால், எல்லா வஸ்துக்களிடத்தும் பற்றற்றவனுகயிருக்கவேண்டும். உனக்கு மமதை, பற்று கூடாது. ஆனல் சமதிருஷ்டி பெற்றிருக்கவேண்டும். எல்லாவற்றையும் சமமாக நோக்கவேண்டும். ஒரு பையன் போல் புஸ்தகத்துக்குச் சண்டையிடுகிருய். டன் கணக்கில் புஸ்தகங்கள் கிடைக்கும். ஆனல் சிநேகிதர் கிடைக்கமாட்டார்கள்.

208. ஒருவர் மற்ருெருவர்மேல் கோபம் கொண்டால் எனக்கு நோகிறது. ஒருவன் மற்ருெருவனை நிந்தித்

தால், நான் நொந்து போகிறேன். ஒருவன் அந்த நிந்தையை வீரமாக சகித்துக் கொண்டால், நான் அதிகமாக திருப்தி யடைகிறேன்.

209. பாபா, ஜோக் என்பவரை நோக்கி, "என் தக்ஷிணை கொடு."

ஜோக் :—(பளிச் சென்று கோபங்கொண்டு) என்னிடம் ஒரு பைசாவும் இல்லையென்று தங்களுக்குத் தெரியும், நான் எப்படிக் கொடுப்பேன், பாபா !"

பாபா :—நீ கொடுக்கவேண்டியதில்லை. ஆனால் உன் மன அமைதியை போக்கடித்து ஏன் கோபமடைகிறாய்?

210. R. B. புரந்தரே என்பவரைக் கண்டு பாபா சொன்னதாவது "யாராவது வந்து, உன்னை நிந்தித்தாலும், அல்லது கண்டித்தாலும், அவர்களுடன் சச்சரவிடாதே. உன்னால் பொருக்க முடியாவிட்டால், கோபமற்ற சொற்கள் ஒன்றிரண்டு சொல்லி இடத்தை விட்டுப் போய்விடு. ஆனால் அவர்களுடன் சண்டையிட்டு பதிலுக்கு பதில் கொடாதே. மற்றவருடன் நீ சச்சரவிடும்போது, எனக்குத் துன்பமும் அருவருப்பும் உண்டாகின்றன.

211. Mrs. பிரதான் என்பவளுக்கு பாபா சொன்னதாவது "நம்மிடம் வேறொருவர் பத்து வார்த்தைகளைச் சொன்னால், பதில் சொல்ல வேண்டியதில்லை. வேண்டியிருந்தால் இரண்டொரு வசனத்தால் பதில் சொல். எவருடனும் சண்டை யிடாதே.

212. பாபா ஒரு சமயம் உக்கிரமமான கோபத்தில் இருந்தபோது, உத்தவேச பூவா வந்து, நமஸ்கரித்து, போக விடை கேட்டார். பாபா, சாந்தப்பட்டவராய், அன்புடன்,—நீ போகிறாயா? மறுபடியும் எப்போது வருவாய்? பதினைந்து தினத்துக்கு ஒருமுறை நீ

வரவேண்டியதில்லை. நான் உன்னிடம் இருக்கிறேன். சரி, போ என்ருர்.

213. மறுபடியும் ஒரு சமயம் பாபா கடுங்கோபத்தில் இருந்தபோது, ஸாமந்த் என்னும் ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், தூரத்தில் நின்றுகொண்டு, தக்ஷணமே, பாபா போக விடை தந்தாலொழிய, வண்டியில் போக தாமதமாகி, ஆபீசில் தொந்தரவு ஏற்படும் என்று எண்ணினர்.

உடனே பாபா :—எவரெவர் போக விரும்புகிருர்களோ, அவர்களை உடனே வந்து விபூதியை எடுத்துக் கொள்ளச் சொல் என்ருர்.

214. ஒரு சமயம் ப்ளீடர் ஜோஷி என்பவரும் மற்ருெருவரும், காகா தோபேச்வரால் சீரடி மசூதிக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் வந்தபோது பாபா அதிக கோபத்தில் இருந்தார். பாபா அவர்களைக் கண்டதும்,

பாபா :—" அவர்களை இங்கே அழைத்து வா."

அவர்கள் உள்ளே வந்தபோது, அவர் சுத்த சாந்தமடைந்தவராய், "நீங்கள் அந்த கிழவனைக் கொன்று விட்டு வந்தீர்கள்" (இவர்களை அனுப்பிவிட்டபின் காகா தோபேச்வர் இறந்துவிட்டார்.)

215. } 42, 179-ல் அடக்கம்.
216. }

217. இன்று பாபா கோபம் கொள்வாரோ என்று பயத்துடன் நினைத்த Mrs. பிரதான் என்பவரை நோக்கி "பார் எவருடனும் நான் கோபங் கொள்ளவில்லை இன்று" என்ருர்.

218. பாபா உக்கிரமமான கோபத்தில், "எல்லாருக்கும் திருவருட்பேறு உண்டாகுக" என்ருர்.

இறுமாப்பு—கருவம்

பாபா ஒரு ஹாஜியின் இறுமாப்பை அடக்குதல்

219. மெக்காவுக்கு யாத்திரை சென்று வந்த ஒரு ஹாஜி, சிரடி மசூதிக்கு வந்தார். பாபா "மசூதிக்குள் நுழையாதே" என்ருர். ஹாஜி திரும்பிப்போய் சில மாதங்கள் வரையில் மசூதிக்குள் வரும்போதெல்லாம் தடுக்கப்பட்டார். பிறகு சாமா என்பவர் மத்தியஸ்தம் செய்ய, பாபா அவரை ஒரு விதமாக பரீக்ஷை செய்து, அவர் கர்வத்தை அடக்கினர்.

பாபா:—சாமாவை நோக்கி, "சாவடிக்குப்போய், அந்த மனிதன், பார்வே கிணத்துக்கு அருகில் இருக்கும் கருவேலம் புதர் வழியாக நுன்னிய பாதை மூலம் நேராக நடந்து வருவானு? என்று கேள். என்ருர்.

சாமா சென்று கேட்டு, ஹாஜி அப்படியே செய்வதாக பதில் கொண்டுவந்தார். மறுபடியும், சாமாவைப் பார்த்து, போய், அவன் 40,000, 4 தவணைகளில் கொடுப்பானு என்று கேள் என்ருர். சாமா சென்று அவ்விதமே ஹாஜி செய்வதாக ஒப்புக்கொண்டார் என்று வந்து சொன்னர்.

பாபா மறுபடியும், "சாமா! அவனிடம் சென்று ஆட்டிறைச்சி, அல்லது எலும்புடன் சேர்ந்த விலா அல்லது, ஆட்டின் பீஜம் வேண்டுமா என்று கேட்டு வா! என்ருர். சாமா, மறுபடியும் வந்து ஹாஜி, பாபாவினிடமிருந்து ஒரு சிறிய ரொட்டித் துண்டுகிடைத்தால் மிகுந்த பிரியமுடன் பெற்றுக்கொள்வதாகச் சொன்னர். பிறகு பாபா, தாமே நேரில் சாவடிக்குப்போய், ஹாஜியின் பேரில் ஈனமானவசைச் சொற்களைச் சர மாரியாகப் பொழிந்து (தம்முடைய தேகத்தைக் காட்டி) "இங்கே

என்ன இருக்கிறது என்று எண்ணுகிறாய்? நீயே பெரியவனாக மனோபாவனை செய்துகொண்டு, கர்வமாக பெருமையடித்துக் கொள்கிறாய். அப்படிச் செய்ய கொரான் போதிக்கிறதா? மெக்காயாத்திரை போனதைக் குறித்து கர்வங்கொண்டாய். ஆனால் என்னை நீ அறிய மாட்டாய்.''

பாபா மசூதிக்குத் திரும்பி வந்து, கூடை நிறைய பழங்களை வாங்கி, ஹாஜிக்கு அனுப்பி, பிறகு 50 ரூபாயும் கொடுத்தார். அது முதல் ஹாஜி வேண்டியபோதெல்லாம் மசூதிக்கு வர பாபா இடங்கொடுத்தார்.

220. H. V. ஸாடே என்பவரை நோக்கி, "(அஸ்திவாரக் கல்லை வைக்க) நீ ஏன் அங்கே போகிறாய்? இதில் நமக்கு என்ன வேலை? கல்தச்சனும் வேலையாட்களும் அதை செய்வார்கள்.

221. தாஸ்கணுவை நோக்கி, "கீர்த்தனம் செய்வதற்கு, ஒரு மணமகன் போல் உடுப்புப் போட்டுக்கொண்டு ஏன் போகிறாய். சரிகை பகடி முதலாக, இடுப்புக்கு மேல் இருக்கும் எல்லாவற்றையும் கழட்டு. கீர்த்தனை பத்ததியை நாரதர் ஏற்படுத்தினார். ஆகையால் நாரதரின் உடை மாதிரி உடுத்திக்கொள்ள வேண்டும். இடுப்புக்கு மேல் மூடாமலும், இடுப்புக்குக் கீழ் துணியுடுத்தியும், சிப்ளா—தம்பூர் கையில் பிடித்தும் இருக்கவேண்டும்.

குல—கர்வம்

S. A. டாக்டர்

222. ஒரு சமயம் தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்த ஒரு பிராம்மண வைத்தியரை மாம்லத்தார் பார்த்து, "வாருங்கள்! நாம் பாபாவைப் பார்க்கப் போகலாம்" என்றார்.



நாராயண தீர்த்தர் (வாயி)



லேண்டி தோட்டம் அகண்ட தீபம்

வ :—நான் ராம உபாசி. வேறு யாருக்கும் வணங்க மாட்டேன்.

மம் :—கவலையில்லை, வாருங்கள். நீர் வணங்கவேண்டியதில்லை.

மசூதியில் ஆரத்தி நடந்துகொண்டிருக்கும் சமயம் தூரத்தில் நின்றுகொண்டிருந்த வைத்தியர் திடீரென்று பாய்ந்து, பாபாவின் திருவடிகளில் விழுந்தார்.

பிற்பாடு, மாம்லத்தார் வைத்தியரை நோக்கி, "உம்முடைய மனதை மாற்றிக்கொண்டு, ஏன் பாபாவைப் பணிந்தீர்"

வ :—ஸாயிபாபா, தம்மை, அந்த மனோஹரமான கரிய ராமனாக எனக்குக் காண்பித்தார். ஆகையால் நான் வந்தனஞ் செய்தேன். இந்த ஸாயி, ஒரு யோக சம்பூர்ண அவதாரம்.

இதற்குப் பிறகு வைத்தியர் பாபா தம்மை வரவழைத்து, பிரம்மானந்தம் அளிக்கும் வரையில், ஸத்யாக்ரகம் செய்வதாகத் தீர்மானித்து, உண்ணுவிரதம் கொண்டு, மூன்று தினங்கள் வரையில் மசூதிக்குப் போகாமல் இருந்தார்.

நான்காம் தினம், வைத்தியரின் ஒரு அந்தரங்க சிநேகிதர் வந்தாரென்று, அவரையும் அழைத்துக் கொண்டு நினைவு மறந்து வைத்தியர் மசூதிக்கு வரவே, பாபா அவரை நோக்கி, "இவ்விடம் வருவதற்கு, யாராவது உம்மை அழைத்தார்களா?" என்றார்.

இதைக் கேட்ட வைத்தியர் வெட்கமடைந்து, மனதிலேயே பிரம்மானந்த அனுபவமடைய பாபாவைக் குறித்து பிரார்த்தித்தார். அன்றிரவே, சீரடியிலேயே அதைப் பெற்று, பிறகு பதினைந்து தினங்களிலும் தம்முடைய சொந்த நகரத்தில் அந்த ஆனந்தம் அடைந்தார்.

முளே சாஸ்திரி

223. குலகொர்வங் கொண்ட முளே சாஸ்திரி என்ற ஓர் நாஸிக் பிராம்மணன் சீரடிக்கு வந்தார்.

பாபா :—(யாரையோ பார்த்து), "என் துணியை சாயம் போட காவிக்கல் கொண்டு வாருங்கள்."

பாபா எப்போதும் காவி வஸ்திரம் அணிந்ததில்லை.

பிறகு பாபா, பூட்டி என்பவரை நோக்கி, "போய், புதிதாய் வந்திருக்கும், நாஸிக் பிராம்மணனிடமிருந்து, தட்சிணை வாங்கிவா" என்றார்.

அந்த நாஸிக் பிராம்மண முளே வந்தார். மசூதிக்குள் வந்தால் தீட்டுபடும் என்று தூரத்தில் நின்றார். ஆனல் சிறிது நேரத்தில் அந்த சாஸ்திரி, "ஜே, குரு, ஜேய், டோலப் குரு மகாராஜ்" என்று உரக்க கூச்சலிட்டுக் கொண்டு மசூதிக்குள் ஒடி, பாபாவின் திருவடிகளில் விழுந்தார்.

பா :—தட்சிணை கொடு.

சாஸ்திரி தலை தூக்கி பார்க்க, அதுவரையில் அவர் கண்ணுக்கு பாபா ஸ்தானத்தில் தோன்றி காவி வஸ்திரம் தரித்த தன் குரு மறைந்ததையும், அவர் இடத்தில் பாபா உட்கார்ந்திருப்பதையும் கண்டார். பாபாவுக்கு தக்ஷிணை சமர்பித்தார்.

பையாஜி-பலங்கோண்டதாக கர்வம்

பையாஜி அப்பாஜி பட்டேல் என்பவர், தமக்கு பீமனுடைய பலம் இருப்பதாக கர்வங் கொண்டு, பாபாவின் உடம்பை உருவிப் பிடித்த பிறகு, அவரை தம்முடைய கரங்களில் தூக்கி அக்னியின் முன் வைப்பது வழக்கம். ஒரு தினம் பாபாவை எடுக்க முயன்றார். ஆனல் முடியவில்லை. பாபா அவரைக் கண்டு சிரித்தார்.

அந்த சிரிப்பு கர்வத்தை அடக்க ஓர் உபதேசமாக இருந்தது.

கேனோபனிஷத்தில், ஒரு வைக்கோலை வாயு தூக்க பிரயத்தினப்பட்டதும் கிருஷ்ண துலாபாரம் என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க.

கல்விச் செருக்கு

224. 182-ல் கண்டபடி.

மாற்சரியம்—(பொறாமை)

225. பாபா சந்தோர்களை நோக்கி "ஆறுவித விகாரங்களுள் பொறாமை ஒன்று. அதை வெல்வது அதிக சுலபமானது. இந்த விகாரத்தில் நமக்கு லாப நஷ்டம் என்பதேயில்லை. பொறாமையாவது, இதராளுடைய லாபத்தையோ சுபிக்ஷத்தையோ, கண்டு சகித்திராத நிலைமை. வேறொருவன் அதிருஷ்டமடைந்தாலும், அதிகாரம் அடைந்தாலும், அதைக் கண்டு நம்மால் சகித்திருக்க முடியாது. நாம் அவனைக் குறித்து இழிவாய் சொல்கிறோம். அவன் நஷ்ட மடைந்தால் நாம் சந்தோஷம் அடைகிறோம். ஆனால் இது நல்லதா? அந்த மனிதன் சுபிக்ஷத்தை அடைந்தால் நாம் என்ன நஷ்டத்தை அடைகிறோம்? ஆனால் ஜனங்கள் இந்த விதமாக யோசிப்பதில்லை. அவன் நன்மையடைந்தால் அவனுடன் சேர்ந்து நாமும் சந்தோஷப் படலாம். நாமும் அதிருஷ்ட முடையவர்களாகவும், நன்மையடைந்தவர்களாகவும் எண்ணலாம். அல்லது நாமும் முயற்சிசெய்து அதற்கு சரியான நன்மையை அடைய வேண்டும். அல்லது நன்மையடைய முயலவேண்டும். அதுதான் நமது எண்ணமும் தீர்மானமுமாக இருக்கவேண்டும். நம்முடையதை அவன் என்ன

எடுத்துக் கொண்டு போனுன்? ஒன்றுமேயில்லை. அவன் கர்மத்தின் பலனுக, சுபிக்ஷத்தை அடைந்தான். அதில் நாம் ஏன் மனம் நோவடைவது? ஆகையால் நாஞ! பொறுமையை முதல் முதலில் அடக்கு.

லோபம்–பேராசை

226. மற்றவர்களுடைய உழைப்பை யாகட்டும் சொத்தையாகட்டும் இலவசமாக ஏற்றுக் கொள்ளாதே. உன்னுடைய வாழ்நாள் முழுவதும் இது ஓர் நியமமமாக இருக்கவேண்டும்.

பாபா ஒரு வீட்டின் தார்சின் மேலிருந்து இரங்க, ஒருவன் ஏணியைக் கொண்டு வந்ததற்கு அவனுக்கு ரூ. 2 கொடுத்து இவ்வசனத்தைச் சொன்ஞர்.

227. பாபா சந்தோர்க்கரை நோக்கி, "இம் மனிதன் நம்மிடம் ஒரு பெட்டியை விட்டு விட்டுப் போய், மறுபடியும் திரும்பக்கேட்கிறுன். மறுப்பது சரியல்ல. அவனுடையதை அவனிடம் கொடுத்துவிடவேண்டும்.

(அதாவது பூர்வ ஜன்மத்தில் நமக்கு நன்மை செய்தான். அதற்கு இப்பொழுது பிரதியுபகாரம் செய்ய வேண்டும்.)

228. பாலா நிவாசகர் என்பவர், க்ஷிரசாகருடைய நிலங்களை குத்தகைக்குப் பிடித்து, நிலங்களின் மாசூல்களை பாபாவுக்கு கொடுத்து வந்தார். ஆனுல் நிலத்தை சொந்தக்காரருக்கு திருப்பிக் கொடுக்க மருத்து விட்டார். அவரைப் பார்த்து பாபா, "அந்த குழந்தைகளுக்கு நிலங்களைத் திருப்பி கொடுத்துவிடு. ஏன் அவர்களைக் கஷ்டப்படுத்துகிறுய்?

229. பாபா:—(அத்தையைப் பார்த்து) உன் சொத்தை தின்பவன் அண்ணு(= தகப்பன்) தான் அவன்

புசிக்கட்டும். அவன் மேல் தாவா துடங்காதே. கடவுள் உனக்கு ஏராளமாகக் கொடுப்பார்.

230. பாபா, ஜோக் என்பவரை நோக்கி, "உன் பணத்தைக் கேட்க, உன் கடன்காரன் ஊருக்குப் போகாதே. உன் கடன்காரனே இங்கே வருவான்."

ஜோக்:—அவனே வருவானு? எப்படி வருவான். கடனே வசூல் செய்யும் காலம் அநேகமாய் முடிந்து விட்டது.

பா:—பொரு.

ஜோக், பாபா சொன்னபடி, கால அளவு கடந்து நிதானித்தான். கடன்காரனே வந்து, வட்டியில்லாமல் அசல் ரூ. 1400 செலுத்தினுன். வட்டிக்காசைப்படாம லிருக்கும்படி பாபா செய்துவிட்டார்.

படே பாபா

231. 15—2—1915-ல் சது பய்யா (சதா சிவ டுண்டிராஜ்) என்பவர் தம்முடைய சிநேகிதரோடு ஹர் தாவில் சுமார் மாலை 4 மணிக்கு நடந்து கொண்டிருந்தார். திடீரென்று எதிர் பக்கமாக பாபா வந்து கொண்டிருப்ப தாகத் தென்பட்டு சது பய்யாவின் கையில் தாம் கை கொடுத்து, ஒரு பல் குச்சியை விட்டு மறைந்தார்.

நாஸ்திக சிநேகிதர்:—இப்போது என்ன நடந்தது?

சது பய்யா:—ஒரு விஷயம் நிச்சயம். நாம் வந்து கொண்டிருக்கும் போது என் கையில் பல் குச்சியேயில்லை. இப்போது நான் ஒரு பல் குச்சியை வைத்திருக்கிறேன். இதை பாபா எனக்குக் கொடுத்தார்.

நாஸ்திக சிநேகிதன்:—சீரடிக்கு ஏன் எழுதி ரூபித் துக் கொள்ளக்கூடாது?

அப்படியே சாமாவுக்கு சது பய்யா எழுதினர். பிறகு சாமாவின் அழைப்பின் மேல் சீரடிக்கு வந்து பாபாவின் எதிரில் எல்லா விஷயத்தையும் சொன்னர்.

பாபா:—சது ! படே பாபாவுக்கு இதைப் போய் சொல்.

அவ்விதமே சது பய்யா படே பாபாவின் எதிரிலும் டாக்டர் பிள்ளையின் எதிரிலும் போய் சொன்னர். படே பாபா, அதிகமாக மனக் குழப்பமடைந்து, சிந்தித்துக் கொண்டும், அழுது கொண்டும் பாபாவிடம் வந்தார்.

படே பாபா:—என்ன பாபா. எனக்கு ஏராளமாக தனத்தைத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறீர். ஆனல் சது பய்யாவுக்கு சாக்ஷாத்காரம் அளித்தீர்.

இவ்விதமாக சொல்லி அழுதார்.

பாபா:—என்ன செய்வது? யார் எது இஷ்டப்படுகிருர்களோ, அதை அவர்கள் அடைகிருர்கள்.

பாபா தினம் கொடுத்த பணத்தால் பெரிய தனவந்தரான படே பாபா வருமான வரிப்பணம் கட்டியும் இருந்தார். பிறகு அதிருஷ்ட ஹீனராகி ஏழையாய் இறந்தார்.

232. ஒரு சமயம் பாபா, பக்தர்களுக்கு பிரசாதம் வினியோகம் செய்து கொண்டிருந்ததை N. V சஹஸ்ர புத்தே என்பவர் பார்த்தார். பாபாவின் கையில் இருக்கும் பிரசாதம் கொஞ்ச மென்றும் தமக்கு எதுவும் மிஞ்சாது என்றும் எண்ணினர். பாபா அவருக்கும் ஒரு துண்டு கொடுத்து, புன் சிரிப்புடன் “உனக்கு ஒன்றும் இல்லை” என்பதாகச் சொல்லி, உலக வஸ்துக்கள் பேரில் இருக்கும் பாசத்தையும், கவலையையும் கண்டித்தார்.

திரவியம்—காஞ்சனம்

233. பாபாவின் பக்தர்களில் R. B. புரந்தரே என்பவர் ஒருவர். அவர் பாபாவை நோக்கி, " தாங்கள் ஏன் அவ்வளவு தனத்தை (தக்ஷிணையாக)க் கேட்கிறீர்கள்" என்றார்.

பாபா :—ஒவ்வொருவரையும் நான் கேட்டுக் கொண்டிருப்பதில்லை. பகிர் (ஆண்டவப் பண்டாரம்) எவனைச் சுட்டிக் காட்டுகிறாரோ, அந்த மனிதனையே தான் நான் கேட்பது. ஆனால், அதற்கு பதிலாக, அந்த மனிதனுக்கு நான் எடுத்துக் கொண்ட அந்த தொகைக்கு பத்து மடங்கு அதிகமாக நான் கொடுக்கிறேன். என் சொந்த உபயோகத்துக்கு அந்த தனத்தை நான் எடுப்பதில்லை. எனக்கு குடும்பம் ஒன்றும் இல்லை.

[ஒவ்வொரு காலையும், பாபா ஒன்றுமில்லாத பக்கிரியாயிருப்பார். பிறகு தக்ஷிணைகள் வந்து குவியும். ஆனால் மாலை அல்லது இரவுக்குள், குவிந்த மொத்தம் பூராவும் பட்டுவாடா செய்யப்பட்டு விடும். சுமார் பத்து வருஷ காலமாக பாபா அடைந்த தக்ஷிணையானது ஒரு கவர்னர் வருமான மாயிருந்தும், அவர் சமாதியான போது அவரிடம் இருந்தது ரூ. 16 தான்.]

234. ஒரு அன்னிய ஸ்திரீயுடன் இருந்து மேஹ வியாதியால் அவஸதைப் பட்டுக்கொண்டிருந்த ஒருவன் பாபாவிடம் வந்து, " பாபா, இந்த 500 ரூபாயை எடுத்துக் கொள்ளும்.'' என்றான். பாபா,(கோபத்துடன்) உன் தனம் ஒன்றும் எனக்கு வேண்டாம். உன் வீட்டில் ஒருவளை வைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? அதை அவளுக்குக் கொடு" என்று சொன்னார். இப்படி தன் மானக்கேடு வெளிப்படுத்தப்பட்டதால் அவன் அவமானமடைந்து போய் விட்டான்.

235. சில மனிதர்கள் சீரடி மசூதிக்கு வெகு தூரத்தில் வந்து கொண்டிருந்தார்கள்.

பாபா :— (கோபத்துடன்) பாபி, அயோக்கியர்! என்பதாக விசேஷமாக தூஷித்து அவரவர்கள் செய்து வந்த குற்றங்களை எடுத்துச் சொல்லி) அவர்களுக்கென்ன உதவி செய்கிறது!

இந்த வசவுகளை முடித்தவுடன் அவர்கள் விலையுயர்ந்த பரிசுகளைக் கொண்டு வந்து மசூதிக்குள் பிரவேசித்தார்கள்.

பா :—நான் சொல்லிக் கொண்டிருந்தது இதுதான் என்று சொல்லி, அவர்கள் பரிசுகளை எடுத்துக்கொள்ள சம்மதிக்கயில்லை. உதவி செய்யவுமில்லை.

ஸர்வ சோத்தையும் பிடுங்குவதற்காக தக்ஷிணை கேட்பது

(பகவான் சொன்னது என்னவென்றால் யாருக்கு அனுக்ரஹம் செய்ய எண்ணுகிறேனோ அவனது என்பதை யெல்லாம் ஒழிக்கிறேன)

236. சீரடியில் துவாரகாமாயியில் வைத்திருந்த பாபாவின் படத்தை எழுதின S. R. V. ஐயகர் என்பவர் தமது ஜேபியில் ரூ. 2-8-0 வைத்துக் கொண்டிருந்தார். அந்த சமயம் வர்தே என்பவர் பாபாவிடம் வந்து "சத்ய நாராயண பூஜை செய்வதற்கு என்னிடம் பணம் இல்லை" என்றார்.

பா :—"உனக்கு எவ்வளவு வேண்டும்?"

வ :—ரூ. 2-8-0.

பா :—(ஐயகரை சுட்டிக் காட்டி) இந்த மனிதன் வைத்திருக்கிறான். அவனிடமிருந்து எடுத்துக் கொள்.

அவ்விதமே வர்தே கேட்டார். தன்னிடம் இருந்த ரூ. 2-8-0 ஐயகர் கொடுக்க வேண்டியதாயிற்று.

தக்ஷிணைக் கேட்பது வருவதைக் காட்ட

237. P. R. அவஸ்தே என்பவர் இண்டோர் சமஸ்தானத்தில் ஓர் நியாயாதிபதி. பாபாவின் பக்தர்களில் ஒருவர். அவருடைய மனைவியோடும் குமாரனோடும் சீரடிக்கு கோடை கால விடுமுறை நாள்களுக்கு வந்தார். வரும்போது அவர் குமாரரின் கலியாண செலவுக்கு 400 ரூபாய் வைத்திருந்தார். தவிர அவர் மனைவி தன்னிடம் 300 வைத்திருந்தாள். அவருடைய குமாரனின் வரதக்ஷிணையாக நல்ல மொத்தம் 1500 ரூ. அவர் அடைய இருந்தார். பாபாவிடம் வந்தபோது, அவஸ்தேயை பாபா நோக்கி, "எனக்கு தக்ஷிணைகொடுப்பீரா'' என்று கேட்டார்.

அவஸ்தே :—எவ்வளவு?

பாபா :—30 ரூபாய்.

அவஸ்தேயின் குமாரனைப் பார்த்து எனக்கு தக்ஷிணை நீ கொடுப்பாயா, 40 ரூபாய்?

இவ்விதமாக அடிக்கடி கேட்டு, அவஸ்தேயின் மனைவியிடம் இருந்தும், அவள் குமாரனிடயிருந்தும் மீதியிருந்த 30 போக எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டார்.

மறுபடியும் அவஸ்தேயைப் பார்த்து "எனக்கு முப்பது ரூபாய் கொடுப்பீரா?''

அ :—நான் கொடுக்கட்டுமா பாபா?

பா :—ஆம்.

பிறகு மனம் கசிந்தபடியே அவர் தம்மிட மனைவியிடம் இருந்த கடைசி 30 ரூபாயையும் வாங்கி பாபாவிடம் கொடுத்தார்.

பிறகு பாபா ஒன்றும் கேட்கவில்லை.

அவஸ்தே வெகு துக்கத்துடன் பாபாவிடமிருந்து திரும்பி வந்தபோது, பாபுசாஹேப் ஜோக் என்பவர்

அவஸ்தேயின் முதுகில் களிப்புடன் தட்டிக் கொடுத்தார்.

ஜோக் :—உமக்கு ஏற்பட்ட நன்மைக்கு சந்தோஷப் படவேண்டும் என்று நான் சொல்கிறேன். பாபா உம்மிடமிருந்து அடிக்கடி தக்ஷிணை பெற்றுக் கொண்டார். நீர் அதிர்ஷ்டசாலியாக இருக்கிறீர். பத்து பங்கு அதிகமாக கொடுப்பதல்லாமல் எப்போதும் அவர் எடுத்துக்கொள்வதில்லை.

அவஸ்தே :—அதைப்பற்றி நான் அறியேன். கலியாண இடத்துக்குப் போக, ஒரு பைசாவும் கையில் இல்லை என்பதை மாத்திரம் அறிவேன்.

ஜோக் :—உங்களுக்கு எவ்வளவு வேண்டும்.

அ :—100 ரூபாய்.

ஜோக்:—இதோ இங்கே இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளும். பம்பாய் வர்த்தகன் ஒருவன், தன் சரக்குகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது என்ற செய்தி, உண்மையல்ல என்று ஏற்பட்டால், தன் லாபத்தில் பாபாவுக்கு 100-க்கு 25 வீதம் கொடுப்பதாக பிரார்த்தனை செய்து கொண்டான். அதன் மூலமாக பாபாவுக்கு, 6000, ரூபாய் வந்தது. அந்த 6000-த்தில் பாபா, முன்னுடியே, மூன்று தினங்களில் 3000 செலவழித்து விட்டார். உமக்கு 100 ரூபாய் கொடுத்ததாக, நான் அவரிடம் சொன்னுல், அவர் ஆக்ஷேபிப்பதும் இல்லை; திரும்பிக்கொடு என்று கேட்பதும் இல்லை. ஆனுல் அவர் உம்மிடமிருந்து 600 சில்லரை பெற்றுக்கொண்டதால், உமக்கு இன்று முதல், மாதம் 1-க்கு 50 ரூபாய் வீதம் சம்பளம் உயரும்.

அவஸ்தே :—எனக்கு சம்பளம் உயரச் செய்ய உதவி செய்பவர் ஒருவரும் இல்லையே.

ஆனால் ஜோக் சொன்னபடி விடுமுறை முடிந்ததும், அவஸ்தேக்கு, சம்பளம் மாதம் 1-க்கு 50 ரூபாய் வீதம் உயர்ந்தது.

238. பாபா, S. B. துமால் என்பவரை நோக்கி, "பாவ்! எனக்கு 50 ரூபாய் கொடு"

துமால்:—என்னிடம் அந்தப் பணம் இல்லை.

பாபா:—அப்படியானால் சாஹேபை (H. V. S.)ஐக் கேள்.

துமால் அப்படியே சாஹேபைக் கேட்டார். அவரும் பிரியமுடன் கொடுத்தார். இந்த சமயம், H. V. ஸாடே தமது பென்ஷனோடு, 50 ரூபாய் அதிகமாக கேட்டிருந்த விஷயம் சர்க்கார் உத்திரவை எதிர்நோக்கி யிருந்தார். பிறகு ஸாடே கேட்டபடியே அனுகூலமான உத்திரவு வந்தது. உத்திரவான தேதி, பாபா தக்ஷிணை கேட்ட தேதி, இரண்டும் ஒன்றாக இருந்தது.

239. 1912 வருஷத்தில், சோமநாத், S. D. நிமோன்கர் என்ற போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பாபா விடம் வந்தார்.

பா:—எனக்கு பத்து ரூபாய் கொடு.

நிமோன்கர் கொடுத்தார். ஆறு மாசத்துக்குப் பிறகு, பாபாவுக்கு தக்ஷிணை கொடுத்த தேதி முதல் கொண்டு அவருக்கு பத்து ரூபாய் சம்பளம் உயர்ந்தது.

240. R. S. தேவ் என்பவர் 5 அடுக்குகள் கொண்ட ஒரு கட்டிடத்தைக் கட்ட பாபாவின் அனுமதியைப் பெற பாபாவிடம் வந்தார்.

பாபா தரையில் 25 கோடுகள் வரைந்து, ஒவ்வொரு கோட்டுக்கும் 1 ரூபாய் வீதம், தக்ஷிணையாக 25 ரூபாய் கேட்டார்.

தேவ் அப்படியே 25 கொடுத்தார். பிறகு தேவ், 5 அடுக்குகள் கட்டவேண்டியதென்று உத்தேசித்திருந்தாலும், ஒவ்வொன்ருகக் கட்டி 25 அடுக்குகள் வரையில் கட்டினுர். இப்போதும் 25 அடுக்குகள் இருக்கின்றன.

241. S. B. நாச்னே என்பவராலும், சங்கராலால் என்பவராலும் வசூல் செய்யப்பட்டு 64 ரூபாய் பாபாவுக்கு வசூல் செலுத்தப்படும் என்பதற்கு அடையாளமாக பாபா 64 ரூ. அவர்களை தக்ஷிணை கேட்டது முன்னுலேயே அறிவிக்கப்பட்டது.

முதல் வருமான ஸமர்ப்பணத்துக்காக தக்ஷிணை கேட்பது

242. தாஜி ஹரி லேலே என்பவர் நாசிக்கில் லான்ட் ரிகார்ட்ஸ் டிப்டி இன்ஸ்பெக்டர். அவர் சீரடிக்கு வந்து கொண்டிருக்கும்போது, கோபர்கானில், கெஜட்டைப் பார்க்க, அவருக்குச் சம்பளம் 125-லிருந்து 150உயர்ந்திருப்பதாக இருந்தது.

பிறகு பாபாவிடம் வந்து நமஸ்கரித்தார்.

பா :—எனக்கு 15 ரூ. கொண்டு வா.

லே :—என்னிடம் பணம் இல்லே.

பா :—நேற்று தானே உனக்கு 25 ரூபாய் கொடுத்தேன். போய் பணம் கொண்டு வா. லேலே இரவல் வாங்கிக் கொடுத்தார்.

பணம் வாங்கினது சரியல்ல எனக் காட்டுவதற்கு தக்ஷிணை

243. பாபாவின் பணியாள் தரப்பில் ஒரு கிரிமினல் அப்பீல் பக்தர் துமால் தாக்கல் செய்தார். பாபாவின் சமத்காரத்தால், அப்பீல் தாக்கல் செய்தவுடனே குற்றம் இல்லே என்னும் தீர்ப்பு சொல்லிவிட்டார். அப்பீல் செய்தவர்கள் அவருக்கு ரூ. 300-ம் கொடுத்தார்கள்.

பணத்துடன் சீரடிக்கு வந்தபோது, துமாலைப் பார்த்து,

பாபா :—"பாவ் ! எனக்கு தக்ஷிணை கொடுப்பாயா"

துமால் :—அப்படியே, பாபா.

இவ்விதமே அடிக்கடி கேட்டு, ரூ. 300 வரைக்கும் வசூல் செய்தார். அதற்கு மேல் பாபா ஒன்றும் கேட்கவில்லை.

244. M. W. பிரதான் என்பவர் பாபாவை முதல் முதலாக தரிசிக்க வந்தபோது 20 வெள்ளி ரூபாய் தக்ஷிணையாக சமர்ப்பிக்க எண்ணி, அதற்காக 50 ரூபாய் நோட்டை மாற்றிக் கொண்டார்.

பாபாவிடம் வந்தபோது, அவரும் தக்ஷிணை கேட்டபோது, தன் எண்ணத்தை மாற்றி வெள்ளிக்குப் பதிலாக தங்க நாணயம் கொடுக்க நினைத்தார். ஒரு சவரனை சமர்ப்பித்தார்.

பாபா :—இது என்ன ?

நூல்கார் :—இது ஒரு கினி.

பா :—இது என்ன பொறும்?

நூ :—15 ரூபாய்.

பா :—எனக்கு இது வேண்டாம். பதினைந்து ரூபாய் கொடு. இதை வைத்துக் கொள்.

சவரனை பாபா தம் கையினால் தொட்டுக் கொடுத்தார் என்று பிரதான் அதி ஜாக்கிரதையாய் அதை பத்திரப்படுத்திக் கொண்டு, 15 வெள்ளி ரூபாய் கொடுத்தார்.

பாபா :—(மேன்மேலும் எண்ணிப் பார்த்து) ரூபாய் பத்து தான் இருக்கிறது. இன்னும் 5 ரூபாய் கொடு.

பிரதான் :—இதோ இன்னும் 5 ரூபாய்.

பாபா பிசகாக எண்ணுவது போல் காட்டி தன் குருவினிடம் பிரதானுக்கு இருந்த பக்தி விசுவாசத்தை

சோதிக்கவும், 20 ரூபாய் கொடுக்கும் உத்தேசத்தை நிறைவேற்றவும் பாபா இவ்வாறு செய்தது.

20 ரூபாய் பெற்றுக்கொண்ட பிறகு, அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை.

245. பாபா B. V. தேவ் என்பவரை நோக்கி, பாய்! எனக்குத் தக்ஷிணை கொடு.

தேவ் ஒரு கினியைக் கொடுத்தார்.

பாபா நான்கு கினிகளைப் பெற்றுக்கொண்ட பிறகு, "உன்னால் நான்கு கொடுக்கப்பட்டாலும், பாபா ஒன்று தான் வைத்திருக்கிறார்.

தேவ்:—பாபா, நான் நான்கு கொடுத்திருக்கிறேன்.

பா:—உண்மையே. ஆனால் என்னிடம் இருப்பது ஒன்றுதான். நீ அறிந்து கொள்வாய்.

இதன் கருத்து, பக்தன் தன்னுடைய சதுர்வித அந்தக்கரணங்களை (மனம், புத்தி, அகங்காரம், சித்தம்) ஒப்படைத்தாலும், ஜீவன் ஒன்றையே பாபா ஏற்றுக் கொள்கிறார். பலவிதங்களும் ஈஸ்வரனை பாபாவைச் சேர்ந்தபோது ஒன்றேயாகின்றன. ஆகையால் மனமானது ஏகமாய் லயமாய் கடவுளை சரணடைய வேண்டும்.

246. பாபா நார்கே என்பவரைப் பார்த்து, "எனக்குத் தக்ஷிணை 15 ரூபாய் கொடு" என்றார்.

நார்கே:—பாபா! என்னிடம் ஒரு தம்பிடியுமில்லை என்று தங்களுக்குத் தெரியும். என்னை ஏன் 15 ரூபாய் அடிக்கடி கேட்கிறீர்.

பாபா:—உன்னிடம் பணம் இல்லையென்று எனக்குத் தெரியும். ஆனால் யோக வாஸிஷ்டத்தை நீ படிக்கிறாய். அதனிடமிருந்து தக்ஷிணையாக 15 ரூபாய் கொண்டு வா.

(தக்ஷிணை கொண்டு வருவதன் கருத்து, யோக வாஸிஷ்டத்திலிருந்து, படிப்பினை பெற்று, அவைகளை பாபா வாசம்செய்யும் ஹ்ருதயத்தில் வைப்பது.)

247. புரந்தரே என்பவரைப் பார்த்து, பாபா, "எனக்கு இரண்டு ரூபாய் தக்ஷிணை கொடு" என்று கேட்டார்.

பு:—பாபா ! அடிக்கடி என்னை 2 ரூபாய் கேட்கிறீர். நான் ஒரு எளிய குமாஸ்தா என்பது தெறியுமே.

பா:—நான் கேட்பது இந்த நாணயங்கள் அல்ல. நான் வேண்டுவது (1) நிஷ்டை அதாவது விசுவாசம். (2) ஸபூரி அதாவது அமைதியான பொருமை, அஞ்சாமல் காத்திருப்பது, இவைகளை எனக்குக் கொடு.

பு:—இவைகளை தங்களுக்கு நான் சமர்பித்தேன். என்னால் இவைகளை செய்விக்க வேண்டும் தாங்களே.

248. **Mrs. T.** என்பவளை நோக்கி பாபா, "எனக்கு தக்ஷிணையாக 6 ரூபாய் கொடு." என்றார். அப்போது **Mrs T.** தம் கணவரைநோக்கி, "நம்மிடம் பணம் இல்லையே. இல்லாதபோது, கேட்பது வருத்தமாயிருக்கிறது."

Mrs T. தம் மனைவியை நோக்கி, "உன்னுடைய உள்ளுக்குள்ளான ஆறு பகைவர்களை ஒப்படைக்கும்படி கேட்கிறார். அதாவது (காமம், குரோதம், மோஹம் லோபம், மதம், மாற்சரியம்.)

பாபா மறுபடியும் **Mrs T**-யை நோக்கி, "எனக்கு 6 ரூபாய் கொடுப்பாயா"?

Mrs T. பாபா அவைகளை உமக்கு ஒப்படைத்தேன்.

பாபா:—நீ பிரளாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்.

249. 1912 வருஷத்தில் ஒரு நியாயாதிபதி, தமது ஜேபியில் 100 ரூபாயுடன் பாபாவைத் தரிசிக்க வந்தார்.

பாபா:—எனக்கு தட்சிணை 40 ரூபாய்'' கொடு. அது கொடுக்கப்பட்டது. மறுபடியும், அது "தட்சிணை 40 ரூபாய் கொடு.'' அதுவும் கொடுக்கப்பட்டது மறுபடியும் பாபா "எனக்கு 20 ரூபாய் கொடு.'' அதையும் நியாயாதிபதி கொடுத்தார். தன்னிடம் பாபா ஒன்றும் இல்லாதவராக செய்கிறார் என்பதைப்பற்றி சிந்தித்தார்.

பிற்பாடு, நியாயாதிபதியைப் பார்த்து, எனக்கு தக்ஷிணை 40 ரூபாய் கொடு.'' என்றார்.

நி:—கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமில்லை.

பா:—ஆனால் போய், பணம் கொண்டு வந்து கொடு.

நி:—யாரிடம் நான் போவது!

பா:—சாமா.

அவ்விதமே சாமாவிடம் நியாயாதிபதி போய் சொன்னார்.

சி:—பாபாவை நீர் அறிந்து கொள்ளவில்லை. உம்முடைய ரூபாய்களைக் குறித்து அவருக்குக் கவலையில்லை. அவர் வேண்டுவதெல்லாம், உன் மனமும், ஹிருதயமும், காலமும், ஆத்துமாவும் அவர் வசம் விடவேண்டுமென்பதே. அது தான் அவர் கருத்து.

அதை நியாயாதிபதி பாபாவிடம் போய் அறிவித்தார்.

பாபா இதைக் கேட்டுப் புன் முருவலுடன் "தீக்ஷித்திடம் போய் அவனைக்கேள்'' என்றார்.

நியாயாதிபதி போய் தீக்ஷித்திடம் சொன்னார்.

தீக்ஷித்:—இந்த சந்தர்ப்பங்களில், பாபா உமக்கிட்ட கட்டளை யென்னவெனில் நீர் பணமில்லாதிருப்பதைக் கஷ்டமென்றெண்ணக்கூடாது. அல்லது பணம் முதலி

யதை யாசிப்பது இழிவானது என்றும் எண்ணப் படாது.

நியாயாதிபதி பாபாவிடம் சென்று இதைச் சொன்னார் பாபா, சிரித்து "நானுவிடம் போ" என்றார்.

நியாயாதிபதி போய் நானுவிடம் அறிவித்தார்.

N. G. C. பாபா தக்ஷிணை கேட்டு, கொடுப்பதற்கு ஒன்றும் இல்லாமல் இருப்பது எவ்வளவு சங்கோஜமானது என்பதை நான் அறிவேன். நீர் என் ஏற்பாட்டையும் வழியையும் உணரவேண்டும். நான் சீரடிக்கு போகும்போதெல்லாம் ஒரு தொகையுடன் புறப்பட்டு, அதில் பாதியை கோபர்கானில் வைத்து விடுவேன். இந்த சமயத்தில் 200 ரூபாயுடன். வந்தேன் அதில் பாதியை கோபர்கானில் வைத்துவிட்டு 100 ரூபாயோடு தான் சீரடிக்கு வந்தேன். பாபாவுக்கு கையில் இருக்கும் மொத்தத்திலிருந்து தக்ஷிணை கொடுத்துக் கொண்டே வந்து, அது செலவாய்விட்டால், கோபர்கானில் வைத்திருப்பதை வரவழைப்பேன். இந்த ஏற்பாட்டை நீரும் மேற் கொள்ளவேண்டும்.

நியாயாதிபதி பாபாவிடம் போய் சொன்னார். பிறகு நானுவுக்கு பாபா சொல்லியனுப்ப நானு வந்தார்.

பா :—நானு! எனக்கு 40 ரூபாய் கொடும்.

நானு கொடுத்துவிட்டு போனார்.

மறுபடியும் நானுவை வரவழைத்து,

பா :—நானு இன்னும் எனக்கு 40 ரூபாய் கொடு.

அதையும் நானு கொடுத்துவிட்டுப் போனார். மறுபடியும் நானுவை பாபா வரவழைத்து 20 ரூபாய் வசூல் செய்து கொண்டார். பிறகு நானு ஒருவரை கோபர்கானுக்கு மீதி பணத்துக்கு அனுப்பி, அது வருவதற்கு

முன்னே, பாபா நானுவிடம் மேல் கொண்டு பணம் கேட்க, நானு கர்வபங்கமடைந்தார்.

இவ்விதம் தக்ஷிணையாகக் கேட்பது, ஒருவர், தாமே பாபாவுக்கு கொடுக்கும் பெரிய களஞ்சியம் என்று எண்ணுவதாவது, அல்லது பாபா கேட்கும் எல்லாவற்றையும் கொடுத்து நிரப்ப முடியும் என்று எண்ணுவதாவது, துணிகரமானது என்றும் பாடம் கற்பிப்பதற்கே.

(சக்ர நாராயணன் என்பவர் குறித்திருப்பதாவது, தக்ஷிணை கொடாதவரிடம் பாபா எப்போதும், கோபத்தையாகிலும் அதிருப்தியாகிலும் காண்பித்ததில்லை. தக்ஷிணை கொடுத்தவரிடத்தும் தனித்த அபிமானம் கொடுத்ததில்லை. விலையினால் பெற முடியாத அவருடைய அருளானது எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்பட்டது. பாபாவினால் வாங்கப்பட்ட பணம் அவர் கையில் நின்றதில்லை. விரைவாகவே சென்று கொண்டிருந்தது. போகத்தோடு கூடிய ஜீவியம் அவர் நடத்தவில்லை. அவருக்கு அளிக்கப்பட்ட நிவேத்தியங்கள் தவிர்த்து, பிக்ஷை எடுத்த, சாதாரணமான அன்னத்திலேயே அவர் ஜீவித்தார்.

250. பாபா, பாலகிருஷ்ண G. உபாசினி சாஸ்திரியை நோக்கி, "எனக்கு நீ தக்ஷிணை கொடுப்பாயா"? என்றார்.

பால:—என்னிடம் பணம் இல்லை.

பாபா:—உன்னுடைய ஜேபியில் இருப்பது என்ன? அதைக்கொடு.

பால:—இது ஒரு வெள்ளி கெடியாரம். அதை எடுத்துக் கொள்ளும் பாபா.

பாபா:—இதைக் கொடுப்பதால், நீ நஷ்ட மடைவதாய் நினைக்காதே.

பால:—உமக்கு கொடுப்பது ஒன்றும் எனக்கு நஷ்டமில்லை.

பிறகு பாபா அந்த கெடியாரத்தை வாங்கி, உடனே, அதை அங்கேயிருந்த ஒருவருக்கு கொடுத்து விட்டார். பாலகிருஷ்ண உபாசினி பூனாவுக்கு போனார். அங்கே, அவருடைய பணக்கார சினேகிதர், பாபாவுக்கு கொடுத்துவிட்டதை, தெரிந்துகொண்டு, ஒரு தங்க கெடியாரத்தை ஒப்புக்கொள்ள பலவந்தம் செய்தான். இவ்விதமாக, பாலகிருஷ்ண உபாசினி, தம்முடைய வெள்ளி கெடியாரத்தை கொடுத்ததால், லாபமடைந்தாரே ஒழிய நஷ்ட மடைந்தவர் அல்ல.

251. **H. S.** தீக்ஷித் என்பவர், ஒரு சுதேச சமஸ்தானத்தில் வேலை செய்து, சம்பாதித்த ஒரு பெட்டி நிறைய வெள்ளி ரூபாய்களை பாபா எதிரில் கொண்டு வந்து வைத்தார்.

தீக்ஷித்:—இவை எல்லாம் உம்முடையவையே.

பாபா:—அப்படியா?

பிறகு, பாபா, மூடியைத் திறந்து, இரண்டு கைகளினாலும் வாரி எடுத்து, எல்லாருடைய எதிரிலும் இரைத்து விட்டார். சில நிமிஷங்களில், பெட்டி காலியாய்விட்டது. நாக்பூரில் சப் ஜட்ஜாய் இருந்த **Mr.** கார்டே என்பவரும், தீக்ஷித்துடைய சிநேகிதரும், தீக்ஷித்தின் முகத்தை கவனித்தார். கஷ்டப்பட்டு சம்பாதித்த சம்பளத்தைக் குறித்து கொஞ்சங்கூட கிலேசமாகிலும், துக்கமாகிலும், சிந்தையாகிலும் தீக்ஷித் அடையவேயில்லை. இவ்விதமாக, அவருடைய பணத்தை வாரி இரைத்துவிட்டது, அவருடைய வைராக்கியத்தை பரீக்ஷிப்பதற்கே செய்தார்.

252. ஒரு வெள்ளி பல்லக்கை கொண்டுவந்து பாபாவுக்கு சமர்பித்தபோது,

பாபா :—அதை அப்புறம் எடுங்கள். அதை நான் வேண்டுவதில்லை.

ஆனால் பக்தர்கள், பாபாவின் சித்திரத்தை அதில் வைத்து ஊர்கோலமாக கொண்டுவர அது தேவை யென்று அதை நிலைநிறுத்தினார்கள். திறந்த வெளியி லேயே அதை வைத்திருந்ததால், முதல் ராத்திரியிலேயே, சில வெள்ளி சேர்மானம் திருடுபோய்விட்டது.

பக்தர் ஒருவர் :—பாபா. அந்த வெள்ளி அலங்காரங் கள் திருடுபோய்விட்டது.

பாபா :—முழு பல்லக்கும் ஏன் திருடுபோக வில்லை.

253. தாமோதர் ராஸ்னே என்பவர், ஒரு வியா பாரத்தை ஆரம்பிக்க விரும்பி, பாபாவின் அங்கீகாரத் துக்கு எழுதினார். பாபா அங்கீகரிக்க வில்லை. பிறகு அவரே வந்து, தம்முடைய லாபத்தில் ஒரு பாகத்தைக் கொடுப்பதாகச் சொன்னார்.

பாபா :—ஹோ. டேமிய்யா! நான் எதிலும் (பண சம்பந்தமான விஷயங்களில்) சிக்கிக் கொள்வதில்லை.

(பாபா ஒரு மடத்தை ஏற்படுத்தவோ, அல்லது ஆசிர மத்தை உண்டாக்கவோ, அந்த ஸ்தாபனத்தின் தலைவரா கவோ அல்லது சொந்தக்காரராக விருக்கவோ, எவரை யும் தம்முடைய சிஷ்யராகக் கொள்வதோ, தம்முடைய ஸ்தானத்தில் ஒருவரை வைப்பதோ எதையும் மறுத்து விட்டார்.)

254. பாபா :—ஒருசமயம் நான் புட்டம்பாவில் இருந்தேன். இரண்டு கக்ஷிக்காரர்களுக்கும் ஒரு சண்டை நடந்துகொண்டிருந்தது. அவர்கள் ஏன் சண்டை யிடு கிறார்கள் என்பது எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. அவர் களுக்கு எதிரில் ஒரு பானை நிறைய நாணயங்களைக் கண் டேன். பிறகு நான் மெதுவாகப் போய் அதை எடுத்துக்

கொண்டு போனேன். தங்களுடைய தனம் போய்விட்டதைக் கண்டு, துக்கப்பட்டு, புலம்ப ஆரம்பித்தார்கள். நான் எனக்குள் சொல்லிக்கொண்டதாவது, "நான் யார்? இந்த தனம் என்ன? யாருடையது? இதற்கு எவ்வளவு சண்டையும் கலவரமும்.

255. இரண்டு பிராமணர்கள் பாபாவிடம் வந்தார்கள்.

பாபா சாமாவை நோக்கி, "(அவர்களில் ஒருவனை சுட்டிக்காட்டி) அவனை 15 ரூபாய் கேள்.''

அவன் உடனே 15 ரூபாய் தக்ஷணமே கொடுக்க, அதை பாபா வாங்கி வைத்துக்கொண்டார். மற்றொருவன் பாபா கேட்காமலே 35 ரூபாய்கள் செலுத்தினன். பாபா அதை எண்ணிப்பார்த்து, அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

சாமா பாபாவை நோக்கி, "தேவா! இந்த பேதம் என்ன? இவ்விதமாக நான் எப்போதும் நான் பார்க்கதில்லை. நீர் குறைந்த பணத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டீர். அதைவிட அதிகமான பணம், தானாகவே கொடுக்கப்பட நீர் திருப்பி கொடுத்துவிட்டீர்.

பாபா:—சாமா. நீ ஒரு குழந்தை. ஒன்றும் அறியாய். நான் எதுவும் செய்வதில்லை. எதையும் வாங்குவதில்லை. தம்முடையதாக தத்தர் கேட்டார். அவருக்கு பாக்கியான 15 ரூபாயை அவர் கேட்டு மரூதி ஆபிக்கு அளித்தார். ஆகையால் அப்பணம் என்னால் பெற்றுக் கொள்ளபபட்டது. ஆனல் இந்த 35 ரூபாய் நம்முடையதல்ல ஆகையால் திருப்பி கொடுக்கப்பட்டது.

முதலாவதவன் ஆதியில் ஏழையாயிருந்தான். முதல் மாதச் சம்பளமான 15 ரூபாயை செலுத்துவதாக பிரதிக்ஞை செய்து கொண்டான். ஆனல் அந்த பிரதிக்

ளுஜயை மறந்து விட்டான். அப்படியே காலமும் கடந்து வந்தது. 15 ரூபாயிலிருந்து, 30 ரூபாயிக்கும், பிறகு 60க்கும், பிறகு 100, 200, 400, கடைசியாக 700 வரையில் அவன் சம்பளம் உயர்ந்தது. பிறகு அவனுடைய கர்மாவானது இங்கே தள்ளிக்கொண்டு வந்தது. ஆகையால் என்னுடைய 15 ரூபாயைக் கொடுக்கும்படி நான் தக்ஷிணயாக கேட்டு வாங்கிக்கொண்டேன்.

மேலும் ஒரு சம்பவம் இருக்கிறது. நான் கடலோரம் சுற்றி வந்து, பிறகு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பணக்கார பிராம்மணனுக்கு சொந்தமான பெரியதும் அழகானதுமான வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அவ்விடத்தில் நான் பிரியமாக வரவேற்கப்பட்டேன். அந்த பிராமணன் வெகு சம்பிரமமாக எனக்கு அன்னமளித்து, ஒரு பீரோவுக்கு பக்கத்தில், சுத்தமானதும், நேர்த்தியானதுமான ஓர் இடத்தை படுக்க காண்பித்தான். நான் அவ்விடத்தில் தீர்க்கமாக நித்திரை செய்து கொண்டிருக்கும் போது, அம்மனிதன், சுவற்றிலிருந்து ஒரு கற்பலகையைப் பிடுங்கி என் ஜேபியில் இருந்த கரன்ஸி நோட்டுகளைக் கத்தரித்து எடுத்துக் கொண்டான். அவைகள் ஒன்று ஆயிரம் வீதம் 30 கரன்ஸிநோட்டுகள். நான் விழித்துப் பார்த்த போது, அவைகள் போய் விட்டதை கண்டேன். நான் அதிக நிலை குலைந்து, அழுது துக்கித்துக் கொண்டிருந்தேன். அந்த பிராம்மணன் திருடி விட்டதாக நினைத்தேன். அன்ன ஆகாரமில்லாமலும், நீரும் அருந்தாமலும், அவனுடைய தாழ்வாரத்தில் 15 நாள்கள் தங்கியிருந்தேன். 15-வது தினம், நான் துக்கப்பட்டுக் கொண்டிருப்பதை பகீர் ஒருவர் கண்டார். பிரியமுடன் விசாரித்தார். அவரிடம் ஒவ்வொன்றையும் சொன்னேன். அவர் சொன்னதாவது "உனக்கு பரிகாரம்

ஏற்படும். நான் சொல்லுவது போல் செய்யவேண்டும். பகீர் ஒருவரைச் சொல்லி, அவருடைய விலாசத்தையும் சொல்கிறேன். அவர் பாதங்களில் சரணடை. அந்த பொருளை உனக்கு அடைய செய்விப்பார். நீ ஒரு பிரதிக்ஞையும் எடுத்துக் கொள்ளவேண்டும். உன் பணத்தை திரும்பி அடையும் வரையில், உனக்கு எந்த வஸ்துவின் மேல் பிரீதி அதிகம் உண்டோ, அதை தின்பதை ஒழிக்க வேண்டும். அந்த பிரதிக்ஞை நீ ஜயமடைய உதவி செய்யும்'' என்றார்.

அந்த பகீரின் போதனையின்படி எனக்கு அதிக பிரீதியான பலகாரத்தை விலக்கி விட்டு, அந்த பகீரின் பாதங்களை சரணடைந்தேன் பிறகு நான் அந்த தனத்தை அடைந்தேன். அதற்கு மேல், அந்த வீட்டை வீட்டு, மறுபடியும் கடலோரம் போனேன். அங்கே நான் ஏற வேண்டிய நீராவிக் கப்பல் இருந்தது. ஆனால் நான் அதில் ஏறமுடியவில்லை. பிறகு ஒரு வேலைக்காரன் மத்தியஸ்தம் பேசி, அதிர்ஷ்டவசமாக ஏற்றிவிட்டான். அது என்னை புகை வண்டிக்கு கொண்டு சேர்த்தது. இவ்விதமாக நான் மசூதி ஆயியை அடைந்தேன். பாபா இதை சொல்லிக் கொண்டிருக்கும் போது, தரிசிக்க வந்த இருவரும் மன முருகினார்கள். ஆனால் சாமாவுக்கு பாபாவின் வசனங்கள் ஒன்றும் விளங்கவில்லை.

பாபா, சாமாவை நோக்கி, “இந்த விருந்தாளிகளை அழைத்துக் கொண்டு போய் போஜனமிடு'' என்றார்.

விருந்தாளிகள் சாப்பிடும்போது அவர்களை நோக்கி, பாபா சொன்னது அவர்களுக்கு விளங்கியதா வென்று கேட்டார். பாபா எப்போதும் இங்கேயே இருக்கிறார். கடலையாகிலும், கடற்கரையாகிலும், கண்டவரில்லை. ஒருவர் திருடிக்கொண்டு போக, எப்போதும் 30,000 ரூபாய்

தனம் பெற்றவருமல்ல. அவர்களில் ஒருவர், அதிகமன முருகி கீழ்க்கண்டவிதமாக சொல்ல ஆரம்பித்தார்.

என் பிறப்பிடம் கடலைச் சேர்ந்தால் போலுள்ள ஓர் மலைக்கணவாயில் உள்ளது. என் ஜீவனார்த்தம் கோவாவுக்கு போனேன். நான் எது சம்பாதித்தாலும், முதல் மாத சம்பளம் தத்தருடையது என்று பிரார்த்தனை செய்து கொண்டேன். தத்தருடைய கிருபையால், 15 ரூபாயில் எனக்கு ஒரு உத்தியோகம் கிடைத்தது. பாபா சொன்னபடியே நிலையாக அதிகமாகிக்கொண்டு வந்தது. பாபா இவ்விடத்தில் சொல்லும் வரையில், தத்தருக்கு 15 ரூபாய் செலுத்த வேண்டியதை மறந்தே விட்டேன். கடைசியாக, பாபர் அன்புடன் 15 ரூபாய் ஏற்றுக் கொண்டது, என் பிரார்தனையை செலுத்துவதாயிற்று. என்றான்.

இரண்டாவது அதிதி தமது கதையை சொல்லவாரம்பித்தார். 35 வருஷ காலம் என் பிராம்மண சமையல்காரன் உண்மையாக எனக்கு உழைத்தான். துரதிர்ஷ்டத்தால் அவன் புத்தி பிசகிப் போய், நான் சேர்த்து வைத்த தனத்தை திருடிவிட்டான். என் வீட்டில் பீரோவுக்கு பக்கத்தில் இருந்த சுவற்றில் ஒரு கற்பலகை இருக்கிறது. அந்த சமையல்காரன் அந்த கற்பலகையை எடுத்துவிட்டு சந்தின் வழியாக புகுந்து, சேகரித்து வைத்த எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். அது 30,000 ரூபாய் கொண்ட ஒரு சுருளை கரன்ஸி நோட்டுகள். என் ஜீவியத்தில் அநேக காலமாக முயற்சியாலும், கஷ்டத்துடனும் சேர்த்தவை. அதன் சரியான மொத்தத்தை எப்படி பாபா அறிந்தாரோ, நான் அறிய மாட்டேன். என் நஷ்டத்தைக் குறித்து இரவிலும் பகலிலும் புலம்பினேன். எவ்விதமாக

சொத்தை திரும்பப் பெறுவது என்ற விஷயம், என் மனதைத் தடுமாறச் செய்தது. போலீசுக்கு பிராது கொடுத்தேன். ஆனல் அதில் ஒரு உபயோகமும் இல்லை. அதிக விசாரத்துடன் 15 தினங்கள் கழித்தேன். தொங்கின முகத்துடன், என் வீட்டு தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தபோது, அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்த பகீர் ஒருவர், என் துன்பத்தைக் கண்டு, அதன் காரணத்தை விசாரித்தார். அவரிடம் முழு கதையையும் சொன்னேன். அவர் சொன்னதாவது, "கோபர்கான் தாலுக்கா, சீரடியில் ஸை என்னும் பெயருடைய ஒரு அவலியர் இருக்கிறர். உன் திரவியம் கிடைக்கப்பெற்றால் அவரிடம் போவதாக பிரதிக்ஞை செய்து கொள்; உனக்குப் பிரியமானதை ஸையை பார்க்குமட்டும் சாப்பிடுவதில்லை என்றும், பிரார்த்தனை செய்து கொள்" என்றார்.

அவ்விதமே பிரதிக்ஞை செய்து கொண்டு, எந்த விதத்திலும் அன்னம் தின்பதில்லையென்றும், என் பணம் கிடைக்கப் பெற்றால், உன்னிடம் வந்தபோதே சாப்பிடுவது என்றும் பிரார்தனை செய்து கொண்டேன்.

அதற்குப் பிறகு 15 தினங்கள் கழிந்தன. அந்த பிராம்மண சமையல்காரனுக்கு என்ன நேர்ந்தது என்று நான் அறியவில்லை. ஆனல் அவனே வந்து, என் பணத்தைத் திருப்பிக் கொடுத்து, "என் மூளை கெட்டுப்போய் அதனல் இப்படிச் செய்தேன்" இப்போது உம்முடைய கால்களில் விழுகிறேன். என்னை மன்னிக்க பிரார்த்திக்கிறேன்" என்றான்.

அந்த 30,000 ரூபாயிலிருந்து அவனுக்கு 2000 ரூபாய் கொடுத்தேன். ஒரு இரவில், கொலாபாவில் இருந்தபோது, கனவில் ஸையை கண்டேன். நான்

சீரடிக்குப் போகவேண்டியிருந்த பிரார்த்தனையை ஞாபகமூட்டுவதாக அது விளங்கிற்று. நான் கோவாவுக்கு போனேன். அவ்விடமிருந்து புகைக் கப்பல் மூலமாய் பம்பாய் வந்து, சீரடிக்குபோக விரும்பினேன். ஆனால் துறைமுகத்துக்கு வந்தபோது கப்பல் நிறம்பி, இடமே யில்லை. கப்பல் தலைவனும் அவ்விதமே சொன்னான். ஆனால் கப்பலில் இருந்த ஓர் வேலைக்காரன், நான் அவனுக்கு முற்றிலும் புதியவனாய் இருந்த போதிலும், தன் வகுப்பைச் சேர்ந்தவனென்று சொன்னான். அதன் பேரில் என்னை கப்பலில் ஏற்றிக் கொண்டார்கள். அதில் பம்பாயிக்கு வந்து, அவ்விடத்திலிருந்து ரயிலில், இவ்விடம் வந்தேன். உண்மையாகவே ஸை, சர்வ வியாபி. நாங்கள் யாரோ? எங்கள் வீடு எங்கேயோ? பாபா தம்மிடம் எங்களை அழைத்துக்கொண்டதற்கு எங்கள் அதிருஷ்டமே அதிருஷ்டம். திருடுபோன பணம் எவ்வளவு விசித்திரமாய் திரும்பக் கிடைத்தது?

256. ஒரு பாக் சந்த் மார்வாடியின் வைக்கோல் போர் தீப்பற்றி எறிந்து விட்டது. அவன் பாபாவிடம் வந்து, தான் நஷ்ட மடைவதை தடுக்க பிரார்தித்தான்.

பாபா :—லாப நஷ்டங்களும், ஜனனமும் மரணமும், கடவுளின் கைகளில் இருப்பவை. ஆனால் எவ்வளவு கண்மூடிகளாய், ஜனங்கள் கடவுளை மறந்து விடுகிறார்கள். லாபம் வந்தால் குதூகலிக்கிறார்கள். நஷ்டம் வந்த போது துக்கிக்கிறார்கள் ஏன்? "இது என்னுடையது என்று ஏன் சொல்கிறாய். அதற்கென்ன அர்த்தம்?

அந்த வைக்கப்போர் மார்வாடியினுடையது அல்ல. அது வைக்கல் போர் தான். அவனுடைய தேகமல்ல. பூமியின்மேல் நெல் விதைகளினால் உண்டானது. மேகத்தின் மழையாலும் சூரிய வெப்பத்தாலும் வளர்ந்தது. பூமியும்,

மேகமும், சூரியனும் அதனுடைய சொந்தக்காரர்கள்: இந்த ஆளுக்கு அது உரிமையானது என்று சொல்வதற்கு ஆதாரமேயில்லை. இம்மூன்றிலும் அக்னி இருக்கிறது. அது போரை எரித்துவிட்டது. நாம் சொந்தக்காரர் அல்ல. கடவுள் ஒரு கையால் கொடுத்து, மற்றொரு கையால் எடுத்துக் கொள்கிறார். சேட்! வீட்டுக்கு போ. இந்த நஷ்டமானது வேறொரு வியாபாரத்தில் சரிப்பட்டு விடும்.

257. (தீக்ஷித்) காகாவினுடைய இந்த பசு ஒரு ஜால்னா மனிதனுக்கு பாத்தியப் பட்டிருந்தது. அதற்கு முன்னால் ஒரு ஔரங்காபாத் மனிதனுக்கும், அதற்கு முன்னால், மஹல்ஸ்பதிக்கும் பாத்தியப்பட்டிருந்தது. அதன் சொந்தக்காரன் யார் என்பதை கடவுள் தான் அறிவார்.

கடவுளிடம் உருதியான விசுவாசம் உடையவர், எவரும், எதிலேயும் குறை யுடையவராக விடப்பட மாட்டார்கள்.

258. கடவுள் கொடுக்கும் எதுவும் வற்றிப்போவதில்லை. மனிதன் கொடுப்பது நிலைத்திருப்பதில்லை.

259· பாபா சந்தோர்கரை நோக்கி, "நானா! என்னுடையது என்று சொல்லிக் கொள்ளும் வஸ்துக்கள் 1 கந்தை, லங்கோட்டி கந்தை 1, குப்ணி 1, மண்பானை, 1, தகரடம்ளர் 1, ஆனால் மன்னிக்கக் கூடாமல், ஜனங்கள் எவ்விதமாக என்னை தொந்திரவு செய்கிறார்கள். அவஸ்தையும் கொடுத்து நிர்பந்தமும் செய்கிறார்கள். இதைப் பற்றி என்ன சொல்வது?

260. சந்ததியில்லாத ஒரு முஸ்லீம் கோஷா ஸ்திரீக்கு, S. R. V. ஐயகர் என்பவர், 4000 ரூபாய் கடனாகக் கொடுத்துவிட்டார். பணத்தை அவள் திருப்பிக்கொடுக்க

வில்லை. ஐயகர் பாபவைப் பார்த்து, "பணத்திற்கு நான் போகலாமா? பாபா" என்றார்.

பா:—அந்த துரதிருஷ்ட திரவியத்திற்கும், நமக்கும் சம்பந்தமே வேண்டாம். 2, 3 வருஷங்களில் தனம் பூரா வையும் அவள் இழந்து விட்டாள். ஐயகரும் எதுவும் வசூல் செய்யவில்லை.

261. வறுமையே மேன்மையான சம்பத்து. ஒரு பிரபுவின் பதவியைக் காட்டிலும் ஆயிரமடங்கு சிரேஷ்ட மானது. கடவுள். ஏழைகளின் மித்திரர். பகீர் (ஆண்ட வன்) உண்மை சக்ரவர்த்தி. அவர் ரீதி அழிவதேயில்லை. ஆனால் சாம்ராஜயம் அழிந்து விடுகிறது.

262. பாபா:—கடவுள் ரக்ஷிப்பதில், ஜனங்கள் பூர்ணவிசுவாசம் வைக்கவேண்டும். உணவுக்காகிலும் உடுப்புக்காகிலும் அவர்கள் தொல்லைப் படக்கூடாது. இவைகளில் உங்கள் காலத்தை வீணாக்காதீர்கள்.

மத்தேயு சுவிசேஷத்தில் 6-வது அத்தியாயம் 25 சுலோகம் முதல் 34 வரையில் இயேசு போதிப்பதாவது.

ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும். கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கி லும் சரீரமும் விசேஷித்தவையல்லவா? ஆகாயத்து பக்ஷி களைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதும் இல்லை. அறுக்கிறது மில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் எங்கள் பரமபிதா, பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும், நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்

களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான் ?

உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன ? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறது மில்லை. நூற்கிறதுமில்லை. என்றாலும், சாலமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகள் ஒன்றைப் போலாகிலும், உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே ! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்திவிப்பது அதிக நிச்சயமல்லவா ?

ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப் படாதிருங்கள். இவைகளெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.''

நீதிநேறி போதனை

263. ஹிந்துக்கள் என்னைத் தொழுதாலும், நானும் கடவுளின் ஒரு பக்தன். "நான் கடவுளை ஸ்மரிக்கிறேன்.''

264.. நான் அல்லாவை வேண்டிக் கொண்டிருக்கிறேன். என் வேண்டுகோளுக்கு அவர் இணங்குவார். (H. V. S. என்பவருக்கு ஓர் மகன் உண்டாகவேண்டுமென்று பாபாவிடம் அவர் மாமனார் பிரார்த்தித்துக் கொண்டார். அப்போது பாபா இவ்வசனத்தை சொன்னார்.

265. இவ்விடத்தில் நான் என்ன என்ன சொல்கிறேனே அவைகள் அங்கே நடக்கின்றன.

266. பாபா :—ஓ! கடவுளே போதும். மழையை நிறுத்தும். என் குழந்தைகள் திரும்ப வீட்டுக்குப் போக வேண்டும். ஒருவிதக் கஷ்டமும் இல்லாமல் அவர்கள் வீடு போய் சேரட்டும்.

மனத் திருப்தி—சரண் புகுதல்

267. கடவுள் மேன்மையானவர். அவர் பிரதான புருஷேஸ்வரர். (அல்லா மாலிக்) ஈஸ்வரன் மாஹாத்ம்யம் எத்தகையது! எவரையும் அவருக்கு ஒப்பிட முடியாது.

அவர் சிருஷ்டித்து, காப்பாற்றி, சம்ஹாரம் செய்கிறார். அவருடைய லீலை அறிவுக் கெட்டாதது.

அல்லாரகேகா வயிசாரஹேனு. அவர் நம்மைவைத்த நிலையில் நாமிருக்கவேண்டும். அவர் உள்ளத்திற்கு கீழ்படிந்திருக்கவேண்டும். வந்ததெல்லாம் வரட்டும். சரியென்று சந்தோஷமாயிரு. எதற்கும் கவலைப்படவேண்டியதில்லை. அவரன்றி ஓரணுவும் அசையாது.

நாம் சத்தியசீலராகவும், நீதிமான்களாகவும், சன்மார்க்கராகவும் இருக்கவேண்டும். எது தப்பு எது சரியென்று பகுத்தறியவேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் செய்யவேண்டும். ஆனல் நாமே சுதந்திரத்துடன் கருமம் செய்பவர் என்ற அகங்காரம் கொள்ளக்கூடாது. கருமத்தை செய்பவர் கடவுள். அவரே சுதந்திரர். அவருக்குள் நாம் பராதீனர் என்பதை நாம் உணரவேண்டும். எல்லா நடவடிக்கைகளையும் அவருடையதே என்று உணரவேண்டும். அப்படி நாம் செய்தால், நாம் பற்றற்றவர்களாகி, கர்ம பந்தத்தினின்றும் விடுபடுவோம்.

தாமியா ராஸனே ஆகாயத்தைப் பிடிக்க விரும்புகிறான். கடவுள் அவனுக்கு கொடுத்ததை வைத்துக் கொண்டு திருப்தி யடையவில்லை.

எல்லாப் பிராணிக ளிடத்தும் அன்பு வை

268. பாபா :—எவருடனும் போராடாதே; பழிக்குப் பழி வாங்காதே. தூஷணை செய்யாதே. உன்னைப் பற்றி எவராகிலும், விரோதமாகப் பேசினால், கலக்கமடையாமல் அமைதியுடன் இரு. அவனுடைய சொற்கள் உன் தேகத்திற்குள் ஊடுருவிப் போவதில்லை. பிறர் காரியங்கள் அவர்களையே தான் பாதிக்கும். உன்னை ஒன்றும் செய்யாது, உன்னுடைய செயல்கள் தான் உன்னைப் பாதிக்கும்.

சோம்பல்

269. பாபா :—சோம்பலாய் இராதே. கடவுள் நாமத்தை உச்சரி. வேத சாஸ்திரங்களைப் படி.

இதர நீதி போதனைகள்

270. சந்திராபாய் போர்கர் என்பவளை நோக்கி, பாபா, "அயலாரிடம் பகையும், பொறாமையும், போட்டியும், போர் குணமுள்ள தன்மையும், நம்மிடம் தங்கியிருக்கக்கூடாது. அயலார் நம்மைப் பகைத்தால், பகவன் நாம ஜபம் செய்துகொண்டு அவர்களிடமிருந்து விலகிப் போகவேண்டியது.

271. பாபா, பாபுராவ் N. சந்தோர்க்கர் என்னும் சிறுவனை நோக்கி, "உன் பெற்றோர்களின் சொல்படி நட. உன் தாயாருக்கு சகாயமாக இரு. உண்மையே பேசு.

எதை நான் தாராளமாகக் கொடுக்கிறேனே அதை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ள ஒருவரும் இஷ்டப் படுவதில்லை. ஆனால், எதை நான் கொடுக்க முடியாதோ, அதையே என்னிடமிருந்து அடைய இச்சிக் கிறார்கள்.

(பூதங்கள்)—மாயா ரூபங்கள்

272. ஒரு பக்தன் பாபாவை நோக்கி, "பாபா! உண்மையாக பூத ப்ரேத பிசாசங்கள் இருக்கின்றனவா?

பாபா :—ஆம் இருக்கின்றன. அவைகளுக்கும் நமக் கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

273. சீரடியில் ஒரு சமயம் R. A. T. என்னும் பக்தர் இரவில் வெளியே போனார். ஒரு மரத்தடியில் ஒரு பிசாசைக் கண்டு, வெருண்டு, பிறகு பாபாவைச் சிந்தித்துக் கொண்டே, தமது விடுதிக்குப் போனார். மறுதினம் அவரைப் பார்த்தபோது, பாபாவே அவ் விஷயத்தைப் பற்றிப் பேசினார்.

பாபா :—நேற்றிரவு நீ எதைக் கண்டாய்?

R. A. T. :—ஒரு பிசாசைக் கண்டேன்.

பாபா :—இல்லை. நான்தான் அது.

R. A. T. :—இல்லை பாபா. அது ஒரு பிசாசு.

மறுபடியும் பாபா :—அது நான்தான். போய் உன் தாயைக் கேள்.

அவ்விதமே R. A. T. போய், தன் தாயைக் கேட் டார். எல்லா பிசாசுகளும் பாபாவின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருப்பதாக அவள் சொன்னாள். திரும்பவும் பாபாவைப் பார்த்தார்.

பாபா :—அவை எல்லாவற்றினுக்குள் நான் இல் லையா? ஒ! நமக்கு பூதங்கள் ஒரு தீங்கும் செய்வதில்லை.

போன வருஷமே இதைப்பற்றி நான் உனக்குச் சொல்ல வில்லையா ?

சாந்தம்

274. பாபா **Mrs. M. W.** ப்ரதான் என்பவளை நோக்கி, நம்மிடம் ஒருவர் பத்து வார்த்தைகளைச் சொன்னால் நாம் பதில் சொல்லவேண்டியதா யிருந்தால், ஒரே சொல்லில் பதில் கொடுக்கவேண்டும். சச்சரவிடாதே, பதிலுக்குப் பதில், சொல்லுக்குச் சொல், கூடாது.

பொருமை

275. உத்தவேச பூவா என்பவர், பாபாவை முதல் முதலில் கண்டபோது, "என் மோக்ஷ குரு எங்கே? அவரை நான் எப்படி அடைவது" என்றார்.

பாபா :—ஐந்து வருஷம் பொரு. அறிவாய். முழு ரொட்டியை ஒரே வாயாக எப்படி விழுங்குவாய் ? ஐந்து வருஷங்கள் பொருத்துப்பார்" என்றார்.

276. பிரார்தன சமாஜத்தில் சேர்ந்த ஒருவன் பாபாவிடம் போனன். ஆனல் அவரைப் பார்க்கப்போவதற்கு முன்னல், பாபா கீதையில் சொல்லியிருக்கும் "ஸ்திதப்ரக்ஞர்" தான இல்லையா என்று சிலரிடம் கக்ஷி பேசி யிருந்தான். இது அவன் மனேபாவத்தைக் கலைத்து விட்டது. இவ்வாறு மனம் சஞ்சலப்பட்டு விசுவாசம் மெலிந்து பாபாவிடம் போனன்.

பாபா :—சாமா, அவனை அழைத்துக்கொண்டு போய் ஏதாவது சில விஷயம் சொல்லு.

அப்படியே சாமா அவனை அழைத்துக்கொண்டு போய், (1) அறியாதாருடைய பொருப்பில்லா வசனங்களை தூரத் தள்ளிவிடு, மதியாதே. (2) பாபாவின் சரணங்

களில் உன் மனதை வை. (3) எல்லாம் சரியாகும், என்ருர். பிறகு பாபாவிடம் இருவரும் வந்தனர்.

பாபா.—சாமாவின் போதனையைக் கைப்பற்று.

அதி துறவறம்

277. அளவுக்கு மிஞ்சிய வைராக்கியம் வைத்துக் கொள்ளாதே, அன்னம், விளையாட்டு, தேகப்பயிற்சி, இவைகளை முற்றிலும் விடுவதும் தவறு.

278. "காகா" அதாவது "சித்தப்பா" என்றழைக்கப்பட்ட H. S. D. என்பவர், இரவில் உபவாச விரதம் கொள்ள எண்ணினர். பிறகு இரண்டு முறை,

பாபா :—காகா! இரவில் சமையல் செய்து சாப்பிடு.

பிறகு H. S. D. உபவாசம் இருக்கும் எண்ணத்தையே விட்டு விட்டார்.

279. ஒரு சமயம் வெளியூரிலிருந்த Mr. கோகளே சிங்கா பண்டிகைக்கு சீரடிக்குப் போகலா மென்றும் அங்கு தாதா கேல்கரின் வீட்டுக்குப்போய் உபவாசமிருக்கலா மென்றும் எண்ணினள். பாபா அச்சமயம் சீரடியில் கேல்கரை நோக்கி, "சிங்காப் பண்டிகையில், என் குழந்தைகள் உபவாசம் இருப்பதா? அதற்கு நான் உடன்படேன்" என்ருர்.

மறுதினம் அந்த ஸ்திரீ சீரடிக்கு வந்து பாபாவின் எதிரில் உட்கார்ந்தாள்.

பாபா :—(தாமே அந்த விஷயத்தைப் பேச எடுத்து) நாம் ஏன் உபவாசிக்க வேண்டும்? தாதா கேல்கர் வீட்டுக்குப்போய், பூர்ண போளிகளைப் பண்ணி, நீயும் சாப்பிட்டு, குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கொடு."

அப்படியே கோகளே மனைவி, தாதாவின் வீட்டுக்குப் போய், அவர் மனைவி மாதவிடாயில் இருந்ததால், தான்

அதிதியானலும், சமையல் செய்ய வேறு யாருமில்லாத தால்தானே சமையல் செய்து, பூர்ண போளி செய்து, பாபா சொன்னபடி நடந்தாள்.

280. ஒரு தினம் ஏகாதசி. பாபா, S. B. சாந்தா ராம் பலவந்த நாச்னே என்பவரை நோக்கி:—"நீ சாப் பிட்டாயிற்று? "

நாச்னே :—இன்று ஏகாதசி தினம். (சாதாரணமாய் நாச்னே உபவாசம் இருப்பதில்லை. ஆனல் அன்றைய தினம், வைதீகமான இரு நண்பர்கள் தன்னேடு வந்திருந்ததால் அவர்களுடன் உபவாசம் இருக்கலா மென்றிருந்தார்.)

பா :—அந்த இருவரும் பித்தர்கள். நீ போய் சாப்பிடு.

பிறகு, நாச்னே பாலாபாவ் ஓட்டலுக்குப் போனர். பாலாபாவும் வைதீகம் ஆனதால், அவருக்கு ஆரத்திக்கு முன் சாப்பாடு கிடைக்கவில்லை. ஆகையால் நாச்னே திரும்பிவிட்டார். பாலாபாவும் ஆரத்தி காலமானதால் மசூதிக்கு வந்துவிட்டார். பாபா நாச்னேவை நோக்கி, "நீ சாப்பிட்டாயிற்று?

நா :—பாபா, இது ஆரத்தி சமயம். ஆரத்திகாலம் ஆனபின் தான் சாப்பாடு.

பா :—இல்லை. நீ போய் சாப்பிடு. உனக்காக, ஆரத்தி காத்திருக்கும்.

ஆகையால் பாலாபாவ், நாச்னேவுக்கு சாப்பாடு போடவேண்டியதாயிற்று. பிறகு நாச்னேயும், பாலாபா வும் துவாரகாமாயிக்குத் திரும்பி வந்தார்கள். அப் போதே மாவுசி என்பவள் சில "பீடாக்"க்களைக் (அதா வது வெற்றிலை பாக்கு சுருள்களை) கொண்டுவந்து பாபா வுக்கு சமர்ப்பித்தாள்.

பா :—(நாச்னேவிடம் ஒரு பீடா கொடுத்து) போட் டுக்கொள்,

நாச்னே பீடா வாங்கிக்கொண்டாரே யொழிய ஏகாதசி யன்று வெத்திலே போடத் தயங்கினர்.

பா :—பாதகமில்லே. போட்டுகொள்ளலாம்.

அவ்விதமே நாச்னே பீடாவை போட்டுக்கொண்டார்.

யோகமும் வெங்காயமும்

281. N. G. சந்தோர்கர் என்பவர், ஒரு சமயம், யோகத்தை அப்யசித்துவரும் ஒரு சாதகரை அழைத்துக் கொண்டு பாபாவிடம் வந்தார். அவர்கள் மசூதிக்குப் போகும்போது, பாபா வெங்காயத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இதைக்கண்ட சாதகர், தமோகுண பதார்த்தமான வெங்காயத்தை உண்ணும்பாபா, யோகாப்பியாசத்தில் தனக்கு உதவ சக்தியற்றவர் என்று நினைத்தார்.

இதைப் பாபா அறிந்துகொண்டார். "நானு, வெங்காயத்தை (அதாவது அதன் தமோ குணங்களே) ஜீரணிக்கும் ஒருவன், அதைச் சாப்பிடுவதால் என்ன கெடுதி ?" என்முர்.

சாதகர், தன் மனதில் உள்ள எண்ணத்தை நன்ருய் அறிந்துகொண்ட பாபா யோகத்தில் கைதேர்ந்தவராக இருக்கவேண்டுமென்று அறிந்துகொண்டார்.

தாஸ் கணுவும் வெங்காயமும்

282. வைதீகமா யிருந்துவரும் தாஸ் கணு மகராஜ் என்பவருக்கு வெங்காயத்திடம் அதிக அருவருப்பு.

பா :—வெங்காயம் சேர்த்து "பிட்ளே" அதாவது பொரித்த குழம்பு செய்து எனக்கு ஒரு பாகம் கொடுத்து, மீதியை நீ சாப்பிடு.

தாஸ் :—அப்படியே.

மறுதினம், தாஸ்கனு, வெங்காயம் சேர்த்து "பிட்ளே" செய்து, தன் நுனிவிரலால் அதைத் தொட்டு, தான் சாப்பிடுவதுபோல் கீழ் உதட்டின்மேல் விரலைத் தடவி பிறகு, விறலையும் உதட்டையும் கழுவிக்கொண்டார். பிறகு பாபாவிடம் போனபோது,

பா:—வெங்காயம் சாப்பிட்டாயா?

தாஸ்:—ஆம்.

பா: :—இவன் சாப்பிடுவதாக பாசாங்கு செய்தான். ஆனல் அதைத் தன் விரலால் தொட்டு, தன் உதட்டின் மேல் விரலைக்கொண்டு வந்தான் தாஸ்கனு எப்படிச் செய்தாரோ, அப்படியே பாபா செய்து காட்டினர்.

பா:—கனு நீ வெங்காயம் சாப்பிடுவதாகப் பாசாங்கு செய்யாதே உண்மையாகவே சாப்பிடு.

தாஸ் :—அப்படியே.

அதுமுதல், சீரடியில் இருந்த வரையில், ஏகாதசி தவிற மற்ற தினங்களில் தாஸ்காணு வெங்காயம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

குசாபாவும்-வெங்காயமும்-ஏகாதசியும்

283. ஒரு நாள் ஏகாதசி தினம். ஆமத்நகர் ஜில்லா மீரஜ்காவம் கிராமத்திலிருக்கும் குசாபாவ் (அதாவது கிருஷ்ணஜி காசிநாத் ஜோஷி) பாபாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

பா :—இன்று என்ன சாப்பிடப் போகிறீர்?

குசா :—ஒன்றுமில்லை. இன்று ஏகாதசி.

பா :—ஏகாதசி என்றல் என்ன?

குசா :—உபவாஸதினம்.

பா :—உபவாஸம் என்றல் என்ன?

கு :—அது "ரோஜாஸ்"; மாதிரி.

பா :—ரோஜாஸ் என்றால் என்ன?

கு :—அதாவது, கந்த மூலங்கள் தவிற ஒன்றும் சாப்பிடுவதில்லை.

பா :—ஹோ! காந்தா தானே காந்த என்றால் சர்க்கரை வெள்ளிக்கிழங்கு காந்தா என்றால் வெங்காயம், நல்லது. இதோ வெங்காயம் இருக்கிறது சாப்பிடு.

கு :—(வைதீகமில்லாத வஸ்துவை, தான் சாப்பிட பாபா நிர்பந்தம் செய்கிறார் என்று) பாபா! தாங்கள் சாப்பிட்டால் நானும் சாப்பிடுவேன். அப்படியே பாபா வெங்காயத்தை சாப்பிட்டார். குசாபாவும்சாப்பிட்டார். அந்தச் சமயத்தில் பாபாவைத் தரிசிக்க சிலர் வந்தார்கள். அப்போது ஒரு தமாஷ் செய்ய பாபா வேண்டி, "இந்த பாப்பானைப் பாருங்கள். ஏகாதசி தினத்தில் வெங்காயம் தின்கிறான்" என்றார்.

குசா :—பாபா சாப்பிட்டார். ஆகையால் நானும் சாப்பிட்டேன்.

பா :—இல்லை. நான் "காந்த (அதாவது வெள்ளிக் கிழங்கு) சாப்பிட்டது. பாருங்கள்" என்று சொல்லி, வெள்ளிக்கிழங்காகவே வாந்தி எடுத்துக் காண்பித்தார்.

இந்த அற்புதத்தைக் கண்ட குசாபாவ், வாந்தியிலுள்ள அவ்வெள்ளிக்கிழங்குகளை பாபாவின் பிரஸாதமாகக் கருதி ஆவலுடன் விழுங்கினார்.

பாபா அவரை அடித்து, போக்கிரி. வாந்தி எடுத்ததை ஏன் சாப்பிடுகிறாய்? என்றார் ஆனால் குசாபாவ் அடியை கவனிக்கவேயில்லை. பாபாவின் ஹிருதயம் இளகிற்று.

பாபா தமது கரங்களை குசாவின் சிரஸின் மேல் வைத்து. "உன்னை நான் ஆசீர்வதிக்கின்றேன். என்னையே நினைத்து எப்பொழுது உன் கைகளை நீட்டுகிறாயோ,

அப்பொழுது என் பிரஸாதம் உன் கைக்குக் கிடைக்கும்.''

இப்பொழுது தன் வெறும் கைகளை குசாபாவ் நீட்டுகிறார். அவைகளிலிருந்து வெப்பமான உதி பாபாவின் பிரஸாதமாக வந்து விழுகிறது.

281. தாதா கேல்கர் என்பவர் அதி வைராக்கியம் கொண்டவர். வெங்காயத்தைக் கண்டால் அதிக வெறுப்பு பிடித்தவர். தாம் அதை வெறுத்ததோடு தன் மருகன் ஸாடே கட்டிய ஸாடே வாடாவுக்கு வந்த விருந்தாளிகள் அதை உபயோகிப்பதைத் தடுத்து விட்டார். வெங்காயத்தை உபயோகித்த நாச்னேவின் மாமியாரையும் வெகுவாய்க் கடிந்து தூஷித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய பேரக்குழந்தை ஒன்றுக்குக் கண்வலி வந்து விட்டது. பாபாவிடம் வந்து "பாபா! குழந்தைக்குக் கண்வலி நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டார்.

பா:—கண்களின் மேல் வெங்காய ஒத்தடம் கொடு.

தா:—வெங்காயத்துக்கு நான் எங்கே போவது?

பா:—(நாச்னேவின் மாமியாரைச் சுட்டிக்காட்டி) இந்த அம்மாவிட மிருந்து வாங்கிக் கொள்.

மாது:—பாபா நான் வெங்காயம் உபயோகித்ததற்கு தாதா என்னைக் கடிந்து கொண்டார். ஆகையால் அவருக்கு கொடுக்க மனமில்லை. ஆகிலும் தாங்கள் உத்திரவிட்டால் கொடுப்பேன்.

பா:—கொடு.

பிறகு அம்மாது வெங்காயத்தைத் தாதாவுக்குக் கொடுத்தாள். அவள் மூலமாய், தாதாவின் துவேஷ வைராக்யத்தை அடக்கினார்.

விருந்தோம்பல்—உபசாரம்

285. பாபா எப்போதும் தமது உணவையும் புகை பிடிப்பதையும் மற்றவருடன் சேர்ந்து உட்கொள் வார்.

ஒரு சமயம் அவர் புகை பிடித்துக் கொண்டிருந்த போது "கொழம்பு" என்னும் பையன் எட்ட நின்று எனக்கும் புகைபிடிக்கக் கொடுத்தால் சந்தோஷமா யிருப்பேனே என்று எண்ணினான்.

அவனைப் பார்த்து பாபா:—"பையா! அருகில் வர ஏன் எட்ட நிற்கிறாய்? நீயும் புகைபிடி" என்றார்.

286. பசியுடன் இருப்பவர்களுக்கு முதலாக அன்னமிடு. பிறகு நீ சாப்பிடு.

287. A. D. என்பவரைப்பற்றி ஒரு சமயம் (கேலி செய்ய) அவரைக் கண்டு; பாபா:—ஓ! அது அவனு டைய பழக்கம். தின்பண்டங்களை தானே தனியாகத் தின்று விடுவான்." என்றார். தான் அப்படி செய்வதில்லை யென்று A. D. மறுதளித்தார்.

288. பாபா:—"நீ சாப்பிடும் போது உன் அரு கில் நான் இல்லையா? எனக்கு நீ ஒரு கவளம் கொடுக் கிறாயா?

இதனால் பாபாவின் தாற்பரியம் என்னதெரிவித் தார்? பக்தர் சாப்பிடும்போது பாபாவுக்கு முன்னாடி யாகவே சமர்ப்பணம் செய்து பிறகு சாப்பிடவேண்டும் என்பது.)

இன்னிசை

289. நீ போட்டியையும், சச்சரவையும் விட்டொ ழித்தால், உன்னை கடவுள் ரக்ஷிப்பார். தீங்குக்குப் பதி லாய் தீங்கு புரியாதே. உனக்கு தீங்கு செய்தவருக்கு

நீ நன்மையே செய். பிறர் வார்த்தைகள் உனக்கு தீங்கிழைக்காது.

பொருமையும், முயற்சியும்

290. பாபா:—யோகம், யாகம், தபசு, ஞானம் இவை அடையப்பெருத வாழ்க்கை வீண்.

291. பாபா (ஒரு பக்தனுக்குச் செய்தி யனுப்பும் போது) வயிற்றை நிரப்பிக்கொண்டு சோம்பலாய் உட்கார்ந்திருப்பதா? "ஸபூரி'' அதாவது பொருமையும் தைரியமும் வேண்டும்.

292. பாபா ஒருவனை நேருக்கு நேரே நோக்கி, "நமது (அதாவது உமது) முடிவு துக்ககரமானதும், இழிவுள்ளதாகவும் ஆகும். ஒன்று அல்லது இரண்டு தரம் தான் நான் எச்சரிப்பேன். கொடுக்கும் புத்திமதியை ஒருவன் லக்ஷ்யம் செய்யா விட்டால், உண்மையாகவே, முடிவு கடுமையாய் விடும். கர்ப்பத்தில் இருக்கும் சிசு கூட குருக்கே விழுந்தால், நாம் அதைத் துண்டு துண்டாக வெட்டித் தூரத்தான் எறியவேண்டும்.

பாபாவின் தபசு

293. ஒரு சமயம், பாபா தாம் படுத்துக்கொண்டிருந்த பலகையைப் பற்றி பேசினுர் அது 5 அடி நீளம். 15 அங்குல அகலம். அந்த ப்லகையின் மேல் விளக்குகள் தளர்ச்சியாய் வைக்கப்பட்டிருந்தன. மெலிந்த துணி நார்களினுல், மசூதியின் கூரையிலிருந்து தொங்கவிடப் பட்டிருந்தது. பாபாவை அது எப்படி தாங்கமுடியும், என்பதும், பாபா எப்படி விளக்குகள் கீழே விழாமலும். துணி நார்கள் அறமலும், பலகைமேல் ஏறவும், கீழே குதிக்கவும் முடியும் என்பது அதிசயமாய் இருந்தது. தாஸ் கணுவும் மற்றவரும் இந்த ஆச்சரியத்தைக்காண

அடிக்கடி வந்ததால், பாபா கோபத்தினுலும்; வெறுப்பினுலும் பலகையைத் துண்டு துண்டாய் உடைத்தெரிந்து விட்டார்.

பிறகு H. S. தீக்ஷித் என்பவர், பாபா படுத்துக் கொள்வதற்கு ஒரு கட்டிலைக் கொடுப்பதாகச் சொன்னுர்.

பாபா:—இல்லை, மஹல்ஸா பதியைத் தரையில் விட்டு, நான் கட்டிலில் படுக்கவா? அதைக் காட்டிலும் நான் தரையில் இருப்பதுவும், அவன் மேலே தூங்குவதும் சிறந்தது.

தீக்ஷித்:—தங்களுக்கு ஒன்றும், மஹல்ஸாவுக்கு ஒன்றுமாக இரண்டு பலகைகள் கொடுக்கிறேன்.

பா:—பலகையின் மேல் அவன் படுக்க மாட்டான். தரையின் மேல் தான் படுப்பான். பலகையின் மேல் "தூங்குவது" சுலபமானதா? என்னைப் போல், திறந்த கண்களுடன், எப்போதும் விழித்துக்கொண்டே, யாரால்த்தான் படுக்க முடியும்? அவ்வாறு விழிப்பவனே பலகையில் படுக்கலாம்.

நான் தரையில் படுக்கும்போது, மஹல்ஸாபதியை என் பக்கத்தில் உட்கார்த்தி அவன் கைத்தலத்தை என் மார்பின் மேல் வைத்துக் கொண்டிருக்கும்படி நியமிக்கிறேன். ஆகையால், அந்த பலகை அவனுக்கு உபயோகமில்லை. "மானஸீக நாமஸ்மரணம்" செய்து கொண்டே படுத்திருக்கிறேன். ஆகையால் மஹல்ஸாபதிக்கு நான் சொல்லி இருப்பதாவது "என் ஹிருதயத்தின் மேல் உன் கையை வைத்து ஸ்பரிச உணர்ச்சியாகப் பார். நான் கண்ணுறங்குவதாக இருதயத்துடிப்பின் மாறுபாட்டால் தெரிந்தால், என்னை எழுப்பு" என்று அவனுக்கு என் உத்திரவு. இப்போது அதுதான் உத்திரவு.

சில குறிகளில், சாதாரண நித்திரை, யோக நித்திரையைப் போலிருந்தாலும், யோக நித்திரைக்கு சாதாரண நித்திரை தடைதான். யோகத்தில் நாமஸ்மரண நிலையில் உண்டாகும் ஹிருதயத் துடிப்புக்கும் சாதாரண நித்திரையில் உண்டாகும் ஹிருதயத்துடிப்புக்கும் வித்தியாசமுண்டு.

சாதகர்களுக்கு போதனை

294. பாபா, அப்துல் என்பவரை நோக்கி, "கொஞ்சமாகவே சாப்பிடு. பற்பல தின்பண்டங்கள் வேண்டாம். ஒரே விதமான ஆகாரம் போதும். அதிகமாய் தூங்காதே. படித்ததின் மேல் தியானம் வை. அல்லாவை நினை.

அவதூறு

295. ஒரு சமயம் பாபாவின் பக்தன் அவனில்லாத சமயத்தில் மற்ெருருவனை தூஷித்துக் கொண்டிருந்தான். பாபா வெளியே போய் "வேண்டி" தோட்டத்துக்கருகில் சந்தித்தார்.

பாபா :—(பன்றியைக் காட்டி) அதைப் பார்த்தாயா?

பக்தன் :—அது ஒரு பன்றி.

பாபா :—அது என்ன செய்கிறது?

பக்தன் :—அது மலத்தை தின்கிறது.

பாபா :—மலத்தின்மேல், எவ்வளவு பிரீதி! தன் தொண்டையில் திணித்துக் கொள்வதைப் பார். மனித மலத்தின் பேரில் அது எப்படி களித்திருக்கிறது, என்பதை கவனி. ஆனால் அது நமக்கு அருவருப்பு. உன் நடத்தையும் அம்மாதிரி. சொந்த சகோதரர்கள், உறவின் முறையார்கள் பேரிலேயே, ஜனங்கள் சினங்கொண்டு பகைக்கிறார்கள். ஒருவன் செய்த எவ்வளவோ

புண்ணியத்தால் மானிட ஜன்மம் கிடைக்கிறது. அவன் சீரடி சேர்ந்தும் கூட ஆத்ம ஹானி செய்துக் கொள்ளுகிறதா?

296. ஒரு சமயம் மதுராதாஸ் என்பவன், சகுண் என்பவருடைய தேயிலைக் கடையில் அவதூறு பேசிக் கொண்டிருந்தான்.

பாபா :—சகுண் என்ன சொல்லிக்கொண்டிருந்தான்?'' இதைக் கேட்ட மதுராதாஸ் வெட்கமடைந்தார்.

பாபா :—நல்லவரும் பொல்லாதவருடன் சேர்ந்து இவ்விடம் வருவார்கள். அவர் குற்றங்குறைகளை ஏன் பயிரங்கப்படுத்த வேண்டும்? அப்படிச் செய்வது மிகத் தவறாகும்.

அஹிம்ஸை

297. ஓர் தினம், மஹல்ஸாபதி, ரணங்கள் நிறைந்த ஓர் பெண் நாயை, கொம்பினால் அடித்துப் பிறகு பாபாவிடம் சென்றார்.

பாபா :—பகத்! இந்த கிராமத்தில், என்னைப்போன்ற ஒரு நோயாளி பெண் நாய் இருக்கிறது. அதை ஒவ்வொருவரும் அடிக்கிறார்கள்.

பாபா தன்னைத்தான் கண்டிக்கிறார் என்று மஹல்ஸாபதி அறிந்து கொண்டு, தன் தவறுக்கு விசனப் பட்டான்.

H. S. தீக்ஷிதரும் ஸர்ப்பமும்

298. தீக்ஷித் :—பாபா, ஸர்ப்பம் ஜனங்களை கொல்கிறது. ஆகையால், ஒருவர் ஸர்ப்பத்தைக் கண்டவுடனே கொல்ல வேண்டாமா?

பாபா :—கூடாது. நம்மைக் கொல்ல, கடவுளால் கட்டளையிட்டாலொழிய நம்மை அது கொல்லுகிறதில்லை. கடவுள் உத்திரவானால், நம்மால் அதனிடமிருந்து தப்புவது முடியாது.

299. 1917 வைசாக மாதத்தில், ஒரு சிறிய நாய், வெறி பிடித்த நாயால் கடியுண்டு பெரிய நாய்களைத் துரத்தியது. கிராமத்தார்கள், கையில் தடியுடன், சிறிய நாயை துரத்தினார்கள். அது தெருவுகளின் வழியாக ஓடி, முடிவாக துவாரகா மாயிக்குள் புகுந்து, பாபாவுக்குப் பின்னால் நின்று, அவரைத் தன் சரண ஸ்தானமாகக் கொண்டது. கிராமஸ்தர்கள் பாபாவிடம் வந்து, "பாபா, அந்த நாய் வெறி பிடித்தது. அதை வெளியே ஓட்டும். நாங்கள் அதை கொல்கிறோம்" என்றார்கள்.

பாபா :—வெறி பிடித்தவர்களே ! நீங்கள் வெளியே போங்கள். ஒரு எளிய ஜந்துவை துன்பப்படுத்தி, கொல்ல வேண்டுகிறீர்களே !

இவ்விதமாக பாபா, அந்த நாயின் உயிரைக் காப்பாற்றினார். அதற்கு வெறி இல்லை என்று ஏற்பட்டது.

300. பாபா, "அத்தை"யைப் பார்த்து, "அத்தை, அவன் உண்ணட்டும். உண்பவன் உன் தந்தை தானே அவன்பேரில் தாவா தொடராதே. ஏராளமாக உனக்கு கடவுள் கொடுப்பார்.

ஒரு சமயத்தில், H. V. சாடே என்பவர் பேரில் ஒரு "நானாவலி" என்பவர் சண்டை தொடுத்ததில் அவரை H. V. S. கீழே தள்ளிக் கொண்டிருந்தனர்.

பாபா ;—சாஹேப், அப்படி செய்யாதே.

பாபாவின் பணிவு

301. 1917-ம் வருஷத்தில் பாபாவிடம் Mrs. T யும் அவள் குமாரனும் வந்தார்கள். பாபா பையனைப் பார்த்து,

பாபா :—பையா, எனக்கு எட்டு ரூபாய் தக்ஷிணை கொடு.

பையன் :—என்னிடம் எட்டு ரூபாய்கள் இல்லை.

பாபா :—போய் பாபு சாஹேப் ஜோக்கிடம் வாங்கி வா.

அப்படியே பையன் ஜோக்கிடம் சென்றான். அப்போது அவர் பாகவதத்தில் துருவ சரித்திரம் படித்துக் கொண்டு வியாக்கியானம் செய்து கொண்டிருந்தார். "சாதுக்கள் கடவுளாக இல்லாவிட்டாலும், கடவுளிடமிருந்து சில சக்திகளை அடைந்திருக்கிறார்கள்" என்று சொன்னார். இதைக் கேட்டதும் பையனுக்கு கோபம் வந்துவிட்டது. நேராக பாபாவிடம் வந்து, "பாபா! என்னை ஏன் அவ்விடம்னுப்பினீர்" என்றான்.

பாபா :—என்ன விஷயம்?

பையன் :—நீர் ஒரு சாதாரண மனிதனென்றும் கடவுள் இல்லையென்றும் தூஷிக்கிறார்கள் (பையனுக்கு பாபாவே கடவுள் என்னும் திடமான நம்பிக்கை.)

பாபா :—அதில் என்ன பொய் இருக்கிறது? ஹா! நான் யார்? ஒரு அற்பப் பக்கிரி. நான் கடவுள் இல்லை. கடவுளின் மகிமை எம்மாத்திரம்! ஒருவரையும் அவருடன் ஒப்பிடமுடியாது.

பையன் :—இவ்விதமாகப் பேசி எங்களை ஏமாற்றுகிறீர். நீரே கடவுள் என்று பூர்ணமாய் நம்பியிருக்கிறோம். யாராவது உம்மை சிறுமைப்படுத்தினால் நாங்

கள் எப்படி சகிப்போம்? சாதுக்கள் இகழப்படும் இடத்தில் ஒரு விநாடி கூட நிற்கப்படாது என்பது உண்மையல்லவா?

பாபா :—ஆம்.

பையன் :—கடவுளைப்பற்றி தூஷணை கூறினால் அவர் கோபப்படமாட்டார். ஆனால் தம்முடைய அடியார்கள் இகழப்பட்டால், அவர் சகிக்கமாட்டார். இல்லையா?

பாபா :—ஆம்.

பையன் :—ஆனால், அந்த சாது பெரியவரென்றும் இந்த சாது இல்லையென்றும் செய்யப்படும் தர்க்கத்தை கேட்பதில் நலமென்ன?

பாபா :—எவராவது ஒரு சாதுவை தூஷித்தால் ஒரு விநாடி கூட அந்த இடத்தில் தங்காதே.

பாபா (அன்புடன் பையனுடைய தலையை தடவிக் கொடுத்து) பாராயணம் செய் நாம ஜெபம் பண்ணு.

பையன் :—நான் நடுவில் விட்டுவிட்டால் பாவம் (பிரத்யவாயம்) வரும். ஆகையால் நான் ஜபம் பாராயணம் செய்யமாட்டேன்.

பாபா (அவன் தாயை நோக்கி) அம்மா! உன் மகன் பூர்ண பொருப்பை நானே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஸ்திரி :—எங்கள் எல்லோரையுங்கூட தாங்கள் தான் கவனிக்கிறீர்கள் (இருவரும் தலைவணங்கி பாபாவை நமஸ்கரித்தார்கள்) பிறகு சிலர் வந்தனர்.

பாபா :—அங்கிருந்தவர்களை நோக்கி, “என் பக்தர்களுக்காக நான் சிந்திக்க வேண்டியவனாய் இருக்கிறேன். ஒரு பக்தன் கீழே விழ இருந்தால், என் கைகளைப் பரப்பி நான்கு, நான்கு கைகளால் அவனைத் தூக்கித் தாங்கிக் கொள்கிறேன். அவன் கீழே விழ நான் விடமாட்டேன்.

அப்போது பையன் பாபாவை நோக்கி,

பை:—பாபா இப்பேக்துதான், தாங்கள் கடவுள் இல்லையென்றும், ஒரு அற்ப பக்கிரி என்றும் சொன்னீர்கள். அப்படியானல் தங்களுக்கு எப்படி நான்கு கைகள்? பாபா பதில்சொல்லவில்லை. ஆனல் புன் முருவல் கொண்டார்.

302. உங்கள் ஊழியன் நான். உங்களுக்குக் கடன் பட்டவன். உங்கள் தரிசனத்தால் நான் பரிசுத்தனுனேன்.|உங்களுடைய பாதங்களின் சேவையை எனக்குக் கொடுத்தது உங்கள் கருணை. உங்கள் மலத்தில் இருக்கும் புழு நான்." என்று இவ்விதமாக பாபா தமது பக்தர்களை நோக்கிச் சொல்லுவார்.

303. ஒரு சமயம் கர்டிஸ் என்னும் ரெவினியூ கமிஷினரும் அவருடன் ஏராளமான இதர அதிகாரிகளும் பாபாவைப் பார்க்க சீரடி கிராமத்தில் நுழைந்தார்கள். அவர்கள் வெகு தூரமாகயிருக்கும்பொழுதே,

பாபா:—போக்கிரிகள்! என்னிடம் காண என்ன இருக்கிறது! நான் ஒரு பக்கிரி சாதாரண அங்கங்களும் கை கால்களும்தான் எனக்கு.

304. ஜவர்ஆலி என்பவர் ஓர் கற்றறிந்த மேதாவி இவர் 1880—1890-ல் சீரடிக்கு வந்து, பாபாவை தமது சிஷ்யராகவிருக்கவும், தமதிருப்பிடமான ரஹதாவுக்குக் கூட்டிப் போனர். பாபாவுக்கு அக்காலத்திலேயே, போற்றிவந்த அல்லது தொழுதுவந்த ஹிந்துக்கள் இருந்தாலும், பாபா ஜவர்ஆலியுடன் ரஹதாவுக்குப் போய், அவருக்கு 2, 3 மாதங்கள் வரையில் சேவை செய்தார். பிறகு, அவருடைய சீரடி பக்தர்கள் அவரையும் ஜவர் ஆலியையும் சீரடிக்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்.



(N. G.) நாநா சாகேபு சந்தோர்கர் 64



ராவ் பகதூர் S. B. துமால்

(தேவதாவின் சாதுர்யத்தால்) ஹிந்து பரிஜனங்கள் தம்மை மதியாததை ஐவர் அறிந்துகொண்டு, சீரடியை விட்டுப் போகவேண்டியதாயிற்று. அதன் பிறகு பாபா சொன்னதாவது.

பாபா :—குருவென்று சொல்லிக் கொள்ளும் அம் மனிதனே குருவாக விருக்கட்டும். நாம் சிஷ்யர்களாய் தாழ்மையுடனேயே இருப்போம். நாம் யாரையாவது ஒருவரை ஆதாரமாகக் கொள்ளவேண்டும். அல்லது சில ருக்கு நாமாவது ஆதாரமாக விருக்கவேண்டும். சிறப் படைய வேறு வழியில்லை.

305. ஒரு சமயம் நாணு வாலி என்பவர் பாபா விடம் வந்தார். அப்போது பாபா அவர் ஸ்தானமாகிய மெத்தைமேல் உட்கார்ந்திருந்தார். நாணு வாலி பாபா வைப் பார்த்து, "பாபா, எழுந்திரு. உன் மெத்தைமேல் நான் உட்கார வேண்டும்" பாபா எழுந்துவிட்டார். நாணு வாலி பாபாவின் ஸ்தானத்தில் உட்கார்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் எழுந்திருந்து, பாபா! உன் ஸ்தா னத்தை எடுத்துக் கொள்" என்று சொல்லி, பாபாவின் பாதங்களில் விழுந்தார். நாணு வாலி அதிகாரம் செலுத் தியதால், பாபா சற்றும் அதிருப்தி யடையவில்லை.

தான தர்மம்

306. பாபா :—நாணு, இன்னொரு புத்திமதி உனக் குக் கற்பிக்கிறேன்.

சந்தோர்கர் :—கற்க ஆவலுடனிருக்கிறேன்.

பாபா :—நாணு, உன்னிடத்தில் யாராவது எதை யாவது வேண்டினால் அது உன்னிடமிருந்தாலும், அதைப் பிறர் அளிக்கச்செய்ய முடிந்தாலும் அந்த வேண்டுகோ ளுக்கிரங்கு. இருக்கும் பொருளை இல்லையெனாதே. உன்

னிடம் கொடுக்க எதுவும் இல்லாவிட்டால் சாந்தமாக இல்லையென்று சொல். கேட்பவனை இகழ்ந்து சொல்வதோ, கேலி செய்வதோ, கோபம் கொள்வதோ தவறானது. உன்னிடம் இருப்பதை பிறருக்குக் கொடுக்க மனமில்லாவிடில், உன்னிடம் ஒன்றும் இல்லையென்று பொய் சொல்லாதே, மரியாதையான மறுமொழி கூறு. சந்தர்ப்பமில்லாததினாலோ அல்லது விருப்பமில்லாததாலோ கொடுக்க இயலாது என்று சொல்லிவிடு. இந்த பாடத்தை நினைவில் வைத்திருப்பாயா அல்லது மறந்துவிடுவாயா?

சங் :—இதில் என்ன கஷ்டம்! நான் கவனத்தில் வைத்திருப்பேன்.

பா :—இந்தப் பாடம் தென்படுவதுபோல் அவ்வளவு சுலபம் அல்ல.

சங் :—மனதில் வைத்திருப்பேன்.

சில காலம் கழித்து, கோபர்கானில் இருந்த தத்தரின் கோயிலுக்கு 300 ரூ. தர்மம் செய்வதாகச் சொன்ன வாக்கு தானத்தின்படி சங்தோர்கர் செய்யவில்லை. சீரடிக்கு வரும் நேரான வழியில் இருந்த கோயிலுக்கு, இந்த காரணத்தால் போகவில்லை. அவர், ஒரு சிநேகிதரின் ஆமோதித்தலின் பேரில், முள்கள் அடர்ந்த ஓர் சுற்று வழியாக வந்ததால், தேகத்தில் இருவருக்கும் முள் தைக்கலாயிற்று. சீரடிக்கு வந்து பாபாவைக் கண்டார்கள். ஆனால் பாபா அவர்களுடன் பேசவில்லை.

சங் :—(பாபாவைப் பார்த்து) என்னிடம் ஏன் பேசவில்லை.

பா :—நானா, நான் போதித்த பாடங்களை ஞாபகத்தில் வைப்பதாக ஒரு மனிதன் சொல்லி, அதன்படி செய்யாவிட்டால் அவனுடன் நான் எப்படிப் பேசுவது?

சந்தோ :—பாபா, தாங்கள் போதித்த எல்லா பாடங்களையும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன்.

பாபா :—கிருஹஸ்தனுன நீ சர்காரை (தத்தராகிய கடவுளை) காணக்கூடாதென்று சுற்று வழியாக வந்தாய். ஏன்? ஏனென்முல் அந்த சாது 300 ரூபாய் கொடுக்கும் படி கேட்பார். என் பாடங்களை இப்படித் தானு ஞாபகத்தில் வைத்துக் கொள்வது? உன்னிடம் பணம் இல்லாவிட்டால், அதை அடைய சுலபமான வழி ஏற்படாவிட்டால், அந்த விஷயத்தை சொல்லத்தான் வேண்டும். சொன்னுல் உன்னை அந்த சாது விழுங்கிவிடுவாரா? அவர் பணத்தைக் கேட்பார் என்று பயந்து, கடவுளின் கோயிலை விலக்கிக்கொண்டு, வரும் இந்த உபாயம் என்ன? சரி மேலும், உன் தேகத்தையும் பாதங்களையும் முட்கள் தைக்கவில்லையா? உன் நண்பன் இந்த பிருகஸ்பதியின் தேகத்தையும் பிருஷ்டத்தையும் முட்கள் குத்தவில்லையா? அப்படிப்பட்ட மனிதனுடன் நான் எப்படிப் பேசுவது?

307. பாபா :—நானு! இன்று உனக்கு இன்னெரு போதனை செய்கிறேன்.

சந்தோ :—நான் கற்க ஆவலுள்ளேன்.

பாபா :—நானு, யாராவது வந்து, எதையாகிலும் யாசித்தால், உன்னுல் முடியும் வரையில் கொடு. அந்த மனிதன் திருப்தி யடையாவிட்டால், மேலுக்கு மேல் கேட்டால், இனிய சொற்களால் இல்லை என்று சொல். உன் கோபத்தை யெல்லாம் அவன்மேல் பொழிந்து உன் அதிகார ஆட்சியைக் காட்டிவிடாதே.

சந்தோ :—சரி.

ஆனுல் ஒருநாள் கல்யானில் சந்தோர்கரின் மனைவி, ஒரு பிச்சைக்காரி, தனக்கு பாஜனி என்னும் பொரி

யரிசி ஒரு வள்ளம் பூராவும் கொடுத்தாலொழிய வீட்டை விட்டு கொஞ்சமும் நகரமுடியாது என்று விடாப்பிடியாக இருக்க, அதிக கோபங்கொண்டு கணவனுக்கு இதை தெறிவித்தாள்.

சந்தோர்கர் கீழே வந்து, ஜவானைக் கூப்பிட்டு, கொடுக்கப்பட்டதைப் பெற்றுக்கொண்டு பிச்சைக்காரி போகாவிட்டால் அவளைக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளிவிட உத்திரவிட்டார்.

இதற்கு சிலகாலம் கழித்து சந்தோர்கர் சீரடிக்கு வந்தார். பாபா அவருடன் பேசவில்லை.

சந்தோ:—பாபா, ஏன் என்னுடன் பேசவில்லை?

பாபா:—என்னுடைய போதனையையும் பாடத்தையும் கவனிக்காதவனுடன் நான் எப்படி பேசக்கூடும்?

சந்தோ:—நான் எந்த போதனையை மறந்தேன்? தங்களுடைய எல்லா பாடத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேனே.

பாபா:—அன்றைய தினம் அந்த பிச்சைக்காரி பாஜனி கேட்டுக் கொண்டிருக்க, உன் ஜாவானைக் கூப்பிட்டு அவளை துரத்த, உன் அதிகார ஆட்சியை எப்படிக் காட்டினாய்? நீ மறுத்தும் கூட உன் கதவண்டையில் அதிகமாய் கொடு என்று அவள் கேட்டுக்கொண்டு உட்கார்ந்ததால் என்ன? அவள் என்ன செய்யமுடியும்? கொஞ்ச நேரத்துக் கப்பால் அவளே போய்விடுவாள். அவளுக்கு மெதுவாக பதிலுரைக்காமல், அவளிடம் கோபங்கொண்டு அவளைத் துரத்தி யடிக்க ஜவானைக் கூப்பிடுவானேன்?

308. ஒருவர் யாரிடமாவது கோபங்கொண்டால், என்னை சுருக்கென்று புண்படுத்துகிறான். ஒருவன் மற்றொருவனை தூஷித்தால், நான் வெறுப்படைகிறேன்.

ஒருவன் தைரியமாக அந்த தூஷணையைப் பொருத்துக் கொண்டால், நான் திருப்தியடைகிறேன்.

அதிதி என்பவர் யார் ?

309. **N. G.** சந்தோர்கள் அதிதி பூஜை செய்வது வழக்கம். தினந்தோரும் வைஸ்வ தேவ ஆராதனைக்குப் பிறகு அதிதிகளுக்காக காத்திருந்தும் எவரும் வராததால், வேதத்தில் சொல்லியிருக்கும் கட்டளை உபயோகமற்றதா என்று பாபாவைக் கேட்க விரும்பினர். பாபாவிடம் போனபோது, சந்தோர்கரின் மனதில் உள்ளதை பாபா அறிந்து,

பா:—ஆம். ஆம். அதிதிகள் உன்னைத் தேடிக் கொண்டு வருகிறார்கள்!

சந்:—உண்மையே, பாபா. நான் தினந்தோறும் காக்கைகளுக்கு அன்னம் இட்டுவிட்டு வெளியே போய், அதிதிகளுக்காக காத்திருக்கிறேன். அவர்கள் வருவதே யில்லை.

பா:—நானா! சாஸ்திரங்களில் பிசகில்லை. மந்திரங் களும் தவறல்ல. ஆனால் அவைகளின் உண்மையான பொருளை நீ உணரவில்லை. உன் மூளையில், உபயோக மற்ற ஒரு சொற்பொருளை வைத்துக்கொண்டு, அதிதி களுக்காக நீ நின்று காத்துக்கொண்டிருக்கிறாய். அவர் கள் வருவதில்லை. ஹோ! அதிதி என்னும் பதம் ஒரு மனிதன். 3½ முழம் உயரமுள்ளவன், அதிலும் பிராம் மணன் இதைத்தானா குறிக்கிறது? மனித ரூபமாகவோ, அல்லது பக்ஷி, மிருக, பூச்சி ரூபமாகவோ, எந்த ஜீவன், அந்த சமயத்தில் பசியுடன் வருகிறதோ அதுவே அதிதி. உண்மையான அதிதியை நீ கிடைக்கப் பெற்றாலும், அவைகளை அதிதியென்று பாவிக்கிறதில்லை. அவைகள்

லக்ஷ்க்கணக்காய் வந்தன. நானு! தப்பான அர்த்தத்தை விட்டொழி. காக்கைகளுக்கு அன்னமிடும் சமயத்தில், வீட்டுக்கு வெளியில் நிறைய அன்னத்தைக் கொண்டு போய் போட்டுவிடு. கூச்சலிட வேண்டாம், எதையும் கூப்பிட வேண்டாம், ஓட்டவும் வேண்டாம். அதை உண்ண எந்த பிராணி வந்தாலும், மனதில் அதிருப்தி கொள்ளாதே. இவ்வாறு நீ லக்ஷ்க்கணக்கான அதிதிகளுக்கு உணவளித்த புண்ணியம் பெருவாய்.

கர்மத்தின் பிரமாணம்

310. பாபா R. S. தேவ் என்பவரை நோக்கி, "எதை விதைக்கிருயோ, அதையே அருவடை செய்கிருய். எதை கொடுப்பாயோ, அதையே பெறுகிருய்.

311. ஒரு சப் ஜட்ஜ் லஞ்சம் வாங்கியதற்கு தண்டிக்கப்பட்டு, பிறகு, அப்பீல் செய்ய வேண்டி, அதில் ஜெயிக்க அவர் பாபாவின் ஆசீர்வாதத்தை வேண்டி வந்தார். அப்பொழுது அவரை நோக்கி பாபா சொன்னதாவது "வேப்பங்கொட்டையைப் பயிரிட்டால் வேப்பங்காயை அருவடை செய்வாய். அந்த மரத்தை வெட்டிப் போடு.

பூர்வ கர்மம்

312. உன்னுடைய தற்கால பிரயத்தினத்தின் பலனுக உண்டானது என்று சொல்வதெல்லாம், உன் தற்கால கர்மத்தின் பலனுகும். எது உன் பிரயத்தினத்தினுல் உண்டாகவில்லையோ அது உன் பூர்வ கர்மத்தால் உண்டாவது. இரண்டு மனிதர்கள், ஒரேவித செய்கை செய்தாலும், வித்தியாசமான பலன்களை அடைகிறவர்கள் அதற்குக் காரணம் அவரவர்களின் வித்தியாசமான பூர்வ கர்மங்களேயாகும்.

ஒருவருடைய ஜீவியத்தில், எதிர் பாராததும், எதிர் பார்க்கக் கூடாததுமான பலன்கள் உண்டாகின்றன. இவைகள் கர்ம பலனுல் உண்டானவை. ஆகையால் நீ சுகம் வந்தால் சந்தோஷிக்காதே. துக்கம் வந்தால் விசனிக் காதே, மற்றவர்களையும் பழிக்காதே. கர்ம பலன்களை அடைய வேண்டியதுதான் தர்மம் என உணர வேண்டும். ஆகையால் தர்மத்தை பிசகாமல் கடைப்பிடிக்கவேண்டும். தற்காலத்திலேயே, உன் கிரியைகளின் பலனை அடைய வில்லையானுல், பின் ஜன்மத்தில் அவைகளின் பலன் ஏற் பட்டுத்தான் தீரும். கர்ம வாஸனைகள் ஈசனுணைப்படியே நடக்கும். இது அனுபவ ஸித்தம். தர்மத்தை கவனித்து நடப்பதால் உன் லக்ஷ்யம் சித்திக்கும். ஈசனை யடை வாய். தர்மத்தின் முடிவு கடவுள்.

313. பா:—ஸத்ஸங்கம் வேண்டும். துஸ்ஸங்கம் விட்டொழிக்க வேண்டும் யாமமும், நியமும் வேண்டும். யுக்தாஹார விஹாரனுயிரு. மதுபானமும் சாஸ்த்ர விருத்தமான உணவும் கூடாது. வீண் வம்பு செய்யக் கூடாது. பொய் சொல்லக்கூடாது. வார்த்தை அள வுடன் பேசவேண்டும். வாக்கை நிறைவேற்றவேண்டும். உன் மனைவியின்பாலுள்ள உன் காமத்தை அளவுக்குள் அடக்கிவை. அயலான் மனைவிகளிடம் காமத்தை அறவே ஒழி. இல்லற இன்பம் தோஷமில்லை. ஆனுல் அதின் அடிமையாகக்கூடாது. காமத்தில் முழுகியிருப் பவருக்கு முக்தி துர்லபம். காமம், உள்ளத்தின் சம நிலையையும், பலத்தையும், உறுதியையும் அழிக்கிறது, கற்றோரையும் கசக்கி விடும்.

கட்டுக்கடங்காத எருமைகளை நடத்தும்போது, அவைகளின் கழுத்துகளில் ஒரு கனத்த கட்டையை கட்டி அடக்குகிருர்கள். காமம் தாண்டிவிடும்போது,

மனதில் விவேகம் என்னும் கட்டையைக் கட்டி வைக்க வேண்டும்.

இச்சைகளை அடக்கவேண்டும். நீ அவைகளின் யஜ மானனுக இருக்கவேண்டுமேயொழிய அவைகளுக்கு அடிமையாகக்கூடாது.

314. பாபா :—ஏன் துக்கப்படுகிறீர்கள் ? மனிதர் கள் இறப்பதற்கே பிறக்கிறுர்கள். ஒவ்வொருவரும் ஒரு சமயம் இறக்க வேண்டும்.

ஜனனமும் மரணமும் கடவுளின் லீலை. அவர் இருப்பதை வெளிப்படுத்தவும். அவைகள் இரண்டையும் பிரிக்கமுடியாது. கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறுர். ஆனல் உண்மையில் ஒருவரும் பிறப்பதுமில்லை ஒருவரும் இறப்பதும் இல்லை. உன் அகக் கண்ணினல் பார். பிறகு நீயே கடவுள் என்றும், கடவுளை விட்டு வேறு இல்லையென் றும் அறிவாய். பழைய வஸ்திரத்தை நாம் எறிந்து விடு வது போல, கடவுளால் தேகம் எறியப்படுகிறது.

எனக்கு முன்னலேயே அப்பா கூல்கர்ணி தன் உடையை மாற்றிக்கொள்ள விரும்புகிறுன். அப்பா போகட்டும். அவனைத் தடுக்காதே. உதி கேட்காதே.

லாப நஷ்டமும், ஜனன மரணமும், கடவுள் வச மானவை. ஆனல், எவ்வளவு குருடாக, இந்த ஜனங்கள் கடவுளை மறந்து விடுகிறுர்கள் !

உயிர் உள்ள வரையில் உயிரைக் காப்பாற்றுவதற்கு வேண்டியவைகளை கவனி. மரணம் வரும்போது அதற் காக துக்கிக்காதே.

விவேகிகள் மரணத்தைக் குறித்து துக்கமடையார். மதியீனர்கள் விசனமடைவார்கள்.

பாருங்கள் ! தேகம் பஞ்ச பூதமயம். உயிருள்ள வரையில் பஞ்ச பிராணன்களும் உபயோகத்திற்கு இரவ

லாய் கொடுக்கப்பட்டன. இப்போது இரவல் கொடுத்தவர் (கடவுள்) தம்முடைய பஞ்சபூதங்களையும் பஞ்சபிராணன்களையும் திரும்பக் கேட்கிறார். ஆகையால் அவைகள் தங்களிடத்திற்கு திரும்பிவிட்டன. காற்று, காற்றோடும், அக்னி அக்னியோடும் இப்படியாகச்சேர்ந்துவிட்டன. ஒவ்வொரு பூதமும் தன் தன் இருப்பிடத்துக்கு போய் சேர்ந்தது.

இந்த தேகம் மண்ணால் ஆனது. பார், இரண்டும் ஒன்றே.

ஆகையால் அது மண்ணுக்கு திரும்புவது விசனிக்கத் தக்கதல்ல.

ஜனனம்

315. அவ்விதமே ஜனனமும், பிள்ளை பிறந்ததென்று கொண்டாட்டம் வேண்டாம். சிருஷ்டியின் சீர் அதுதான்.

பூமி விதைகளைத் தரிக்கிறது. மேகங்கள் மழைகளைப் பொழிகின்றன. சூரியன் தன் கிரணங்களை வீசி முளை கிளம்ப செய்கிறான்.

முளைகள் கிளம்பியவுடன் பூமியும், மேகங்களும், சூரியனும் முளைகளை வளரச் செய்கிறார்கள். எல்லாவற்றிலும் அவைகளுக்கு சந்தோஷமே. முளைகளின் வளர்சிக்கு மகிழ்ந்து அழிவுக்கு இவை துக்கிப்பதில்லை.

இவைகளைப் போல் நீங்களும் கலங்காமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் உங்களிடம் எப்படி துக்கம்வரும்? இவ்வித துக்க நிவர்த்தியான நிலைமையே முக்தி.

316. ஒரு பெண் பிள்ளையின் கணவன், நெடுநாளாக தீரா வியாதியினால் அவஸ்தைப்பட்டு இறந்

தான். அம்மாது அழுது கொண்டிருந்தபோது அம்மாதின் அழுகையைக் கவனிக்கும்படி பாபா சொன்னார். "நான் என்ன ஆவேன். யார் எனக்கு அன்ன வஸ்திரம் கொடுப்பார்கள்" என்கிறுள் பார். அவள் கணவனின் முன்னிருந்த துன்பத்தையும் (இறந்ததால்) உண்டான சுகத்தையும் அவள் எண்ணுவதில்லை" என்றார்.

317. பாபா:—அந்த பையன் இறந்ததற்காக அந்த மூடன் ஏன் புலம்புகிறான். அது கேவலம் மண்ணுக்கு திரும்பினது. தேகம் மண்ணுக்குத் திரும்ப வேண்டும். அதற்காகப் புலப்புவானேன்? உன் ராமப் பழத்தை விஸ்தாரமாகப் பரவும்படி செய்.

318. பய்யாஜீ பட்டேல் என்பவரின் தந்தை இறந்துவிட்டார். அதனல் அதிக துக்கத்துடன் பாபாவிடம் வந்தார்.

பாபா:—நீ ஏன் துக்கப்பட வேண்டும்? ஐந்து மாதங்களில், அவர் திரும்பி வருவார்.

(அப்படியே 5 மாதங்களில் பய்யாஜீக்கு ஒரு மகன் பிறந்தான்.)

319. சாதுக்கள் இறப்பதாக ஜனங்கள் சொல்லுவதில்லை. அவர்கள் சமாதி யடைகிறார்கள் என்று தான் சொல்லவேண்டும்.

320. ஒரு சமயம் பேண்ட்ரே என்பவரை நோக்கி,

பாபா:—போய் பூட்டியைக் கேட்டு 10 ரூபாய் தக்ஷிணை வாங்கிக் கொண்டுவா என்றார்.

பெட்ரே பூட்டியிடம் போனபோது அப்போது இறந்துவிட்ட தன் குமாஸ்தாவை மனம் கலங்காமல் புதைத்துக்கொண்டிருந்தான்.

பிறகு பேண்ட்ரே பாபாவிடம் வந்தபோது,

பாபா:—ஒரு துக்ககரமான சம்பவம் நடந்து விட்டது· பயப்படாதே. தைர்யத்துடன் இரு. போ.

இவ்விதமாக பாபா, பேண்டரேயைத் தயார் செய்த மூன்றும் நாள் பேண்ட்ரேயின் குமாரன் இறந்து விட்டான். ஆனல் பாபா அவரை அதற்கு முன்னமே தயார் செய்தபடியால் துக்கத்தைப் பொருத்துக்கொண்டார்.

321. ஒரு சமயம் வெய்யிலின் உஷ்ணம் தாங்க முடியாமல் ஒரு ஆட்டுக்குட்டி சுழண்டு விழுந்து இறந்து விட்டது. அதை பாபா உயிர்ப்பித்தார். அதற்கடுத்தாப்போல், தன் குமாரனை ஒரு நாக சர்ப்பம் கடித்ததால் அவனைக் காப்பாற்ற விபூதி கொடுங்கள் என்று ஒரு மாது பாபாவைக் கேட்டாள். பாபா விபூதி கொடுக்கவில்லை. அந்த பையனும் இறந்துவிட்டான். மறுபடியும் அந்த மாது வந்து வெகு உருக்கமாய் ஓலமிட்டு அழுதாள்.

காகா தீக்ஷித் பாபாவை நோக்கி, "பாபா—இம் மாதின் புலம்பல் என்னுல் பொறுக்க முடியவில்லை. எனக்காகவாவது, இறந்த இவள் மகனை உயிர்ப்பியுங்கள்.

பாபா:—காகா இதில் நீ சிக்கிக்கொள்ளாதே பாவ்! (இவ்விதம்) நடந்தது நன்மைக்கே. அவன் ஒரு புதிய சரீரத்திற்குள் பிரவேசித்து விட்டான். அந்த தேகத்தில், அவன் விசேஷமான நன்மையை செய்வான். ஆனல் அதை இந்த பாம்பு கடித்த தேகத்தில் நிறை வேற்ற முடியாது. இந்த தேகத்தில் அவனை நான் இழுத்து விட்டால், புதிதாய் அவன் எடுத்துக்கொண்ட தேகம் இறந்துவிடும். இந்த தேகம் ஜீவிக்கும். உனக்காக இதை நான் செய்ய முடியும். ஆனல் அதனல் விளையும் பயனை ஆலோசித்தாயா? அந்த பொறுப்பு எம்மாத்திரம் என்பதை எண்ணினுயா? அந்த பொறுப்புக்கு நீ ஆளாக்கிக் கொள்ளுகிறுயா?

இதைக்கேட்ட தீக்ஷித், தன் கோரிக்கையை வற்புறுத்துவதில்லை யென்று விட்டுவிட்டார்.

322. 1913 வருஷத்தில் S. B. மோஹிலே என்பவர் தமது பெண்ணை பாபாவிடம் அழைத்துக்கொண்டு வந்தார். அவளுடைய மேல் உதடு பிளவுபட்டிருந்தது. வைத்தியர்களால் குணமாக்க முடியவில்லை.

பாபா:—நீ எதற்காக வந்திருக்கிருய் என்பதை நான் அறிவேன். அவளை நான் சொஸ்தமாக்கமுடியும். ஆனல் அது உபயோகமில்லை. அந்தப் பெண் தெய்வீகத்தன்மை யுடையவள். ஆகையால் அவள் ஆயுட்காலம் சுவல்பமாகவே இருக்கிறது. அடுத்தமாச சுத்த சதுர்த்தியில் அதாவது 1914 மார்ச் மாசத்தில், அவள் இறந்து விடுவாள். அன்றைய தினம், நீ வீட்டில் இல்லாமல், கச்சேரிக்குப் போனல், நீ திரும்பும்போது அவளை உயிருடன் காணமாட்டாய்.

அந்தப் பெண், பாபா சொன்னபடி அதே தேதியில், அவள் தகப்பன் கச்சேரியில் இருக்கும்போது இறந்தாள்.

323. ஒரு சமயம் அப்பா குல்கர்ணி என்பவரை நோக்கி பாபா சொன்னதாவது :—பக்கா திருடர்கள் கிராமத்துக்கு வந்திருக்கிறுர்கள். அவர்களுக்கு முதல் வேட்டை நீயே. முக்யமான வஸ்துக்களின் பேரிலே அவர் கண். இவைகளை எடுத்துக் கொண்டதும், ஓடிவிடுவார்கள்.

தான் பத்திரமாய் வைத்திருந்த பணத்தைப் பற்றி பாபா சொல்கிறுர் என்று நினைத்தான் குல்கர்ணி. ஆனல் பாபாவின் கருத்து வேறு. அதை அவன் அறியவில்லை. அந்த கிராமத்தில் காலரா வியாதி கண்டு, அப்பா குல்கர்ணியே முதல் முதலாக இறந்தான்.

324. நிகோஜ கிராமம் (படேல்) முன்சீபின் மனைவிக்கு பிளேக் வியாதி கண்டு, அபாய நிலையில் இருந்தாள். அன்றிரவு மஹலஸாபதியுடன் பாபா சாவடியில் இருந்தார்.

பாபா :—(மஹலஸாபதியை நோக்கி) பக்த. இன்றிரவு நீ தூங்கக்கூடாது. நின்று காவல் புரிய வேண்டும். இன்று கடவுளைக் குறித்து பிரார்த்தனை செய்வேன். ஏனெனில் அந்த பெண் பிள்ளையை பிளேக் கொல்லவிருக்கிறது. ஆகையால் நான் அல்லாவைப் பிரார்த்தனை செய்கிறேன்.

பாபாவின் பிரார்த்தனைக்கு எவ்வித தடங்கலும், விக்கினங்களும் நேரிடாமல் இருக்க, மஹலஸாபதி காவல் புரிந்து கொண்டிருந்தான். ஆனால் நடுநிசியில், நிவாஸ் மாம் வலத்தார். பாபாவை தரிசிக்க வந்தான் என்று அவர் ஜவான் சந்தடி செய்து, கூச்சலிட்டான். மஹலஸாபதியுடன் அவர்கள் பேசியதும் விபூதி எடுத்துக் கொண்டதும், பாபாவை அலட்டியது. பாபா கோபம் கொண்டார். மஹலஸபதியின் துணியை விட்டெறிந்தார்.

மஹலஸாபதியை நோக்கி, "நீ ஒரு குடும்பத் தலைவனு? அந்த கிராமத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறியவில்லை. இந்த சந்தர்பத்தில், ஜனங்களை ஏன் விட்டாய்.? (சற்று பொருத்து) அப்படியே யாகட்டும். நடந்தது நன்மைக்கே.

அன்றிரவு பட்டேல் மணைவி இறந்தாள்.

325. தாமோதர். B. ராம்பூர்கர் என்பவருக்கு இரண்டு குழந்தைகள் இறந்து, மற்றொரு குழந்தை வியாதியாய் இருந்தது.

பாபா :—ஏன் பயப்படுகிறாய்? போனவர்கள் போனவர்கள் தான். உயிருடன் இருப்பவர்கள் வரையில்

திருப்தியுடன் இரு. பயப்படாதே நான் உன் அருகில் இல்லையா! இன்னும் என்ன ?

326. தீக்ஷித் என்பவருடைய பெண் இறந்து விட்டாள். பாபா அவரை நோக்கி, "இந்த அத்யாத்ம ராமாயணத்தில், ராமர் மண்டோதிரியைத் தேற்று வதைப் படி.

மரணத்தைத் தடுத்தல்

327. 1917 வருஷம் ஜூன் மாதத்தில் ஒரு பம்பாய் ஸ்திரீயும், அவள் குமாரனும் மத்தியான ஆரத்தி சமயத்தில் பாபாவின் எதிரில் உட்கார்ந்திருந்தார்கள்.

பாபா :—நீங்கள் இவ்விடத்திற்கு பகல் சரியாய் 2 மணிக்கு வரவேண்டும்.

பையன் :—அப்படியே.

அவ்விதமே, அந்த பையன் அவ்விடத்திற்கு பகல் 2 மணிக்கு துவாரகாமயிக்கு வந்து சேர்ந்தான்.

பாபா :—பையா! இங்கேவா. இந்த பாயின் மேல் என் பாதத்தின் அடியில் உட்கார்ரு. என் காலைப் பிடி நான் சொல்லும் வரையில் என் காலை விடாதே.

அவ்விதமே அந்தப் பையன் பாபாவின் காலை பிடித்துக்கொண்டே யிருந்தான். 3 மணிக்கு, ஒரு கோர ஸ்திரி உருவம், விரிந்த கூந்தல், கோரமான முகம், நாய் போல் நீண்டு தொங்கிய நாக்கு இவைகளுடனும், நாய் போல் நாக்கை அசைத்துக்கொண்டு திடீர் என்று தோன்றி மதில் சுவரைத் தாண்டி, பையனை நெருங்கிற்று. பாபாவை நோக்கி "இந்த பையன் எனக்கு வேண்டும்" என்றது. பாபா பிரதியுத்தரமாக "அவனை நான் கொடேன்" என்றார்.

அவள் :—இந்த பையன்தான் எனக்கு வேண்டும்.

இவ்வாறு சொன்னதும் அவள் தாண்டி குதித்துப் பையனை நெருங்கி, பிடிக்க முயன்றாள். கடுங் கோபத்துடன் பாபா எழுந்து, பையனை தமது ஒரு கையில் பிடித்துக்கொண்டு, அவளை மாரில் உதைத்தார். அவள் கர்ஜித்துக்கொண்டு ஒடிவிட்டாள்.

பாபா :—பையனை நோக்கி, "பையா! நீ கவனித்தாயா? வந்த ஸ்திரீயைப் பார்த்தாயா? ஓ! அந்த ஸ்திரி உன்னைப் பிடிக்க விரும்பி என் அனுமதி கேட்டாள். ஆனால் நான் எப்படி கொடுப்பேன். நான் மறுத்து விட்டேன்.

பையன் :—இது நடந்து கொண்டிருக்கும் போது, ஒரு சித்திரம்போல் மயங்கி உட்கார்ந்து கிடந்தேன். எல்லாவற்றையும் கண்டேன் ஆனால் என் தேகம் ஸ்மரணையில்லாமல் கல்போல் இருந்தது.

அந்த ஸ்திரி காலரா தேவதையென்றும், பாபா வெளிப்படையாக சொன்னார். அடுத்த நாள் காலையிலேயே, பையனையும் அவன் தாயையும், பம்பாய் திரும்பிப் போக உத்திரவு கொடுத்தார். அது முதல் அந்த சீரடியில் காலரா உபத்ரவம் ஏற்பட்டது.

பாபாவின் முடிவுறு

1886-ல் உலகத்தை விட்டோழிக்க பாபாவின் பிரயத்தினம்

328. 1886-ல் பாபா மஹாலஸாபதியை நோக்கி, "நான் அல்லாவிடம் போகிறேன். மூன்று தினம் இந்த தேகததைப் பாதுகாத்திரு. நான் திரும்பினால், அதற்குப் பிறகு, நானே அதை கவனித்துக் கொள்கிறேன். நான்

திரும்பாவிட்டால், (ஒரு திறந்த வெளியைக் காட்டி) அந்த வெளியில் இந்த தேகத்தை அடக்கம் செய்து, இடத்தை அடையாளம் கண்டு கொள்ள, இரண்டு கொடிகளைக் கட்டிவை'' என்றார்.

பிறகு பாபாவின் சுவாஸமும், நாடியும், ரத்தவோட்டமும் எல்லாம் நின்றுவிட்டன. தேகம் சவம் போல் ஆயிற்று. கிராம அதிகாரிகளும், போலீஸாரும், மரண பஞ்சாயத்து விசாரணை செய்து, தேகத்தைப் புதைக்க மஹால்ஸாபதிக்கு உத்திரவிட்டார்கள். ஆனால் அவன் அதை தடுத்ததால் 3 நாள் பாபா சவமாக மசூதியில் கிடந்தார். மூன்றும் நாள் பாபாவுக்கு பிரஞ்ஞை வந்தது. சுவாஸம் உண்டாயிற்று. வயிறு அசைய ஆரம்பித்தது. பிறகு பாபாவின் கண்கள் திறந்தன. அவருக்கு முன்போல் உயிர் திரும்பி வந்து விட்டது.

329. 1916 விஜயதசமி தினம். பாபா கடுங் கோபத்தில் இருந்தார். தம்முடைய வஸ்திரங்களைக் கிழித்து, தமது எதிரில் இருந்த நெருப்பில் விசிறி எரிந்து, நிர்வாணமாய் நின்றார். கண்களில் தீப்பொறி பறக்க, "உபயோகமற்றவர்களே! நீங்கள் இப்போது நான் முஸ்லீமா அல்லது ஹிந்துவா என்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

இதற்கு 2 மணி கடந்தபிறகு, பாகோஜி ஷிந்தே என்றும் குஷ்டரோகத்தால் வருந்திய தோழன் ஒருவன் ஒரு கோவணம் (லங்கோடியைக்) கட்டி, "இது எல்லாம் என்ன? இன்று "ஸீமோல்லங்கன்'' பண்டிகை என்றான். பாபா தரையை தடியால் அடித்து, "இது என்னுடைய "ஸீமோல்லங்கன்'' (ஜீவ எல்லைக்குமேல் தாண்டுவது) என்றார்.

இதன் பொருளை ஜனங்கள் அப்போது அறிய வில்லை ஆனல் 1918-ஆம் வருஷம் விஜயதசமி (ஸீமோல் லங்கனம்) தினத்திலேயே தன் ஜீவித எல்லையை பாபா தாண்டினர்.

1916 வருஷம் விஜயதசமிக்கு முன் தினம் பாபா அபாயமான தேக அசௌக்யத்தில் இருந்தார். அவர் காலகதி அடைவார் என்று வதந்தி ஊரில் பரவியது. பக்தர்கள் சீரடியில் ஒரு பாகவத "சப்தாஹம்" நடத்தி, அவர் ஆரோக்கியமடைய பெரிய சமாராதனை செய்தார் கள். அதற்குப் பிறகு, அவர் ஆரோக்கியமானர். ஆனல் நானு சாஹேப் நிமோன்கர் என்னும் ஓர் பூர்ண பக்தன் நிமோன் என்னும் ஊரிலிருந்து பூனவுக்குப் போகும் வழியில் சீரடிக்கு வந்தபோது பாபா, நானுவை நோக்கி,

பாபா :—நானு, நீ இங்கே இரு. என்னை அடக்கம் செய்து, பிறகு போ.

பாபா, நானுவை நிமோனுக்குத் திரும்பி போக வும் அல்லது பூனு போய் சேரவும் விடவில்லை.

நிமோன்களுக்கு சாமா சிபார்சு செய்து அவர் போக உத்திரவு கொடுக்க கேட்டார்.

பாபா :—சாமா! என் ஜனங்களை கொல்லுவது உனக்கு இஷ்டமா? நானு உங்கப்பன் சொத்தைத் தின்றுகொண்டு இருக்கிருனு?

சாமா :—ஆனல் அவளுடைய மறுமகள் பூனுவில் கர்ப்பவதியா யிருப்பதால் மாமியார் மாமனர் சகாயம் கோருகிருள்.

பாபா நிமோன்கரை நோக்கி, ஏ, கா கா நீ ஏன் கவலைப்படுகிருய்? கடவுள் உதவி செய்வார். என்னை அடக்கம் செய்து, பிறகு போகலாம்.

நானுவின் மறுமகளுக்கு சகாயம் ஒருவரும் இல்லை. திடீரென்று இரவு 10 மணிக்கு பூனுவில் பிரசவ வேதனை துடங்கி விட்டது. அவள் கணவன் பூன முனிஸிபல் ஆஸ்பத்திரிக்கு ஒரு (டாங்கா) குதிரை வண்டியில் அவளை அழைத்துக் கொண்டுபோய் ஒரு படுக்கையில் விட்டார். இரவு மணி 11 இருக்கும். தாதி வேறு ஒரு அரைக்குப் போனுள். தாதி இல்லாத வேளையில், ஒரு வித சகாயமும் இல்லாமலே ஒரு ஆண் குழந்தையைப் பெற்ருள். அதே சமயத்தில், சீரடியில் பாபா, நானு கிமோன்கரைப் பார்த்து, "ஒரு ஸ்திரி இருந்தாள். அவள் ஒரு இடத்துக்கு கொண்டு போகப்பட்டாள். அவ் விடத்தில் அவள் க்ஷேமமாக ஒரு ஆண் குழந்தையைப் பெற்ருள்" என்ருர்.

பாபாவின் காலகதி 1918

330. பாபா காலகதியாவதற்கு சில மாதங்களுக்கு முன்னுலேயே, உத்தவேச பூவாவை, நீ 15 தினங்களுக் கொருமுறை வந்ததுபோல் இனி வரவேண்டியதில்லை யென்று சொன்னதோடு, கடைசியாகவே விடைபெற்றுக் கொண்டு போகும்படி உத்திரவிட்டார்.

தசரா காலம். அப்போதே அசௌகரியம் ஏற்பட் டது. ஆனுலும், சிலர் தமது உடலை தாங்கிச் செல்ல, தாமே, பழக்கமான வீடுகளில் பிக்ஷை எடுத்து வந்தார். கடைசியாக இரண்டு மூன்று தினங்கள் மாத்திரம் அவ ரால் பிக்ஷைக்குப் போக முடியவில்லை.

1918 வருஷம் அக்டோபர் மாதம் 15 தேதி. தசரா தினம், ஆரத்தி முடிந்தவுடன்,

பா:—(தீக்ஷித், பூட்டி முதலியோரைப் பார்த்து) போய் நீங்கள் சாப்பிடுங்கள்.

சாப்பிட அனைவரும் போகிறார்கள். அவர்கள் போன பிறகு, பாபா தமது மெத்தையில் உட்கார்ந்து, பய்யாஜி துடையின் மேல் சாய்ந்துகொண்டு, "நான் போய் கொண்டிருக்கிறேன். என்னை "வாடா"வுக்கு எடுத்துக் கொண்டு போ. பிராம்மணர்கள் எல்லாரும் என்னருகில் வசிப்பார்கள்" என்றார். பிறகு அவர் உயிர் நீங்கியது. நானுநிமோன்கர் வாயில் ஜலம் வார்த்தார். ஆனால் நீர் உள் செல்லாமல் வழிந்து விட்டது. அப்போது பகல் 3 மணியிருக்கும். விஜயதசமி நாள் ஆனாலும், அப்போது ஏகாதசி திதி வந்து விட்டது.

தமது அந்திய காலத்தை எதிர் நோக்கி, தசமி தினத்தன்றே தானங்கள் செய்தார். அவர் உட்கார்ந்து, தம்முடைய ஜேபியிலிருந்து முதலில் 5 ரூபாயும், பிறகு 4 ரூபாயும் எடுத்து லக்ஷ்மிபாய் சிந்தேவுக்கு கொடுத்தார். அவள் தினந்தோறும் அவருக்கு ஆகாரம் தயார் செய்து கொடுத்துக்கொண்டு, தினம் ஒன்றுக்கு 4 ரூபாய் பெற்றுக்கொண்டிருந்தாள்.

அவர் காயலாவாய் இருந்த 14 தினங்களும் அவர் கட்டளையிட்டபடி "ராம விஜயம்" பாராயணம் செய்யப்பட்டது. "அதனால் மிருத்தியஞ்சயன் திருப்தியடைவான்" என்று சொன்னார்.

தசரா தினம் இரவில், லக்ஷ்மண மாமா என்பவரின் சொப்பனத்தில் பாபா தோன்றி:—சீக்கிரமாய் எழுந்திருந்து, காலை ஆரத்தியைச் செய். நான் இறந்துவிட்டதாக ஜோக் நினைக்கிறான். அவன் ஆரத்தி செய்ய வர மாட்டான். என்றார்.

அன்று காலை ஆரத்தியை லக்ஷ்மண மாமா செய்தார். மௌல்விகள் ஆக்ஷேபித்தார்கள். 16-ந் தேதி

மத்தியான ஆரத்தியை ஜோக் செய்தார். பின்னிட்டும் தொடர்ச்சியாய் ஆரத்திகளைச் செய்தார்.

பாபாவின் சமாதி—ஆலயம்

331. ஒரு நாள் இரவு, சாமாவும், பாபு சாஹேப் பூட்டியும், பாபா தமக்கு ஒரு "வாடா"வும் (அதாவது மாளிகையும்) ஆலயமும் தேவையென்று சொன்னதாக சொப்பனங் கண்டார்கள். சாமாவுடன் தீக்ஷித் பாபா விடம் சென்று உண்மையறிய எண்ணினர்.

சாமா :—தேவா, என்ன புத்திக்கெட்டாத அற்புதத்தை செய்கிறீர்?

பாபா :—(தமது காதுகளை மூடிக்கொண்டு) நான் இருக்குமிடத்திலேயே இருக்கிறேன். இதற்கப்பால்போய் நான் ஒன்றும் எவருக்கும் சொல்வதில்லை.

பிறகு கட்டடம் கட்ட பாபாவின் அனுமதி கேட்டார்கள். அவரும் அனுமதி யளித்தார் கல் கட்டடமாக பெரிய மாளிகை கட்டப்பட்டது.

கட்டடத்தில் மத்தியகூடத்தையே கர்ப்பக்ருஹமாக வைத்து, மூரளிதரர் சிலை ஸ்தாபனம் அதில் செய்யக் கோரினர்கள். அதற்கு பாபாவின் அனுமதியைக் கேட்ட போது,

பா :—கோயில் கட்டி முடிந்த பிறகு, நாம் அங்கே வசிப்போம்.

பாபா காயலாவாய், அவர் அந்திய காலம் நெருங்கியபோது, பய்யாஜிக்கும் மற்றவருக்கும் அவர் சொன்னதாவது :—"நான் போய் கொண்டிருக்கிறேன். என்னை பூட்டியின் மாளிகை "வாடா"வில் வையுங்கள். பிராமணர்கள் என்னருகில் வசிப்பார்கள். பூட்டி பாபா கால

மான பிறகு, அவ்விடத்தில் வசிக்க பிரியப்படவில்லை. முரளிதரர் சிலையைக் கொண்டு வரவும் இஷ்டப்படவில்லை. தமது வாடாவில் பாபாவின் உடலை வைத்து சமாதி கட்ட சம்மதித்தார். அப்பொழுது எவ்விடத்தில் பாபாவின் உடலை அடக்கம் செய்வதென்று மகம்மதியருக்கும் ஹிந்துக்களுக்கும் வாதம் நடந்தது. மஹஜர் மூலமாக ஜனங்களுடைய அபிப்பிராயத்தை கேட்கும்படி மாம்லத்தார் உத்திரவிட்டார். பூட்டியின் "வாடா"விலேயே, பாபாவின் உடலை வைக்க வேண்டியதென்று திரளான ஹிந்துக்கள் சம்மதம் அறிவித்தார்கள். பாபாவின் சமாதி அங்கேதான் இருக்கிறது.

சத்கதி

332. ஒரு குருடன், பார்வை திரும்பபெற பாபாவிடம் போனன். பாபா அவனுக்கு பதிலாவது அனுக்ரஹமாவது ஒன்றும் அளிக்கவில்லை. ஆகையால் மசூதியை அவன் விட்டுப் போய் ஸாயிபாபா பக்தரான உபாஸனி மஹராஜரிடம் சென்றான். ஒரு சுவல்ப காலமே உயிருடன் இருக்கும் உனக்கு கண் பார்வை திரும்ப அடைவது, யுக்தமில்லையென்றும், அது வீண் ஆசைகளையே தூண்டுமென்றும், ஆகையால் பாபாவிடம் ஞானக்கண் அடைய பிரார்த்திக்க வேண்டுமென்றும் சொன்னார். அந்த மனிதன் திரும்ப பாபாவிடம் வந்து, பாபாவை நோக்கி, "என் ஊனக்கண்ணை நான் கோரவில்லை. என்னை உம்முடைய ஆதரவில் வைத்துக்கொண்டு, ஞானக்கண் அருளும்" என்று கேட்டான்.

பா :—சரி தங்கியிரு.

அம்மனிதன் ஒரு மாதம் தங்கியிருந்து ஆத்ம அபிவிருத்தியடைந்து அந்த மாத முடிவில் இறந்தான்.

பா :—இந்த மனிதன் இறக்கவில்லை. அவனுடைய அர்த்தாங்கியே (=அஞ்ஞானம்) இறந்தது. அவன் சத்கதி யடைந்தான்.

333. 1909 வருஷத்தில், லக்ஷ்மண் K. நூல்கர் பண்டரிபுரத்தில் சப் ஜட்ஜாகவிருந்தார். அப்போது N. G. சந்தோர்கர் அங்கே டிப்டி கலக்டர். சந்தோர்கர் நூல்கரை ஸீரடிக்குப் போகத் தூண்டினார்.

நூல்கர் :—ஒரு பிராம்மண சமையல்காரனும் (பாபாவுக்கு) சமர்பிக்க நல்ல நாகப்பூர் ஆரஞ்சிப் பழங்களும் நான் பெரும் வரையில், நான் போகமுடியாது. இவைகளில் ஒன்றும் எனக்கு கிடைக்கவில்லை.

சந்தோர்கர் :—பாபாவின் அருளால் கிடைக்கும்.

அதே இரவு ஒரு பிராமண சமையல்காரன் வேலை வேண்டுமென்று சந்தோர்கரிடம் வந்தான். அவனை நூல்கரிடம் அனுப்ப, அவர் வேலையில் அமர்த்திக்கொண்டார். காலையில் ஒரு கூடை நிரம்ப நேர்த்தியான நாகப்பூர் ஆரஞ்சி பழங்கள் அவர் வீட்டிற்கு வந்து சேர்ந்தன. ஆனால் அதை அனுப்பியது யார் என்று அறிய முடியவில்லை. அதெப்படியிருந்தாலென்ன, தேவையானதை வேண்டியவருக்குக் கொடுக்கும் பாபாவின் அற்புத சக்தியை, உணர்ந்த நூல்கார், சந்தோர்கரோடு ஸீரடிக்குப் புறப்பட்டு, பாபாவிடம் சென்றார்.

பாபா அவர்களைக் கண்டதும், சக்தோர்கரை நோக்கி, "நானா! உன்னுடன் அழைத்துக்கொண்டு வந்திருக்கும், இந்த பெயர்போன கேளன் யார்?" என்றார்:

மறுதினம் நூல்கர் மசூதிக்குப்போனபோது, பாபா அதிக கோபாவேசத்திலிருந்துகொண்டு, நூல்கரின் தலையைப் பிடித்து, ஒரு கம்பத்தின்மேலிடித்து "துஜேஸத்

யாநாச் ஹோயில்" "உன் இருப்பு அல்லது உண்மை போய்விடும். அல்லது உன் அநித்தியம் நீங்கிவிடும்" என்றார்.

நூல்கர் மிகப் பயந்தார் ஆனல் சந்தோர்கர், இதுவும் ஒரு நன்மையைக் குறித்தேயென்று சமாதானப் படுத்தினர்.

அன்று இரவு, நூல்கர் திடீரென்று எழுந்து, நானவை தாம்பூலம் வேண்டும் என்று கேட்டார். நள்ளிரவில் சீரடியில் தாம்பூலமகப்படாது. நானவும் சாதாரணமாய் வெத்திலே போடுவதில்லை. அந்த சமயத்தில், பாபா மசூதியில், வெகு தூரத்தில் இருந்தார் ஆகிலும், பாபா, பக்கத்தில் இருந்த ஒருவரை நோக்கி, "இந்த 4 "பீடா" (அதாவது வெத்திலேபாக்கு சுருள்) எடுத்துக் கொண்டுபோய் சந்தோர்கருடன் இருக்கும் ஒரு கிழவனுக்குக்கொடு. அவனுக்கு வெத்திலே பாக்கு தேவையாயிருக்கிறது" என்றார்.

அந்த மனிதன் திடீரென்று சந்தோர்கர் விடுதிக்கு வந்து பாபா சொன்ன வார்த்தைகளைச்சொல்லி பீடாவைக்கொடுத்துப் போய்விட்டான். இதனல் நூல்கருக்கு பாபா தன் அந்தர்சாக்ஷியே என்பது அதிக திடமாயிற்று. அதுமுதல் நூல்கரின் விசுவாசம் பலப்பட்டது. சீரடியிலேயே தங்கியிருந்தார். நூல்கரின் அந்தியம் விறைவாகவே வந்தது. அவர் காதில் விழும்படி புண்ணிய கிரந்தங்கள் வாசிக்கப்பட்டன. மரண சமயத்தில் பாபாவின் பாததீர்த்தம் அளிக்கப்பட்டது. பாபாவின் ஸ்மரணையுடனே நூல்கர் உயிர்விட்டார்.

நூல்காரின் மரணத்தைப்பற்றி பாபா:—"தாத்யா (நூல்கர்) நமக்கு முன்னல் சென்றான். என் உத்திரவின்படியே இவ்விடம் தங்கினன். அவன் கோரிய

புருஷார்த்தத்தை அடைந்துவிட்டான். மறுபடியும் அவனுக்குப் பிறப்பு இல்லை''.

334. விஜயாநந்த ஸ்வாமி என்பவர் மதராஸை விட்டு, மானஸரோவருக்கு யாத்திரை போகலாம், என்று புறப்பட்டு வந்தார்.

அவர் போகும்வழியில் பாபாவைக் காணலாம் என்று வந்தார். அப்போது, சோம தேவாஜி என்னும் ஹரித்வார் சுவாமி ஒருவர், யாத்திரையில், விசேஷ பனி, ஒவ்வொரு 100 மைல்களுக்கும் வெவ்வேறு பாஷை, நடுவில் நடக்கவேண்டிய பூடான் தேசத்தாரின் பகை, முதலிய கஷ்டங்களைச்சொல்லி விஜயாநந்தருக்கு மனக்கலக்கம் உண்டாக்கிவிட்டார்.

பிறகு விஜயாநந்த ஸ்வாமி, பாபாவிடம் போனதும் பாபா:—'' இந்த உபயோகமற்ற சன்னியாசியை அனுப்பி விடும்'' என்றார்.

அதனல் விஜயாநந்தர் மசூதியை விட்டுப்போய் முன் மண்டபத்திலிருந்து பாபாவைக் கவனித்தார். பாபாவிடம் அவர்மனம் பதிந்தது. பாபாவும் அவரைக் கருணையுடன் வரவேற்றினர். பிறகு அந்த சன்னியாசி யின் தாயார் காயலாவாய் இருந்தாள் என்று கடிதம் வந்தது. தாயின் அந்தியகாலத்தில் அவளருகில் இருக்க சன்னியாசி விரும்பி, பாபாவிடம் உத்திரவு கேட்டார். ஆனல் சன்னியாசியின் சொந்த பிற்காலத்தை சன்னி யாசி யறியவில்லை பாபா, அதை நன்றாய் அறிந்து, அவரை நோக்கி, '' உன்னுடைய தாயாரின்மேல், உனக்கு இவ் வளவு பிரியமிருந்தால், ஒரு சன்னியாசியின் காஷாய கோலத்தை ஏன் அணிந்துகொண்டாய், காவியும், மமதையும் ஒன்றுக்கொன்று ஒற்றுமைபடாது. போய் உன் அறையில் உட்காரு, திடசித்தத்துடன் சில நாளைக்

குப் பொருத்திரு, அதன்மேல் உன் பிற்போக்கைப் பார்க்கலாம். உன் இருப்பிடத்தில் அநேக திருடர்கள் இருக்கிறார்கள். உன் கதவுகளைத் தளிட்டு, ஜாக்கிரதையாய் இரு. அனைத்தையும் அவர்கள் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். தனம், உற்றார், உறவினர் இவை எல்லாம் நிலையற்றவை. அவைகளை ஆதரிப்பவர்கட்கு எப்பொழுதும் பயமே. பரிபூர்ண தியாகமே ஆனந்தத்தை அடைவிக்கச் செய்யும். நாளை முதல், மனோ வாக்குகாயங்களை ஒன்றுபடுத்தி ஏகாக்ரமாய் நிருத்தி, ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ பாராயணம் செய். அது எல்லா வாசனைகளையும் தணிக்கும் எல்லா மாயையும் முடிவடையும்.

அவ்விதமே மறுதினம் முதல் விஜயானந்த ஸ்வாமி பாகவத ஸப்தாஹ பாராயணம் தீவிரமாய் செய்ய ஆரம்பித்தார். இரண்டு ஸப்தாஹம் 14 தினங்களில் முடிந்தது. அதனால் அதிக மெலிந்து பலஹீனமடைந்தார் ஆகிலும் ஸப்தாஹத்தை நிறுத்தவில்லை. தம் ஜாகையிலேயே இன்னும் இரண்டுநாள் படுத்திருந்து, மூன்றும்நாள் படே பாபா என்னும் பக்தர் மடியின்மேல் விஜ்யாநந்தர் பிராணனை விட்டார். பரீக்ஷித் மஹாராஜாவைப்போல் நற்கதி பெற்றார்.

335. பாபா:—S. B. துமால் என்பவரை நோக்கி, உன் மனைவியின் அடுத்த மாஸிய சிரார்த்தத்தை சீரடியில் செய். அவளுக்கு சத்கதி நான் கொடுப்பேன் (அவ்விதமே மாஸியம் செய்யப்பட்டது).

336. 1912-ம் வருஷம் ஜனவரிமாதக் கடைசியில் உபாசனி மகாராஜாவின் மனைவி காலகதியடைந்தாள். உபாசினி ஸாயி பாபாவிடம்வந்து, மனங்கலங்கியவராய்

"இதோ 10 ரூபாய். என் மனைவி சத்கதியடைய ஏதாவது ஒன்று செய்யுங்கள்" என்றார்.

பா:—அந்த பணத்தை வைத்துக்கொள். அவள் ஆவி என்னிடம் முன்னடியே வந்து சேர்ந்துவிட்டது. முடிந்துவிட்டதற்கு என்ன எடுத்துக்கொள்வது?

மிருகத்திற்கு ஸத்கதி

337. பாபா, ஜோகின் மனைவியை நோக்கி, உன்னிடம் ஒரு எருமை வரும். அதற்கு நிறைய பூர்ண போளியும் நெய்யும் போடு.

ஜோக் மனைவி:—அந்த எருமையை நான் எப்படி அடையாளம் கண்டுகொள்வது?

பா :—தானகவே அது உன் கதவிடம் வரும்.

ஜோக் மனைவி :—எத்தனையோ எருமைகள் என் கதவுபக்கமாய் போகின்றன.

பா :—தேவையான பூர்ண போளிகளை நீ செய்து முடிக்கும்போது எந்த எருமை உன் கதவிடம் வருமோ அதுதான் அது.

ஜோ. ம :—என் வீட்டுக்கு, வட பக்கமும் தென் பக்கமும் கதவு. எந்தக் கதவுபக்கம் அது வரும்?

பா :—அது தென்பக்கக் கதவண்டை வரும்.

அந்த தினம் பகலில் ஜோக் மனைவி, சுமார் 18 (ஒப்பட்டு என்னும்) பூர்ண போளிகளைச் செய்து முடித்து, நெய் தடவினள். அப்போது, ஒரு எருமை தென்பக்கம் கதவிடம் வந்து நின்றது. ஜோக் மனைவி எல்லா பூர்ண போளிகளை"யும் அதனிடம் வைத்துவிட்டாள். அது எல்லாவற்றையும் தின்று உடனே கீழேவிழுந்து இறந்தது எருமை இறந்ததால், அதன் பாவத்துக்குத்தான் ஆளானது ஒரு பக்கம் பாதிக்க, மற்றொரு பக்கம் எருமைக்

காரனோ, சர்க்காரோ தன்பேரில் குற்றம் சுமத்தி உபத்திரவப்படுத்துவார்களென்று, நடுநடுங்கினாள். பாபாவிடம் போய், நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னாள். பாபா அவள் பயத்தை ஆற்றி; "நெய்யுடன் போளியைத் தின்னும் வாசனை ஒன்று தவிர, மற்றெல்லா வாசனைகளும் அந்த எருமைக்குத் தீர்ந்திருந்தது. இந்த கடைசியான ஆசையும் இப்பொழுது தீர்ந்தது. ஆகையால் அதன் ஆத்மா, எருமை உடலை விட்டுவிட்டது. நற்கதியடைந்தது. நீ வீட்டிற்குப் போ. இதில் நீ கவலைப்படவேண்டிய காரணம் ஒன்றுமில்லை. இந்த உடலிலிருந்து அதை விடுவித்து விட்டாய்.

ஸித்தி சக்திகள்

338. பிராணாயாமத்தால், தூரதிருஷ்டி சித்தியையடைந்த ஒருவர், தன் தியான அறையில் இருந்தபோது, கண்ணுக்குத் தென்படாமல் வெகு தூரத்தில் தன் பருத்தி மில் நெருப்புபற்றி எரிந்து கொண்டிருந்தவுடனே அக்னி ஜ்வாலையை அறையில் கண்டார். இது ஒரு யோகசித்தி. பிறகு பாபாவிடம் சென்றார். சித்திகளின்மேல் ஆசைப்படுவதால், ஏற்படும் அபாயங்களை அவருக்கு எடுத்துச் சொல்ல விரும்பிய பாபா, "அந்த வேசியின் கூத்தைக் கண்டு ஏன் பிரமிக்கிறாய்? எனக்கு எப்போதும் அந்த வேசியின் ஜாலம் பிடிக்காது. வேசி சரசமாடுவது நமக்குத் தகாது."

339. விட்டல் ராவ். Y. தேஷ்பாண்டே என்பவரின் பாட்டனார். இரு கண் பார்வை யிழந்து குருடராய் விட்டார். அவரை அந்த பேரன் விட்டல் ராவு இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு பம்பாயிலிருந்து ரைலேற்றி சீரடி சேர்ந்து பாபாவிடம் அழைத்துச் சென்

ருன். அவர் பாபாவுக்கு நமஸ்காரம் செய்து "பாபா நான் பார்க்க முடியவில்லை" என்று சொன்னர். பாபா, பிரதி யுத்தரமாக "சரி, நீர் பார்ப்பாய்" என்ருர்.

பாபா :—"எனக்கு 4 ரூபாய் தக்ஷிணை கொடு"

விட்டல் ராவு ஒரு நோட்டை மாற்றிக்கொண்டு வர வெளியே போனர். அப்போது பாபா தமது கையை அந்த கிழவரின் தலையில் வைத்தார். கிழவருக்குப் பார்வை பூர்ணமாய் உடனே கிடைத்துவிட்டது.

சந்தோஷத்தினல் கண்களில் நீர் ததும்ப, கிழவர் பாபாவை நோக்கி, "பாபா, உம்முடைய கருணை அதிசயமானது. உம்முடைய சக்தி ஆச்சர்யமானது. ஒவ்வொன்றையும் நான் நன்ருய் பார்க்கிறேன்.

பாபா :—விபூதி எடுத்துக்கொண்டு போ."

பிறகு அந்த கிழவர், எவ்வித சகாயமில்லாமலும், தெளிவான பார்வையுடனும் சீரடிக்குப் போய், அங்கிருந்து, பம்பாய் போய் சேர்ந்தார்.

இவ்விதமே, பஸ்ஸீனிலிருந்து ஒரு ஸ்திரி பாபாவிடம் வந்தாள். அவள் குருடு. மசூதியில் பாபாவை நோக்கி, "பாபா, இந்த கண்களால் உம்மைப் பார்க்க வேண்டும் என்பது என் விருப்பம்" என்ருள். உடனே அவள் பாபாவை காண முடிந்தது. ஆனல் அவள் வெளியே போனவுடன் குருடு திரும்பிவிட்டது.

340. 1914 வருஷம் வைசாகமாசத்தில், பீமா என்பவர், பாபாவின் தெய்வீகத்தன்மையைக் காண பம்பாயிலிருந்து போனர். பகலில் ஆரத்தி முடிந்தது. அப்போது பாபா எல்லோரையும் பார்த்து, "நீங்கள் எல்லோரும் போங்கள். உங்கள் விடுதிகளிலேயே தங்க வேண்டும் வெளியில் திரிந்து அலையக்கூடாது. மறுபடியும் சொல்லி யனுப்பும்போது வரவேண்டும்" என்ருர்.

பாபா இது சொன்னபோது ஆகாயம் சுத்தமாய் இருந்தது. ஆனால், வெகு சீக்கிரத்தில் உக்கிரமான, கடுங்காற்று அடித்து, கட்டடங்கள் பேரில் இருந்த இரும்பு தகடுகளைப் பெயர்த்து வீடுகளையே கீழேவிழச் செய்வது போன்ற பலத்த புயல் அடித்தது. ஆனால் 15 நிமிஷத்தில் அது நின்றுவிட்டது. பிறகு சிறிது மழை பெய்து, மந்தாரமான ஆகாயம் கொஞ்சநேரம் இருந்தது. அதற்குப் பிறகு உக்கிரமமான வெய்யில் காய்ந்தது. அப்பொழுது எல்லோரையும் பாபா வரச் செய்து, "நீங்கள் பயப்பட்டீர்களா?" என்று கேட்டார்.

பீமர் களிப்புற்று பாபாவின் கால்களில் விழுந்து பணிந்தான்.

பாபா :—பயப்படாதே. இது கடவுளின் லீலை. இவ்வித அநேக விளையாட்டுகளை நீ பார்ப்பாய்.

341. மற்றொரு சமயம் புயல்காற்று அடித்த தினம், உரக்க இடி முழக்கம் போன்ற குரலுடன் பாபா புயலை நோக்கி, "நிறுத்து. முற்றிலும் நிறுத்து" என்று கர்ஜித்தார். சில நிமிஷங்களில், புயல்காற்று நின்று அமைதியாயிற்று. ஆகாயம் சுத்தமாய் விட்டது.

342. ஒரு சமயம் கொண்டாஜி என்பவனுடைய வைக்கோல் போர் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதனால் களத்தில் பக்கத்திலிருந்த போர்களுக்கு தீ பிடித்து விடும்போ லிருந்தது. ஏனெனில் காத்து வீசிக் கொண்டிருந்தது. ஜனங்கள் பயந்து பாபாவை வேண்டினார்கள். பாபா, அல்பமான தண்ணீர் தாரையை எரியும் போரைச் சுற்றிவிட்டுக் கொண்டு வந்தார். "இந்த போர் மாத்திரம் எரியவேண்டும். மற்றவை எரியக் கூடாது" என்றார். அப்படியே அந்த வைக்கோல் போர்

மட்டும் எரிந்து விட்டது. காற்று அடித்துக் கொண்டிருந்த போதிலும் அருகில் இருந்த மற்ற போர்களுக்கு நெருப்புப் பிடிக்கவில்லை.

343. பாபா மசூதியிலுள்ள துனி என்னும் அக்னி குண்டத்தில் ஒரு சமயம் விறகு அதிகமாய் போடவே கூரை வரையில் சுவாலை எரிந்து கொண்டிருந்தது. நெருப்பை நோக்கி, "இறங்கு இறங்கு, தணிந்து போ தணிந்து போ" என்று ஒரு கொம்பால் கம்பத்தை பாபா தட்டினார்.

உடனே நெருப்பு தணிந்து தணிந்து மிகவும் சிறிதாய் விட்டது.

344. வெய்யில் காலம், ஒரு பகலில், வெய்யிலின் தாபம் பொருக்க முடியாமல், ஜனங்கள் மசூதியை விட்டு வெளியே போய் விட்டார்கள். ஐந்து பேர் மட்டும் மசூதியிலேயே தங்கி யிருந்தனர். அந்த ஐவரையும் பாபா நோக்கி "நீங்கள் போய், அந்த அக்கினியின் பக்கத்தில் உட்காருங்கள்" என்றார்.

அப்படியே அவர்கள் போய் உட்கார்ந்தார்கள். சில நிமிஷங்களில், அந்த அக்னியைச் சுற்றி குளிர்காற்று வீசிற்று.

345. பாபா :—என்னுடன் விளையாடும் கூட்டாளி ஒரு பெண் இருந்தாள். அவள் சித்திரம் எழுதுபவள். அவள் இறந்ததும் அவள் தேகத்தைப் புதைத்தார்கள். அவள் கல்லரை வழியாக போய் கொண்டிருக்கும்போது, நான் நின்று அதனருகில் ஓர் இரவு தங்கினேன், பிறகு அவளை அதாவது அந்த ப்ரேத ஜீவனை என்னுடனே கூட்டி வந்தேன். முதலில் ஒரு அரச மரத்தில் அவளை வைத்து, பிறகு சீரடிக்கு அழைத்து வந்தேன்.

346. சிதம்பர ராவ் கேசவ காட்கீல் மாம்லத்தாரை ஓர் ஊருக்கு மாற்றினபோது சீரடிக்குப் போகாமலே அவ்வூர் போக ரைல் ஏறி பாபாவை பார்க்கவில்லையே என்று விசனப்பட்டார். அப்பொழுது ரைலுக்குள் ஒரு உதி பொட்டளம் வந்து அவர் மடியில் விழுந்தது. நெடுநாளான பிறகு பாபாவிடம் சென்றார். அப்பொழுது பாபா, சிதம்பர ராவ் கேசவ ராவ் காட்கீலே நோக்கி, "நீ வர முடியவில்லே. ஆகையால் உனக்கு உதி (விபூதி) அனுப்பினேன் உனக்கு அது கிடைத்ததா?" என்றார்.

347. குசா பாவ் என்பவரை நோக்கி, "குசா பாவ்! என்னை நினை. உடனே உன்னருகில் இருக்கிறேன். (குசாபாவ் எப்போது பாபாவை நினைக்கிறாரோ, அப்போதெல்லாம் குசாபாவின் குவிந்த கையிலிருந்து பாபாவின் விபூதி விழுகிறது.)

348. ஒரு சமயம் தாஸ்கணு மஹராஜ் கோதாவரி ஸ்நானம் விரும்பி பாபாவைப் பார்த்து "பாபா இன்று மஹா சிவராத்திரி. (கோதாவரிக் கரையிலிருக்கும்) சிங்க பாபாவுக்குப் போய் கங்கா ஸ்நானம் செய்துவர விரும்புகிறேன்" என்றார்.

பாபா :—நீ ஏன் அவ்விடத்திற்கு போகவேண்டும்? இங்கே கங்கை இல்லையா?

உடனே தாஸ்கணு முகம் வாடினர்.

பாபா :—என் காலடியிலேயே கங்கை இருக்கிறது. போகவேண்டாம்.

தாஸ்கணு, பாபாவை விஷ்ணுவென்று எழுதி யிருந்தும்கூட அதிகப் பழக்கத்தால் அவர் விசுவாசம் குறைவா யிருந்தது. ஆகையால் தான் மனம் வாடி இருந்தார்.

பாபா :—இங்கே வா. என் பாதங்களின் அருகில் உன் கையைப் பிடி.

தாஸ்கணு அவ்விதமே செய்தார். என்ன விசித்திரம்! பாபாவின் பாதத்திலிருந்து ஓர் சிறிய நீர் தாரை, கணுவின் கையில் பொழிந்தது. அது தான் கங்கை என பத்தி பூர்வகமாய் தாஸ்கணு தமது தலையின்மேல் தெளித்துக் கொண்டார்:

349. சந்தோர்கர் ஜனங்களுக்கு பல வியாதிகளுக்கு பலவித மருந்துகளை ஒரு வருஷம் கொடுத்துக் கொண்டு வந்தார். பாபா அவரைப் பார்த்து, எல்லா வியாதிக்கும் ஒரே மருந்தைக் கொடு'' அதுமுதல் படிக்கார பஸ்பத்தை, தேள் கடிக்கும், பாம்பு கடிக்கும் இதர எல்லா நோய்களுக்கும் உபத்ரவங்களுக்கும், பாபா பெயர் சொல்லி உபயோகித்து குணப்படுத்தி வந்தார்.

350. ஒரு சமயம் சந்தோர்கர் ஹரிச்சந்திரக் குன்றின்மேல் ஏறி, தாகத்தால் தவித்தார். அவ்விடத்தில் எங்கேயும் நீர் கிடையாது. சந்தோர்கர் பாபாவை நினைத்துக் கொண்டு "இவ்விடத்தில் பாபா இருந்தால், எனக்கு நீர் அருந்தக் கொடுப்பர்'' என்றார். அந்த சமயத்தில், பாபா 40 மைலுக்கப்பால் சீரடியில் இருந்தார். சீரடி மசூதியில் அச்சமயம் பாபா அண்டையிலிருக்கும் பக்தரை நோக்கி, நானா தாகமாய் இருக்கிறன். வெய்யிலின் தாபம் அதிகம். நாம் அவனுக்கு ஒரு கை ஜலமாகிலும் கொடுக்கவேண்டாமா? என்றார்.

அவ்விடத்தில்'இருந்த பக்தர்களுக்கு பாபா ஏன் அவ்விதம் பேசுகிறார் என்று விளங்கவில்லை. ஆனால் மலையின் மேல் நானா ஒரு பில் ஜாதியானை அச்சமயம் கண்டார்.

சந்தோர்கர் :—பில்! நான் தாகமாய் இருக்கிறேன். குடிக்க எனக்கு நீர் கிடைக்காதா?

பில் :—நீர் உட்கார்ந்திருக்கும் பாறையின் கீழேயே ஜலம் இருக்கிறது.

இதைச் சொன்னவுடன் பில் போய் விட்டான். நீரோ கண்ணுக்குப் புலப்படவில்லை.

சந்தோர்கர் உட்கார்ந்திருந்த பாறையை அங்கிருந்தவர்கள் புரட்டினார்கள். அதனடியில், கையளவு மாத்திரமே நீர் இருந்தது. அதைச் சந்தோர்கர் குடித்தார்.

சில தினங்கள் பொருத்து, சந்தோர்கர் சீரடிக்கு வந்தார். அவரைக் கண்டவுடன் பாபா, "நானு! நீ தாகத்துடன் இருந்தாயே. நான் உனக்கு ஜலம் கொடுத்தேனே. நீ குடித்தாயா?" என்றார்.

351. காகா மஹாஜனி என்பவர், டாக்கூர் தர்ம்சே ஜேடாபாய் என்னும் ஓர் ஸேட்டிடம் வேலைசெய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் காகாவுடன் அந்த சேட் பாபாவைப் பார்க்க வந்தார். வேறொன்றும் கிடைக்காததால் கொட்டைத் திராக்ஷையைக் கொண்டு வந்து பாபாவுக்குச் சமர்ப்பித்தார். பாபாவின் அற்புதச் செயல்களைச் சேட் காண விரும்பினார். ஆனால் பாபாவுக்குத் தக்ஷிணை கொடுக்க அவருக்குப் பிரியமில்லை.

பாபா, சேட்டிடம் கொஞ்சம் அந்த திராக்ஷையைப் பிரசாதமாகக் கொடுத்து, "சாப்பிடு" என்றார்.

அதை வாயில் போட்டதும், சேட் கலவரமடைந்தார். தன் வாயில் மிகுதியாய் நிற்கும் கொட்டைகளை என்ன செய்வதென்று தயங்கினார். மசூதியில் துப்ப முடியாது. ஜேபியில் போட்டுக் கொண்டால் சொக்காய் எச்சிலாகுமே. முடிவில் கொட்டையை ஜேபில் போட்டு விட்டு சாயி ஒரு சாதுவானால், தன் வெருப்பை எப்படி அறியவில்லையென்று அதிசயித்தார். உடனே பாபா அவரை நோக்கி, "இதோ, இன்னும் கொஞ்சம்

திராக்ஷ. அவைகளை எடுத்துக் கொள்'' என்று சொல்லி அவர்கள் கொண்டுவந்த கொட்டை திராக்ஷயைக் கொடுத்தார். சேட், கையில் திராக்ஷயை வைத்துக் கொண்டு, என்ன செய்வதென்று யோசித்தார்.

பாபா :—சாப்பிடு.

சேட் திராக்ஷயை வாயில் போட்டுக் கொண்டார். விந்தை! அவைகள் கொட்டையில்லாதவைகளாய் இருந்தன. பாபாவின் சமத்காரத்தைக் காணவந்ததால் அந்த எண்ணத்தை பாபா அறிந்து, விதையுள்ள திராக்ஷயை விதை யில்லாதவைகளாக்கி விட்டார்.

பிறகு சேட்டை, காகாவின் யஜமானன் என்று சாமா பாபாவுக்கு அறிவித்தார். அதற்குப் பாபா, "அவர் எப்படி காகாவின் யஜமானன்? ஆனந்தத்தைக் கொடுக்க காகாவுக்கு வேறு யஜமானன் இருக்கிறார்.'' ஆரத்தியான பிறகு, காகாவைக் கூட்டிக் கொண்டு பம்பாய்க்குப் போக சேட் விரும்பினர். சாதாரணமாக காகாவை பாபா பல நாட்கள் நிறுத்தி விடுவார். இச் சமயம் சாமா உத்திரவு கேட்டதும் பாபா தம்முடைய விசேஷ மாதிரியில் பதில் சொன்னர்.

பாபா :—சல சித்தமுள்ள ஒரு சீமான் இருந்தான். அவன் பணக்காரன். ஆரோக்கியமுள்ளவன். அனுவசியமான சுமைகளைத் தன் தலைமேல் போட்டுக்கொண்டு அங்குமிங்கும் சுமந்து, மனவமைதி யில்லாமல் இருந்தான். சுமைகளை இறக்கியும் ஏற்றிக்கொண்டு மிருந்தான். அவன் மனநிலை ஸ்திரமாயில்லை. அவனிடம் நான் இரக்கங்கொண்டு, "நீ இஷ்டப்பட்டால், ஒரே இடத்தில் உன் ஸ்திரமான விசுவாசத்தை வை. உன் தற்போதைய அலைந்து திரிதலும் கலவரமும் வீணே'' என்று சொன்னேன்.

தர்ம்சே தமது குணத்தையும் செய்கைகளையும் பாபா நன்குணர்ந்து வெளியிட்டதைக் கண்டு கொண்டார். பிறகு பாபா காகாவிடம் 15 ரூபாய் தக்ஷிணை கேட்டார்.

பாபா :—யாரிடத்திலாவது ஒரு ரூபாய் தக்ஷிணையாக எடுத்துக் கொண்டால் பதின்மடங்கு நான் திரும்பக் கொடுக்கிறேன். இலவசமாக நான் ஒன்றும் பெற்றுக் கொள்வதில்லை. தக்ஷிணை எல்லோரையும் கேட்பதில்லை. பகீர் (ஈசுவரன்) யாரைச் சுட்டிக் காட்டுகிறாரோ, அவரிடத்திலே தான் நான் கேட்டுப் பெற்றுக்கொள்வது. அந்தப் பகீருக்கு யாராவது பாக்கிதாரர்களாகயிருந்தால் அவர்களிடமிருந்து பணம் அடையப்படுகிறது. கொடுப்பவன் கொடுக்கிறான். ஆனால், உண்மையாகவே, அப்படி செய்யும்போது விதைகளை விதைக்கிறான். பிற்பாடு நல்ல கொழுத்த அறுவடையான வெகுமதியை அடைகிறான். தர்ம காரியங்களைச் செய்ய தனம் ஓர் காரணமாக இருக்கிறது. சொந்தச் சுக வாழ்வுக்கே அதை உபயோகப்படுத்தினால், அது வீண் செலவு ஆகும். நீ முன்னமே தனத்தைக் கொடுத்திருந்தாலொழிய, இப்போது நீ அதை அடைவதில்லை. தனத்தைக் கொடுத்திருப்பதால் தக்ஷிணை கேட்கப்படுகிறது. தக்ஷிணை கொடுப்பது வைராக்யத்தை மேம்படச்செய்து, பக்தியையும் ஞானத்தையும் உண்டாக்குகிறது. நான் செய்வதென்ன? ஒன்று வாங்கி பத்தாகத் திருப்பிக் கொடுப்பது.

351-(a). சீரடியில் நியாயாதிபதி ஒருவர் பாபாவுக்கு எலுமிச்சம்பழ ஸிரப் செய்து கொடுக்க அதைத் தயார் செய்து, முதல் முதலில் ருசி—பார்த்தார். அது புளிப்பில்லை யென்று கண்டார். பிறகு அதை எடுத்துக்

கொண்டுபோய் பாபாவுக்குக் கொடுத்தார். பாபா அதை ருசி பார்த்து H. S. D என்பவரை நோக்கி, "காகா இது எவ்வளவு புளிப்பாய் இருக்கிறது பார்" என்று சொன்னார். H. S. D யும் நியாயாதிபதியும் அதை ருசி பார்த்தார்கள். அது புளிப்பாய்த்தான் இருந்தது. நியாயாதிபதி மிகவும் வியாகூலப்பட்டார்.

பாபா:—இல்லை. நான் கேலி பண்ணினேன். இப்போது இதை ருசி பாருங்கள்.

மறுபடியும் H. S. D யும் நியாயாதிபதியும் அதே வஸ்தைப் பண்டத்தை ருசி பார்த்தார்கள். இந்தச் சமயம் அது புளிப்பாக யில்லை.

352. மஹலஸாபதி ஜெஜூரிக்கு காவடி எடுத்துப் போனார். அங்கே காலரா மும்முரமாயிருந்தது. மஹலஸாபதியும், தோழர்களும் காவடியைக் கீழிறக்கி, மனோ வியாகூலமாய் அதன்மேல் மஹலஸாபதி சாய்ந்தவண்ணம் இருந்தார். தனக்குப் பின்னால் யாரோ இருப்பதாக எண்ணித் திரும்பிப் பார்த்ததும் பாபா காணப்பட்டு மறைந்தார். பாபா தன்னுடனேயே இருப்பதாக தோழர்களுக்குச் சொன்னார். அவர்கள் தைரியத்துடன், நான்கு தினங்கள் தங்கியிருந்தார்கள். ஒருவரும் காலராவால் அவஸ்தைப்படவில்லை. எல்லாரும் சவுக்யமாக ஊர் திரும்பி சேர்ந்தார்கள். அவர்கள் திரும்பி வந்த பிறகு பாபா, மஹலஸாபதியைக் கண்டு.

பாபா:—பகத்! உனக்கு நல்ல யாத்திரை-காவடிப் பல்லக்கின்மேல் சாய்ந்துக்கொண்டு இருந்திருந்தாய். அந்தச் சமயம் அவ்விடத்திற்கு நான் வந்தேன்.

353. காகா மஹாஜனியின் சிநேகிதன் ஒருவனுக்கு நிராகார பூஜையில் மாத்திரம் நம்பிக்கையுண்டு. உருவத்தோடு பூஜை செய்வதை ஆக்ஷேபித்து வந்தான். பாபா

வைத் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் காகாவுடன் போய் பாபாவைப் பார்க்க ஒப்புக்கொண்டான். சாயிக்குத் தலை வணங்கி நமஸ்கரிப்பதும், தக்ஷிணை கொடுப்பதும் தான் செய்ய வேண்டியதில்லை என்று உடன்படிக்கை செய்து கொண்டான். சீரடியில் மசூதி படிக்கட்டுகளில் ஏறும்போதே பாபா, "வரவேண்டும்" என்று சொன்னார்.

அந்தக் குரலானது சிநேகிதன் காதில் தன் தகப்பன் குரல்போல இருந்தது. சந்தோஷமடைந்து உடனே கீழேவிழுந்து, பாபாவின் பாதங்களில் தன் சிரஸை வைத்து நமஸ்கரித்தான்.

பிறகு காகாவை பாபா தக்ஷிணை இரண்டுதரம் கேட்டார். ஆனால் அந்த மனிதனைக் கேட்கவில்லை. அதன் மேல் தானும் தக்ஷிணை கொடுப்பதாக காகாவின் காதில் ரகஸியமாகச் சொன்னான்.

பா:—உன் சிநேகிதன் என்ன சொல்கிறான் ?

சிநேகிதனின் வார்த்தைகளை காகா சொன்னான்.

பா:—அதைக் கொடுக்க அவன் பிரியப்படவில்லை. ஆதலால் அவனைக் கேட்கவில்லை. இப்போது அதைக் கொடுக்கப் பிரியப்பட்டால், கொடுக்கலாம்.

பிறகு அந்த சிநேகிதன் 17 ரூபாய் கொடுத்தான்.

பாபா அவனை நோக்கி உன்னையும் என்னையும் பிரிப்பது தேலி (=வாணியன்) சுவர்தான். அதை இடித்துத் தள்ளு. பிறகு நம் முகங்களை ஒருவருக்கொருவர் ஸ்பஷ்டமாய் காணலாம்.

பா:—சாமா. எவ்வித பயமில்லாமலும் கவலையில்லாமலும் அவர்கள் போகட்டும். அவர்கள் திரும்பும் பிரயாணத்தில் மழையால் ஒரு உபத்திரவமும் உண்டாகாது. மேகங்களும் இடியுமாயிருந்தாலும் ரயிலுக்குப் போகும் வரையில் மழையில்லை.

354. பம்பாய் மாகாணம் டஹானுவிலிருந்த S. B. நாச்னே தமயனுக்குப் பம்பாயில் ஒரு அபாயகரமான ஆபரேஷன், அதாவது ரண சிகிச்சை நடந்தது. அதற்காக S. B. நாச்னேயும் குடும்பஸ்தர்களும் அதிக கவலையாய் இருந்தார்கள். அப்போது டஹானுவில் ஒரு சாது தோன்றினர். அவருக்கு நாச்னேயின் மைத்துனி ஆகாரம் அளித்தார். அப்போது செய்திருந்த வெண்டைக்காய்க் கறி சாதுவுக்குப் போடுவது சரியல்லவென்று அதை இலையில் போடவில்லை. பிறகு சாதுவே கேட்டு வாங்கிப் போட்டுக்கொண்டார். போகும்போது அந்த சாது அவர்களை ஆசீர்வதித்து, பம்பாயில் நடந்த ரண சிகிச்சை அனுகூலமானதென்றும் ரணம் சவுக்கியமென்றும் சொல்லிவிட்டுப் போனர். மூன்று வருஷங்கள் பொறுத்து S. B. நாச்னே பாபாவிடம் சென்றார். அப்போது, பாபா S. B. நாச்னேவைப் பார்த்து இந்த மனிதன் வீட்டுக்கு நான் சாப்பாட்டிற்குப் போனேன். வெண்டைக்காய்கறி எனக்கு பரிமார இல்லை.

பம்பாயில் தோன்றிய சாது ஹிந்துவாகவும், பாபா மாதிரி அங்க அடையாளங்களில்லாதவராகவும் இருந்தார்.

355. சமஸ்கிருதத்தில் மஹாபண்டிதரான பாலகிருஷ்ண G. உபாசினி சாஸ்திரி என்பவர் ஹரித்வாரம் தபோவனம் (ஸ்வர்காஸ்ரமம்) சென்று அவ்விடத்தில் ஒரு சாதுவைக் கண்டார். உபாசினிகள் குலதனமாக பாவித்து வந்த ஒரு ஸாளிக்ராமத்தை தாமே சில தலைமுறைக்கு முன் சாஸ்திரிகளுடைய மூதாதையருக்குக் கொடுத்ததாக அந்தச் சாது சொன்னர். சாஸ்திரியார் அவரை "தாங்கள் யார்" என்று கேட்ட போது, அந்த சாது ஹிந்துஸ்தானியில் "அதோ! அங்கே ஒரு மரம்

(அல்லது மரத்துண்டு) இருந்தது. ஒன்று (அல்லது ஒரு வர்) கீழே வந்தது. மற்றொன்று (அல்லது ஒருவர்) மேலே போயிற்று. நீ அறிவாய்" என்று சொல்லி உடனே மறைந்து விட்டார்.

பல வருஷங்களுக்குப் பிறகு, 1911-ம் வருஷக் கடைசியில், தம்முடைய இளைய சகோதரரான காசிநாத உபாசினி சாஸ்திரியின் இருப்பிடத்தைத் தேடிக்கொண்டு போனார். கோபர்கான் மாம்லத்தார் வேண்டுகோளின் மேல், அவ்வூரில் தங்க, மாம்லத்தார், அவரைச் சீரடிக்கு அனுப்பினார். அவர் பாபாவிடம், போனபோது பாபா பார்த்து,

பா:—கண்டோபா கோவிலுக்குப்போ.

பாலகிருஷ்ணர்:—பாபா தங்களை நான் பார்த்த போதே, எல்லாக் கடவுளையும் கண்டேன். (அவருடைய மனதை அறிந்த பாபா கண்டோபா கோவிலுக்குச் சென்றால் அவருடைய சகோதரரைக் காணலாம் என்று சொல்வதன் கருத்தை பாலகிருஷ்ண உபாசினி சாஸ்திரி உடனே அறியவில்லை.)

மறுபடியும் பாபா :—கண்டோபா கோவிலுக்குப் போ.

பாலகிருஷ்ணர் மசூதி வெளியே வந்து, பாபாவின் உத்திரவைச் சொல்ல அங்கிருந்த ஜனங்கள் காசிநாத் உபாசினி சாஸ்திரி கண்டோபாவில் இருப்பதாகச் சொன்னார்கள். தம்பியைப் பார்த்து பாலகிருஷ்ண உபாசினி மறுபடியும் திரும்பி பாபாவிடம் வந்தபோது, தபோவனத்தில் இதற்கு முன்னால் கண்ட சாது இந்துஸ்தானியில் சொன்னதையே, ஸாயி பாபா சொன்னார்.

தபோவனத்தில் காணப்பட்ட சாது தாமே என்று தெரிவித்தார்.

356. 1911-ம் வருஷத்தில், தத்தஜயந்தி அதாவது மும்முகத்தரான தத்தாத்ரேயர் பிறந்த தினத்தில், பல்வந்த கோஹோஜ்கர் என்பவர் சிரடியில் பாபாவிடம் சென்றார். அப்போது மாலை சுமார் 5 மணியிருக்கும்.

பா:—நான் கடுவேதனை பட்டுக்கொண்டிருக்கிறேன். நோய் தாங்க முடியவில்லை.

இவ்விதம் சொல்லிக்கொண்டே அங்கிருந்தவர்களை மசூதியிலிருந்து துரத்திவிட்டார். அவர் தம்மை அனுசூயையாகப் பாவனை கொண்டிருந்தார். சிறிது நேரத்துக் கெல்லாம், எல்லா ஜனங்களையும் வரச்சொன்னார். கொஹோஜ்கர் முதலில் போனார். பாபா உட்கார்ந்திருந்த மெத்தையில், பாபாவைக் காணுமல், மூன்று தலைகளை யுடைய ஒரு சிறிய மனோஹரமான தற்சமயம் பிறந்த குழந்தையைக் கண்டார். ஒரு க்ஷணத்தில் அந்த குழந்தை (தத்தர்) மாயமானார். அவருக்குப் பதிலாக அதே மெத்தைமேல் பாபா காணப்பட்டார்.

357. B. V. தேவ் என்பவர், பொதுஜன சமாராதனையுடன் உத்யாபன சடங்கு ஒன்று செய்ய விரும் பினார். அதற்கு பாபாவையும் அழைத்துவர ஜோக்குக்கு எழுதினார். ஜோக், பாபாவை நோக்கி, "பாபா சமாராதனைக்கு தாங்களும் வர, தேவ் கோருகிறார்" என்றார்.

பாபா :—நான் இருவருடன் சமாராதனைக்கு வருவதாகவும், வழிப் பிரயாணம் செய்ய ரயில் தேவையில்லை யென்றும். அன்புடன் ஒரு பக்தன் என்னைக் கூப்பிட்டவுடன், தக்ஷணமே நான் தோன்றுகிறேன் என்றும் அவருக்கு எழுதி அறிவி.

சமாராதனை நடக்கும் பொழுது அங்கு பாபா காணப்படவில்லை. ஆனல் தேவுக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு சன்னியாசி இருவருடன் வந்து, "நான் போஜனத்

துக்கு மாத்திரம் வந்தேன். பணம் தண்டுவதற்கு இல்லை" என்று சொல்லி தேவுடன் போஜனம் செய்தார். பிறகு பாபா வாக்குத் தப்பியதைக் குறித்து தேவ் ஜோக்குக் எழுதினர். ஜோக் அந்தக் கடிதத்தை பாபாவிடம் கொண்டு வந்து கொண்டிருக்கும்போதே, கடிதத்தைப் பிரிக்கு முன்

பாபா :—ஹா! அவன் உத்யாபன போஜனம் சாப்பிடுவதாக நம்பவைத்து, நான் ஏமாற்றியதாகச் சொல்கிறன். இரண்டு பேருடன் நான் போஜனத்துக்கு வந்திருந்ததாகவும், என்னை அவன் அறிந்து கொள்ள முடியவில்லையென்றும், அவனுக்கு அறிவி. போஜனத்துக்கு மாத்திரம் வந்தேன் பணம் தண்டுவதற்கு இல்லை என்று நான் தெளிவாகச் சொன்னதையும் அவனுக்கு எழுது.

கடிதத்துக்குப் பாபா சொன்னபடியே பதில் எழுதப்பட்டது. ஒரு சன்னியாசி ரூபமாக பாபா போஜனம் செய்தார் என்று தேவ் அறிந்து கொண்டார்.

358. ஒரு சமயம் ஆதாம் டலாலி என்பவரிடம் ஒரு மார்வாடி வந்தான். போஜனம் கேட்டான். டலாலி அவருக்கு கொஞ்சம் பணம் கொடுத்து, பாந்தராவில் ஒரு மார்வாடி ஓட்டலுக்கு அனுப்பினர். பிறகு ஒரு சமயம் ஆதாம் டலாலி சீரடிக்குப் போனர்.

பாபா ஆதாம் டலாலியைச் சுட்டிக் காட்டி:—இந்த மனிதனிடம் நான் போனேன். சாப்பாட்டிற்கு ஒரு மார்வாடியிடம் என்னை அனுப்பினன்.

359. G. S. கார்பதேவின் மனைவி, பாபாவுக்கு மசூதியில் நிவேத்தியம் கொடுக்கும்போது, தினந்தோறும் பாபாவைத் தன் வீட்டுக்கு வந்து போஜனம் செய்ய கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். பாபா வருவதாய் சொல்லியும் வரவில்லை. ஒருநாள், அவள் சமையல்

செய்து கொண்டிருந்தபோது அவளருகில் ஒரு நாய் வந்தது. நாயை அவள் அசுத்தமென்று எண்ணியிருந்த தால், கொள்ளிக்கட்டையை அதன் மேல் வீசி எறிந் தாள். நாய் ஓடிவிட்டது. அன்று நிவேத்திய சமயம் வழக்கப்படி அவள் பாபாவை நோக்கி, "பாபா போஜனம் செய்ய என் ஜாகைக்கு வரவேண்டும்" என் ருள். பாபா பிரதியுத்தரமாக, "சரி, நான் வந்தபோது கொள்ளிக்கட்டையை என் மேல் எரிந்தாய்" என்ருர்

திரிகால ஞானம்

பாபாவின் முக்கால உணர்வு

360. 1908-ம் வருஷத்துக்குப்பின் பாபாவின் கீர்த்தி பரவியது. அதற்கு முந்தி சீரடி ஒரு குக்கிராமமாக இருந்தபோது பாபா சொன்னதாவது:—இந்த கிராமத் தில் மாளிகைகள் உண்டாகும். பெரிய பிரபுக்கள் வரு வார்கள். வெடிகள் போடப்படும். ரதங்கள், குதிரை கள், யானைகள் எல்லாம் வரும். நேர்த்தியான ஊர் கோலங்கள் நடக்கும். உபயோகமில்லாத அந்தக் குக் கிராமத்தில் இவைகள் எல்லாம் நடவாதவை என்று ஜனங்கள் சிரித்தார்கள். ஆனல் பாபாவின் கீர்த்தி வளர வளர இவை எல்லாம் நடந்தேறின.

361. 1915-ம் வருஷத்தில் லக்ஷ்மணன் V. நாட்கர் என்பவர் பாபாவிடம் போனர். பிறகு திரும்பிவர பாபாவிடம் உத்திரவு பெற்றுவருவதற்குப்போனபோது கோபர்கானில் ரயிலுக்குப்போய்ச்சேரும் வேளை கடந்து விட்டது.

பா:—போ, கோபர்கானில் ரயில் உனக்குக் கிடைக்கும்.

நாட்கர் புறப்பட்டுப் போனுர். ஆனல் மத்தியில் கடக்கவேண்டிய கோதாவரிக்கரை போனபோது இருட்டாய்விட்டது. பிரவாகத்தில் இருந்த கோதாவரியில், இருட்டானபிறகு படகுகள் போவதில்லை. ஆகையால் அவர் அங்கேயே தங்கவேண்டியிருந்தது. உடனே ஒரு பெரிய உத்தியோகஸ்தராகிய மாம்லத்தார் அவ்விடம் வந்தார். அவருக்கு ஒரு படகு தயார் செய்யப்பட்டது. அவருடன் நாட்கரும் படகில் ஏறிக்கொண்டார். கோதாவரியைக் கடந்தார். திருடர்கள் தொந்தரவும் இல்லாமல் ஸ்டேஷன்போய்ச் சேர்ந்தார். பாபா சொல்படி ரயிலும் கிடைத்தது.

362. சாம்பாரே என்பவர் சீர்டியிலிருந்து புறப்பட்டுக் காலை 8 மணிக்கு பம்பாய்போய்ச் சேரும் ரயில் வண்டியில் போகலாமென்று பாபாவிடம் விடை கேட்டார்.

பா :—போ. உச்சிப்பொழுதில்போய்ச் சேருவாய்.

பாபாசொன்னபடியே அந்த ரயில்வண்டி பம்பாயிக்கு 4 மணி தாமதித்துப்போய் சேர்ந்தது. சாம்பாரே உச்சிப்பொழுதில்தான் சேர்ந்தார்.

363. ஒரு சமயம் மஹலஸாபதியின் குமாரத்தியின் மாமனுர் வீட்டில் நடந்த பண்டிகைக்கு அவரை அழைத்தார்கள். பாபாவின் உத்திரவு கேட்க மஹலஸாபதி வந்தார்.

பா :—நீ அங்கே மானபங்கம் அடைவாய்.

ஆயினும், போவதை நிறுத்த முடியாததால் மஹலஸாபதி போனுர். அவர் அங்கே போனபோது, அவருக்காகக் காத்திராமல் பண்டிகை பந்திபோஜனம் முடிந்து போய்விட்டிருந்தது.

364. மற்றொரு சமயத்தில் அர்த்தங்கோன் என்ற ஓர் இடத்திற்குப் போய்வர, பாபாவிடம் உத்திரவுகேட்டார்.

பா :—அவ்விடம் போகவேண்டாம். அவ்விடத்தில் சண்டைசச்சரவு உண்டாகும்.

ஆனால் மஹலஸாபதி அங்கு மல்ஹாரி மஹாத்ம்யம் பாராயணம் செய்யக் கடமைப்பட்டிருந்ததால் சென்றார். ஆனால் அவர் பாராயணம் செய்துக்கொண்டிருக்கும் போதே, வாலிபர்கள் சண்டையிட்டுக்கொண்டு, ஒருவருக் கொருவர் தடிகளால் அடித்துக்கொண்டார்கள். அதனால் பாராயணம் முடிவடையாமல் நிறுத்திவிட்டு மஹலஸா பதி சீரடிக்குத் திரும்பிவிட்டார்.

365. அனந்த மஹாதேவ் குல்கர்ணி சிங்வேகர் என்பவர் பரிக்ஷைக்குப் போயிருந்தார். அவர் பாபா வை நோக்கி பாபா "நான் பரிக்ஷையில் தேறுவேனா? என்று நம்பர் தேறினவர்கள் பட்டியில் வருமா?" என்றார்.

பா :—உன் நம்பர் 114 பரிக்ஷையில் தேறியவர் பட்டியில் வரும்.

அவருடைய நம்பர் 114 தான். அது தேறினவர்கள் பட்டியில் அடங்கி யிருந்தது.

366. N. A. சாமந்த் என்பவரை பாபாநோக்கி,

பா :—"இந்த 5 ரூபாயை எடுத்துக்கொள். உஷார். இது திருட்டுப்போய்விடும்" என்றார். சாமந்த் சாப்பி டப்போகும்போது தன்சொக்காயை சாப்பிடும்அறைக்கு வெளியில் மாட்டியிருந்தார். அதிலிருந்த அந்த ரூபாய் திருட்டுப் போய்விட்டது.

367. ஒரு சமயம் தெண்டுல்கர் என்பவர் பரி க்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தார். ஜாதகத்தை ஜோசியரிடம் காட்டினதில் பரீக்ஷை தேறமுடியாது என்றதால் பரிக்ஷைக்குப் பணம் கட்டமாட்டேன் என் றார். அதைப்பற்றித் துக்கித்து அவர் தாய் பாபாவிடம் விவரமாய் விஷயங்களைச் சொன்னாள். அப்போது

பாபா:—எல்லா ஜாதகத்தையும், ஜோஸ்யத்தையும், ஆலோசனையையும் தூரவைக்கும்படி அவனிடம் சொல். மனங்கலங்காமல் போய் பரிக்ஷைக்கு உட்காரட்டும். அவன் தேறுவான். (அப்படியே தேறினன்)

368. சபட்னேகருடைய சிநேகிதன் ஒருவனைக் குறித்து பாபா:—எவ்வளவு தான் படித்தாலும், இந்த வருஷம் நீ தேறமாட்டாய். அடுத்த வருஷத்தில் எவ்வளவு கொஞ்சமாகப் படித்தாலும் தேறுவாய். (அப்படியே மறு வருஷத்தில் அதிகமாய்ப் படிக்காமலேயே தேறினன்.)

369. பம்பாயில் ஒரு பார்ஸி வியாபாரியின் மகன் காணமல் போய்விட்டான். அப்போது அது விஷயமாக பாபாவிடம் தெரியப்படுத்தினர்கள்.

பாபா:—காகா! அந்தப்பையன் தெற்கே போயிருக்கிறன். அவன் சவுக்கியமாகவும் சந்தோஷகரமாகவும் இருக்கிறன். தானே வந்து சேருவான்;

பிறகு அந்தப் பையன் மதராஸிலிருந்து தானகவே வந்து சேர்ந்தான்.

370. ஒரு பித்தம் பிடித்த பார்ஸி பையனின் தகப்பனை பாபா பார்த்து, "உன் பையன் குணமடைவான்" என்று சொன்னர். அவ்விதமே பையன் குணமடைந்து பிறகு வியாபாரியானன்.

371. பாபா, சந்தோர்கரை நோக்கி: ஏராளமாக நான் எதைக் கொடுக்கத் தயாராய் இருக்கிறேனே, அதைப் பெற்றுக்கொள்ள எவருக்கும் அக்கரை இல்லை. ஆனல் நான் எதைக் கொடுக்கமுடியாதோ, அதையே என்னிடம் கோருகிறர்கள்.

பாபா ஒரு சமயம் சமத்காரத்தைப்பற்றி சந்தோர்கருக்குச் சொன்னர். அது 1903-1904-ம் வருஷம். சந்

தோர்கரின் மகள் 17 வயதுள்ள மீனுதாயி அந்த வயதி லேயே கணவனை யிழந்தாள். அப்பொழுது கர்ப்பவதி பிரஸவ வேதனையில் இருக்க, பாபா ஒரு கோஸாவிமூலம் விபூதியை அனுப்பியதால் சுகப் பிரசவமாய் விட்டது. ஆனால் அந்தக் குழந்தை பிறந்த சில மாதமானதும் இறந்து விட்டது. அவளுக்கு வேறொரு சந்ததியும் இல்லை. இதனால் குடும்பத்தாரெல்லோருக்கும் வெகுதுக்கம். சந்தோர்கரும் அவர் குடும்பஸ்தர்களும் சீரடிக்குப் போனார்கள். பாபா வின் எதிரில் விசனத்துடன் யாதொன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். எப்போது சந்தோர்கர் போனா லும், பாபா அவரை விசாரித்து இருவருக்கும் களிப் பான சம்பாஷணை நடக்கும். ஆனால் இப்போது அவ் வாறில்லை. துக்கத்தில் மூழ்கி சந்தோர்கர் மௌனமா யிருந்தார். இவ்விதமே கொஞ்சநேரம் அவர் பேசாமல் இருக்க.

பாபா:—ஏன் மவுனமாய் இருக்கிறாய்?

சந்:—பாபா! தங்களுக்கு எல்லாம் தெரியுமே. தங் களுடைய ஆதரவில் நாங்கள் இருக்கும்போது, இந்த ஆபத்துகள் எங்களுக்கு உண்டாயிற்றே. குழந்தை இழந்து, மருமகனை இழந்து........

பா:—குழந்தை மருமகன், இவைகளை விரும்பி என்னிடம் வருவது சரியல்ல. இவைகளுக்காக என்னிடம் வரவேண்டியதில்லை. இவைகள் என் அதிகாரத்தில் இல்லை. குழந்தை பிறப்பதும், ஒரு பந்து இறப்பதுமான இவை கள் பூர்வ கர்மத்தை அனுசரித்திருப்பவை. இந்த உல கத்தை ஆக்கிய பெரிய கடவுளான பரமேஸ்வரனாலும் இவைகளை மாற்றமுடியாது. சூரியனை யாகிலும், சந்தி ரனையாகிலும், குறித்து, "நீங்கள் வழக்கமான அல்லது ஏற்படுத்தப்பட்ட இடத்துக்கு 2 கஜம் அகன்று உதய

மாகுங்கள்'' என்று அவர் சொல்லுவார் என்று எண்ணு கிருயா? இல்லை. அது அவரால் கூடாது. முடியவும் முடியாது. அப்படிச் செய்வதானுல் உலகம் நிலைகுலைந்து ஈச்வர சிருஷ்டி பரிபாலனக்ரமம் அழிந்துபோகும்.

சங்:—அப்படியானுல், தாங்கள் சில பேரிடம் "உனக்கு ஒரு புத்திரன் உண்டாகும்'' என்று சொல்கிறீர்கள். அவ் விதமே அவனுக்குப் புத்திரன் உண்டாகிருன். மற்ருெரு வனை நோக்கி, உனக்கு வேலை கிடைக்கும்'' என்று சொல் கிறீர்கள். அவ்விதமே அவனுக்கு வேலை கிடைக்கிறது. இவையெல்லாம் தாங்கள் செய்யும் சமத்காரம் அல்லவா?

பா:—இல்லை. நானு! நான் ஒரு சமத்காரமும் செய்வ தில்லை. உங்கள் ஜோஸ்யர்கள் இருக்கிருர்கள். 2 அல்லது 4 நாள்களுக்கு முன்னுடியே வருங்கால செய்திகளைத் தெரிவிக்கிருர்கள். அவர்கள் சொல்லும் ஜோசியத்தில் சில பலிக்கின்றன. நானும் பின் வருபவற்றைப் பார்க் கிறேன். நான் எது சொல்கிறேனே, அது உண்டா கிறது. என் கலையும் ஒருவித ஜோஸியம் போன்றதே. ஆனுல் இதை நீங்கள் உணருவதில்லை. உங்களுக்கு, என் வார்த்தைகள் சமத்காரங்களாகத் தோன்றுகின்றன. ஏனென்ருல் நீங்கள் வருங்காலத்தை அறியமாட்டீர்கள். ஆகையால் நேரிடும் சம்பவங்களை என் அற்புத சக்தியா லுண்டானதாக எண்ணி என்னை வணங்குகிறீர்கள். நானே, உங்கள் வணக்கத்தை கடவுளிடம் திருப்பி, உண்மையாய் நீங்கள் நலமடையும்படி செய்கிறேன்.

372. ஒரு சமயம், பாபா. நாஸிக்கில் இருந்த நாராயணராவ் மோதிராம் ஜனி என்பவரை நோக்கி, "இதுமுதல் நீ ஒரு வேலைக்காரனுக இருக்கமாட்டாய். உன் சொந்த வியாபாரத்தைச் செய்,'' என்ருர்.

பிறகு நாராயணராவ் நாசிக்கில் ஆனந்தாசிரமம் ஒட்டலை ஏற்படுத்தினர். அது கீர்த்திபெற்று வெகுலாபகரமான பெரிய வியாபாரமாய்விட்டது.

373. S.B. நாச்னே என்பவர் உத்தியோகத்துக்குப் பிரயத்தினம் செய்துகொண்டிருந்தார். பாபா அவரை நோக்கி, (1) பம்பாயில் வேலைக்குவா. (2) பைத்தியம் பிடித்த மனிதரை நம்பாதே.

பாபா சொன்னபடியே (1) அவருக்குப் பம்பாய் "Suburban service" என்று சொல்லும் வேலை பந்தராவில் கிடைத்தது. (2) சில காலம் கழித்து ஒரு பைத்தியக்காரன் அவர் பூஜை அறையில் புகுந்து அவரைக் கொல்ல முயன்றான்.

374. பாபா, சங்கரராவ் என்பவரையும் S. B. நாச்னேயையும் பார்த்து, "எனக்கு 15 ரூபாய் தக்ஷிணை கொடு" என்றார்.

சங்கரராவ்:....பணமில்லை. பாபா.

பா:—30 ரூபாய் தக்ஷிணை கொடு.

சங்:—என்னிடம் பணமேயில்லை. பாபா.

பா:—64 ரூபாய் கொடு.

பிறகு S. B. நாச்னே:—நாங்கள் ஏழைகள். அவ்வளவு பெரிய தொகைகளைக் கொடுக்க முடியாதவர்கள்.

பா:—வசூல் செய்து கொடுங்கள்.

பிறகு 1916 (?) வருஷத்தில் பாபா காயலாவானர். அவர் ஆரோக்யமடைய ஒரு பெரிய சப்தாஹம் செய்யப்பட்டது. அதற்காகப் பொதுஜன சமாராதனை செய்ய சந்தாப் பணம் வசூல் செய்யப்பட்டது. அப்போது S. B. நாச்னேயும் சங்கரராவும் தொகை வசூல் செய்து அனுப்பினர்கள். அவர்களால் வசூல் செய்யப்பட்ட தொகை கணக்குப் பார்க்குமளவில் 64 ரூபாயாகவே யிருந்தது.

375. 1913-ம் வருஷத்தில் H. S. தீக்ஷிதரின் குமாரன் பந்தராவில் படித்துக்கொண்டிருக்கும்பொழுது அவனுக்குக் காயலா ஏற்பட்டது. தீக்ஷித் அவனைப்போய் பார்த்துவர, பாபாவின் உத்திரவு கேட்டார்.

பா:—நீ போகவேண்டாம். பையனை இங்கே வர வழி. தீக்ஷித் கடிதம் எழுதினர். ஆனல் அவன் பரிக்ஷை நெருங்கி இருக்கிறதென்றும், வைத்ய சிகித்ஸையும்,வித்யா வசதியும் கிடைக்காத சீரடி பையனுக்கு யுக்தமான ஸ்தலமில்லையென்றும் பதில் வந்தது.

பா:—பாதகமில்லை. பையனை வரவழை.

அவ்விதமே பையன் வந்து சேர்ந்தான். துரிதமாக மருந்தில்லாமலே சுகமானன். பிறகு பந்தராவில் இருந்து 2—11—1913-ம் தேதி யன்று பரிக்ஷை நடக்குமென்றும் பையனை அனுப்பும்படிக்கும் கடிதம் வந்தது.

பா:—பையனை அனுப்பவேண்டியதில்லை.

மறுபடியும் பரிக்ஷை 2—11—1913-ம் தேதிலிருந்து 6—11—1913-ம்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டதென்றும், 6-ந் தேதி பரிக்ஷைக்கு பையனை அனுப்பிவைக்க வேண்டியதென்றும் ஒரு கடிதம் வந்தது.

பா:—நிதானி. பார்க்கலாம்.

பையனை அந்த தேதி பரீக்ஷைக்கு தீக்ஷித் அனுப்பவில்லை. மறுபடியும் பரிக்ஷை 13—11—1913-க்கு தள்ளி வைக்கப்பட்டதென்று ஒரு கடிதம் வந்தது.

பா:—13—11—13-ம் தேதிக்கு அனுப்பு.

அந்தப் பையன் அவ்விதமே பரிக்ஷைக்கு உட்கார்ந்து தேறினன்.

376. 1910-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் பாபு சாஹேப் ஜோக் பாபாவிடம் வந்து, "பாபா நாளைய

தினம் கோதாவரிக்குப் போய் ஸ்நானம் செய்ய உத்திரவு கொடுங்கள். நாளைக்குப் புண்ணிய தினம்'' என்றார்.

பா :—போக வேண்டியதில்லை.

ஜோக் அதிருப்தி யடைந்தார்.

சீரடியிலேயே தங்கினர்.

மறுநாள் உதயம் கிராமஸ்தர்கள் பாபாவிடம் ஓடி வந்து "பாபா! புதிதாக வெட்டியிருக்கும் சர்க்கார் கால் வாய்களின் வழியாக கோதாவரி ஜலம் சீரடிக்கு வந்து கொண்டிருக்கிறது'' என்றார்கள். (கவர்மென்டார் கால் வாய்களை வெட்டி தயாராய் செய்திருந்தாலும் 1912 வருஷத்திற்குள் ஜலம் பாய உத்திர விடவில்லை.)

பா :—ஜோக்! கடவுளின் கருணையைப் பார்த் தாயா?

377. மற்றொரு சமயம் பாபு சாஹேப் ஜோக்கின் பிதுரு சிராத்தம் வந்தது. பாபாவைப் பார்த்து, "பாபா! வரப்போகும் சிராத்தத்துக்கு, கோபர் கோனி லிருந்து, என் குலஸ்தரான பிராம்மணரை ஏற்பாடு செய்யப் போக விடைகொடுங்கள்.

பாபா :—நீ போக வேண்டியதில்லை.

ஜோக்:—பாபா நான் சிராத்தத்தை விட்டு விடவா?

பா :—இன்னும் 4 தினங்கள் இருக்கின்றன. பார்க் கலாம்.

இரண்டு நாள்கள் ஆனதும், ஜோக் பாபாவிடம். போனர்.

ஜோக் :—என் குலஸ்தரான பிராம்மணர்கள் வேண் டும். விடை தாருங்கள்.

பா:—அவர்களே வருவார்கள்.

ஜோ :—சிராத்தமென்று அவர்களுக்கு எப்படித் தெரியும். என் குலஸ்தராய் இருப்பார்களா?

பா :—ஆம்.

சிராத்த தினம் காலை 9 மணிக்கு இரண்டு பிராம்மணர் புன்தாம்பாவிலிருந்து சீரடிக்கு வந்தார்கள். பாபாவிடம் போய், “இவ்விடத்தில் பிராம்மண போஜனம் கிடைக்குமா? என்று கேட்டார்கள்.

பா :—ஜோக்கிடம் போங்கள்.

அவர்கள் ஜோக்கிடம் போனார்கள். வைதீகத்தில் நன்றாய் பழகினவர்கள் தன் குலத்தைச் சேர்ந்தவரென்று ஜோக் கண்டு, அவர்களை வைத்து சிராத்தம் செய்தார்.

378. அரங்காபாத்தில் ஒருவனுக்கு ஜோக், 1400 ரூபாய் கடன் கொடுத்திருந்தார். வசூல் செய்யும் காலம் (லிமிடேஷன்) நெருங்கி வந்தவுடன், பாபாவிடம் ஜோக் வந்து, “பாபா! அரங்காபாத் போக உத்திரவு கொடுங்கள்” என்றார்.

பா :—கடன்காரனே இங்கே வருவான் அப்போது அவனைக் கேள்.

ஜோக் விழித்துப் பார்த்து :—2, 3 ஆயிரம் ரூபாய்களை நான் தொலைக்கவா? நாளை முதல் உம்முடைய பூஜையையும் ஆரத்தியும் நான் செய்ய முடியாது. பணமில்லாமல் நான் எப்படி இவ்விடத்தில் இருப்பது?

பா :—உன் பணம் எங்கே போகும்? வீட்டில் சும்மா உட்காரு. அது தானே வரும்.

ஜோக் :—நான் தங்கள் பேச்சைக் கேட்க முடியாது? அவனே வருவானா நான் நேரில் போனபோதே அவன் பணம்செலுத்தவில்லை, தாவா செய்தாலொழிய, அவன் செலுத்தமாட்டான்.

பா :—அது இருக்கட்டும்.

ஜோக், பணம் வசூல் செய்யும் எண்ணத்தையே விட்டு விட்டார். கடைசியாக, வாயிதா போன பிறகு, கடன்காரனே வந்து 1400 ரூ. மாத்திரம் செலுத்தினன். ஜோக் ஒப்புக் கொள்ளயில்லை.

பாபா :—ஜோக் ! அதை எடுத்துக் கொண்டு விடுதலை சீட்டு (ரசீது) கொடு.

பிறகு ஜோக் பணத்தை எடுத்துக்கொண்டு, பாபா வின் எதிரில் வைத்தார் அதில் கொஞ்ச பாகம் பாபா எடுத்துக்கொண்டு, மீதியை ஜோக்கிடம் கொடுத்து விட்டார்.

379. (a) G. G. நார்கே என்பவர் ஒரு இடத்திலும் நிலையான உத்தியோகம் இல்லாமல் (prospecting job) சில்லறை வேலைக்கு இங்குமங்கும் அலைந்தார். அவருடைய தாயார் பாபாவை நோக்கி, "என் மகன் ஒவ்வொரு ஊராய் அலைந்துகொண்டு, ஸ்திர உத்தியோகமில்லாமல் இருக்கிறனே பாபா ! அவனை ஓரிடத்தில் நிலையான வேலையில் அமர்த்துங்கள்" என்று பிரார்தித்தாள்.

பா :—அவனைப் பூனவில் நிலைக்க வைக்கிறேன். அப்பொழுது நார்கேக்கு ஏற்ற வேலை பூனவில் கிடையாது. பிறகு, (பனாஸ்) காசி பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்தியாயர் வேலைக்கு தேவை யென்று வந்தது.

நார்கே பாபாவைப் பார்த்து, "பாபா, இதற்கு நான் மனு போடவா ?

பா :—காசியில் நமக்கு என்ன வேலை ? நாம் பூனவுக்கும் சதாராவுக்கும் போகவேண்டும்.

1917-ம் வருஷத்தில், பூன இஞ்ஜினியரிங் காலேஜில் ஒரு வேலை ஏற்படுத்தப்பட்டதென்று பத்திரிகை வாயிலாய்த் தெரிந்தது.

நார்கே :—பாபா இதற்கு நான் எழுதி கேட்கலாமா ?

பா :—சரி.

பிறகு பாபா :—நார்கேயைப்பற்றி விசாரித்து "நார்கே எங்கே போகிறான்"?

பக்தர்கள்:—வேலைக்குப் பிரயத்தினம் செய்ய பூனாவுக்குப் போனான்.

பா :—அல்லா அனுக்கிரகம் செய்வார். அவனுக்குக் குழந்தைகள் உண்டா ?

பக்தர்கள் :—3, 4 பிறந்து, கொஞ்ச காலம் இருந்து இறந்துவிட்டன.

பா .—அல்லா கருணைபுரிவார்.

1918 ல் நார்கேவுக்கு அதே வேலை கிடைத்தது. (b) அதற்குப் பிறகு, அவருக்குப் பிறந்த குழந்தைகள் எல்லாம் உயிருடன் இருக்கின்றன. யாதொன்றும் முன் போல் அல்பாயிஸாய் போய்விடயில்லை.

(c) பா :—1913-ல் நார்கேயைப் பார்த்து, பாபா உன் மாமனார் (பூடி) ஒரு ஆலயம் கட்டுவார். அதை நீ பரிபாலித்து வருவாய். 1916-1918 ல் ஆலயம் கட்டிமுடிந்தது. அதற்குப் பிறகு நார்கே அதன் தர்மகர்த்தாக்களிலொருவராக சாயி சமஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார்.

380. M. W. பிரதான் என்பவரின் மனைவியை நோக்கி பாபா, "உன் குழந்தைக்கு (fits) இசிவு உண்டாகும்" என்றார்.

இரண்டு மணிக்குப் பிறகு இசிவு உண்டாயிற்று.

381. கல்யாணில் இருந்த கார்ணிக் என்பவர் முதல் முதலில் சீரடிக்கு வந்தபோது, பாபா:—"வர வேணும் சௌகார்" என்று அழைத்தார்.

அந்த சமயத்தில் அவர் அதிதரித்திரர். ஆனால் அநேக வருஷங்களுக்குப் பிறகு, அவர் ஒரு சௌகார் ஆனார்.

382. சாமாவின் சகோதரர் மனைவிக்கு ப்ளேக் வியாதி கண்டு, தொடையில் கட்டியும் தாபமும் உண்டாயிற்று. சாமாவின் சகோதரர் சாமாவிடம் ஓடி, பாபாவின் விபூதி கேட்டார். சாமாவையும் வரும்படி கூப்பிட்டார்.

சாமா பாபாவை நோக்கி, "பாபா எனக்கு விபூதி கொடுத்து, போக உத்திரவு கொடுங்கள்" என்றார்.

பா :—இப்போது விபூதியை அனுப்பு. கடவுளே எல்லாம் செய்யவல்லவர். சுரமும் கட்டியும் தானாகவே குறைந்துவிடும். காலையில் சூரிய உதயமான பின் அவ்விடம் நீ போய் வரலாம். இப்போது போகவேண்டாம்.

அப்படியே அனுப்பப்பட்ட விபூதி அவளுக்குத் தடவப்பட்டது. நோயாளி குணமடைந்தாள். காலையில் சாமா அவ்விடம் போனபோது அவள் காபி தயார் செய்துகொண்டிருந்தாள். சாமா திரும்பிவந்து "பாபா, என்ன அதிசயத்தை தாங்கள் செய்கின்றீர்கள் !"

பா :—செய்கை கடவுளுடையது. கடவுளின் அடிமைதான் நான் என்றார்.

384. ஒரு சமயம் பல்வந்த G. கபார்தேக்கு ப்ளேக் கண்டது. பாபா அவர் தந்தையைப் பார்த்து, "உன் மகனை ப்ளேக்கிலிருந்து காப்பாற்றினேன். என் கட்டளை எல்லாக் கட்டளைக்கும் மேலானது.

385. ஆதம் டலாலி என்பவர்மேல் ஒரு சமயம் ஒரு குற்றம் செய்ததாக விசாரணை நடந்தது. டலாலி, பாபாவை நோக்கி, "பாபா அநியாயமாக என்மேல் ஒரு பெரிய குற்ற வழக்கு தொடங்கியிருக்கிறார்கள்."

பா :—பயப்படாதே. எல்லாம் சரியாய்விடும்.

ஆதம் டலாலி விடுதலையடைந்ததோடு, பிராஸி கியூஷன் தரப்பில் சாக்ஷியாகவும் எடுத்துக் கொள்ளப் பட்டார்.

386. S. B. நாச்னே, பாபாவை நோக்கி, "ஹரி பாவ் M. பென்ஸே தங்களுடைய உதவியைக் கோரு கிறார். பாபா! ஒரு குற்ற வழக்கு அவர்மேல் தொடர்ந் திருக்கிறார்கள். அவர் நிரபராதி."

பா :—கவலைப்படவேண்டியதில்லையென்று சொல்லு. அப்பீலில் விடுதலையாகும்.

அப்பீலில் விடுதலையாயிற்று.

387. ஒரு குற்ற வழக்கில் ஒரு பிராமணன் தூக்கு தண்டனையடைந்தான்.

பா :—4 தினங்களில் அவன் குற்றவாளி அல்ல வென்று விடுதலையடைவான்.

அப்படியே நாலு நாளில் விடுதலையாயிற்று.

388. 1917-ம் வருஷத்தில் வைத்திய பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்த ஒரு மாணுக்கன் கனவில் பாபா தோன்றி,

பா :—என் வயிறு வலித்துக்கொண்டிருக்கிறது. நீ ஒரு வைத்தியனல்லவா? எனக்கு மருந்து கொடு.

மா :—நான் இன்னும் மாணுக்கன்தான் வைத்திய னல்லவே.

பா :—போய் மருந்து கொண்டுவா.

மாணுக்கன் எழுந்து போனான். அதற்குள் பாபா மறைந்துவிட்டார். பரீக்ஷையில் வயிற்றுவலியைப்பற்றிய கேள்வி ஒன்று இருந்தது.

பாபாவும் ஸம்ஸ்கிருதமும்

389. முகுந்தலீலே சாஸ்திரி என்பவர் எதிரில் பாபா கீழ்கண்ட சமஸ்கிருத ஸ்லோகத்தைச் சொன்னார்.

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥

390. நானா நிமோன்கரை நோக்கி, பாபா, "காகா நீ ஏன் பாராயணம் செய்வதில்லை?"

நானா :—எனக்கு சமஸ்கிருதம் தெரியாது.

பா :—கவலையில்லை. மரூதி ஆயி (அதாவது பாபா) உனக்கு சமஸ்கிருதம் சொல்லிக் கொடுப்பார். வரவர தெரிந்துகொள்வாய். ஆரம்பம் செய்.

நானா ஆரம்பித்து, அதிக பயிற்சியடைந்து, சமஸ் கிருத வித்வான்களான தீக்ஷித், ஜோக் இவர்களுக்கு ஞானேஸ்வரியை விளக்கி உபன்யாசம் செய்துவந்தார். அப்போது பாபா நானாவை நோக்கி, "மற்றவர்கட்கு நாம் ஏன் விஷயங்களை விளக்கி உபன்யாசம் செய்ய வேண்டும்? அதனால் கர்வம் பலப்படும்" என்றார்.

பாபாவின் வைத்திய முறை

391. பாபா :—ஆலயத்தில் உன்னிடம் வரும் கருப்பு நாய்க்கு தயிர் சாதம் போடு. (குளிர்க் காய்ச்சலுக்கு இதை ஒரு மருந்தாக பாபா சொன்னார். நோயாளி அவ் விதமே செய்ய குளிர்க் காய்ச்சல் நீங்கிற்று.)

392. பா :—காகா மஹாஜனி! வேர்கடலையைத் தின்று, நீர் குடி. (இதைப் பேதிக்கு வைத்திய முறையாக பாபா கட்டளையிட்டார்.) அதை அனுசரித்த காகாவுக்கு பேதி சொஸ்தமாயிற்று.

393. காலராவால் கஷ்டப்பட்ட ஸ்ரீமான் பூட்டியை நோக்கி,

பாபா:—“கொல்லைக்குப் போகாதே. வாந்தியும் எடுக்காதே.” மருந்தில்லாமலே பேதியும் வாந்தியும் பாபா வாக்கால் நின்றுவிட்டன.

394. ஒரு சமயம் பூட்டி என்பவருக்கு காலரா கண்டது. அப்போது பாபா:—“வாதுமை பருப்பு, அக்ரௌட் பருப்பு, பிஸ்தா, இவைகளை அறைத்து பாலில் காய்ச்சிக் குடிக்கட்டும்” அப்படிக் குடித்ததில் பூடிக்கு காலரா நின்றுவிட்டது.

395. ஒரு வேலைக்காரன் (**Lumbago**) இடுப்பு வலியால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது பாபா:—நோயுள்ள இடத்தில் சூடான சோற்றுக் கற்ருழை வைத்தால் வலி அடங்கும் என்ருர். இது இடுப்பு வலியைக் குணமாக்கிற்று.

396. **R. R.** ஸாமார்த் என்பவரின் குழந்தைகளுக்கு வயிற்றுச் கழிக்சல் கண்டது. அப்போது பாபா “சிரா” என்னும் “ரவாகேஸரி”யைக் கொடுக்கச் சொன்ஞர். அவ்விதமே கொடுக்க வியாதி குணமாய்விட்டது.

397. டாக்டர் **C.** பிள்ளை என்பவர் நரம்புச்சிலந்தியால் அதிக அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார். **H. S.** தீக்ஷித்தை நோக்கி, “இந்த நோய் என்னை அதிக வேதனைபடுத்துகிறது. இதைக்காட்டிலும் இறப்பதே மேல். இந்த நோய் பூர்வ கர்ம வினையாலுண்டாயிற்று என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆயினும், பாபாவிடம் போய், இந்த நோயை இப்போது நிறுத்தி, இனி எனக்கு வரும் பத்து ஜன்மத்திற்கு மாற்றிவிடவேண்டுமென்று பிருர்த்தனை செய்யவேண்டும்” என்ருர்.

அப்படியே தீக்ஷித் பாபாவிடம் சென்று பிள்ளையின் பிரார்த்தனையைச் சொன்னுர்.

பா :—பயப்படவேண்டாம் என்று சொல். எதுக்கு பத்து ஜன்மங்கள்? இன்னும் பத்து தினங்களில் முழு நோயும் தீரும். இகத்துக்கும், பரத்துக்கும் வேண்டிய சுகமளிக்கவே சாதுக்கள் இருக்கிறார்கள். அதற்குப் பதிலாக பிள்ளை மரணத்தையா கோருகிறான்? அவனை இங்கே அழைத்துவா. கலவரப்படவேண்டியதில்லை".

அப்படியே டாக்டரை அழைத்து வந்தார்கள். பாபா தம்முடைய சொந்த தலையணையை அவருக்குக் கொடுத்தார்.

பாபா :—"இதன்மேல் சாய்ந்துகொள். வீணான எண்ணங்களை எண்ணாதே. கால் நீட்டிக்கொண்டு அமைதியாய் இரு. பூர்வ வினையின் பலனையனுபவித்தாலன்றி வினை தீராது என்பது உண்மையே. சுகத்துக்கும் துக்கத்துக்கும் கர்மமே காரணம். ஆகையால் அவைகளில் எது உனக்கு ஏற்பட்டாலும், அதைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள். ஆண்டவனுக்கே ஸர்வ அதிகாரம். பரிபாலனம் செய்வார். அவரிடத்திலே மனதை நிறுத்து, அவர் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளுகிறார். அவரிடம் பூர்ணமாய்ச் சரணமடை. அவரையே எண்ணியிருந்தால், அவர் செய்வதை நீ பார்ப்பாய். பிறகு பிள்ளையின் ரணத்தின்மேல் N. G. சந்தோர்கர், ஒரு கட்டு கட்டினார்.

பா:—அதை எடுத்துவிடு. நானா பித்தன். அது உன்னைக் கொன்றுவிடும். இப்போது ஒரு காக்கை வந்து, அந்தப் புண்ணைக் கொத்திவிடும். அதனால் சுகமடைவாய்.

ஒருநாள், அப்துல் என்பவர் மேலேயிருந்து, மசூதியில் மேலே இருக்கும் அகல்களை எட்டி எடுத்து இறங்கும்போது தெரியாமல் பிள்ளையின் புண்ணின்மேல் தன் முழு பாரத்துடன் பாதத்தைவைத்து மிதித்து

விட்டார். அதனால் பிள்ளை புண்ணில் இருந்த பூச்சிகள் ரத்தம், சீழ் இவை எல்லாம் வெளியே வந்துவிட்டன. வலிபொறுக்க முடியாமல், பிள்ளை கதறினார். உடனே,

பிள்ளை :—பாபா ! இன்னுமொரு காக்கை வந்து என்னைக் கொத்துமா ?

பா:—இல்லை. காக்கை (அப்துல்) வந்துவிட்டது. புழுக்கள் வெளியே வந்துவிட்டது. போய், வாடாவில் இளைப்பாரு.

பாபா விபூதி போடுவதாலும், விபூதி உள்ளுக்கு எடுத்துக் கொள்வதாலும் வேறு ஒரு மருந்தில்லாமலே, பத்து தினங்களில் ரணம் ஆறி நரப்புச்சிலந்தி சொஸ்தமாய்விட்டது.

சரணகதியால் கர்மம் விலகுவது.

398. பூனா ஜில்லாவில் ஜுன்னூர் என்னும் ஊரில் பீமாஜீ படேல் என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு எலும்புருக்கி வியாதி கண்டது. சுரம், துப்பினால் ரக்தம், குடல் கோளாறு இவைகளால் வருந்தினான். எல்லாவித சிகித்சைகளும் செய்தான். சுகமாகவில்லை. எல்லாவித பூஜையும் போட்டும் குணமாகவில்லை. பிறகு N. G. சந்தோர்கர் அவனைச் சாயிநாதரிடம் அனுப்பினார். பீமாஜீவந்தான். அவனை டோங்காவிலிருந்து இறக்குவதற்கே, 4 மனிதர்கள் தேவையாயிருந்தது. பாபாவிடம் சாமா அழைத்துக்கொண்டு வந்தார்.

பா:—சாமா ! இந்த திருடனை என்னிடம் அழைத்து வருவதால், என் தோள்களில், எவ்வளவு பாரமான சுமையை ஏற்றுகிறீர்கள்.

உடனே, பீமாஜீ, பாபாவின் பாதங்களில் தனது தலையை வைத்து, “ தீனபந்தோ ! நான் திக்கற்றவன்.

தங்களுடைய கடைக்கண் பார்வை எனக்கு அருள வேண்டும்'' என்றான்.

பாபா தமது குரலைமாற்றி, புன் முறுவலான முகத்துடன் அவனை நோக்கி.

பாபா:—தங்கு இவ்விடம். கவலையை விட்டொழி. விவேகிகள் கவலைப்படுவதில்லை. உன் பூர்வகர்மத்தின் கொடுமை, நீ (நம்பிக்கையுடன்) சீரடியில் காலை வைத்தவுடன் ஒழிந்தது. இந்த மசூதியின் மூன்று படிகளை ஏறியவுடனே, துக்கஸாகரத்தில் மூழ்கினவர் ஆனந்த ஸாகரம் சேருகிறார். அந்த பகீர் பண்டாரம் (ஆண்டவன்) வெகு கருணையுடன், உன்நோயை வேரறத்தொலைப் பார். தம்முடைய அன்பைப் பொழிவார். அனைவர் பேரிலும்தான் அவர் அன்பு. நீ போய், பீமாபாய் வீட்டில் தங்கி இரு.

அப்படியே பீமாஜீ, பாபாவின் விபூதியை உபயோகப் படுத்திக்கொண்டு, பீமாபாய் வீட்டில் இருந்தான். முதல் நாள் பாபாவே விபூதியை அவனுடைய முகத்தில் தடவி, அவன் சிரத்தின்மேல் தமது கரத்தை வைத்தார். அவனை நோக்கி,

பா :—பீமாஜீ ! நடந்துபோ.

உடனே, ஒருவருடைய சகாயம் இல்லாமல், தன் வண்டிக்கு படேல் நடந்து போனான். நடமாடும் சக்தி வந்து விட்டது. பாபா அவனுக்கு ஒரு மருந்தும் கொடுக்கவில்லை. மருந்தைக் காட்டிலும் சிறந்ததைக் கொடுத்தார். பீமாஜிக்கு இரண்டு கனவுகள் நேர்ந்தன. முதல் கனவில் ஒரு பையனாக இருந்தான். அவனுடைய உபாத்தியாயர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு தவறாகப் பாடம் திருப்பி ஒப்பித்ததற்காக ஒரு மிலாறு எடுத்து பலமாய் அடித்துவிட்டார். வலி பொறுக்க

முடியாமல் தூக்கத்திலே பீமாஜி கதறினான். மற்றொரு சொப்பனத்தில், யாரோ ஒருவர் தன் மார்மேல் ஒரு பாரமான குழவிக் கல்லை உருட்டுவதால் தன் பிராணனே போய்விடும் போலிருந்தது. கஷ்டப்பட்டு பெருமூச்சு விட்டான். பிறகு விழித்தெழுந்தான். இந்த இரண்டு சொப்பனத்தால், அவன் கர்ம வியாதி பறந்தோடி விட்டது. மசூதிக்கு மெதுவாக நடந்து, பாபாவை நமஸ்கரித்தான். பாபாவுடன் இன்னொரு மாதம் கூட இருந்து, தேகமும் சௌக்யமாகி பக்தியும் ஓங்கி வளர்ந்து வீடு போய்ச் சேர்ந்தான்.

399 ஹர்டா என்னும் ஊரில் சிந்தே என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கு 7 குமாரத்திகள், ஆண் பிள்ளைகளே இல்லை. 1903 வருஷத்தில், காண்காபூர் போய் அவ்விடத்திய பிரசித்திபெற்ற தத்தரிடம் பிரார்த்தனை செய்து கொண்டார். 12 மாதத்தில் தமக்கு மகன் பிறந்தால், ஸன்னிதானத்திற்கு அந்த குழந்தையை எடுத்துக்கொண்டு வருவதாகச் சொன்னார். அப்படியே 12 மாதத்தில் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் பிரார்த்தனைப்படி காண்காபுரம் போகவில்லை. 1911 ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில், சீரடிக்கு பாபாவிடம் வந்தார்.

அவனைக்கண்ட க்ஷணமே பாபா.—என்ன? கொழுப்பு மிகுந்துவிட்டதா? உந்தன் (பிராரப்த கர்மத்தின்படி) ஊழ்வினையில் உனக்கு ஆண்மகவேது? (தமது தேகத்தைக்காட்டி) இந்த உடலைக்கிழித்து (அதாவது தமது சக்தியால்) உனக்கு ஒரு மகனைக் கொடுத்தேன்.

(ஸ்ரீமத் பாகவதத்தில் 6-வது காண்டத்தில் 19-ஆம் அத்யாயம் 25, 26 சுலோகங்களில் கண்ட பும்ஸவன முறையைக் காண்க.)

400. பாபா, மஹாலஸாபதியை நோக்கி, "உன் மனைவிக்கு கழுத்தில் ஒரு கட்டி இருக்கிறது. அதன் வலி கொடிது. நான் அதைக் குணப்படுத்துவேன். வேறு ஒருவராலும் குணப்படுத்த முடியாது.

அந்தச் சமயத்தில் அவர் மனைவி வெகு தூரமான ஓர் கிராமத்தில் இருந்தாள். அவளுக்குக் கட்டி வந்ததே மஹாலஸாபதிக்குத் தெரியாது. அவள் கட்டியால் வருந்தியதாகவும் கட்டி குணமானதாகவும் ஓர் கடிதம் பாபா சொன்னபிறகு வந்தது.

401. H. S. தீக்ஷித்தின் சகோதரர் நாக்பூரில் அசௌக்யமாய் இருந்தார். அந்தச் சமாசாரம், சீரடியில் பாபாவிடம் இருந்த தீக்ஷிதருக்கு கடிதமூலமாய் கிடைத்தது.

தீ:—என் சகோதரனுக்கு உதவ சக்தியற்றவனாக இருக்கிறேன்.

இதைக்கேட்ட பாபா:—நான் உதவ சக்தியுள்ளவனாய் இருக்கிறேன்.

பாபா வசனத்தின் உண்மையை தீக்ஷித் பிறகுதான் அறிந்தார். பாபாவிடம் அவர் பேசிக்கொண்டிருக்கும் சமயத்திலேயே நாக்பூரில் தீக்ஷித் சகோதரரிடம் ஒருவர் வந்து, "நான் உதவசக்தியுள்ளவனாக இருக்கிறேன்" என்று பாபா சொன்ன வார்த்தைகளையே சொல்லி, பிணியைக் குணப்படுத்தினார்.

402, 403. பாபா B. V. தேவ் என்பவரிடம் "இது 25 ரூபாயைப்பற்றிய தகாராறு. நான் அடிக்கடி 25 ரூபாயைக் கொடுத்துவிடு என்று சொன்னேன். ஆனால் அவன் கேட்கவில்லை. அது எங்கே போகும். இன்னும் 2 அல்லது 4 மாதத்தில் கொடுத்திடுவான்.

இந்தச் சமயத்தில், தேவ், மேல் தரபு உத்தியோகத்துக்குப் போவதையும் சம்பளத்தில் 25 ரூபாய் உயர்வதையும் அவர் மேலதிகாரி நிறுத்தி வைத்திருந்தார். இரண்டையும் முறையே 2, 4 மாதகாலத்தில் அடைந்தார்.

404. பாபாவின் வேலைக்காரன் ரகு என்பவனும் அவனுடன் 5 பேரும், ஒரு மார்வாடி ஸ்திரீயை அவமானப் படுத்தியதாக குற்றம் ஏற்பட்டு, அருவருக்கும் 6 மாத காலம் சிக்ஷை விதிக்கப்பட்டது. ரகு ஜெயிலில் பாபாவை பிரார்த்தித்துக் கதறினன். பாபா அவன் கனவில் தோன்றி, மறு தினம் விடுதலை செய்வதாக உறுதி கூறினர். அதற்கு முன்னலேயே, அந்த வழக்கின் வாக்குமூலம் முதலிய கட்டு ரிகார்டைப் படித்த வக்கீல்களும் மற்றவர்களும் அப்பீலில் ஜயமடைவது அசாத்தியம் என்று நிச்சயித்து விட்டார்கள்.

தாத்யா படேல் :—பாபா இது அப்பீல் கட்டு.

பாபா :—அதை பாவ் S. B. துமால் நாஸிக் ப்ளீடர் இடம் கொண்டுபோ.

பாபா உத்திரவுபடியே ஜட்ஜ்மெண்டையும் அப்பீல் மெமோவையும், ஆமத் நகர் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் பங்களாவுக்கு எடுத்துக்கொண்டு போனர்.

டி. மா. :—எதற்காக வந்தீர் ?

துமால் :—சாயிபாபாவின் வேலைக்காரனுக்காகவும் இன்னும் 5 பேர்களுக்காகவும் கிரிமினல் அப்பீல் செய்ய.

டி. மா. :—விஷயம் என்ன ?

துமால் சுருக்கமாகச் சொன்னர்.

டி. மா. :—இது பலமான கேஸ்போல் தோன்றுகிறதே. ஆறு பேர் நேரில் கண்டதாக சாக்ஷி சொல்லியிருக்கிறர்களே! நீர் என்ன நினைக்கிறீர் ?

துமால் :—என் 6? சீரடி போன்ற கக்ஷி இருக்கும் ஊரில், 60 நேர் சாக்ஷிகளும் கிடைக்கலாம்.

டி. மா :—நீர் அப்படியா நினைக்கிறீர்?

து :—நினைக்கவாவது? நான் சொல்வது உறுதி. சற்றேனும் சந்தேகமில்லை.

டி. மா. :—சரி. எல்லாக் குற்றவாளிகளையும் விடுதலை செய்து விட்டேன். அப்பீல் மெமோவைக் கொடும். ஜட்ஜ்மெண்டையும், இதர கட்டுகளையும் மாஜிஸ்ட்ரேட் படிக்கவில்லை. கீழ்கோர்ட்டுக்காவது, பிரதிவாதிக்காவது, போலிஸாருக்காவது யாருக்கும் நோட்டீசும் அனுப்பவில்லை. அப்பீல்தாரர்கள் ஆதாரமாகக் கொள்ளும் காரணங்களையும், விஷயங்களையும் எழுதி, விடுதலைசெய்து விட்டார்.

டி. மா. :—உங்களுடைய சாயிபாபா, இந்துவா, முஸ்லீமா?

துமால் :—ஹிந்துவல்ல. முஸ்லீமல்ல. இரண்டுக்கும் மேலானவர்.

டி. மா. :—அவருடைய உபதேசமென்ன?

து :—அதை அறிய, நேரிலேயே நீங்கள் போக வேண்டும்.

விடுதலையான 6 பேரும் ஆமத் நகரிலிருந்து சீரடிக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

சீரடியில் பாபா சில பக்தர்களை நோக்கி "இங்கே வாருங்கள். நீங்கள் ஒரு அதிசயத்தைக் காண்பீர்கள்" என்றார்.

சிறிது நேரத்துக்குப் பின்னால், துமாலும், விடுதலையானவர்களும் சீரடிக்கு வந்து சேர்ந்தார்கள். அதுதான் பாபா சொன்ன அதிசயம், அவர் செய்த சமத்காரம்.

405. B. V. தேவ் என்னும் மாம்லத்தார் "ஞானேஸ்வரி"யைப் பாராயணம் செய்ய விரும்பினர். ஆனல் எப்போது அதை ஆரம்பித்த போதிலும், எதாவது ஒரு தடங்கல் வந்துகொண்டே யிருந்தது. ஆகையால் சாயிபாபாவே அதைப் படிக்கச்சொல்லும் வரையில், தாம் அதை படிப்பதில்லை என்று தீர்மானித்தார். பிறகு அவர் சீரடிக்குப் போய் பாபாவிடம் ஞானேஸ்வரியையும் ஒரு ரூபாயும் கொடுத்து, புஸ்தகத்தை அவரிடமிருந்து திரும்பி வாங்கிக்கொள்ள எண்ணினர்.

பாபா :—ஏன் ஒரு ரூபாய்! 20 ரூபாய் கொண்டுவா.

தேவ் 20 ரூபாய் கொண்டுவந்தார். ஆனல் பாராயணத்தைப் பற்றி பாபா ஒன்றும் சொல்லவே யில்லை. அன்று ராத்திரி, பாபாவிடம் அத்யாத்மிக நன்மையடைந்த ஒரு பாலகராம் மாங்கர் என்பவரிடம் பேசி, பாபாவிடம் அவருக்கு என்ன அனுபவம், பாபாவின் அருளை எவ்வாறு பெற்றூர். இவைகளைக் கேட்க விரும்பினர். மறுநாள் சாயங்காலம் சொல்லுவதாய் பாலகராம் சொல்லி விட்டார். மறுதினம், பாபா தேவை நோக்கி, "எனக்கு 20 ரூபாய் கொண்டுவா என்றூர்." தேவ் அப்படியே செலுத்தினர். மறுபடியும் திரும்பிப் போய் பாலகராமுடன் பேசிக்கொண்டிருந்தார். பாலகராம் விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார். அப்போது, பாபா தேவை வரச்சொல்லி யனுப்பினர்.

தேவ் பாபாவிடம் வந்தவுடன்,

பாபா :—என்ன பேசிக்கொண்டிருக்கிறுய்? யாருடன்? எவ்விடத்தில்?

தேவ் :—தீக்ஷித் விடுதியில், பாலக்ராமுடன் தங்களுடைய மகத்துவத்தையும், புகழையும் பற்றி பேசிக்கொண்டிருந்தேன்.

பாபா :—போய் 25 ரூபாய் கொண்டுவா.

அப்படியே தேவ் 25 ரூபாய் கொண்டுவந்து கொடுத்தார்.

பாபா :—மசூதியில் இங்கே உட்காரு.

உடனே பாபா அதிக கோபாவேசத்துடனே "என் கந்தையை ஏன் திருடுகிறாய்? திருடுவதுதான் தலை நரைத்த உனக்கு வாடிக்கையா? வாச்சியினால் உன்னை வெட்டிக் கொன்று விடுவேன்.

இதைக்கேட்ட தேவ் பிரமை யடைந்தார். பாபா சொல்லும் கந்தை எதுவென்று புரியவில்லை. கோபத்தின் முடிவு என்னவாகுமோ என்று தயங்கினார். கோபாவேசமான பத்து நிமிஷத்தில் தேவை யனுப்பிவிட்டு அரை மணி பொருத்து, அவரையும் மற்ற எல்லாரையும் பாபா மசூதிக்கு வரவழைத்தார். தேவை நோக்கி, "தம்பே பாவ்! கந்தையைப்பற்றி பேசியதில் உன் மனம் நோகும்படி செய்தேனா? திருடு ஏற்பட்டால், அதைப் பற்றி சொல்லத்தான் வேண்டும். வேறு போக்கில்லை. அப்படியே யாகட்டும். கடவுள் ஒவ்வொன்றையும் காண்கிறார்."

பிறகு தக்ஷிணையாக 12 ரூபாய் கேட்க அதை தேவ் கொண்டுவந்து கொடுத்தார்.

பாபா :—நீ என்ன செய்கிறாய்?

தேவ் :—ஒன்றுமில்லை.

பாபா :—விடுதியில் ஒவ்வொரு நாள் காலையிலும் பாராயணம் செய். உனக்கு ஓர் திவ்வியமான சரிகை சால்வை பூராவும் கொடுக்க எண்ணினேன். அதற்குள் ஓர் கந்தலை திருடப் போவானேன்?

பிறகு தேவ் ஞானேஸ்வரியை அன்று முதல் பாபா உத்திரவுபடி பாராயணம் செய்ய ஆரம்பித்தார். தடங்

கல் ஒன்றும் ஏற்படவில்லே. பாபாவின் இந்த மகத்தான சக்தியை சொந்த அனுபவத்தா லறிந்தார். அதற்குப் பிறகு, அன்னியரிடம் சென்று அவருடைய அனுபவத் தைக் குறித்துக் கேட்க அவசியமில்லே. இவ்வித சொந்த அனுபவமே, பாபா சொன்ன முழு சரிகை சால்வை யென்றும், அன்னியரிடம் கேட்டு அவர்களின் அனுப வத்தை அறிவது கந்தையைத் திருடுவதற்கு சமானம் என்றும், தேவ் தெரிந்து கொண்டார்.

தடங்கல் இல்லாமல் ஞானேஸ்வரியை பாராயணம் செய்ய முடிந்தாலும், அதனுடைய அர்த்தத்தை அறிந்து கொள்ள அவரால் முடியவில்லே. அவருடைய கனவில் பாபா தோன்றி, "நீ படிப்பதின் அர்த்தத்தை அறி கிருயா" என்ருர்.

தேவ் கண்களில் நீர் ததும்ப, "இல்லே. தங்க ளுடைய 'அருளினுல், அதை எனக்கு கொடுத்தா லொழிய, நான் எப்படி தெரிந்துகொள்ள முடியும்?"

பாபா :—நீ அதிக வேகமாகப் படிக்கிருய். என்னிட அருகில் உட்கார்ந்து படி.

தேவ் :—நான் எதைப் படிக்கவேண்டும்.

பாபா :—அத்யாத்ம.

பிறகு அத்யாத்ம ராமாயணத்தை தேவ் கொண்டு வந்தார். அத்துடன் கனவு முடிந்தது. தேவ் விழித் துக் கொண்டார்.

406. ஒரு தினம் ஆரத்தி முடிந்ததும், பாபா சொன்னதாவது, நீங்கள் எவ்விடம் இருந்தாலும், எது செய்தாலும் இதை எப்போதும் எண்ணியிரு. செய்வ தனைத்தும், சொல்வதனைத்தும் நான் எப்போதும் அறி கிறேன்.

407. 1917 வருஷம் தசரா ஆனபின் காகா மஹாஜனியின் எஜமான் (தாக்கர்சே சேட்) குமாரன், பம்பாயில் இருந்த காகாவிடம் சென்று, அவரை பாபாவிடம் போய், சேட்டின் தேக சௌக்ய விஷயமாய்க் கேட்டு வரச் சொன்னான். அந்த சமயத்தில் H. S. தீக்ஷித் சீரடியில் இருந்தார். அவருக்கு எழுதினால் போதும் என்று காகா அபிப்பிராயப்பட்டார். ஆனால் சேட்டின் மகன், காகாவே போய், நேரில் பாபாவைக் கண்டு, அவர் உத்திரவைப் பெற்று வரவேண்டியதென்றும், அது தான் சேட்டுக்கு திருப்திகரமாய் இருக்குமென்றும் சொன்னான். அதன்மேல் காகா சீரடிக்குப் போகப் புறப்பட்டார். இந்த சம்பாஷணை நடந்தது சுமார் மாலை 5 மணியிருக்கும். அதே சமயத்தில் சீரடியில் பாபா தீக்ஷித்தை நோக்கி, "அவ்விடத்தில் என்ன தர்க்கமும் ஆலோசனையும் நடந்து கொண்டிருக்கின்றன !!" என்றார். மறுதினம் காகா பாபாவிடம் வந்தபோது, பாபா, "நேற்று நான் சொன்ன விஷயம் இது தான்" என்று தீக்ஷித்திடம் சொன்னார். பிறகு தீக்ஷித்தும் காகாவும் ஒருவருக்கொருவர் விஷயங்களை ஒப்பிட்டுக் கொண்டார்கள். பாபா 100 மைல்களுக்கப்பால் இருந்தபோதிலும், ஒவ்வொன்றையும் காண்கிறார் என்றும் அறிகிறார் என்றும் கண்டு கொண்டார்கள்.

408. சேகானில் கஜானன மகராஜ் என்னும் பிரசித்த புருஷர் காலகதி யடைந்தபோது, சீரடியில் பாபா சொன்னதாவது "என் கஜானன் போய்விட்டான்."

சீரடியில் இருந்தவர்களில் சிலர் உடனே சேகானுக்கு எழுதினார்கள். கஜானன் மகாராஜாவைப்பற்றி விசாரித்தார்கள். பாபா சொன்ன தினமே அவர் இறந்து விட்டதாக பதில் வந்தது.

409. தாஸ்கனு மஹராஜ் என்பவர் போலீஸ் கான்ஸ்டேபிலா யிருந்தபோது பாபா சொன்னதாவது. "கனு! உன் போலீஸ் வேலையை ராஜிநாமா கொடுத்து விடு."

தாஸ்கனு:—நான் சப் இன்ஸ்பெக்டர்ஆன மேல் ஒரு வருஷம் அந்த வேலையில் இருந்து, பிறகு அப்படியே செய்கிறேன்.

பாபா:—நீ அதை அடையப் போவதில்லை.

தாஸ்கனு, தன் மேலதிகாரிகளின் உத்திரவில்லாமல், நைஜாம் ராஜ்யத்துக்குப் போனார். கோதாவரி நதியைத் தாண்டி, தன் ஸ்டேஷனுக்கு வரும்போது, அவரிடம் பொறாமை கொண்ட சில கான்ஸ்டேபில்கள் இதைக் கவனித்து கோதாவரி கரையில் வரிசையாய் நின்று கொண்டிருந்தார்கள். கைப்பிடியாய் கனுவைப் பிடித்து சப் இன்ஸ்பெக்டரிடம் சொல்ல தயாராய் நின்றார்கள். அதைக் கண்டு கனு கைநிறைய கோதாவரி ஜலம் எடுத்துக் கொண்டு அந்த கங்கா ஜலத்தின் ஆணையாக தாம் அந்த சமயத்தில் தவறு செய்தும் அதற்காக தண்டனையிலிருந்து தப்பினால் தமது வேலையை விட்டு விடுவதாக சத்தியம் செய்தார். செய்தவுடன் திரும்பவும் நைஜாம் ராஜ்ய கிராமத்திற்குள் புகுந்தார். அங்கே அவரிடம் ஒரு கிராமாதிகாரி ஓடிவந்து கொள்ளைக்காரர்கள் கொள்ளை சொத்தை பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பிடித்து சார்ஜ் செய்ய போலீசார் வேண்டும். வாருங்கள் என்று கூட்டிப் போனதில் கனு கூட்டுக் கொள்ளைக்காரர்களையும் சொத்துக்களையும் பிடித்துக் கொண்டு தன் ஸ்டேஷனுக்குத் திரும்பி, திருடு பிடித்ததை தான் நிஜாம் ராஜ்யத்திற்குள் ஸ்டேஷனுபீசர் விடைபெறுமல் போனதற்கு காரணமாகச் சொன்னார்.

இதனால் தண்டனையிலிருந்து, தப்பித்துக் கொண்டதோடு, உத்தியோகத்தில் சிறப்பும் பெற்றார். ஆகையால் வேலையிலிருந்து விலக அவருக்கு மனமில்லை. பிறகு அவர் தலை மறைந்துக் கொண்டு சீரடி பக்கமாக சவாரி போன போது, பாபா ரோடு நடுவே நின்றுகொண்டு இருந்தார்.

பாபா :—கணு, கையில் கோதாவரி ஜலமெடுத்து, ஸத்யம் செய்தது யார்?

தா :—அதனால் என்ன கெட்டுப் போயிற்று? நான் எப்படியானாலும் முடிவில் ராஜிநாமா கொடுக்கத் தான் போகிறேனே.

பாபா :—பொரு பொரு. இப்படி கஷ்டம் இல்லாமல் இருக்கும்போது, நான் சொல்வதைக் கேட்க மாட்டாய்.

கொஞ்ச காலம் பொருத்து அவருக்கு மற்றொரு சங்கடம் நேர்ந்தது. ஸ்டேஷன் சார்ஜில் அவர் இருந்த போது, ஒரு அபராதப் பணம் தலையாரியால் வசூலாகி ஸ்டேஷனில் தலையாரியால் ஒப்பிக்கப்பட்டும் அது சர்க்காருக்கு அனுப்படவில்லை. அதனால் தண்டனையும் சிறைவாசமும் கணுவுக்கு ஏற்படும்போல் இருந்தது. மறுபடியும் அந்த அபாயத்திலிருந்து தாம் தப்பினால் வேலையிலிருந்து தாம் நீங்கிவிடுவதாக ஸத்யம் செய்தார். அப்படியே தப்பித்துக்கொண்டதால், வேலையை விட்டு விட்டார்.

410. கணு என்பவர் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது, ஒரு தம்பேஸ்வாமி என்பவர் அவரிடம் ஒரு தேங்காயைக் கொடுத்து, அதை ஸ்ரீ சாயி பாபாவுக்கு அளிக்க வேண்டினார். அதை கணு எடுத்து வந்தார். ஆனால் வழியில் கணுவுடன் கூட வந்தவர்கள் அதைத் தின்று விட்டார்கள். கணு மஹராஜ் சீரடிக்கு

வந்து, தேங்காயில்லாமல் பாபாவிடம் போனவுடனே, பாபா அவரைப் பார்த்து, "இதோ ஒரு திருடன். என் சகோதரன் எனக்காகக் கொடுத்த தேங்காய் எங்கே?" என்றார்.

411. ஒரு H. G. ஜோஷி என்னும் டாணு வக்கீலேயும் மற்றொருவரையும், சாயி பாபாவிடம்போய் வணங்கி வர, காகா தோபேஷ்வர் மஹாராஜ் என்னும் சாது உத்திரவு செய்தார். ஆனல் அவர்கள் சிலநாள் கழிந்த பிறகு தான் புறப்பட்டார்கள். அதற்குள் காகா மகாராஜ் காலமாய் விட்டார். அவர்கள் சீரடி மசூதிக்கு வந்தபோது, பாபா கோபாவேசமாய் இருந்தார். பார்ப்பதற்கு அடக்கமுடியாத கோபம்போல் இருந்தது. ஆனல் அவர்களே பாபா கண்டதும், "அந்த இரண்டு பேர்களையும், இங்கே மசூதிக்குள் கூட்டி வா" என்றார். அவர்கள் உள்ளே வந்தபோது, பாபா சாந்தமடைந்தவராய், "அந்தக் கிழவரை கொன்றுவிட்டு இங்கே வந்தீர்களா? என்றார். இது காகா மகாராஜ் இறந்ததைக் குறிப்பிட்டது.

412. பூனவில் பீமாசங்கரர் கோவிலில் இருந்த பிராமண சாது ஒருவர், சிதம்பரராவ் கேசவ காட்கீலே, "சீரடியிலிருக்கும் சாது"வைப் போய் பார்த்து வரச் சொன்னர். காட்கீல் சீரடிக்கு வந்தார். ஆனல் சீரடிக்கு வருவது அது தான் முதல் தடவை. ஆகையால் உபாத்தியாயர் சாமா என்பவரிடம் போய் இவ்விடத்தில் சாது இருக்கிறரா என்றார்.

சாமா:—ஒருவரும் இல்லே. இதோ எதிரில் மசூதியிலிருக்கும் அந்த பித்து பிடித்த பக்கிரிதான் இங்கு இருப்பது.

ஆனாலும், காட்கீலும், அவர் சிநேகிதரும் மசூதியின் ஒரு படி ஏறினார்கள். சாமாவும் அவர்கள் பின் சென்றார்.

பாபா, (கடிந்து திட்டி):—மசூதியின் மேல் ஏறாதே. நான் ஒரு முஸ்லீம். பீமாசங்கர கோவிலில் இருக்கும் பிராமண சாதுவின் காலில் போய் விழு.

பாபாவின் அந்தர்ஞானத்தை அறிந்துகொண்டு, காட்கீல் அவருடைய தீவிர பக்தனானார்.

413. ஒரு சமயம் L. G. முங்கே என்னும் குமாஸ்தா சிதம்பரகேசவ காட்கீல், (சின்னோர் தாலூகா மாம்லத்தார்), அவருடைய சிநேகிதர் வாமன் ராவ் முதலியவர்களோடு, சீரடிக்குப் புறப்பட்டார். வழியில், ஒரு தர்ம சாலையில் ராத்திரி தங்கி யிருக்கும்பொழுது, காட்கீல், பாபாவுக்கு (1) சில பேரீச்சம்பழம் (2) ஒரு ரூபாய் (3) ஒரு கட்டு ஊதுவத்தி இவைகளை சமர்ப்பணம் செய்யவேண்டும் என்று தனியாய் எடுத்து வைத்தார். மறுநாள் இம்மூவரும் சீரடிக்கு வந்தார்கள். மசூதிக்குப் போனவுடன், காட்கீலை நோக்கி,

பாபா:—என்னுடைய பேரீச்சம்பழம், என் ஊதுவத்தி, என் ரூபாய் இவைகளைக் கொடு என்றார்.

414. C. K. காட்கீல், தமது மனதில் பாபாவை கணபதியாக பாவித்து பூஜை செய்து வந்தார். ஒருநாள்

பாபா:—என்ன தந்திரம் இவனுடையது! எனக்குக் கீழே ஒரு எலியைக் கண்டுவிட்டான்.

415. R. S. தேவ் என்பவர் அக்கல்கோட்டுக்குப் போக உத்தேசித்து பாபாவிடம் வந்தார். பாபா, தேவின் மனதில் இருந்த முக்யமான எண்ணத்தை அறிந்து சொல்லிவிட்டார்.

பாபா:—" நான் அக்கல் கோட்டுக்குப்போக வேண்டும் " என்றார்.

மேலும், R. S. தேவுக்கு ரத்னகிரியில் சொந்த சம்பிரதாய குருயிருக்க, பாபாவை நோக்கி, " எனக்கு உபதேசம் கொடுத்து, தாங்கள் என் குருவாக இருக்க வேண்டும் " என்றார்.

பா:—ஒரு குரு அவசியமில்லை. எல்லாம் உன்னிடமே இருக்கிறது. உனக்குள்ளே ஒலிக்கும் கட்டளையைக் கவனித்து நட. நமக்குள்ளேயே நம்மையே நாம் காணவேண்டும். அதுவே குரு.

416. டாக்டர். D. M. முல்கி என்பவர் அதிக காயலாவாய் இருந்து சீரடிக்குப் போவதாக பாபாவுக்கு பிரார்த்தனை செய்து கொண்ட பிறகு குணமானார். ஒரு சமயம், சீரடிக்குப் போக, மன்மாட் ஸ்டேஷன் வரையிலும் போனார். அந்த ஸ்டேஷனில் டிக்கட் கொடுக்கும் குமாஸ்தா, பாபாவை ஒரு துர்நடத்தை யுடையவர் என்றும்—அபாயகரமானவர் என்றும் சொன்னான். இதைக் கேட்ட—டாக்டர்உடனே பம்பாயிக்குத் திரும்பிப்போய் விட்டார். பிறகு அவர் அண்ணி அவரை பாபாவிடம் போகும்படி செய்தாள். டாக்டர் பாபாவைப் பார்த்த போது, டாக்டர் செய்து கொண்ட பிரதிக்ஞையையும், மன்மாட் ஸ்டேஷனில் நடந்த சம்பவங்களையும் பாபா வெளியிட்டார். இதைக் கேட்ட டாக்டர் பாபாவுடைய அந்தர் ஞானத்துக்கு வியந்து மன்மாட் டிக்கட் குமாஸ்தாவின் வார்த்தையைக் கேட்டு நம்பினதற்கு அதிக வெட்கப்பட்டார்.

டா:—பாபா நான் ஊர் போய் சேர உத்திரவு கொடுக்கவேண்டும்.

பா:—சரி, போகலாம். ஞானேஸ்வரியைப்படி. உன் மேஜையின் மேல், உன்னை பிஜப்பூருக்கு மேல் உத்தியோகத்தில் மாற்றியிருப்பதற்காக உத்திரவைப் பார்ப்பாய்.

டாக்டர் திரும்பிப் போனார். பாபா சொன்ன படியே தன் மேஜைமேல் டிரான்ஸ்பர் உத்திரவு இருந்தது.

417. பாபாவின் ஆரத்தி சமயம். அவர் எவ்வித காரணமில்லாமல் அதிக கோபமாய் இருப்பதை G. G. நார்கே கண்டு, பாபாவுக்குப் பைத்தியமா என்று ஆச்சரியப்பட்டார். இது அவர் மனதில் தோன்றிய ஒரு எண்ணமே ஒழிய யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை: பிறகு சாயங்காலத்தில், G. G. நார்கே பாபாவின் கால்களைப் பிடித்துக்கொண்டிருந்தபோது, பாபா நார்கேயைப் பார்த்து, “நான் பைத்தியக்காரனல்ல” என்றார்.

418. ஒரு தினம் G. G. நார்கே M.A., M.Sc. வாமன் ராவ் படேல் B. A., B. L. போல், பகலில் வெளியே சென்று பாபாவுக்காக பிக்ஷை எடுத்துக் கொண்டு வரும் சேவையை தனக்கு பாபா கொடுக்க வேண்டுமென்று தன் மனதில் எண்ணினார். அவ்விடத்தில் இருந்த ஓர் பக்தர்:—பாபா ‘பிக்ஷைக்கு வாமன் ராவை அனுப்பவேண்டாமா’ என்று கேட்டார்.

பா:—(நார்கேயைச் சுட்டிக் காட்டி) இவன் எனக்காகப் போய் பிக்ஷை எடுக்கட்டும் என்றார். நார்கே 4 மாதம் பாபாவுக்காகப் பிக்ஷை எடுத்தார்

419. பக்கிரிகள் அணியும் குப்னிகளை பாபா தானமாய்க் கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்ட G. G. நார்கே, தனக்கும் ஒரு குப்னி பாபா கொடுக்கவேண்டுமென்று தூரத்திலிருந்தே எண்ணினார்.

இதை யறிந்த பாபா, நார்கேயைப் பார்த்து "உனக்கும் ஒன்று கொடுக்கவில்லையென்று என் பேரில் தோஷம் சுமத்தாதே. அந்தப் பக்கிரி [அதாவது ஈசன்] எனக்கு உத்திரவிடயில்லை."

[குறிப்பு] குப்னி பெற்றுக் கொள்வது சன்னியாசம் பெற்றுக் கொள்வதற்கு அடையாளம். G.G. நார்கே சன்னியாசியாய் இருப்பதற்கு இல்லை. அவர் ஆயுள் பூராவும் கிருஹஸ்தராகவே இருக்கவேண்டுமென்பது பாபா கருத்து. அப்படியே கிரகஸ்தராகவே ஆயுள் முழுதுமிருந்தார்.

420. S. B. நாச்னே என்பவர் முதல் முதலாக பாபாவைத் தரிசிக்க வந்தபோது கோபர்கான் ஸ்டேஷனில் இறங்கினர். அந்த ஸ்டேஷன் மாஸ்டர் அவரை நோக்கி, "பாபா ஒரு மாயக்காரன். ஊரில் இருக்கும் மாந்திரீகர் போல் ஜனங்களை ஏமாற்றுகிறார்" என்றார். இது நாச்னே மனதைக் கலைத்தது. அவர் சீரடிக்கு வந்து ரஸ்தாவில் இறங்கினபோது, அங்கே வந்திருந்த பாபா நாச்னேவைக் கண்டவுடன் "என்ன? மாம்லத்தாரிடமிருந்து உத்திரவு பெற்றுக் கொள்ளாமல் வந்தாயா?" என்றார்.

நா :—ஆம்.

பாபா :—இனி அப்படிச் செய்யாதே.

நாச்னே, மாம்லத்தாரின் குமாஸ்தா என்றும், உத்திரவு பெறுமல் வந்துவிட்டானென்றும் பாபா அறிந்ததைக் கண்டு நாச்னே ஆச்சர்யப்பட்டார். பாபா காண்பித்த அந்தர் ஞானமும், அன்பும், அவர் மனதில் இருந்த சந்தேகக் குழப்பங்களை நீக்கிவிட்டன. அதற்காகவே பாபா அவ்விடம் வந்து தம்முடைய அந்தர் ஞானத்தை உபயோகித்து கருணையையும் காண்பித்தார்.

421. ஒரு சமயம், ஒரு பக்தர் சீரடிக்குப் புறப் படும் S. B. நாச்னேயிடம் 2 அணுவும், ஒரு தேங்காயும் இன்னும் சில வஸ்துக்களையும், பாபாவுக்குச் சமர்பிக்கும் படி கொடுத்தார். நாச்னே தேங்காயையும் மற்ற வஸ் துக்களையும் பாபாவிடம் சமர்பித்து விட்டார். ஆனல் 2 அணுவை மாத்திரம் கொடுக்க மறந்து விட்டார். ஊருக்குத் திரும்பும் சமயம்.

நாச்னே :—பாபா! நான் போக உத்திரவு கொடுங் கள்.

பா:—சரி. நீ சிட்டலே வழியாகப் போ. ஆனல் ஒரு ஏழை பிராம்மணனுடைய [அதாவது என்னுடைய] 2 அணுவை மட்டும் உன்னிடமே ஏன் நிறுத்தி வைத்துக் கொண்டாய் ?

இவ்விதமாக நினைவு செய்யப்பட்டு 2 அணுவைக் கொடுத்தார்.

பா:—ஏதாவது ஒன்றைச் செய்வதாய் ஏற்றுக் கொண்டால், அதை சரியாகச் செய்யவேண்டும். இல்லா விட்டால் செய்வதாய் ஏற்றுக்கொள்ளாதே.

422. ஒரு சமயம் நாச்னே தாத்தேயுடன் குதிரை வண்டியில் சீரடிக்குப் போய் சேர்ந்தார். தாத்தே மசூ தியிலிருந்து காணக்கூடாத இடத்தில் நிறுத்திய வண்டி யில் சில ஆரஞ்சிப் பழங்களை பலகாரத்துக்கு வைத்து விட்டு மீதியை மாத்திரம் மசூதியிலிருந்த பாபாவுக்குக் கொண்டு வந்து கொடுத்தார். அந்தப் பழங்கள் எல்லா வற்றையும் அங்கிருந்தவர்களுக்கு பாபா வினியோகம் செய்து விட்டார். பிறகு ஒரு மார்வாடி பெண் பாபாவை நோக்கி, "பாபா பழம்" என்று கேட்டாள்.

தாத்தேயை பாபா நோக்கி, "போய், அந்த ஆரஞ்சி பழம் கொண்டு வா" என்றார்.

423. ராஜப் அலி மஹம்மத் என்பவர் நாசிக் போய் ஒரு கன்ட்ராக்டரிடமிருந்து சாயப்பட்டை எடுத்துக் கொண்டு வரப் போய், பட்டை தயாராக இல்லாததாலும் தயாராக 4 நாளாகும் என்று கன்ட்ராக்டர் சொன்னபடியாலும் அந்த 4 நாள் சீரடியில் தங்கினர். திரும்பிப் போக விரும்பியபோது, பாபா அவரை நோக்கி, "உனக்கு சாமான் இன்னும் தயாராய் இல்லை," என்றார்.

ராஜப் அலி மகம்மது இன்னும் 2, 3 தினங்கள் சீரடியிலேயே தங்கிவிட்டுப் பிறகு நாசிக் போனர். பாபா சொன்னது சரியாய் இருந்தது. 2, 3, நாளுக்கு முன்னமே பட்டை தயாராயில்லை.

424. H. V. ஸாடே என்பவர் மேகா (அதாவது மேகச்யாம) என்னும் பிராம்மணனை பாபாவிடம் சீரடிக்கு அனுப்பினர். அவன் எழுதப் படிக்கத் தெரியாதவன். வரும் வழியில், பாபா மகம்மதியர் என்று ஜனங்கள் சொன்னர்கள். அதனல் பாபாவிடம் மிகுந்த அருவருப்பு கொண்டிருந்தான். ஆனலும், ஸாடே அவனைப் போகும்படி செய்தார். அவன் பாபாவிடம் வந்தவுடன் பாபா "அந்தக் கழுதைப் பயலை உதைத்துத் தள்ளு. ஏனடா? நீ ஒரு பெரிய பிராம்மணன். என்னை வணங்குவதால் உன் ஜாதி கெட்டுப் போகும். வெளியே போடா. இங்கே வரக்கூடாது. இந்த மூளையில்லா மடையனை அந்த புத்தியில்லாத ஸாஹேப் [=H. V. ஸாடே] ஏன் அனுப்பினன்?"

பிறகு மேகா சீரடியை விட்டுப் போய், திரியம்பக் என்னும் சிவ க்ஷேத்திரத்தில் 1½ வருஷம் இருந்து, வயிற்று வலியாலும், இதர வியாதிகளாலும் துன்பப் பட்டு, பாபாவிடம் நம்பிக்கைஏற்பட்டு சீரடிக்கு 1910ஆ

வந்து பாபாவுடைய பூஜாரி வேலே இரண்டு வருஷம் பார்த்து வந்தான். 1912-ல் அவன் இறந்தபோது பாபா தமது கையை அவன் மேல் வைத்து "இவன் என் உண்மையான பக்தன்." என்ருர்.

மேகா பாபாவை சிவன் அவதாரம், சிவனே என்று பாவித்திருந்தான்.

425. நிவாஸ் என்ற ஊரில் இருந்த ஹரிஹர லோண்டா என்பவர் சிலரோடு சீரடிக்கு பாபா தரிசனம் செய்யப் புறப்பட்டார். போகும் வழியில், பிராம்மணுன தான், முஸ்லீமானுன பாபாவுக்கு எப்படி நமஸ்கரிப்பது என்று மனம் நொந்தார். பாபா மசூதி சேர்ந்தவுடன் அவர் கூடவந்த எல்லோரும் பாபாவை நமஸ்கரித்து, தக்ஷிணே செலுத்தினுர்கள். பாபா சந்தோஷமாய் பெற்றுக் கொண்டார்.

இதை சுவல்ப தூரத்திலிருந்து பார்த்த லோண்டா, தன் மனதை பிரயாசையுடன் திடப்படுத்திக் கொண்டு, பாபா சமீபம் வர அடியெடுத்து வைத்தார்.

பாபா :—(சீரி கண்களில் தீப்பொறி பறக்க) அவரை நோக்கி, "என் பக்கத்தில் வர துணிவாயா ? பத்ரம் ! வந்தால் (என்ன ஆகும் என்பது) தெரியும், பார்" என்ருர். தான் பாபாவைப்பற்றி நினேத்தது தவறு என்று அறிந்து மறுபடியும், அவரிடம் அணுக அவர் எண்ணி அடி வைத்தார். முன்போலவே பாபா முருமுருத்தார். பிறகு அவர் மசூதியை விட்டுப் போய் கண்டோபா ஆலயத்தில் பாபாவின் பிராம்மண பக்தரான உபாசினி மகாராஜிருந்ததால் அவர் தரிசனத்திற்காக அந்தக் கோவிலுக்குப்போனுர். அங்கேயும் அவருக்கு அதே மரியாதை. உபாசினி மகாராஜ் தமது காலே நீட்டிக் கொண்டிருந்தார். நரஹரி லோண்டா காலேத் தொட அணுகின

வுடனே காலை தூக்கி மற்றொரு பக்கம் திரும்பினார். மறுபடியும் லோண்டா பாதத்தைத் தொட்டு நமஸ்காரம் செய்ய முயன்றதில் மறுபடியும் உபாசனி திரும்பிக் கொண்டு தரிசனம் செய்வதைத் தடுத்து, சொன்னதாவது !' நீ பிராம்மணன், சாயி பாபாவைத் தரிசனம் செய்வது உனக்குக்குறைவு!! என்னிடம் இங்கே உனக்கு என்னவேலை?"

426. ஹரி கானோபா என்பவர், பம்பாயிலிருந்து சில சினேகிதருடன் சீரடிக்குப்போய் சாயிபாவாவைப் பரிக்ஷிக்க எண்ணிப் புறப்பட்டார். தலையில் ஒரு சரிகை தலைப்பாகையும், காலில் செருப்பும் போட்டுக்கொண்டு போனார். மசூதிக்குப் போய், செருப்பை வெளியே விட்டுவிட்டு, பாபாவை அண்டி தரிசனம் செய்தார். வெளியே வந்தபோது செருப்பைக் காணோம். தேடிப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு தமது ஜாகைக்குப் போய்விட்டார்.

பாபா பாதரக்ஷையைப் பொருக்கி எடுத்து, ஒரு மராட்டிப் பையனைக் கூப்பிட்டு "பையா! இந்த செருப்பை, ஒரு கோலில் மாட்டி, 'ஹரிகா பேட்டா ஜரிகா பேட்டா' என்று கூப்பிட்டுக்கொண்டு போ. யாராவது செருப்பு தனதென்று கேட்டால் அவருடைய பெயர் ஹரிகா பேட்டாவா, (ஹரியின் குமாரனா) என்றும், அவருக்குச் சரிகை தலைப்பாகை உண்டாவென்றும் கேள். அப்படி இருந்தால் செருப்பைக் கொடு" என்றார்.

ஹரி கானோபா இருந்த விடத்திற்கு அருகில் பையன் வந்தபோது, அந்த செருப்பை தம்முடையதென்றும், தம்முடைய பெயர் ஹரியின் பிள்ளை யென்றும், சொல்லி, சரிகை தலைப்பாகையைக் காட்டினார்.

காணேபா என்பது, அவர் தகப்பன் பெயர். அதன் பொருள் ஹரி. ஆகையால் ஹரி காணேபா என்பது அவனுடைய பெயர். பாபா, ஹரிகாபேடா (ஹரியின் பிள்ளை) என்று சொன்னது சரியாய் இருந்தது. தமது பெயரை பாபா எப்படி அறிந்து, செருப்பை அனுப்பியதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்.

1911 வருஷத்தில் சோமதேவஸ்வாமி பாபாவைக் காண சீரடிக்கு வந்தார். ஆனால் மசூதியின் மேல் 2 உயர்ந்த துவஜக்கொடிகள் பறந்து கொண்டிருப்பதைக் கண்டு, "சாதுவின் தாழ்மைக்கு, பெருமை பயிரங்கப் படுத்தும் இந்தக் கொடிகள் ஒவ்வாது" என்று மனதில் எண்ணி, பாபாவிடம் போக, தான் விரும்பவில்லையென்று தன்னுடன் கூட வந்தவர்களிடம் சொன்னார். ஆனாலும் பிறகு பாபாவிடம் போய் அவரைக் காண எண்ணி, அவரிடம் போனார். மண்டபத்தில் இருந்த பாபாவைக் கண்டபோது, பாபாவின் கண்களைப் பார்த்து அவைகளின் தேஜஸ்ஸாலும் சக்தியாலும் அவர் மனம் கவரப்பட்டது. ஆனந்தமடைந்தார். அவர் கண்களில் நீர் ததும்பியது. தொண்டை அடைபட்டது. சந்தோஷத்தால் உடல்குலுங்கியது. ஆனால் பாபாவை அணுகியபோது பாபாகோபத்தால் சீறி, இடிமுழக்கம் போல் தூஷித்தார்.

பா:—உன் இடத்துக்குத் திரும்பிப் போ. மறுபடியும் என் மசூதிக்கு வராதே ஜாக்கிரதை! கொடி பறக்க விடும் என்னை ஏன் தரிசனம் செய்ய வேண்டும்? அது ஒரு சாதுவின் அடையாளமா? இங்கே ஒரு நிமிஷம் கூட தங்காதே.

பாபாவின் பூர்ண அந்தர்ஞானத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

427. ஒரு டண்டிராஜ் V. குஜார் என்னும் பாபு சாஹேப் சீரடிக்குப் போய்கொண்டிருந்தார். அப்போது கானிட்கர் என்பவரின் மனைவி ஒரு ரூபாயை பாபாவுக்குக் கொடுத்துவர அவரிடம் கொடுத்தாள். சீரடியில் 2, 3 தினங்கள் அவர் தங்கினார். ஒவ்வொரு நாளும் அவரிடம் பாபா தக்ஷிணை கேட்டார். பிரதி தினம் தன் சொந்த பணத்தையே குஜார் கொடுத்தார். கடைசி நாளில்,

பா:—இந்த 3 நாள்களாக, உன் தக்ஷிணை கொடுத்துக்கொண்டும் அந்தம்மாள் உன்னிடம் கொடுத்த ரூபாயை, உன் ஜேபியில் ஒளித்துக்கொண்டிருக்கும் வேடிக்கையைக் கவனித்து வந்தேன். அந்த ரூபாயைக் கொடுக்கிறாயா?

பிறகு, கூர்ஜருக்கு ஞாபகம் வந்ததும் அந்த ரூபாயைக் கொடுத்தார்.

428. பாபாவின் மசூதியில் ஒரு பல்லி சொல்லிற்று. அங்கே இருந்த ஒருவர் அந்தப்பல்லி சொன்னதின் கருத்தென்னவென்று பாபாவைக் கேட்டார்.

பா:—அதனுடைய சகோதரி அரங்காபாதிலிருந்து வருவதைப்பற்றி சந்தோஷிக்கிறது என்றார்.

அப்போதே, அரங்காபாத்திலிருந்து நேராய் எங்கும் தங்காமல் ஒருவன் குதிரையின் மேல் வந்து, தன் கொள்ளுப்பையை சீரடி மசூதியின் எதிரே உதறினான். அதிலேயிருந்து விழுந்த ஒரு பல்லி மசூதிக்குள் ஓடி மசூதிப்பல்லியுடன் சேர்ந்து விளையாடிற்று.

429. பரீக்ஷையில் பாஸாகி ஒரு வேலையும் கிடைத்தால் பாபாவிடம் வருவதாய் பிரதிஞ்ஞை செய்த ஒரு சோல்கர் என்பவர், பாபாவின் அருளினால், பரீக்ஷையில் தேர்ந்து, ஒரு வேலையிலும் அமர்ந்தார். அதனால்

ஸீரடிக்குப் போகும் பிரார்த்தனை செலுத்தவேண்டியிருந்தது. ஆனால் அவர் சம்பளம் கொஞ்சமானதால், தாம் குடிக்கும் தேத்தண்ணீருக்குச் சக்கரை போடாமல், அதனால் சுவல்ப தொகையைச் சேர்த்து வைத்தார். பிறகு சீரடியில் பாபு சாஹேப் ஜோக் வீட்டுக்கு வந்தார். அவ்விருவரும் பாபாவிடம் போனார்கள். இந்த விஷயங்களை அவர் சொல்வதற்கு முன்னாலேயே, பாபா ஜோக்கைப் பார்த்து, "ஜோக்! அவனுக்கு தேத்தண்ணீரில் அதிக சக்கரை போட்டுக் கொடு" என்றார்.

430. H. S. தீக்ஷித் என்பவருக்குத் தெரிந்த ஒரு வக்கீல், பண்டரிபுரத்திலிருந்து, மற்றவருடன் சீரடிக்கு வந்து, பாபாவுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தக்ஷிணை செலுத்தினர்.

பாபா:—(சிற்சில) ஜனங்கள் எவ்வளவு மோசக்காரர்! அவர்கள் ஒருவருடைய பாதத்தில் விழுந்தும், காணிக்கை செலுத்தியும், அவரை உள்ளுக்குள் தூஷிக்கிறார்கள்!

இதன் விவரத்தை தீக்ஷிதருக்கு அந்த வக்கீல் பிறகு விளக்கிச் சொன்னார். பண்டரிபுரத்தில் நூல்கர் என்று ஒரு முன்சீப் அல்லது சப் ஜட்ஜ் இருந்தார். அவர் பாபாவின் பக்தர். அவர் கண் உபத்திரவத்துக்கும் மதுமேகம் என்னும் நீர் வியாதிக்கும் பாபாவையே நம்பி சீரடிக்குப் போனார். இதைக் குறித்து, அந்த ஊரில் இருந்த வக்கீல்கள் தங்கள் (bar-room) அரையில் ஒரு சமயம் கூடி "படித்த இந்த சப் ஜட்ஜ், எழுதப் படிக்கத் தெரியாத ஒரு பக்கிரியிடம்போய், கண் வியாதிக்கும் நீர் வியாதிக்கும் சிகித்சை யடைய போனது பார்" என்று கேலி செய்தார்கள். அந்த கூட்டத்தில் மேற்சொன்ன வக்கீலும் சேர்ந்துகொண்டிருந்தாராம். இதை

பாபா அறிந்து குறிப்பிட்டுக் காட்டினர்" என்று வக்கீல் தீக்ஷித்திடம் சொன்னர்.

431. கனடி அப்பா என்னும் சாது, சர்வே டிபார்ட்மெண்டில் குமாஸ்தாவான V. H. தாகூர் B. A. என்பவருக்கு (நிக்கல்தாஸர் எழுதிய) விசார சாகரம் என்னும் கிரந்தத்தைக் கொடுத்து பிற்காலத்தில், "நீர் வடக்கே பிரயாணம் செய்யும்போது, உமக்கு ஒரு அனுபவ ஞானி உபதேசம் செய்வார்" என்று சொன்னர். தாகூர் போன சில இடங்களில், மலையின்மேல் ஏறும் போது எருமைமேல் ஏறிக்கொண்டு வலியால் மிகவும் கஷ்டப்பட்டார். அவர் பாபாவிடம் வுந்து சேர்ந்த போது—பாபாவே இது விஷயம் பேச ஆரம்பித்து, "நீ உபதேசம் பெறுவாய் என்று இந்த சாது சொன்னரல்லவா. ஆனல் ஆத்ம சம்பந்தமான மார்க்கம் கரடு முரடானது. அவ்விடத்தில் எருமை சவாரி செய்து கஷ்டப்பட்டது போல் இங்கேயும் நீ அதிக கஷ்டப்பட வேண்டும்."

432. ஒரு சமயம் V. L. மோடக் என்பவர் ஒரு சிநேகிதருடன் சீரடிக்குப் போனர். ஒவ்வொருவரும், பாபாவுக்கு காணிக்கையாக 2 ரூபாய் செலுத்த எண்ணி, தங்கள் ஜேபியில் தனியாக 2 ரூபாயை எடுத்து வைத்துக் கொண்டார்கள். சீரடியில் வந்ததும் பாபா மோடக்கை நோக்கி எனக்கு தக்ஷிணை கொடுப்பாயா? என்ருர். அவர் 2 ரூபாய் கொடுத்தார். பிறகு மோடக்கின் சிநேகிதரை நோக்கி, நீ எனக்கு தக்ஷிணை கொடுப்பாயா? என்று கேட்டார். அவர் 1 ரூ மட்டும் எடுத்துக் கொடுத்தார். உடனே,

பாபா:—"சிலர் எப்பேர்ப்பட்ட பொய்யர்கள்!! பக்கீருக்குக் கொடுக்க வென்று தங்கள் ஜேபியில் 2 ரூபாய் எடுத்து வைத்துக் கொள்கிருர்கள்! ஆனல்

இப்போது 1 ரூபாய் மட்டும் ஏன் செலுத்துவது? வழிச் செலவுக்குப் பணம் வேண்டுமேயென்றால், மற்றொரு ஜேபியில் பெருத்த தொகை இல்லையா?'' என்றார்.

433. N. R. ஸஹஸ்ரபுத்தே என்பவர் பித்து ஆரம்பித்த ஒருவளுக்கு பாபாவின் விபூதி கொடுத்து குணப்படுத்தினர். இதை அவர் பெருமைக்காக, பாபாவிடம் சொல்லப்பட்டது.

பாபா :—அவன் யாருக்கு உதவி செய்தான்? சொந்த மருமகளுக்குத் தானே?

ஸஹஸ்ர புத்திக்கே, அந்த சம்பந்தம் அப்பொழுது தெரியாது. ஆனல் விசாரித்தபோது, அந்த ஸ்திரி, தன் கோத்திர பந்துவின் மனைவி என்று அறிந்தார்.

434. ஒரு நாள் ஜெயகர் பாபாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு, இருந்தபோது மசூதியின் முன் மண்டபத்தில் சத்ய நாராயண பாராயணம் நடந்தது. மண்டபம் மசூதிக்கு 3 அடி தாழ்ந்திருந்தது. பாபாவின் அருகில் மேலந்தஸ்தில் உட்கார்ந்திருப்பது சரியா தப்பா என்று ஜெயகரின் மனம், அதாவது (1) பாபாவின் அருகில் உட்கார்ந்திருப்பது எப்போதும் நல்லது. மேன்மையானது. (2) ஆகிலும் சத்ய நாராயண பாராயணம் கேட்க மனம் இழுக்கப்படுகிறது. (3) மேலும், சத்ய நாராயண பாராயணம் கீழே நடக்கும்போது, மேலே உட்கார்ந்திருப்பது சரியல்ல. என்று சஞ்சலப் பட்டது. அவருடைய மனம் இவ்விதமாக பிளவுபட்டு நிலை குலைந்திருப்பதை பாபா அறிந்து, அவரை நோக்கி, "போய் பாராயணத்தைக் கவனி'' என்று சொன்னார். இது அவர் மன நிலையை சமனப்படுத்தியது. கீழே இறங்கிவந்து பாராயணத்தைக் கேட்டார்.

435. H. S. தீக்ஷித் 25 ரூபாய் கொடுக்கவும் ஒரு மாலை சமர்ப்பிக்கவும் எண்ணி, பாபாவிடம் போன போது, முதலில் மாலையை மட்டும் கொடுத்தார்.

பா :—இந்த மாலை, 25 ரூபாய் கேட்கிறது.

பிறகு தீக்ஷித் காணிக்கை 25 ரூபாயை செலுத்தினர்.

436. ஒருநாள் காகா என்னும் H. S. தீக்ஷித், பாபாவின் படத்துக்கு பூஜை செய்தபோது, தாம்பூலம் கொடுக்கத் தவறிவிட்டார். பாபாவிடம் போனபோது, பாபா அவரை நோக்கி, "காகா, எனக்கு வெற்றிலை பாக்கு கொடு" என்றார்.

437. ஒரு சமயம் G. S. கபர்தே என்பவரின் குமாரர், பாபா தன் வீட்டுக்குவந்து போஜனம் செய்தது போல் கனவுகண்டார். மறுநாள், உண்மையாகவே, பாபா தன் வீட்டுக்கு வந்தாரா? என்று விசாரிக்க பாபாவிடம் சென்றார். அவர் வாய்திறக்கு முன் கேட்கும் கேள்வியை பாபா அறிந்துகொண்டு,

பா :—நேற்று இரவு நீ எனக்கு அன்னம் கொடுத்தாய். தக்ஷிணை கொடுக்கவில்லை. இப்போது தக்ஷிணை கொடு என்றார்.

438. டஹாணு என்னும் ஊரில் இருந்த உத்தே வேசபூவா என்பவர், சிநேகிதருடன் துவாரகைக்குப் புறப்பட்டு ஒரு கப்பலேரிப் போனர். கப்பலில் இருந்த போது, அவரிடமிருந்த பூராபணமும், டிக்கட்டுகளும் கடலில் தவறி விழுந்துவிட்டன. துவாரகையில், அவருக்குப் பணம் ஒன்றும் இல்லாமையால் சாயிபாபாவுக்கு நடந்த விவரங்களைச் சொல்லி, பணம் தேவையென்று துவாரகாவிலிருந்து கடிதம் எழுதினர். அன்று இரவு சீரடிக்கு அவர் கடிதம் வருமுன்பே, டஹாணுவில்

இருந்த ஓர் தனிகர் கனவில் "உன் தகப்பன் பணம் கடலில் விழுந்துவிட்டது. அவனுக்குப் பணம் அனுப்பு" என்று யாரோ சொன்னதைக் கேட்டார். அவர் உடனே துவாரகையிலிருந்த உத்தேவேச பூவாவுக்கு 50 ரூபாய் மணியார்டர் அனுப்பினர். அதைப் பெற்றுக்கொண்டு, பூவா மறுபடியும் யாத்திரை சென்றார். ஒருநாள் அவர் ஒரு குன்றின்மேல் ஏறி, பாதி வழியில், வரட்டு தாக மெடுக்க, அப்போது பக்கீர் ஒருவர் அவருக்குத் தண்ணீர் கொடுத்து தாகத்தைத் தணித்தார். பூவா, சீரடிக்கு அருகே வந்தபோது, சாமா பாபாவிடம் சென்று, பூவா வருகிறார் என்று சொன்னர்.

பாபா :—நான் அவனைப் பார்த்துக்கொண்டேன் :— என்றவுடன் பாபா இரண்டு வரி சுலோகம் சொன்னர் :—

"கைப்பணம கடலினில் விழுந்ததையும்
கடவுளே பணம்நீர் கொடுத்ததையும்".

439. பாந்த்ராவில் இருந்த V. S. முல்ஹார்கர் என்னும் தலைமை குமாஸ்தா N. G. சந்தோர்கரோடு சீரடிக்கு பிரயாணம் செய்யுங்கால் வழியில் கோபர் காமில் சந்தோர்கர் "பக்கா" (முத்திப் பழுத்த) பக்தர் என்று சொன்னர். சீரடிக்கு வந்து சேர்ந்ததும் அவர் சொன்ன பதங்களையே திருப்பி பாபா சொல்லி, "நானு ஒரு பக்கா பக்தனு, நீ ஒரு கச்சா (முத்தாப் பிஞ்சு) தானு?" என்றார்.

440. முல்ஹோர்கர் என்பவர் பண்டரியிலிருந்து பாபாவுக்காக வென்று தயார்செய்து பணியாரம் கொண்டுவந்து பாபாவுக்குக் கொடுத்தார். பாபா, இவைகளைப் பற்றி யாரும் சொல்வதற்கு முன்பே, "இந்த பணியாரம் பண்டரிபுரத்திலிருந்து எனக்காகவே

தயார்செய்து கொண்டு வரப்பட்டது" என்று சொல்லி, மூல்ஹோர்கரின் மனைவியின் தினசரி காரியக் கிரமத்தை விஸ்தாரமாய் வெளியிட்டார்.

441. **D. D.** ராஸனேயும், அவர் பந்துவும் பாபாவிடம் அநேக தடவைகளில் தக்ஷிணை செலுத்தி, அவர்களிடம் மிகுதியிருந்தது 25 ரூபாய் தான். ஆகையால் ஊருக்கு பணத்துக்கு எழுதி யிருந்தார்கள்.

பாபா :—எனக்கு தக்ஷிணை கொடு.

ராஸனேயும் அவர் பந்துவும் :—பணம் ஒன்றும் மீதியில்லை.

பாபா :—ஏன் பொய் சொல்கிறாய்? உன்னிடம் மீதி 25 ரூபாய் இருக்கிறது. நீ எழுதின பணமும் இப்போது வந்துவிடும்.

442. பாபுராவ் பொராவ்கே சிறுவனாய் இருந்தபோது, பணம் ஒன்றும் இல்லாமல் சீரடிக்குப் போனார். வழியில் மாமன் வீட்டுக்குப் போக, அவர் வெறுங் கையுடன் சாதுவிடம் போகக்கூடாதென்று, அவரிடம் 1ரூபாய் கொடுத்தார். அதை நிஜார் ஜோபியில் போட்டுக் கொண்டு பாபுராவ் சீரடிக்கு வந்து சேர்ந்தார்.

பாபா ;—எனக்கு தக்ஷிணை 1 ரூபாய் கொடு.

போ :—(மாமனிடம் வாங்கிவந்த ரூபாயை மறந்துவிட்டு) என்னிடம் ஒன்றுமில்லை.

பாபா :—உன் ஜேபில் ஒரு ரூபாய் இருக்கிறது பார். பக்கீருக்கு 1 ரூபாய் கொடுக்கவேண்டும்.

பாபூராவ் தன் ஜேபிற்குள் கையிட்டுப் பார்த்தார். அதில் 1 ரூபாய் இருக்கக் கண்டு, அதை பாபாவுக்குக் கொடுத்தார்.

443. குழம்பு என்பவரின் சிநேகிதன் N. V. என்னும் ஒரு அச்சுக்காரன், பாபா தக்ஷிணை கேட்பார்

என்று அறிந்து, தன்னிடம் பணம் ஒன்றுமில்லையென்று தைரியமாய் சொல்லலாம் என்று, தன் பணத்தை குழம்புவிடம் கொடுத்திருந்தான்.

பாபா:—N. V.யைப் பார்த்து, "எனக்கு தக்ஷிணை 2 ரூபாய் கொடு." (குழம்புவைச் சுட்டிக் காட்டி), "இவனிடமிருந்து வாங்கிக் கொடு," என்றார்.

சர்வதர்சியான பாபாவை ஏமாற்ற முடியாது என்று N. V. கண்டுகொண்டான்.

444. தர்கத் என்பவர், வீட்டைவிட்டுப் போகும் போது, அவர் மனைவி பணம் கேட்டாள். தன் ஜேபியில் ஒன்றும் இல்லையென்று எண்ணி, இல்லையென்று சொல்லி வந்துவிட்டார். வெளியே வந்தபிறகு தன் ஜேபியில் 1 ரூபாய் இருப்பதாகக் கண்டார். ஆனாலும் வீட்டுக்குள் போய் கொடுக்கவில்லை, கச்சேரிக்குப் போய் விட்டார்.

சில வாரங்கள் கழித்து, அவரும் அவர் மனைவியும் பாபாவிடம் போனார்கள்.

பாபா அவர் மனைவியை நோக்கி:—அம்மா, இக்காலத்தில், ஆள்கள் எவ்வளவு மோசம். தன் ஜோபியில் 1 ரூபாய் வைத்துக்கொண்டு இல்லையென்று சொல்லி விட்டான் !!

பிறகு, தன் மனைவிக்கு, தாம் செய்த பிழையை தர்கத் சொன்னார்.

445. 1910 வருஷத்தில், லாலா லக்ஷ்மிசந்த், ஓர் இரவு, கனவில், பக்தர்களால் சூழப்பட்ட, தாடியுடைய ஒரு சாதுவைக் கண்டார். அவரை முன்னால் பார்த்ததில்லை. பிறகு தாஸ்கணு மகாராஜ் வைத்திருந்த அந்த கிழவனாரின் படத்தைக் கண்டு, அவர் சீரடியில் இருக்கும் சாயிபாபா என்று தெரிந்து கொண்டார். சீரடிக்

குப் போக நிச்சயித்து, 15 ரூ. செலவுக்கு மார்வாடியிடம் கடன் வாங்கிக் கொண்டார். ரயிலில் போகும் போது, லாலா, சாயிபாபாவைக் குறித்து மற்ற பிரயாணிகளை பற்பல கேள்விகள் கேட்டார். சீரடி வந்து பாபாவின் எதிரில் சேர்ந்தவுடன், ஷை விவரம் ஒன்றும் பாபாவுக்கு யாரும் சொல்லாமலிருந்தும் பாபாவே அவரை நோக்கி, "போக்கிரி! மற்றவர்களைக் கேட்டுக் கொண்டே போகிறான். மற்றவர்களை ஏன் கேட்க வேண்டும்? தன் சொந்த கண்களால் கண்டதை குறித்து, அன்னியரைக் கேட்பானேன்? தான் கனவில் கண்டது, உண்மையா இல்லையா என்பதை ஒருவன் தனக்குத்தானே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். மார்வாடியிடத்தில் கடன் வாங்கினான்! தரிசினத்துக்கு என்ன அவ்வளவு அவசரம்? ஆவலுள்ள ஹிருதயம் இப்போது திருப்தியடைந்ததா?"

446. ஒரு சமயம் அந்த லாலாவுக்குப் பசி. கேசரியை ஸான்ஜா என்றும் சிரா என்றும் சீரடியில் சொல்லுவார்கள். லாலா ஸான்ஜாவின் பேரில் பிரியமுள்ளவர். முதல் நாள் கிடைத்தது போல் தினமும் அதே பிரஸாதம் மசூதியில் கிடைக்கும் என்று பாபாவிடம் வந்தார். அப்பொழுது ஜோக் பாபாவை நோக்கி, "பாபா, என்ன பலகாரம் நைவேத்தியத்துக்கு தயார் செய்யட்டும்" என்றார்.

பா :—ஸான்ஜா தயார் செய். பிறகு லாலாவை நோக்கி ஒருவர் பசியுடன் இருந்தால் அது நல்லது (கொஞ்ச நேரம் கழித்து) இப்போது ஸான்ஜா தயார். ஆரத்தியை சீக்கிரம் முடியுங்கள்.

447. ஒரு தனவான் தன் நன்றியற்ற தத்து குமாரனை அதிக கஷ்டத்துடன் அழைத்துக்கொண்டு, சீர

டிக்கு வந்து பாபாவின் எதிரில் உட்கார்ந்திருந்தார். அப்போது அந்தப் பையன் அந்த இடத்திலிருந்து தன் தத்து தகப்பனிடம் சொல்லாமல் ஓடிவிட வேண்டு மென்று எண்ணினன். உடனே பாபா:—"என்னிடம் உத்திரவு பெற்றுக் கொள்ளாமல் இன்று ஒருவரும் சீரடியை விட்டுப் போகக்கூடாது" என்றார்.

திருட்டுத்தனத்தை பாபா அறிந்துவிட்ட படியால், ஓடாமல் தங்கிவிட்டதும் தவிற தன் எண்ணத்தையும் பாபா அதைக் கண்டுகொண்டு தடுத்ததையும் பையன் வெளியிட்டான்.

448. பாபா ஒரு போலீஸ் உத்யோகஸ்த னிடம்:—எனக்கு தக்ஷிணை கொடு என்று கேட்டார்.

போ:—என்னிடம் ஒன்றுமில்லை.

பா:—பார். உன் ஜேபியில் 50. ரூ. நோட்டு இருக் கிறது.

போ:—இதோ. எடுத்துக்கொள்ளுங்கள்.

பா:—இல்லை. அதை வைத்துக்கொள். சீக்கிரத் தில் அது உனக்குத் தேவையாய் இருக்கும்.

அந்த உத்யோகஸ்தர் திரும்பிப் போய்விட்டார். சீக்கிரத்திலேயே ஒரு கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டு அதிலிருந்து தப்பித்துக்கொள்ள 50 ரூ. அவருக்குத் தேவையாயிருந்தது.

449. ஒரு தியஸாபிகல் சங்கத்தைச் சேர்ந்த ஓர் அம்மை பாபாவின் விசேஷ லீலைகள் (Black Magic) கருப்பு முதலிய துர்தேவதா உபாஸனையால் உண்டா னதோ என்று எண்ணிக்கொண்டு எதிரில் வந்தாள்.

சாயி பாபா:—கருப்பு! இது ஒரு பிராம்மணன். சுத்தமான பிராம்மணன். சுப்ரப் பிராம்மணன். 1000 க் கணக்காக, சுப்ர (பரிசுத்த) மார்கத்திற்கு ஜனங்களை

நடத்திச் செல்லுவார். எந்த காலயவனனும் இம்மசூதி யில் அடி எடுத்துவைக்கமுடியாது.

450. பாபா, குசாபாவை நோக்கி, "உன்க்ஷுத்ர மந்திர ஜாலவித்தைகளை யெல்லாம் நிறுத்திவிட்டபிறகு இங்கே (இந்த மசூதிக்கு) வா".

451. பர்வணியென்ற ஊரில் ஒருவனுக்குப்பில்லி சூன்யம் யாரோசெய்துவிட்டான். அதனால் அவனுக்கு அன்னம் மயிர், சாணி, அமேத்யம், இவைபோல் தோன் றிற்று. துர்வாசனையும் அடித்தது. அவன் துணிகள் திடீர் என்று தனக்குத்தானே நெருப்பு பற்றிஎரிந்தன. அவன் பூஜைகள் செய்தும் மாந்திரீகர்களிடம்போயும் ஒன்றும் பயன் படவில்லை. சீரடிக்குவந்து சேர்ந்தான். அவனை நோக்கி, பாபா :—கடவுள் ரக்ஷிப்பர் என்றார். அதற்குப் பிறகு பில்லிசூன்யத் தொந்தரவு தீர்ந்தது.

452. பூதப்ரேதபிசாசங்களும் பாபாவை அணுக முடியாமல் அவர் ஸான்னிதியத்தால் அகன்றன. ஹன்ஸ் ராஜ் என்பவரை ஒருபேய் பிடித்து இருந்தது. அவர் பாபாவிடம் வந்தார். பாபா அவரைத்தட்டி "பிசாசே ஓடிப்போ," என்றார். பிசாசு அவரைவிட்டு அகன்று விட்டது. பாபாவிடம் தங்கியிருந்ததால், அவருடைய காசரோகமும் நீங்கிற்று. டிப்னீஸ் என்பவருடைய மனைவிக்குப் பேய் பிடித்ததால் அவளை, சீரடிக்குக் கொண்டுவந்தார்கள். பிசாசு வரவர அவளைவிட்டு சில நாளில் பாபாவின் அருளால் முற்றிலும் நீங்கிற்று.

453. பாபா ஒரு சமயம் காச நோயால் வருந் தினார். அதைக் கண்ட R. B. புரந்தரே என்னும் பக் தர் அனுதாபத்தால் அழுதார். அதைக் கண்ட பாபா "அழாதே. இந்த காச நோய், அல்லாவால் எனக்குக்

கொடுக்கப்பட்டது. இன்னும் 2 அல்லது 4 நாளில் போய்விடும்.''

454. ஒரு சமயம் சீரடியில் H.S. தீக்ஷிதை நோக்கி பாபா :—“ உனக்கு சுரம் வரும். எட்டு நாள் தான் இருக்கும். கவலைப்படாதே.''

அப்படியே தீக்ஷித்துக்கு பம்பாயில் சுரம் கண்டது. அவர் பயப்படவில்லை. ஆஹாரம் ஸ்னன முதலியவைகளில் காய்ச்சல்காரர்கள் கவனிக்கவேண்டியபடி பத்யம் ஒன்றும் கவனியாமல் வியாதியில்லாதவர் செய்வதுபோல் செய்து வந்தார். அப்படியிருந்தும் பாபா சொல்படி 8 தினத்தில் சுரம் நீங்கி சுகமடைந்தார்.

பூர்வ ஜன்மச் செய்திகளைப் பற்றி பாபா தெரிவித்தவை

455. பாலா சாஹேப் பாடே என்பவரை நோக்கி பாபா :—“ நீ முன் ஜன்மத்தில் ஒரு க்ஷத்திரியனுக இருந்தாய். இப்பொழுது உனக்கு மனைவியும் மகனுமா யிருப்பவர் முன் ஜன்மத்தில் சாலியர் (நெசவுகாரர்கள்).

456. பாபா :—வாசுதேவ காகா பூர்வ ஜன்மத்தில் ஜயஸிங்க் என்னும் பெயருடைய ராஜபுத்திரன். அப்பொழுது அவன் மகள், துர்நடத்தையுடையவளாய், ஒரு பார்வாரின் வைப்பாட்டியாயிருந்தாள்.

457. கொஞ்ச காலத்துக்கு முன் இறந்த, கொண்டாஜியின் மகன் முன் ஜன்மத்தில் ஒரு மாங்கு (ஜாதி). அதற்கு முன் அவன் என் பாட்டனுக இருந்து, குஷ்ட

ரோகத்தால் இறந்தான். மூன்று ஜன்மத்திலும், நான் சகாயம் செய்து, அவனுடன், அல்லது அவனருகில் விளையாடினேன்.

458. மசூதியின் "மிம்பார்" மேல் இப்பொழுது கூண்டு கட்டிக் கொண்டிருக்கும் குருவி ஜதை இதற்கு முன்னும் அங்கேயே கூண்டு கட்டி இருக்க, ஒரு பாம்பு விழுங்கியது. ஆனால் அவை மறுபடியும் குருவிகளாகவே பிறந்து, அதே யிடத்தில் கூண்டு கட்டிக் கொண்டிருக்கின்றன.

459. 5 நூற்றாண்டுகளாக. அவன் (R. B. புரந்தரே) என்னுடன் சம்பந்தப்பட்டு வருகிறான்.

460. இந்த சகோதரி (சந்திராபாய் போர்கர்) 7 ஜன்மங்களாக என் சகோதரியாகவே இருக்கிறாள். நான் எங்கே போனாலும், என்னை அவள் கண்டு பிடிக்கிறாள்.

461. நீ என்னை அவனுக்கு அறிமுகப்படுத்துகிறாயா!! அவனை (G. G. நார்கேயை) 30 தலைமுறையாக அறிவேன்.

462. சாமா (மாதவ ராவ் தேஷ் பாண்டே)!! 72 தலைமுறைகளாக நான் உன்னுடன் இருக்கிறேன். இதுவரை உன்னை வருத்தியதில்லை.

463. G. S. கபார்தேயின் மனைவி சமர்ப்பித்த நைவேத்தியத்துக்கு முன்னால் பலர் கொடுத்த எதையும் தொடாமல் அவள் கொண்டுவந்த நைவேத்தியத்தை பாபா உடனே எடுத்துக்கொண்டதற்கு, சாமா ஆக்ஷேபித்து, பாபா பக்ஷபாதமாய் இருப்பதாகச் சொன்னார். அப்போது,

பாபா:—முன்னால் அவள் ஒரு வாணியனுடைய பசுவாக விருந்து, எனக்கு அதிகமாய் பாலைக் கொடுத்

தாள். இறந்தபின் ஒரு (மாலி) தோட்டக்காரனின் மக ளாய் பிறந்து, பிறகு ஒரு க்ஷத்திரிய ஸ்திரீயானுள். பிறகு வாணிய குலத்தில் பிறந்து அந்த வாணியனை மணம் புரிந்தாள். பிறகு பிராம்மண ஜாதியில் பிறந் திருக்கிருள்.

வெகு காலத்துக்குப்பின், மறுபடியும் அவளை நான் பார்க்கிறேன். அவள் எனக்கு அன்புடன் கொடுக்கும் உணவு இனிது என்ருர்.

464. பாபா G. S. கபர்தே என்பவரை நோக்கி, "முன் ஜன்மத்தில், நீ என்னுடன், 2, 3 வருஷகாலம் இருந்து நாம் சௌக்கியமாய் ஜீவிக்க சொத்து இருந்தும் பிறகு அரசாங்கத்தில், வேலையில் சேர்ந்தாய்''.

465. ராவ் சாஹேப் யெஸ்வந்த்ராவ் J. கால்வண் கர் 1917-ம் வருஷத்தில் பாபாவிடம் போனுர்.

அவருடைய தலைமேல் பாபா தமது உள்ளங்கையை வைத்து, ஆனந்தத்தில் ஆழ்த்தி, முன் ஜன்மங்களில் உண்மையும் பரிசுத்தமும் கொண்டிருந்தவன் இவன். ஆகையால் தற்போதிய தாயின்கர்ப்பத்தில் நான் அவனை வைத்தேன். அந்த குணங்களை இன்னும் பெற்றிருக் கிருன் என்ருர்.

466. T. A. கார்ணிக் என்பவரை நோக்கி பாபா, நான் உன்னை 2000 வருஷங்களாக அறிவேன். உனக்கு எப்போதும் பிடிவாதம். குரங்கு சேஷ்டை.

467. N. G. சந்தோர்கர் பாபாவை நோக்கி, "என்னை ஏன் வரவழைத்தீர்?''

பாபா :—ஆயிரம் ஆயிரமாய் ஜனங்கள் இருக்கிருர் கள். அவர்களை ஒருவரையும் கூப்பிடாமல் உன்னை மட் டும் கூப்பிட்டதற்கு விசேஷ காரணம் இருக்கவேண்டிய தல்லவா? நான்கு ஜன்மங்களாய் நானும் நீயும் வெகு

அன்னியோன்னியமாக இருந்தோம். அது உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். அவகாசம் கிடைக்கும் போது என்னண்டை வந்துகொண்டிரு.

468. பா:—அவன் (கிஷ்யா) ரோஹில்லாவாக இருந்தான். அப்பொழுது என் அத்தைப் பாட்டியைக் கலியாணம் செய்துகொண்டு இறந்தான். இப்போதைய அவன் தாயின் கர்ப்பத்தில் அவனை நானே கொண்டு வந்து வைத்தேன்.

469. சிரடியில், 12 வருஷங்களாக, தெய்வ பக்தியுடன் ஒரு கிழவன் இருந்தான். அவன் மனைவியும், வயதுவந்த பிள்ளைகளும் ஜால்னுவில் இருந்தார்கள். அவனைத் திரும்ப வரும்படி அடிக்கடி கேட்டுக்கொண்டார்கள். கடைசியாக, அவன் குதிரைசவாரி செய்துகொண்டு போனான். நான் ஒரு வண்டியில், அவனைப் பின் தொடர்ந்து போனேன். சில காலத்துக்குப் பின், இந்த கிழவன், தன் சகோதரரின் இளம் பெண்ணை கலியாணம் செய்துகொண்டு, அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்த பையன் 6 வயதான போது கிழவன் இறந்தான். பிறகு அந்த பையனை பராடர்கள் விஷம்கொடுத்துக் கொன்றுவிட்டார்கள். பிறகு அவன் பாபுவாக (அதாவது தாதா கேல்கரின் சகோதரன் மகனாக)ப் பிறந்தான். பிறகு பாபு 1910 வருஷத்தில் இறந்து, மறுபடியும் பம்பாயில் பிறந்தான். (இதற்கு விவரம் கீழே காண்க.)

470. 1910 வருஷத்தில் M. W. பிரதானும் அவர் மனைவியும் பாபாவிடம் வந்தார்கள்.

பா.—சாமா, இவள் (=M. W. பிரதான் மனைவி) என் பாபுவின் தாயாராக ஆவாள்.

அவள் அப்போது கற்பவதியாயில்லை. ஆனால் 12 மாதங்களுக்குப் பிறகு ஒரு பையனைப் பெற்றாள். பாபா அந்தக் குழந்தை பாபுவே என்று சொன்னபடியால், குழந்தைக்கு பாபு என்று பேரிட்டார்கள். குழந்தை பிறந்த சில மாதங்களுக்குப் பின்னால், குழந்தையுடன் சீரடிக்கு பெற்றோர் வந்து, பாபாவின் எதிரில் குழந்தையை வைத்தார்கள்.


பாபா குழந்தையை தமது கைகளில் வாங்கி, "பாபு, எங்கே போயிருந்தாய்? என்னிடம் அருவருப்பா அல்லது சலித்துப் போனாயா?" என்றார். பாபா சமாதி யடைந்தது 1918ஸு. அடுத்தஸு அதாவது 1919ல் பாபு காலமானான்.

471. ஒரு காலத்தில் ஒரு ஆட்டு மந்தையிலிருந்து, பாபா, இரண்டு ஆடுகளைப் பொருக்கி, அவைகளை 32 ரூபாயிக்கு வாங்கினார். சாமாவும் தாத்யா படேலும், இந்த வியாபாரத்தில், பாபா ஏமாந்து போனார் என்றும் அவைகளிரண்டும் சேர்ந்து 8 ரூபாயே பொறுது என்றும் எண்ணினார்கள். மேலும் அவைகளுக்காக 4 சேர் பருப்பு விலைக்கு வாங்கி, அந்த ஆடுகளுக்குப் போட்டு பிறகு, அவைகளை மந்தையின் சொந்தக்காரனுக்கு அனுப்பிவிட்டார்.

பாபா சாமாவையும் தாத்யாவையும் நோக்கி, "நான் ஏமாந்தேன் என்று நினைக்கிறீர்களா? இல்லை. இந்த ஆடுகளின் சரித்திரத்தைக் கேளுங்கள். பூர்வ ஜன்மத்தில், இந்த ஆடுகள் மனித ரூபமாக, என் அருகில் இருந்தார்கள். முதலில் இவர்கள் சினேகம். என்னிடமும் அன்பு பக்தி வைத்தார்கள். பிறகு அவர்கள் விரோதிகளாய் சண்டையிட்டுக் கொண்டு சண்டையாலே இருவரும் மாண்டார். இப்போது அவர்கள் இந்த ஆடுக



ராவ் பகதூர் M. W. ப்ரதான் 160



ராவ் பகதூர் M. W. பிரதானும் குடும்பமும்

ளாய்ப் பிறந்திருக்கிறார்கள். என் பக்கமாய் அவர்கள் போனபோது என்னை அவர்கள் உற்றுப் பார்த்தார்கள். உடனே அவர்கள் பூர்வ சரித்திரம் என் ஞாபகத்துக்கு வந்தது. எனக்கு அவர்களிடம் இருந்த அன்பினால் மறுபடியும் அவர்களை, என்னருகில் சற்றுநேரம் வைத்துக்கொண்டு, அவர்கள் வயிறுநிரம்பி திருப்தியடைய, உணவு கொடுக்க, இந்த பணமெல்லாம் செலவு செய்தேன். என் வியாபாரம் உங்களுக்கு திருப்தி யில்லாத படியால் அவைகளை மந்தைக்குத் திருப்பி அனுப்பிவிட்டேன்'' என்றார்.

472. பம்பாயில் இருக்கும் தர்கத் என்பவரிட குமாரனை நோக்கி,

பாபா :—பூர்வ ஜன்மங்களில் எத்தனைதரம் உன்னுடன் இருந்தேன், இனியும் மறுபிறப்புகளில் உன்னுடன் இருப்பேன்!! நாம் அடிக்கடி சந்திப்போம். ஈசுவரன் என்னிடம் ஒப்புவித்த ஒவ்வொரு காசுக்கும் (=அதாவது ஜீவனுக்கும்) நான் உத்திரவாதியாயிருக்கிறேன்.

பாபாவின் (பூர்வஜன்ம) சொந்த அனுபவங்கள்

473 :—36-ஆம் வசனத்தில் சேர்ந்திருக்கிறது.

474. நான் ஒரு ஊருக்குப்போனேன். அவ்வூர் கிராமாதிகாரி படேல் என்னை பலவந்தப் படுத்தியதால், ஒரு தோட்டமும், அதன் வழியாக ஒரு கெட்டியான வரப்பு கால்பாதையும் செய்தேன்.

475. ஒரு சமயம் எனக்கு ஹிருதயவலி இருந்தது. அதிக அபாயஸ்திதி அது. என் (இதயத்தில்) மார்மேல் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை வைத்துக்கொண்டேன். அதிலிருந்து கடவுள் என் தேகத்துக்குள் இரங்கினர். வியாதி என்னைவிட்டு அகன்றது. நான் சுகமடைந்தேன்.

476. ஒரு காலத்தில் நான் சிறுவனுயிருக்கும் போது சாப்பாட்டுக்காக உழைக்க வேண்டியிருந்தது. வேலையைத் தேடிப் புறப்பட்டேன். சரிகைத் துணி நெய்யும் வேலை கிடைத்தது. நான் வேலையில் களைத்துப் போனதில்லை. என் பக்கீர் (ஈசுவரன்) எனக்கிட்ட வேலையில் எனக்குக் களைப்பு என்பதே கிடையாது. ஒவ்வொரு தினமும் நான்கு பிள்ளைகள் செய்யும் வேலையை நான் ஒருவனே செய்தேன். ஒரு பையன், ஒரு நாளைக்கு 50 ரூபாய் பொருமான துணிகளை நெய்வான். மற்றொருவன் 100; மற்றொருவன் 150; நான் 600 ரூ துணி நெய்வேன். என் எஜமானனுக்கு மிக திருப்தி. என் பேரில் பிரியம் வைத்து, மற்றவரிடம் என்னைப் புகழ்ந்தார். எனக்கு நேர்த்தியான துணிகளைக் கொடுத்தார். தலைக்கு ஒரு தலைப்பாகை, மேல் வேஷ்டி ஒன்று, ஒரு சால்வை இதெல்லாம் கொடுத்தார். நான் அவைகளை உபயோகப்படுத்தவில்லை. மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டேன். கடவுள் கொடுப்பது எப்போதும் நீடித்திருக்கும். மனிதர் கொடுப்பது அப்படி இராது.

477. நான் பூர்வ ஜன்மமொன்றில் கபீர். துணி நெய்தேன்.

478. எனக்கு ஒரு ஜன்மத்தில் 4 சகோதரர்கள். மூத்தவன் எல்லா பணத்தையும் வைத்திருந்தான். அவனுடைய வெகு சிக்கனம் செய்யும் மனைவி சாப்பாட்டைக்

குறைத்து விட்டு எல்லோரையும் உணவில்லாமல் வைத்து விட்டாள். காண்டராக்ட் வேலையில், நான் பணம் சம்பாதித்து என் மூத்த சகோதரனுக்கும் மற்ற எல்லோருக்கும் உணவு கொடுத்தேன். அவனுக்கு குஷ்டரோகம் பிடித்தது. அவனை யாரும் சேர்க்காமல் விலக்கிவிட்டார்கள். நான்மட்டும் அவனுக்கு பணிவிடை செய்து அன்னம் கொடுத்து, அவன் சாகுமட்டும் அவன் சௌக்யங்களைக் கவனித்து வந்தேன்.

479. நான் ஒரு சமயம் 4000 ஜனங்களுடன் இருந்தேன். அப்போது ஒரு (epidemic) பெருவாரி நோய் ஆரம்பித்தது. அவர்கள் பயப்பட்டார்கள். அந்த 4000 பேர்களையும், நான் திடப்படுத்தினேன். "நான் என் உயிரையாவது விடுவேனே ஒழிய உங்களைச் சாகவிட மாட்டேன்" என்று சொன்னேன். அவ்வாறே சாகாமல் காப்பாற்றிவிட்டேன்.

480. இந்த சீரடி மசூதி (பாபா) இருக்கும் இடத்தில் ஒரு முஜாபர்ஷா என்பவர் வசித்துவந்தார். அவருடைய ஆஸ்தி இதுமுதல்அவர் குமாரன் வசித்துவந்த நன்தூர்கி கிராமம் வரையில் அனேக மைலாகும் பிரதேசம். நான் அவருக்குச் சமையல் செய்து போட்டுக்கொண்டிருந்தேன். இப்போது மசூதியில் அக்னி எரிந்துகொண்டிருக்கும் (துனி) இடத்தில் அவர் காலமானார்.

481. ஒரு பக்தர் பாபாவை நோக்கி; "பாபா உம்முடைய சொந்த ஊர் எது?" என்றார்.

பாபா :—நான் அரங்கபாத்திலிருந்து இங்கே வந்தேன். என் மாமன் இங்கே அழைத்துக்கொண்டு வந்தார்.

பக்தர் :—மாமாவின் பெயர் என்ன? அவர் இப்போது எங்கே இருக்கிறார்?

பாபா :—(சிரித்துக் கொண்டே) அவர் பேர் இல்லாத பித்தம் பிடித்தவர். அவர் இப்போது எங்கேயாவது இருக்கவேண்டும்.

482. என் சகோதரன், ஒரு சமயம் அக்ரமம் செய்ததால் அவனை ஜாதி பிரஷ்டம் செய்துவிட்டார்கள். நான் அவனை விடாமல் கவனித்து, கடைசியாக அவனை ஜாதிக்குள் சேர்த்து வைத்தேன்.

483. 1913 வருஷத்தில் தமது சொந்த முற்பிறவிகளில் ஒன்றை பாபா வெளியிட்டார்.

நாங்கள் இரண்டு சகோதரர். நாங்கள் நடந்து கொண்டே போகிறோம். வழியில் என் தமையன் முன்னே போகிறான். அவனை மிருகங்கள் கடித்துவிட்டதால் அவன் இறந்தான். 5, 6 பேர் என்னிடம் வந்து, "உன் சகோதரன் எங்கே?" என்று கேட்டார்கள். விஷயங்களைச் சொல்லி, "அவனுக்கு சவப் போர்வை கொடுத்தாயிற்று" என்றேன். அவர்கள் நம்பாமல் என் தடையை கவனியாமல் காட்டுக்குள் அவனைத் தேடிக்கொண்டு போனார்கள். மிருகங்களால் அவர்களும் கடியுண்டு இறந்தார்கள். ஒரு கொழுத்த ஸ்திரீ அடுத்தபடி வந்து அதே மாதிரி விசாரித்தாள். அதேவிதமாகத் தேடி, அதே கதியடைந்தாள். சவப்போர்வை அவளுக்கும் கொடுத்தேன். பிறகு நான் போய்கொண்டே இருந்தேன். 5, 6 முஸ்லீம்கள் ஒரு ஆட்டுடன் வந்தார்கள். அதை என்னெதிரில் வெட்டி, அதன் மாம்சத்தை சாப்பிடச் சொன்னார்கள். நான் ஒரு பிராம்மணன் என்றும் அதை சாப்பிட முடியாதென்றும் சொன்னேன். பிறகு அவர்கள் பலாத்காரமாய் அதை என் வாயில் திருத்த

வந்தார்கள். ''நான் கடவுளைப் பிரார்த்தித்து பிறகு சாப்பிடுகிறேன்'' என்றேன். அந்த மாமிசத்தின் மேல் ஒரு துணியை மூடி பிறகு கடவுளை வேண்டிக்கொண்டேன். துணி எடுக்கவே அந்த மாமிசம் பெரிய சிவந்த ரோஜா மலர்களாய் மாறி யிருந்தது. உன் உள்ளங்கையில் ஒரு ரோஜா அடங்காது. அவ்வளவு பெரியவை. அந்த முஸ்லீம்கள் போய்விட்டார்கள். பிறகு நான் நடந்தே போனேன். ஒரு கால் பாதை வழியாய் நடந்துகொண்டு வர, சுத்தமான பரந்த ஜல சமூகம் நாலா பக்கத்திலும் சூழ்ந்திருந்ததைக் கண்டேன். அவ்விடத்திலிருந்து வெளியே போகும் வழி ஒன்றும் காணேம். இது கடவுள் செயல்.

484. பாபா ஒருதரம் சொன்னதாவது :—'' நான் பையனாய் இருந்தபோது சால்வைநெய்தேன். என்வேலையைக்கண்டு சந்தோஷமடைந்த என் தகப்பனார் எனக்கு 5 ரூபாயோ, எதோ எனக்கு வெகுமதிகொடுத்தார்.

485. நான் ஒரு காலத்தில் கிழக்குக் கடலோரம் (கோரமாண்டல் கடற்கரையில்) வசித்தேன்.

486. சீ! அக்பரைப்பற்றியா? அவர் இளம் பிராயத்தில் நான் அவரைக் காப்பாற்றினேன். என்னிடம் அவருக்கு அதிக பயம்.

487. அந்த பைடான் பிராம்மணர் (ஏகநாத்) எனக்குத்தெரியும். அப்படிப்பட்ட யோக்யதையுள்ள பிராம்மணர்கள் இக்காலத்தில் காண்பதரிது.

488. சான்பாய் பட்டேல் என்னிடம் ஓடிவந்து ''என் குதிரையை எங்கே ஓட்டினாய்'' என்று கேட்டான். நான் பிரதியுத்தரமாக,:—'' என்மேல் ஏன் குற்றம் கூறுகிறாய்? போய் பார். அந்தவேலியில் உன்குதிரை மேய்ந்துகொண்டிருக்கிறது.'' என்றேன்.

489. பாலகிருஷ்ண உபாசனியைப் பார்த்து, "நான், ஜான்ஸிராணி சேர்ந்தசண்டையில் இருந்தேன். அப்போது சேனையில் இருந்தேன்.

490. என் பணக்கார தகப்பனுக்கு புதைபொருள் விசேஷமாய் இருந்தது. ஒன்றின்மேல் நான் உட்கார்ந்து, ஒரு பெரிய நாகப்பாம்பானேன். பிறகு, புதையலை விட்டு திரும்பவும் மானிட உருவம் எனக்கு வந்துவிட்டது.

491. பாபா, G. S. காபர்தே. என்பவரை நோக்கி, "இங்கே, (இந்த சீரடியிலோ அல்லது கோதாவரியின் கரையிலோ) எட்டு அல்லது பத்தாயிரம் வருஷத்துக்கு முன்னால் நான் இருந்தேன்"

492. இந்த நிலத்தில் ஒருவயதான பட்டேல் இருந்தான். அவன் என்னை சந்திப்பது வழக்கம். துப்பறிபவர்கள் 4 அல்லது 12 பேர்கள் அவரை கவனிப்பது வழக்கம். அந்த கிழவருக்கும் அவர்களுக்கும் வித்யாச மேற்பட்டு சண்டையுண்டாயிற்று. அப்போது அந்த கிழவனுக்கு உதவிசெய்தேன். அவனை பிடித்து, தண்டிப்பதற்காக ஒரு நகரத்துக்குக் கொண்டுபோனார்கள். நான் போய் வேண்டியவர்களிடம்சொல்லி அந்த கிழவனை விடுதலை செய்வித்தேன்.

493. நான் சிறுவனாய் இருந்தபோது ஜால்னாவிலிருந்து வெகுதூரம் போய்கொண்டிருந்தேன். வழியில் ஒரு மாமரம் இருந்தது. அதன் பழங்களை பூச்சி புகுந்து நாசமாக்கின. மரத்தில் இரும்பு ஆணிகளை நான் அடித்தேன். அதன் தோஷம் பரிஹாரமாயிற்று. பிறகு காய்த்து பழுத்த பழங்கள், பூச்சிகள் இல்லாமல் இருந்தன.

494. பாபா :—(கனிட்கர் மனைவியை நோக்கி) நானும், ஸகாராமும் ஒரே குருவிடம் படித்தோம். நாங்கள் இருவரும், எங்கள் கையாலேயே மாங் கொட்டைகளை நட்டோம். அவைகளிலிருந்து, இரண்டு பழங்களை இப்போது தான் உனக்கு அனுப்பினேன்.

மறுதினம், கனிட்கர் மனைவி கோபர்கானில், தத்தர் கோயில் பிரும்மசாரியிடமிருந்து 2 மாங்கனி களைப் பெற்றுக் கொண்டாள். அப்பொழுது பிரும்ம சாரி :—"இவைகளை உனக்கு கொடுக்கும்படி பாபா அனுப்பினார்" என்றார்.

495. நான் சிறு பையனாயிருந்தபோது ஒருநாள் வெளியே போனேன். திடீரென்று நான் பெண்ணாய் விட் டேன். அது முதல் கொஞ்ச காலம் வரையில் பெண் ணாய் இருந்தேன். பிறகு ஆணாய் விட்டேன்.

பாபாவின் சாதனம் (பூர்வ ஜன்மம்)

496. நான் அதிகமாய் கஷ்டப்பட்டேன். மாதக் கணக்காக ஆகாரமில்லாமல் இருந்து வேப்பம் முதலிய தழைகளைச் சாப்பிட்டேன். கடவுள் தயவாய் இருந்தார். என் மாமிசம் பூராவும் கரைந்து உருகிவிட்டது, எலும்பு கள் நொறுங்கிப் போகும்போல் இருந்தது. ஆகிலும் என்னுயிர் போகவில்லை.

497. ஒரு தோட்டத்தில் ஈச்சம் கள்ளை 200 ரோஹில்லாக்களுக்கு விற்றுக்கொண்டிருந்த ஓர்பெண்ணை என் தந்தை கண்டு அவளைக் கலியாணம்செய்துகொண்டு, அவளால் பிரஜையுமுண்டாயிற்று. அவள் அவருடன்

வேறே ஊர் போக இஷ்டப்படவில்லை. அவர் மட்டும் போனார். பிறகு வியவஸ்தையற்ற வியபிசாரியானாள். அவள் கால்கள் புழுத்துவிட்டன. எனக்குத் தாய் முறையானபடியால் அவள் காலை நான் குணமாக்கினேன். அவள் இறந்தாள்.

498. ஒரு காலத்தில், துணி, தலைப்பாகை, பீதாம்பரம், ஜமக்காளம் முதலியவைகளை நெய்தேன். ஆயினும் அதன் வருமானம் என் சாப்பாட்டுக்கூடக் கட்டவில்லை.

499. என் தாயார் ஒரு மகனை (அதாவது என்னை) பெற்றுவிட்டதாக மிகவும் சந்தோஷமடைந்தாள். நானோ அப்பொழுது அவளுடைய நடத்தையைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். என்னை எப்போது பெற்றாள்? நான் பிறந்தேனா? ஏற்கனவே இல்லையா? இதற்காக அவள் சந்தோஷப்படுவானேன்?

I. ருணானுபந்தம்

ருணானுபந்தத்தால் பாபா ஜனங்களை இழுத்துக் கொள்கிறார்

500. 468 சேர்ந்தது.

501.—

502. முன் ஒரு ஜன்மத்தில், நான் நீ (=G. S. K.) ஜோக், காகா, (=H. S. தீக்ஷித்) சாமா, தாதா கேல்கர் எல்லோரும் நமது குருவுடன் ஒரு பக்கம் அடைபட்ட ரஸ்தாவில் ஒருமிக்க வசித்து வந்தோம். ஆகையால், இப்போது எல்லோரையும் ஒன்றாய் இவ்விடம் கூட்டி வைத்தேன்.

502(*a*). நானு, இந்த மனிதன், நம்மிடம் ஒருபெட்டியை வைத்துவிட்டுப் போனன். இப்போது அதை வேண்டுகிருன்.அதை மறுப்பது சரியல்ல.

இதன் பொருள் :—பூர்வ ஜன்மத்தில் நமக்கு அவன் அனுகூலம் செய்திருக்கிருன். ஆகையால் அதற்கு பிரதி பலனுக உதவி நாம் செய்யவேண்டும்.

503. ருணுனுபந்தமில்லாமல் ஒருவரும் நம்மிடம் வருவதில்லே. ஆகையால், ஒரு நாயோ, பூனேயோ, பன்றியோ, ஈயோ, அல்லது மனிதனே நம்மை அணுகினுல், அவனே அல்லது அதை விரட்டி ஒட்டக்கூடாது.

504. புலியைக் கட்டி ஆட்டிக்கொண்டு திரிந்தவனிட புலி சீரடியில் இறந்து விட்டபோது, அவனேப் பார்த்து பாபா:—"பூர்வ ஜன்மத்தில் அந்தப் புலி உன்னிடம் பட்ட கடன் இப்பொழுது தீர்ந்துவிட்டது."

இந்த ஜன்மத்தில் பாபா பிராமணர் என்பதை குறிக்கும் பாபா வசனங்கள்

505. ஒரு சமயம் V. C. S. என்பவர், S. B. நாச்னேவிடம் 2 அணு கொடுத்து பாபாவிடம் செலுத்தச் சொன்னர். நாச்னே பாபாவிடம் வந்து, காணிக்கையைச் செலுத்த மறந்து, ஊர் திரும்பிப்போக பாபாவை உத்திரவு கேட்டார்.

பாபா :—சரி. சிட்டலே வழியாகப் போ. ஆனல் ஓர் எளியப் பிராமணன் 2 அணுவை கொடாமல் ஏமாற்ருதே.

506. ஒரு சமயம், சௌபல் என்பவரின் மனேவி பாபாவிடம் போய் சேருமுன், பாபாவுக்கு $\frac{1}{2}$ ரூபாய் தக்ஷிணே கொடுக்க எண்ணினுள். பாபாவிடம் போன போது $\frac{1}{4}$ ரூபாய் மட்டும் கொடுத்துவிட்டுத் திரும்பினள்.

அவனை பாபா நோக்கி:—ஏழை பிராமணன் (அதாவது என்) ¼ ரூபாயை ஏமாற்ற ஏன் விரும்புகிறாய்?

506.(*a*) (தமது மருதியைப்பற்றி) இது பிராமணன் மருதி.

506(*b*). ஜையாஜிடம் (தமது சமாதி கட்டட சம்மந்தமாய்)—என் பிராம்மணர்கள் என்னண்டை யிருப்பார்கள்.

506(*c*). மஹாலஸாபதியிடம்—என் பெற்றோர் பத்ரிகிராமம். பிராம்மணர். 449 ஆவதும் பார்க்க.

II. பக்தர்கள் மேல் பாபாவுக்கு இருக்கும் அன்பு

507. பாபாவிடம் அதிக பக்தியுள்ள ஓர் அம்மை, மிகுந்த கஷ்டப்பட்டு ஒரு நேர்த்தியான ஒரு மாலையைத் தொடுத்து, தன் கணவன் (V. S G.) மூலமாய் பாபாவுக்கு அனுப்பினாள்.

பாபா அதைப் பெற்றுக் கொண்டு கழுத்தில் வெகு காலம் போட்டுக் கொண்டிருந்தார்.

பா:—இது அதிக பக்தியுடன் தயாரிக்கப்பட்டது. (V. S. Gஐ நோக்கி) ஒவ்வொரு வாரமும் உன் வீட்டில் என் படத்துக்கு இவ்விதமே மாலை போடட்டும்.

508. நான் அவனை (அதாவது R. B. Pஐ) மறக்க மாட்டேன். அவன் 2000 மைலுக்கப்பாலிருந்தாலும் அவனை எப்போதும் ஞாபகத்தில் வைப்பேன். அவனில்லாமல் நான் துளியும்கூட சாப்பிடமாட்டேன்.

R. B. P. (புரந்தரே) என்பவர் ஒரு வீடு கட்ட முயன்றார். அப்போது பாபா அவரை நோக்கி, வீட்

டைக் கட்டு. எவரிடத்திலும் ஒரு பைசாவும் கேட்காதே. நானே உனக்கு உதவி செய்கிறேன்.

(கட்டின பிறகு மைதானத்தில் அந்த வீடு தனியாக அண்டையில் ஜனப்போக்கில்லாமலிருந்தது).

பாபா :—பயப்படாதே. அங்கே நானே உட்கார்ந்து கொண்டு, உன்னையும், உன் இளம் வயதான மனைவியையும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறேன்.

(அவர்கள் தனிமையாய் இருந்தும் அவர்களுக்கு யாதொரு கெடுதியும் நேரிடவில்லை).

புரந்தரேயின் தாயார் விட்டோபாவைத் தரிசிக்க பண்டரிபுரம் போக விரும்பினாள். அப்போது அவளுக்கும் அவள் மருமகளுக்கும், சீரடி மசூதியிலேயே பாபா உருவம் மறைந்து விட்டோபா ருக்மணி இவர்களுடைய உருவம் தோன்றிற்று. காட்சியை கண்ட இரண்டு மாதர்களும் திருப்தியடைந்தார்கள்.

பிறகு பாபா, (R. B. Pயின் தாயாரை நோக்கி) அம்மா, நீ எப்போது பண்டரிக்குப் போகிறாய்?

அவள் :—என் விட்டோபா சீரடியிலேயே இருக்கிறார். என் பண்டரிபுரம் இதுதான்.

509. நந்தராம் S. மார்வாடி என்பவரின் வீட்டில் பாபா தினந்தோறும் பிக்ஷை எடுப்பதுண்டு. அப்போது சீரடியில் பிளேக் வந்துவிட்டதாலும் நந்தராமுக்கு சுரம் கண்டதாலும், சீரடியைவிட்டுப் போய்விட அவர் விரும்பினார்.

பாபா :—போகாதே. நீ சாகமாட்டாய். நான் இறக்கும் வரையில் உன்னைச் சாகவிடமாட்டேன்.

பாபா அவருக்கு விபூதி கொடுத்தார். அவர் குணமடைந்தார், இன்னும் (1940) ஜீவித்திருக்கிறார்.

510. 1914 வருஷத்தில், ராமநவமி காலம்! கூட்டங் கூட்டமாக ஜனங்கள் திரண்டு பாபாவிடம் கூடினார்கள். அந்தக் கும்பலுக்குள் புகுந்துவர முடியாமல் ஒரு கிழவி தூரநின்று கத்தினாள். "அய்யோ, நான் கிழவி. என்னிடம் கருணைகூர்ந்து பாபா தமது தரிசினம் தாரும்."

பாபா :—"சாமா வெளியேபோய், அவளை அழைத்து வா". பிறகு சாமா வெளியேபோய், முழங்கையால் கூட்டத்தை இடித்துத்தள்ளி அவளுக்கு வழி செய்துக் கொண்டு சாயிபாபாவின் எதிரில் அவளை கொண்டுவந்து விட்டார். அவள் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வடித்தாள். தன் இரு கைகளால் பாபாவின் இடுப்பைக் கட்டிக்கொண்டாள்.

பாபா :—அம்மா, உனக்காக எவ்வளவு காலம் காத்திருந்தேன். எனக்குத் தின்ன ஏதாவது பண்டம் கொண்டுவந்தாயா?

கிழவி :—இதோ ஒரு பழய ரொட்டித்துண்டும் வெண்காயமும். ஒரு முழு ரொட்டி இரண்டு வெண்காயம் இவைகளை எடுத்துக்கொண்டு கிராமத்திலிருந்து நேற்று புறப்பட்டேன். பிரயாணத்தால் களைத்துப் போய், இன்று காலையில் ஒரு நதி ஓரம் உட்கார்ந்து ஒரு வெண்காயத்துடன் அரை ரொட்டியைச் சாப்பிட்டேன். இதோ மீதி இருக்கிறது. அதை தின்னப்பா.

பாபா :—மிகக் களிப்புடன் கட்டைபோல் கெட்டியான பழய ரொட்டியை உடைத்து சாப்பிட்டுக் கொண்டு, "எவ்வளவு இனிப்பு அம்மா! உன் ரொட்டி எவ்வளவு ருசி!" என்றார்.

511. 1913-ல் நாமசப்தாவில், பெரிய கூட்டத்தின் நடுவே பாபா உட்காந்திருந்தார். சாமாவை நோக்கி

பாபா :—"சாமா. வெளியேபோ. அந்த சுவற்றுக்குப் பின்னால், ஒரு கிழவன் உட்கார்ந்திருக்கிறான். அவனிடம் கொஞ்சம் கற்கண்டு இருக்கிறது. அவனிடமிருந்து எனக்குக் கொஞ்சம் கற்கண்டு கேட்டு வாங்கி—வா." சாமா வெளியேபோய், ஒரு கிழவனைக் கண்டார். அவன் வாயிலிருந்து ஸதாகாலம் உமிழ்நீர் சொட்டிக்கொண்டிருந்தது. அவன் மாரில் ஒரு புண் அதினின்று துர்நாற்றமான சீ ஒழிகிற்று. அவன் மேல் ஈக்கள், மொய்த்துக் கொண்டு இருந்தன. அவன் கட்டியது கந்தை. அதன் ஒரு நுனியில் கற்கண்டு மூடிபோட்டு வைத்திருந்தான். கூட்டத்தின் வழியாக சாமா அவனை அழைத்து வந்து பாபா எதிரில் நிறுத்தினார். பாபா கிழவன் தலையின் மேல் தமது கையை வைத்து, ஆசீர்வதித்து கந்தையிலிருந்து ஒரு துண்டு கற்கண்டை எடுத்துக்கொண்டு, "மீதி கற்கண்டை எடுத்துக்கொள்" என்று அவனுக்கு பிரசாதம் அருளினார்.

512. பஸ்ஸீன் என்னும் ஊரில் உள்ள பாபா வக்கார்கர் என்பவர், ஒரு குலை வாழைப் பழத்தை பாபாவுக்கு அனுப்பினார். அதைக் கொண்டு வந்தவன் அதை பாபாவிடம் கொடுக்காமல் பாபாவின் எதிரில் வேடிக்கை பார்த்து நின்றுகொண்டேயிருந்தான்.

பாபா :—(கொண்டு வந்தவனை நோக்கி) "ஒய்! அந்த குலையிலிருந்து ஒரு பழத்தைப் பிடுங்கிக் கொடு. வக்கார்கர் இன்னும் சாப்பிடாமல் காத்திருக்கிறான். வாழைப் பழத்தை பாபா சாப்பிட்டார் என்று தந்தி கொடு. பிறகு தான் அவன் சாப்பிடுவான்."

பாபா சொன்னது போலவே, வக்கார்கர் அந்த நபரிடம் வாழைப் பழக் குலையும் தந்தி சிலவும் கொடுத்து "பாபாவுக்கு பழக் குலை கொடு. அவர் பழம் தின்ற

பிறகு எனக்கு தந்தி கொடு. தந்தி வந்த பிறகுதான் எனக்கு சாப்பாடு. அதுவரையில் உணவை உட்கொள்ள மாட்டேன்'' என்று சொல்லி யனுப்பி யிருந்தான். இது பாபாவால் ஞாபக மூட்டியபின் பழம் கொடுத்து பாபா சாப்பிட்ட பிறகு தந்தி யடிக்கப்பட்டது.

513. 1915 வருஷம் ஜனவரி மாதம் சங்கராந்தி வர, இன்னும் 8 நாள் இருந்தது.

பாபா :—"சங்கராந்தி ஹல்வா அனுப்பு'' என்று ஒருவனிடம் உக்கிராணத்துக்கு சொல்லி யனுப்பினர்.

போனவன், மறுபடியும் திரும்பி வந்து, சங்கராந்தி வர இன்னும் 8 தினங்கள் இருக்கின்றது என்று உக்ராணக்காரி சொன்னதாகச் சொன்னன்.

பாபா :—எனக்கு இப்போது சங்கராந்தி ஹல்வா வேண்டும், என்ருர்.

மறுபடியும் அந்த மனிதன் உக்கிராணத்துக்குப் போனன். அப்போது தான், பாபாவிடம் அதிக அன்பு கொண்டிருந்த பக்தர் ஒருவர், பாபா ருசி பார்க்க வேண்டி, முன்னதாகவே அனுப்பிய ஒரு பொட்டணம் சங்கராந்தி ஹல்வா என்னும் தில் குல் ("சிகிளி'')யை தபால்காரன் கொண்டுவந்து கொடுத்தான். பாபா தமது அந்தர் ஞானத்தால், அது அனுப்பப் பட்டதையும், அது வந்து சேர்ந்த காலத்தையும் அறிந்தார். பாபா, பக்தர் எண்ணத்தை நிறைவேற்ற அதிக ஆவல் கொண்டவர்.

514. ஒரு சமயம் பாபா "எனக்கு கத்தரிக்காய் பொரியல் வேண்டும்'' என்ருர்.

இது ஊரிலாவது உக்கிராணத்திலாவது இல்லே. ஆனல் பாபாவுக்காக என்று ஒருவள் கொடுத்த கத்தரியை தன் வீட்டில் புரந்தரேயின் மனேவி பொரியல்

செய்துகொண்டிருந்தாள். தமக்கென்று அன்பாய்க் கொடுத்ததை தம்மிடம் கொண்டுவரு முன்பே தமது சக்தியால் அறிந்து பிரியத்துடன் பாபா வரவழைத்துக் கொண்டார்.

515. ஒரு கோவிந்த பலராம் மாங்கர் என்பவரை பாபா நோக்கி "எனக்கு ஏதாவது கொண்டுவந்தாயா?" என்று கேட்டார்.

மாங்கர் :—ஒன்றுமில்லை.

பா :—ஒருவரும் எனக்காக உன்னிடம் ஒன்றும் கொடுக்கவில்லையா ?

மா :—இல்லை.

இவ்வாறு பாபா இருமுறைக் கேட்டும் இல்லையென்றே மாங்கர் சொன்னார்.

பா :—அன்பனே ! நீ பந்தராவிலிருந்து புறப்படும்போது, அந்தம்மை (Mrs. R. A. T.) மிகுந்த பிரியத்துடனும், பக்தியுடனும், எனக்குக் கொடுக்கும்படி உன்னிடம் தின்பண்டம் கொடுக்கயில்லையா ?

மா :—ஆமாம் ! பாபா இப்போது நினைவுக்கு வருகிறது என்று சொல்லி மாங்கர் கொடுத்தார். அந்த பண்டம் பழய பேடா, முன்னமே நிவேத்யத்துக்கு வைக்கப்பட்ட பேடா. வேறு ஒன்றும் அனுப்ப இல்லாததால், இந்த பண்டத்தை Mrs. T. மிகுந்த பக்தியுடனும், பிரியமுடனும் மாங்கரிடம் கொடுத்து பாபாவுக்கு அனுப்பினாள்.

516. ஒரு தினம் பகலில் துவாரகா மாயியில் பாபா உட்கார்ந்திருந்தபோது, நைவேத்தியத்துக்கு பக்தர்கள் அநேக பலஹாரங்களைக் கொண்டுவந்து பாபா எதிரில் வைத்தார்கள். பாபா எதையும் தொடவில்லை. பிறகு G. S. கபார்தேயின் மனைவி தன் நிவேத்

தியத் தட்டைக் கொண்டுவந்து வைத்தாள். உடனே, பாபா அதை எடுத்து சாப்பிட்டார்.

சாமா :—தேவா. இது என்ன வித்தியாசம்! மற்றவர் கொண்டுவந்ததை தாங்கள் தொடவே யில்லை. இந்தம்மாள் தட்டைக் கொண்டுவந்தவுடன் அதைப் புசிக்கிறீர்கள்!

பாபா :—பூர்வகாலம் அவள் ஒரு வாணியன் பசுவாக இருந்தாள். அப்பொழுது எனக்கு அதிகமாய் பால் சொரிந்தாள். பிறகு ஒரு (மாலீ) தோட்டக்காரன் மகளாகப் பிறந்தாள். அதற்கப்புறம் ஒரு க்ஷத்திரியன் குலத்தில் பிறந்தாள். பிறகு வாணியச்சியாய் பிறந்து அந்த வாணியன் மனைவியானாள். பிறகு (இப்பொழுது) பிராம்மண குலத்தில் பிறந்திருக்கிறாள். வெகு காலம் கழித்து, அவளை நான் மறுபடியும் காண்கிறேன். அவள் எனக்கு அன்புடன் கொடுக்கும் உணவு சுவையுள்ளது.

517. துர்கந்தம் வீசும் நோஞ்சை குஷ்டரோகி ஒருவன் தன் அழுக்குத் துணியில் ஒரு பொட்டணம் பேடாவைக் கட்டிக்கொண்டிருந்தான். பாபாவுக்கு அதைக் கொடுத்து, பிரசாதமாகத் திருப்பி வாங்கிக் கொள்ள எண்ணினான். தட்டுத் தடுமாறிக்கொண்டு, படிகளின்மேல் ஏறிவர, அதிக நேரம் ஆகி, (துனி) அக்னியிடம் வந்து அதிலிருந்து விபூதியை எடுத்துக் கொண்டு பாபாவிடம் வந்து நமஸ்கரித்தான். அப்பொழுது அவன் சங்கோஜத்தாலும், பயத்தாலும், தான் கொண்டுவந்த பேடாவை பாபாவுக்கு கொடுக்காமல் திரும்பிப் போனான். அவ்விடத்தில் பாபாவுடன் இருந்த மானேஜரின் மனைவி, குஷ்டரோகியின் துர்நாற்றத்தை சகியாமல் அவன் போனவுடன் கஷ்ட நிவர்த்தியால்

மனம் நிம்மதியாய், ' அப்பா! தொலேந்தான் சுவாமி கிருபையால் ' என்று மனதில் நினைத்தாள்.

பாபா (அவளே உற்றுப் பார்த்து):—"ஹோ! அவனைத் திரும்பக் கூப்பிடு" என்ருர். மருபடியும் குஷ்டரோகி வந்து, நமஸ்கரித்து, தன் கையில் பேடா முடிச்சை வைத்துக்கொண்டிருந்தான்.

பாபா அதை தாமே வாங்கி எடுத்துப் பிரித்து, "ஹோ! இது என்ன! பேடாவா?" என்ருர். அதிலிருந்து ஒரு கட்டி எடுத்து, மானேஜர் மனைவியிடம் எறிந்து "இதைச்சாப்பிடு" என்ருர்.

பிறகு பாபா ஒருகட்டி பேடாவை எடுத்து தமது வாயில் போட்டுக்கொண்டார். அந்தம்மை மிகவும் மனம் செத்தவளாய்போனுள். ஆகிலும் பாபா உத்திரவானதால் பேடாவை விழுங்கி விட்டாள். இதனுல் ஜனங்களை இகழப்படாது என்றும் குருவினிடம் பூர்ண விசுவாசம் வேண்டும் என்றும் புத்திமதிகளை பாபா தனக்கு கற்பித்தார் என்று அறிந்துகொண்டாள்.

518. நாக்பூரில் சப் ஜட்ஜாயிருந்த K. K. கர்தே B.A., LL. B. என்பவர் பூனு "ரே" மார்கட்டில், மூன்று நேர்த்தியான மாம்பழங்களை வாங்கிவந்து பாபாவுக்கு சமர்பித்தார்.

பாபா அவைகளை வாங்கிக்கொண்டு, ஹோ! இந்த பழங்களை அவர்தானே எனக்காக, மார்கட்டிற்குப் போய்வாங்கினுர். அந்த பண்டிதர் முன் தினத்தில் செய்ததுபோல் இல்லாமல் ஒன்றையும் ருசி பார்க்காமல் இவர் எல்லாவற்றையும் என்னிடம் கொண்டுவந்திருக்கிருர். அந்தபண்டிதரோ எனக்குக் கொடுப்பதாகவென்றே ஒரு பூரா பொட்டணம் லட்டு வாங்கினுர். ஆனுல் வழியில் கோதாவரியில் ஸ்நானம் செய்தபிறகு,

பசியாயிருந்ததால், அதிலிருந்து சில லட்டுகளைச் சாப்பிட்டுவிட்டு, மீதியை என்னிடம் கொண்டுவந்தார். அதைப்போல் இந்தப்பழங்கள் சேஷம் (சாப்பிட்ட மீதி) அல்ல.

519. ஒரு சமயம், பிக்குபாய் பய்யாஜி படேல் ஆமத் நகரிலிருந்து சீரடிக்கு பாபாவுக்காக ஒரு பூமாலையும் தர்பூஜி பழமும், பேடாவும் கொண்டுவந்தாள். இவைகளுடன் அவள் கோபர்காம் அருகில் கோதாவரி நதியைக் கடந்தாள். அப்போது தன் சிநேகிதி ஒருவளுடைய மானம் கெட்டதும் மிக கோரமானதுமான சாவு அவள் ஞாபகத்துக்கு வந்தது. அங்கே தூக்கித்து, அவ்வித கோரமான சாவை பாபா தடுக்க யில்லையே என்று, பாபாவின்மேல் குறைகூறி மனம் சலித்துக் கொண்டாள். ஆனால், சீரடியில் பாபாவிடம் சமர்பிக்கும்போது, அந்த எண்ணங்களை யெல்லாம் மறந்துவிட்டாள்.

பாபா:—இந்த மனவேதனை மாலை எனக்கு வேண்டாம்.

ஆகிலும் அவள் அந்த மாலையை கையில் எடுத்துக் கொண்டு, அவருக்குப் போட அருகில் போனாள். ஆச்சரியம்!! அந்த மாலை 3 துண்டாகி, ஒவ்வொரு கையிலும் ஒரு துண்டும், கீழே ஒரு துண்டுமாகவும் விழுந்தது. பிறகு அவள் தர்பூஜி பழத்தையும், பேடாவையும் படைத்தாள்.

பாபா:—இவள் கோதாவரி நதியில் அழுதுகொண்டும் கண்ணீர் விட்டுக்கொண்டும், மனக் கசப்புடனும் இதைக் கொண்டுவந்தாள். ஆகையால் இவைகளை நான் எடுத்துக்கொள்ள மாட்டேன்.

520. கானிட்கர் என்பவன் மனைவி, தன் குமாரத்திகளுடன் பாபாவிடம் போனாள். போகும்போது, ஒரு கூடை நிறைய நேர்த்தியான திராக்ஷைப் பழங்களை, அதிக அன்புடன் பாபாவுக்குக் கொண்டு வந்தாள்.

பாபா :—(அன்பான குரலுடன்) நீ என்ன கொண்டு வந்தாய்? திராக்ஷைப் பழமா?

கானிட்கர் மனைவி :—ஆம். தங்களுக்காகவே நாஸிக்கிலிருந்து அதைக் கொண்டுவந்தேன் என்று சொல்லி அந்தக் கூடையை அவருக்கு சமர்பித்தாள். அதையெடுத்து சில திராக்ஷ பழங்களை பாபா பிரட்டிக் கொண்டிருந்தபோது, அவளுடைய குமாரத்தி, பானு தாயி என்பவள் "அய்யய்யோ! முழு கூடை நல்ல பழமும் கொடுத்து விட்டாளே!! பாபா அந்த பழங்களை நொடியில் எல்லோருக்கும் பகிர்ந்து பாழாக்கி விடுவார். நாமும் தின்னபாடுமில்லை பாபாவும் தின்னப் போகிறதில்லையே?" என்று தன் மனதில் துக்கப்பட்டாள். பாபா அந்தக் கூடையை அக்கணமே அவள் தாயாரண்டை தள்ளிவிட்டு "போ—உன்னுடையதை நீயே எடுத்துக் கொள்" என்றார்.

அந்தத் தாயின் மனம் நொறுங்கிவிட்டது. பாபா அவள்மேல் அனுதாபம் கொண்டு மறுபடியும் கூடையை எடுத்து உலர்ந்ததும் உபயோகமுமில்லாத சில பழங்களைப் பொருக்கி எடுத்துக்கொண்டு மீதியைத் திருப்பிக் கொடுத்து "போ—இப்போது உன் குழந்தைகள் இதைச் சாப்பிடட்டும்" என்றார்.

அம்மாதும் அவள் குமாரத்திகளும், கூடையுடன் திரும்பி வரும்போது, பானுதாயி தன் தாயை நோக்கி, "அம்மா! நான் ஏன் அப்படி நினைத்தேனோ தெரியவில்லை. ஆனல், நீ கூடையைக் கொடுத்தபோது, நான்

நினைத்த தென்னவென்றால் "என்ன! கூடை நிறைய நல்ல பழம் முழுவதையும் கொடுத்து விட்டாளே! நிமிஷத்தில் எல்லாம் சிதறிப் போகுமே! அவரும் ஒன்றும் சாப்பிடப் போவதில்லை. நமக்கும் கிடைக்கப் போகிற தில்லை."

பாபாவின் செய்கையும், வார்த்தைகளும், அந்த தாய் மனப் பூர்வமாக சமர்பணம் செய்ய எண்ணியதை பாபா சிலாகித்தாரென்றும், குமாரத்திக்கு அதை கொடுத்துவிட பிரியமில்லாததால் அந்த தானம் மனப் பூர்வமாய் கொடுக்கப்படவில்லை யென்பதையும் அறிவித்தன.

521. பல்வந்த் G. கபர்தேக்கு வந்த பிளேக்கை பாபா தமக்கு வரவழைத்துக் கொண்டது.

1911-ம் வருஷத்தில், சீரடியில் பிளேக் உண்டாயிற்று. அவ்விடத்திற்கு வந்த பல்வந்த் கபர்தே என்பவருக்கு (G. S. கபர்தேவின் குமாரன்) பிளேக் சுரம் கண்டது.

G. S. கபர்தேவின் மனைவி :—(பாபாவை நோக்கி) பாபா நாங்கள் போக உத்திரவு கொடுங்கள்.

பாபா :—இப்போது மப்பாய் இருக்கிறது. பிறகு மழை வரும், அதற்குமேல் பயிர்கள் வளரும் மேகங்கள் கலையும். உனக்குப் பயமேன்?

அம்மாது இதன் பொருளை அறிந்து கொள்ளவில்லை. பிறகு, தம்முடைய குப்னியை எடுத்து தமது தேகத்தில் இருந்த பிளேக்கட்டிகளைக் காட்டி "தாயே! பார்! உங்களுக்காக நான் வருந்தி, உங்கள் கஷ்டத்தை நீக்கவேண்டியவனா யிருக்கிறேன்."

அந்த பிளேக் சுரத்தை பல்வந்த் தேகத்திலிருந்து பாபா இழுத்துக்கொண்டார். இரண்டொரு நாளில்

பல்வகத் சுரமும் விட்டுவிட்டது. பாபாவும் சொஸ்த மானுர்.

522. ஒரு சமயம் பாபாவின் பக்கத்தில் R. A. தர்கத் என்பவரும், காண்டஹாரைச் சேர்ந்த மீர் ஜமான் என்பவரும் மற்றவர்களும் பாபாசாவடியில் படுத்து, தூங்கிக்கொண்டிருந்தார்கள். நடு நிசியில், மீர் ஜமான் எழுந்து பாபாவை நோக்கி, "பாபா. ஹிந்துக்கள் உம்மையும், இஸ்லாம் மதத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கிறுர்கள். எனக்கு அனுமதி கொடுங்கள். உடனே அவர்கள் கழுத்தைத் துண்டித்து விடுகிறேன்."

பா :—நான் பித்தன். என்னை தொழுதுவரும் ஹிந்துக்களும் பித்தர்கள். இவர்கள் இவ்வாறு செய்வதற்கு நான்தான் என்பைத்தியம் தான் காரணம். அவர்கள் உத்தரவாதிகளல்ல, யாருடைய தொண்டையையாவது துண்டிக்கவேண்டுமானுல், என் தொண்டையைத் துண்டி, என்றுசொல்லி தமது தொண்டையைக் காட்டினுர். அதைத் துண்டிக்க மீர்ஜமான் துணியவில்லை.

523. 1910-ம் வஷருத்தில் பாபா. G. S. கபர்தேயை நோக்கி, "இரண்டு வருஷங்களாக எனக்குக் காயலா. வெறும்ரொட்டியும் நீரும்தான் சாப்பாடு. அதைக்கொண்டே உயிர்போகாமல் நின்றிருக்கிறது. மேலும் எனக்கு நார்புன் (நரப்புசிலந்தி) இருக்கிறது. ஜனங்கள் குவியலாக என்னிடம் வருவதால் ஓய்வென்பதே எனக்குக் கிடையாது. என் உற்பத்தி ஸ்தானம் நான் சேரும்வரையில் இவ்விதமாகவே என்னைத்தொடரும், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. என் உயிரைக் காட்டிலும் என்னுடையவர்கள் (அதாவது என்னையண்டின பக்தர்கள்) நன்மையே மேலானதென்று நான் மதிக்கிறேன்.

III. பக்தர் மனம் நோவாமலிருக்க அருளுதவி

ஒரு சமயம் ஹரிபாவ் பன்ஸே டஹாணுகர் என்பவர் தமது தாயின் விருப்பத்துக்கு விரோதமாய் ராமேச்வரயாத்திரை செய்யப் புறப்பட்டார். அந்தத் தாய் மனம்நொந்து அவர் திரும்பிவரும் வரையில் உபவாசம் இருப்பதாய் நிச்சயம் பண்ணிக்கொண்டு உபவாசமாயிருந்தாள். சீரடியில், பாபாவுடன் தன்மகன் தங்கி இருப்பதாகக் கேள்விப்பட்டதும் "பாபா உண்மையான சாதுவானல், என் மகன் செய்யும் யாத்திரையைத் தடுத்து, அவனை வீட்டுக்கு அனுப்பவேண்டும்" என்று ஈசனை வேண்டிக்கொண்டாள்.

பாபா, ஹரிபாவை நோக்கி, "தக்ஷிணைகொடு" என்ருர். ஹரி கொடுத்தார். இவ்விதமாக அவரிடமிருந்து ராமேச்வரம் போய்வர அவர்வைத்திருந்த முழு ரயில் சார்ஜையும் பாபா வாங்கிக்கொண்டு விட்டார். அவரை நோக்கி, "வீட்டுக்குப்போ. நீ வீடு விட்டது முதல் ராமேஸ்வரம் உபவாசமாய் இருக்கிறது. நீ இப்போதே திரும்பிப்போகாவிட்டால் ராமேஸ்வரம் போய்விடும். அதன் ஸ்தானத்தை பத்ரேஸ்வர் வந்தடையும்.

பாபா உத்திரவுப்படியே ஹரிபாவ் வீட்டிற்குப் போனர். தன் தாயார் உபவாச மிருப்பதைக்கண்டார். அவள் பிரார்த்தனையையும், பாபா அதற்கு இணங்கினதையும் அறிந்து கொண்டார். (பாபாவின் உபதேசம் இதில் என்னவென்ருல் தாயாரைவிட ராமேச்வரம் பெரியதல்ல.) C. F. 'ந மாதுர் தைவதம் பரம்'

525. பாபாவிடம் அதிக விசுவாசமாய் இருந்த குசால்பாவ் என்பவரை ரஹாதாவிலிருந்து அழைத்துக் கொண்டுவர, ஒரு டாங்காவில், (அதாவது குதிரை வண்டியில்) பாபா H. S. தீக்ஷித் என்பவரை அனுப்பினார். இதற்குக் காரண மென்னவென்றால் அதற்கு முந்தின தினம், குசால்பாவ், வெகு நாளாக பாபாவைப் பார்க்கவில்லையேயென்று நினைத்தார். அன்று இரவு, பாபா அவர் கனவில் தோன்றி, "சீரடிக்கு வா" என்றழைத்தார். காலையில் தமது வண்டிக்கு குதிரையில்லாதிருப்பதைக் கண்டு, தாம் போக முடியாததால், தமது மகனை சீரடிக்கு (தமக்கு பதிலாக) கால் நடையாகவே போகும்படி சொன்னார். அவன் சீரடிக்கு வருமுன், பாபா தீக்ஷித்தைப் பார்த்து, "காகா! ஒரு டாங்காவில் ரஹாதாவுக்குப்போ. குசால்பாவை அழைத்துக் கொண்டுவா" என்றார்.

தீக்ஷித், குசால்பாவிடம் வந்தபோது, தமது குதிரை இல்லாமல் குந்தகமாயிருக்கிறதைச் சொன்னார்.

தீக்ஷித்:—அதனால்தான் ஒரு டாங்காவைக் கொண்டுபோய், அதில் உங்களை அழைத்துக்கொண்டுவா என்று பாபா சொல்லி என்னை யனுப்பியிருக்கிறார் என்றார்.

526. ஒரு தினம் பாபா "என் வயிறு வலிக்கிறது" என்றார். அப்போது மவுஷே என்பவள் ஒரு செங்கல்லை பழுக்கக் காய்ச்சி, பாபாவின் அடி வயிற்றில் வைத்து, பிறகு அதை எடுத்து, முரட்டடியாய் தன் முழு பலத்துடன் பாபா அள்ளையை அழுத்திப் பிடித்தாள். அவ்விடத்தில் இருந்த, S. B. நாச்னேக்கு அது பொருக்க முடியாமல் கத்தினார்.—"நிறுத்து! நிறுத்து! கொஞ்சம் மெதுவாய் பிடி. பாபாவுக்கு வலிக்கும்" என்றார்.

பாபா நாச்னேயை நோக்கி, "வெளியே போ. நீ குறுக்கே வராதே."

527. ஒரு சமயம் சதாசிவ T. வடாவ்கர் என்பவர் பாபாவின் எதிரில் உட்கார்ந்திருந்தபோது அவருக்குப் பசி. ஆகிலும் அதைச் சொல்லுவது மரியாதையல்ல என்று சும்மாயிருந்தார். அதே சமயம் ஒரு பொட்டளம் பேடாவை பாபாவிடம் யாரோ கொண்டுவந்து கொடுத்தார். சாதாரணமாய், எந்த வஸ்துவையும், தம்மிடம் கொண்டுவந்தபோது பாபா தொடுவதில்லை. ஆனல் இந்த சமயத்தில் அந்த பொட்டளத்தைப்பிரித்து ஒரு பேடா எடுத்து வடாவ்கர் மடியில் எறிந்தார். வடாவ்கர் அதை எடுத்து தம் கையில் வைத்துக்கொண்டார்.

பாபா:—சும்மா நீ கையில் வைத்துக் கொள்வதற்காக அது கொடுக்கப்பட்டதல்ல.

பிறகு வடாவ்கர் அதைத் தின்றார். பாதி பசி ஆறியது. மறுபடியும் இன்னும் ஒரு பேடாவை பாபா எறிந்தார். அதை வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோகலாம் என்று வடாவ்கர் தமது கையில் அதை வைத்துக் கொண்டிருந்தார்.

பாபா:—இது நீ சும்மா வைத்துக்கொண்டிருப்பதற்கு கொடுக்கவில்லை. பிறகு வடாவ்கர் அதையும் சாப்பிட்டார். அவர் பசி பூராவும் தணிந்துபோய்விட்டது. அதற்குமேல் பாபா அவருக்கு பேடா போடவில்லை.

528. 1911 ம் வருஷம், B. V. வைத்யா என்பவர் தமது குடும்பத்துடன் சீரடிக்குவந்து இரவு 1 மணிக்கு ஸாடேவாடாவில் வந்திறங்கினர். பிறகு கொஞ்சம் பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டார். பொழுதுவிடிந்ததும், பாபா, வாடாவில் இருந்து மசூ

திக்குவந்த ஜனங்களை நோக்கி, "என் குழந்தைகள் வந்திருக்கிறார்கள். அவர்களை யாரும் விசாரிக்காமல், உபவாசமாய் போட்டீர்கள்" என்று கோபமாய் சொல்லி, மசூதியில் இருந்த எல்லோரையும் துரத்தினர்.

பிறகு சீரடியைவிட்டு நாஸிக்போக, பாபாவிடம், வைத்யா உத்திரவு கேட்டார்.

பாபா :—நாசிக்குக்கா போகிறாய்? எதற்காக நாஸிக்குக்குப் போகவேண்டும்? அங்கே பிளேக் இருக்கிறது. அங்கே போகவேண்டாம். வீட்டுக்கு உன் குஞ்சு குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போ.

வைத்யா, பாபாவின் படத்தை எடுத்து பாபாவின் கையில் கொடுத்தார். பாபா அதை வாங்கி மறுபடியும் பூஜை செய்வதற்காக அதைத் திருப்பிக் கொடுத்தார். பிறகு பாபா அவரை நோக்கி, "நீ இப்போது போகலாம்." வைத்யாவும் அவர் குடும்பத்தாரும் ஒரு டாங்காவில் ஏறிக்கொண்டு கோபர்காம் ஸ்டேஷனுக்குப் போனதும், அங்கே ரயில் இவர்கள் வருமுன்னமேயே போய்விட்டிருந்தது. தாங்கள் நிர்பாக்கியரென்று நினைத்தார்கள், கொஞ்சநேரம் ஸ்டேஷனிலேயே தங்கியிருந்தார்கள். பிறகு அடுத்த வண்டியில் ஏறி, மன்மாட் ஸ்டேஷன் வந்தார்கள். அங்கே தெரிந்ததென்னவென்றால், தாங்கள் கோபர்காமில் ரயில் தப்பிப்போனது தைவானுகூலம். தப்பிப்போன ரயிலில்வந்து அப்பொழுதே அங்கிருந்து பம்பாயிக்குப்போன ரயில் வண்டிக்கு அபாயம் நேரிட்டது. அந்த விபத்தில் ஒரு ரயில்வண்டி நொருங்கிப்போய் விட்டதென்பதை மன்மாடிலிருக்கும்போது இவர்களுக்குத் தெரியவந்தது.

529. ஒரு சமயம் M. W. பிரதான் என்பவரின் மனைவி, துவாரகாமாயியில், பாபாவுக்கு பூஜை செய்து

கொண்டிருந்தாள். அப்போது பாபா திடீரென்று பூஜையை நிறுத்தி, அவளை நோக்கி.

பா :—நிறுத்து. உன் ஜாகைக்குப் போ.

அவ்விதமே அவள் பூஜையை நிறுத்தி தன் ஜாகைக்குப் போனாள். அங்கே அவள் குழந்தை வீர்வீர் என்று அழுதுகொண்டிருந்தது. அதை சமாதானப்படுத்தி, தூங்கவைத்து பாபாவிடம் திரும்பிவந்தாள்.

பா :—இப்போது பூஜை செய். இவ்விதம் வெகு தூரத்தில் செய்யப்பட்ட சத்தத்தை உணர்தல் அந்தர் ஞானம் அல்லது அதீந்த்ரிய ஞானம் என்று சொல்லப் படும். எறும்பின் காலடியும் ஈசன் (ஸாயீசன்) கேட் பார். "முங்கிகு பாவ் மே ஆவாஜ் ஹோவே ஒபி அல்லா (ஸாயி) ஸுந்தா ஹை"

530. ஒரு சமயம் பல்லக்கிலிருந்து, வெள்ளி சாமான்கள் திருட்டு போனதால் R. B. புரந்தரே என்ப வரும் அவருடைய பக்த ஸகாக்களும் பல்லக்குக்காக மசூதியின் வடபுறத்தில் ஒரு அரையைப் தயாரிக்கத் தீர் மானித்தார்கள். அதற்கு புரந்தரே மசூதியின் சுவற் றில் சில துளைகளைச் செய்தார். அப்போது பாபா மசூதியில் இல்லை. பிறகு பாபா வந்து அந்த வேலையை நிறுத்த உத்திரவிட்டார். பாபா பயமுறுத்தின போதி லும், புரந்தரே நிறுத்தவில்லை. தமது சாப்பாட்டு வேளை யையும் கவனியாமல், புரந்தரே தம் வேலையைச் செய்து கொண்டே இருந்தார்.

பாபா :—இது எவ்வளவு கெட்டது பார்! நான் சொல்வதை அவன் கேட்பதில்லை, இதை யெல்லாம் நான் பொருத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

மறுபடியும் பாபா :—(புரந்தரேயைப் பார்த்து) உன் சாப்பாட்டுக்குப் போ.

புரந் :—பாபா, நான் போகமாட்டேன் ஏனென்றால் நான் இல்லாத போது, என் வேலையை எல்லாம் நீங்கள் கலைத்து விடுவீர்கள்

பாபா :—இல்லை. நீ சாப்பாட்டுக்கு போ. பிறகு புரந்தரே போனார்.

பாபா :—என்ன செய்வது? ஒரு குழந்தை உன் கால்களின் மேல் கொல்லைக்குப் போனால், காலை வெட்டிப் போடுவாயா? அல்லது குழந்தையை வெட்டி விடுவாயா? நாம் அதை பொருத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

531. ஒரு சமயம் வர்தே என்பவர் பாபாவை நோக்கி:—பாபா இந்த மசூதியில் நான் சத்ய நராயண பூஜை செய்ய உத்திரவு கொடுங்கள் என்றார்.

பாபா :—நீ செய்யலாம்.

பிறகு வர்தே, போய், வாழை கன்றுகளைக்கொண்டு வந்து, பாபாவை ஒரு விக்கிரமாக பாவித்து பாபாவைச் சுற்றிலும் வாழைக் கன்றுகளைக் கட்டினார்.

பாபா :—அதைச் செய்யாதே. அதற்கு நான் இடங் கொடுக்கமாட்டேன்.

இதை கேட்ட வர்தே, உரக்க அழ ஆரம்பித்து, அதிகமாய் துக்கப்படுவதைக் கண்ட பாபா, பிறகு ஒப்புக்கொண்டார்.

வர்தே :—பாபா செலவுக்கு என்னிடம் பணம் இல்லை.

பாபா :—எவ்வளவு வேண்டும்?

வர் :— ரூ. 2—8—0.

பாபா (ஜயகரை சுட்டிக் காட்டி) அந்த மனிதன் வைத்திருக்கிறான். அவனிடமிருந்து கடன் வாங்கிக் கொள்.

ஐயகரிடம் சரியாக 2—8—0 ரூபாய் தானிருந்தது. அதைப் பெற்றுக்கொண்ட வர்தே சத்ய நாராயண பூஜை முடித்துக்கொண்டார்.

IV. பக்தரை அன்புடன் பாதுகாத்தல்

532. 1913 வருஷம் மார்ச் மாதத்தில் ராவ்ஜி, பாலகிருஷ்ண உபாசினி பஹால்கர் என்பவரின் இளைய மகனுக்கு 5, 6 நாள் அதிக சுரம். அவன் பிழைப்பது அரிது என்று வைத்தியர் எண்ணினர். அவர்பாபாவை தியானித்து பிரார்த்தனை செய்தார்.

அன்றைய இரவு 2 மணிக்கு பாபா, டூலியாவில் அவர் அறையில் பிரத்யக்ஷமானர். அந்தப் பையனுக்கு விபூதி தடவி, இனி கவலை வேண்டாம். இரண்டு மணியில் உன் மகனுக்கு வியர்வை விடும். காலையில் தாபம் (டிக்ரி) குறைந்து குணமடைவான். அவன் சுகமான பிறகு, என்னிடம் சீரடிக்கு அழைத்து வா'' என்று சொல்லி மறைந்தார்.

அப்படியே பையனுக்கு வியர்வைவிட்டது. காலையில் சுரம் குறைந்தது. இது நடந்தது 1913-ம் வருஷம் மார்ச் மாசம் 6 தேதியில். 8-தேதி தினம், சாமா, ராவுஜிக்கு எழுதின கடிதத்தில் கீழ்க்கண்டபடி வரைந்திருந்தது.

“நான் டூலியாவில் இருக்கும் உன் சினேகிதன் வீட்டுக்குப் போய் வந்தேன்'' என்று பாபா சொன்னர். அதற்கு நான் கேட்டதாவது “அந்த சினேகிதன் யார்?'' பாபா:—உபாசினி பஹால்கர்

ராவ்ஜி. நான் தினந்தோறும் அவன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். அவனுக்கு நீ கடிதம் எழுது.'' ஆகையால் இந்தக் கடிதத்தை எழுதினேன்.

பதினைந்து தினத்துக்குப் பிறகு ராவ்ஜியும், அவர் குமாரனும் சீரடிக்கு வந்து கொண்டிருந்தார்கள். வழியில் கோபர்கானில் டாங்காகாரன் தகராரால் தாமதம் ஆய்விட்டது. அப்பொழுது சீரடியில் ஆரத்தி சமயம் ஆனபடியால் பாபா சாமாவை நோக்கி:—சாமா, ஆரத்தி தொடங்குவதை சற்று தாமதி. உன் டேலியா சிநேகிதன் வந்து கொண்டிருக்கிறான். டாங்காகாரன் தொந்தரவு கொடுக்கிறான். என்றார். ஆரத்தி முடிவில் பிரசாதம் வினியோகம் செய்வதற்குள் டேலியா ராவ்ஜி வகையறா துவாரகமாயிக்கு வந்து விடவே, பாபா— அந்தப் பையனைப் பார்த்து:—“ நீ காயலாவாய் இருந்த போது,டேலியாவுக்கு நான் வந்தேனே—உனக்கு ஞாபகம் இருக்கிறதா ? என்றார். பையனுக்கது தெரியாதது. அவன் தகப்பனாருக்கு முழு விவரம் ஞாபகத்துக்கு வந்தது.

533. மஹாலஸாபதியை பாபா பக்தன் என்ற பாவனையாய் “பகத்” என்று கூப்பிடுவது வழக்கம். ஒரு சமயம் அவரை நோக்கி, “பகத் உன் வீட்டில் அருகில் 2 சர்ப்பங்கள் நடமாடிக்கொண்டிருக்கின்றன.' என்றார். மஹாலஸாபதி துவாரகாமாயிலிருந்து திரும்பி வீட்டுக்கு வரும்போது தமது கதவின் பக்கத்திலேயே ஒன்றையும், மற்றொன்று குசவன் வீட்டுக் கதவண்டை அவன் தலைகாணிக்கடியிலும் கண்டார்.

மற்றொரு சமயத்தில், பாபா மஹாலஸாபதியை நோக்கி, பகத் இன்றிரவு நீ இங்கே வரும்போது விளக்

குடன் வா. கிராம வாசலில் திருடர்களைச் சந்திப்பாய் என்றார்.

அவ்விதமே, மஹலஸாபதி அன்றிரவு விளக்குடன் வர, கிராமத்தின் "கேட்" கதவண்டை ஒரு சர்ப்பம் இருக்கக் கண்டார்.

534. ஒரு பக்தன் இருட்டு வேளையில் கொல்லை பக்கம் போனான். அவ்விடம் ஏதோ சலசல என்று சப்தம் கேட்டான். அது ஒரு பாம்புதான் என்று, தன் விடுதிக்கு அவசரமாய் வந்து விட்டான். பிறகு அவன் பாபாவிடம் வந்தபோது, "நீ கொல்லைக்குப் போன இடத்தில் நான் இல்லையா? நீ ஏன் பயப்படு கிறாய்?"

535. 1-வது வாக்கியத்தில் சேர்க்கை.

536. ஜோஸியம் அறிந்த நாநா சாஹேப் டேங் களே என்பவர் ஸ்ரீமான் பூட்டியிடம் ஒருநாள் "இன்று உங்கள் உயிருக்குக் கண்டம் இருக்கிற"தென்று சொன் னார். பிற்பாடு இருவரும் பாபாவிடம் வந்தார்கள்.

பா :—நாநா என்ன சொல்கிறான்? உன்னிடம் சாவு வருவதைக் காண்கிறானா? நாம் பயப்பட வேண் டிய தில்லை! போடு! அடி! அடி! நீ எப்படி அடித்துப் போட்டுக் கொல்லுகிறாய் என்பதை நான் பார்க்கிறேன்.

பிறகு, பூட்டி கொல்லைப்பக்கம் போகும்போது அவ்விடத்தில் ஒரு பாம்பு வந்தது. அவருடைய வேலை ஆள் அதைக் கண்டு, ஒரு கல்லை எடுத்தான். ஸ்ரீமான் "கல்லைவிட தடியே நல்லது" என்றார். தடி கொண்டு வரப் போனார்கள். தடி வருவதற்கு முன்னே, பாம்பு நகர்ந்து மறைந்து விட்டது. கண்டம் வந்தது. ஆனால் உயிருக்கு ஆபத்தில்லாமல் போய்விட்டது.

V. பக்தர்களுக்கு ஆரோக்யம்

537. ஒரு சமயம் பாலா சிம்பி என்னும் பக்தர் காயலாவால் க்ஷீணித்திருக்க அவரை கவனிக்க ஆளில்லாததால் தெருவோரமாய் அவஸ்தைப் பட்டுக் கிடந்தார். அவர் வீட்டில் பிக்ஷை எடுத்திருக்கும் பாபா அவரைக் கண்டு அடுத்த கிராமம் (நீம்கான்) மிராசுதார் நானு சாஹேப் டெங்களே என்பவரிடம் பாலா சிம்பியை அனுப்பித்தார். அந்த சமயத்தில், நானு சாஹேபுக்கு ஓர் கனவு உண்டாயிற்று. அதில் உன்னிடம் பாலா சிம்பி வருகிறான். அவனைப் பார்த்துக்கொள் என்று பாபா சொன்னார். ஆகையால் தம்மிடம் சிம்பி வந்தவுடன் மிகப் பிரியமுடன் அவரை நானு நல்வரவு கூறி வேண்டியவற்றைக் கொடுத்துக் காப்பாற்றினார்.

குஷ்டரோகிகளிடம் கருணை

538. மற்றொரு சமயம், பாபா :—(ஒரு ஸ்திரியை காட்டி) "பீமாபாய் இந்த குஷ்டரோக ஸ்திரியை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அவளைப் பார்த்துக் கொள்."

பீமாபாய் :—பாபா! ஆனால் அவள் குஷ்டரோகியாய் இருக்கிறாளே.

பாபா :—கவலையில்லை. அதனால் என்ன? அவள் என் சொந்த சகோதரி. அவளை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போ!

அவ்விதமே பீமாபாய் அந்தக் குஷ்டரோகியை அழைத்துக்கொண்டுபோய் ஒரு மாதம் வரையில் பாதுகாத்தாள். பிறகு அந்த குஷ்டரோகி இறந்தாள்.

மற்றொரு சமயத்தில், பாலாஜி படேல் நெவாஸ்கர் என்பவரிடம் பாபா :—"பாலா உன் ஊருக்குப் போகாதே. இதோ தகதுபாவ் (ஒரு மகம்மதிய குஷ்ட ரோகி) இவன் உன் சவரக்ஷணையிலிருக்கட்டும்."

அவ்விதமே, பாலா சீரடியிலேயே ஒரு மாதம் தங்கி அந்தக் குஷ்டரோகியை ஆதரித்தார். மாதமானதும் குஷ்டரோகி இறந்தான்.

VI. சந்ததி உண்டாக அனுக்ரகம்

539. தாமோதர S. ராஸ்னே என்னும் அகம்மத் நகர் வளையல் வியாபாரி முதல் விவாகம் செய்துகொண்டு சந்ததியில்லாதமையால் இன்னுமொரு பெண்ணை விவாகம் செய்துகொண்டார். அவளுக்கும் குழந்தை பிறக்கவில்லை. அவருக்கு ஜாதகத்தில், லக்னத்திலிருந்து ஐந்தாம் இடத்தில் பாபி இருந்தான். கிரகங்களே அவருக்கு விரோதமாய் இருந்தன. ஆனல் அவருக்கு பாபாவின் பக்தி அதிகம். அவர் சிரடிக்கு போனபோது, அவரிடம் பாபா 4 மாம்பழம் கொடுத்தார்.

பாபா :—தாமியா இந்தப் பழங்களை எடுத்துக் கொள். உண்டு சா.

தாமியா கலக்கங்கொண்டார், சந்ததி உண்டாகி சம்சாரத்தில் சுழன்று வருவது ஆத்மாவுக்குச் சாவு என்பதை அறியவில்லை.

மறுபடியும் பாபா அவரை நோக்கி,

பாபா :—இந்த:பழம் நீ சாப்பிடாதே. உன் மனைவிக்குக் கொடு.

தாம்யா :—எந்த மனைவிக்கு.



R. B. புரந்தரே



ராவ் பகதூர் ஸாடே

பாபா :—இளைய மனைவிக்கு.

அந்தப் பழங்களை அவள் சாப்பிடட்டும். முதலில் அவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறக்கும். முதலாவது குழந்தைக்கு தௌலத்ஷா என்றும், இரண்டாவது குழந்தைக்கு தானுஷா என்றும் பெயரிடு. இன்னும் ஆறு குழந்தை, ஆக மொத்தம் எட்டு குழந்தை அவளுக்குப் பிறக்கும் என்றும் பாபா சொன்னார். அப்படியே திட்டமாய் நடந்தது. முதலில் தாமியாவுக்கு இரு குமாரர்கள் உண்டானார்கள். பாபாவிடம் முதல் குமாரனைக் கொண்டுபோய், "இந்த குழந்தைக்கு என்ன பெயரிடுவது" என்று தாமியா கேட்டார்.

பாபா :—நான் சொன்னதை மறந்தாயா? உன் நோட் புஸ்தகம் 3-வது பக்கத்தில் எழுதிக்கொண்டிருக்கிறாய். அவன் பெயர் தௌலத்ஷா என்று நான் சொல்லவில்லையா?

540. ராவ் பஹதூர். H. V. ஸாடே டெபுடி கலெக்டராயிருந்தபோது அவருக்கு 45 வயதில் மனைவி இறந்தாள். அவருக்கு இருந்தது 2 குமாரத்தி. குமாரனே இல்லை. அதற்காக மறுபடியும் அவரை கலியாணம் செய்து கொள்ள பலர் சொல்லியும், விவாகத்தால் ஆண் சந்ததி உண்டாகும் என்னும் நிச்சயம் இல்லாததால் புனர் விவாகம் செய்ய மனமில்லாமல் இருந்தார். 1904-ம் வருஷத்தில் மாம்லத்தாருடன் சீரடிக்கு வந்து பாபாவை வணங்கினார்.

மாம்லத்தார் :—பாபா! (H. V. S.) சாஹேபுக்கு ஆண் சந்ததி இல்லையே.

பா :—சாஹேப் கலியாணம் செய்து கொண்டால் கடவுள் ஒரு குமாரனைக் கொடுப்பார்.

இவ்விதமாக நிச்சயம் ஏற்பட்டதால், H. V. S. கலியாணம் செய்து கொள்ள விரும்பினர். மறு வருஷத்தில், தாதாகேல்கரின் குமாரத்தியைக் கொடுப்பதாகச் சொன்னர். ஆனல் சாஹேப், பாபாவைக் கேட்டுத் தான் நிச்சயம் செய்ய வேண்டுமென்றார். சாமாவும், தாதாகேல்கரும் அந்தப் பெண்ணுடன் பாபாவிடம், போனதும், பெண் நெற்றியில் பாபா குங்குமப் பொட்டிட்டார். இந்தப் பெண்ணை (H. V. S. இருந்த இடமாகிய) அஹமதாபாத்துக்கு அனுப்புங்கள் என்றார்.

சாஹேப் அவளைக் கலியாணம் செய்துகொண்டு, ஆறு வருஷ காலத்தில், இரண்டு குமாரத்திகள் மாத்திரம் பெற்றார். 1912-ல் தாதாகேல்கரும் அவர் மனைவியும் பாபாவிடம் போய், "பாபா எங்களுக்குப் பேரன் எப்பொழுது கிடைக்கும்?" என்றார்கள்.

பா :—நான் அல்லாவைப் பிரார்த்திக்கிறேன். என் வேண்டுகோளுக்கு இணங்குவார், என்றார்.

1913ல் சாஹேபுக்கு ஒரு குமாரன் பிறந்தான். அவன் இன்னும் ஆரோக்கியமாக இருக்கிறன்.

541. ஒரு ஸபட்னேகர் என்னும் சட்டபரீக்ஷைக்குப்படிக்கும் மாணுக்கன், தன் சிநேகிதன் சரியாக பரிக்ஷைக்குப் படிக்காமலே பரிக்ஷைக்குப் போவதைக் கண்டு, "நீ படிக்கவில்லை, பரிக்ஷையில் எப்படி தேரப் போகிறய்' என்று கேட்டான். அதற்கு அந்த சிநேகிதன் :—"நான் சரியாகப் படிக்கவில்லைதான். ஆனல் ஸீரடி ஸாயிபாபா எனக்கு உறுதி கொடுத்திருக்கிறர். இவ்வருஷம் நான் எவ்வளவு குறைவாய் படித்தாலும்கூட பாஸாவேன் என்று சொல்லி இருக்கிறர்." அந்த சிநேகிதனையும் பாபாவையும் அந்த ஸபத்னேகர் "fool"= மடையன் என்று சொல்லி இகழ்ந்து ஏசினன். பரிக்ஷ

யில் **result or pass list** தேரினவர் ஜாப்தா வெளிவந்தது. பாபா சொன்னபடியே அந்த சிநேகிதர் தேரிவிட்டார். ஆனால் இது அதிருஷ்டத்தின் ஒரு குருட்டடி தான் என்று நினைத்த ஸபட்னேகர் பாபாவை, வெகு தாழ்மையாகவும் எண்ணியே இருந்தான். பிறகு அவன் அக்கல்கோட்டில் வக்கீலாயிருந்தான் பத்து வருஷங்கள் ஆனதும் தன்னுடைய ஒரே பிள்ளையை (புத்திரனை) இழந்தான். அதனால் மனம்நொந்து பாபாவிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ள விரும்பினான். பாபாவிடம் சென்று தலை வணங்க,

பா:—ஹட்! தூரே செல். சிறிது நேரம் கழித்து, மறுபடியும், பாபாவை வணங்கினான்.

பா:—இவ்விடத்தை விட்டுப்போ.

அவன் திரும்பி போய்விட்டான்.

ஒருவருஷம் பொருத்து, பாபா அவனுடைய மனைவியின் கனவில் வந்து, அவளைக் கணவனுடன் தம்மிடம் வரும்படி அழைத்தார். இந்த சமயத்தில், ஸபட்னேகர் முன்செய்த நிந்தனையை மன்னிக்கவேண்டுமென்று பாபாவைத் தாழ்மையாய்க் கேட்டுக்கொண்டான். பாபா, அவரெதிரில் இருந்த ஒரு இடைச்சியை நோக்கி ஸபட்னேகரின் ஜீவசரித்திரத்தின் முக்கிய சம்பவங்களை தமது சொந்த சரிதமாகவே எடுத்துச் சொல்லிவந்தார். சீரடியிலிருந்து வெகு தூரத்திலும், வெகுகாலத்திற்கு முன்பும் நடந்த விஷயங்களை யெல்லாம் பாபா விவரமாய் அறிந்திருப்பதைக் கண்டு ஸபட்னேகர் ஆச்சரியப்பட்டான். பாபா மறுபடியும் அந்த இடைச்சியை நோக்கி, ஸபட்னேகரைக் காட்டி, "இவன் தன் குமாரனை நான் கொன்றதாக எண்ணி என்மேல் தோஷம் சுமத்துகிறான். இப்போது, அவன் மனைவியின் கர்பத்

தில் அதே குழந்தை மறுபடியும் வரும்படி நான் செய்கிறேன்'' என்ருர்.

பிறகு பாபா ஸபட்னேகர் பக்கம் திரும்பி, அவர் சிரத்தின்மேல் கரத்தை வைத்துக் கூறினர். "உன்னுடைய எண்ணம் சீக்கிரத்தில் நிறைவேறும்.''

ஸபட்னேகர் அதிக ஆனந்தமடைந்தார். பாபா அந்தர்ஞானத்தை மேல் மேலும் காட்டியதால் அவருக்கு பாபாவிடம் பக்தி வளர்ந்தது. உதாரணமாக, அவருடைய மனைவியின் ரோகத்தை விவரமாய் எடுத்துச் சொல்லி அதன் நிவாரண விதத்தையும் அப்பொழுதே அறிவித்தார். இதனல் வக்கீலின் பூர்வ நம்பிக்கைக் குறைவு ஒழிந்தது. புறப்பட உத்திரவு பெற்றுக் கொள்ளும்போது, ஒரு தேங்காயை பாபா அவரிடம் கொடுத்து, "இதை உன் மனைவியின் தலைப்பில் முடிந்து கொண்டு, சந்தோஷத்துடன் போய்வா,'' என்ருர்.

12 மாதத்தில் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். பிறகு குழந்தையுடன் பாபாவிடம் வக்கீல் வந்தார்.

அரங்கபாத்கர் மனைவியின் அனுபவம்

சோலாபூரில் இருந்த ஒரு ஸகாராம் அரங்கபாத்கர் என்பவருக்கு இரண்டாவது மனைவியினிடத்தில் சந்ததி ஒன்றும் ஏற்படாமல் இருந்தது. அவளுடன் இருந்த 27 வருஷ காலமாக ஒருதரம் கூட அவள் கர்ப்பமாக இல்லை. சாமா அவளை மசூதியண்டை காத்திருக்கும் படிக்கும் பாபா பிரஸன்ன மனமாகும்போது அவளைக் கூப்பிடுவதாயும் ஏற்பாடு செய்தார். பாபா சாப்பிட்ட பின் அவர் கை கழுவுவதற்கு சாமா ஜலம் கொட்டிக் கொண்டிருக்கும் சமயம், பாபா அவருடைய தவடையை

கிள்ளினார். சாமா கோபங் கொண்டது போல் பாசாங்கு செய்து, "என்ன தேவா! என்னைக் கிள்ளுவது உமக்கு நல்லதா?" என்று கேட்டார்.

பா:—நீ 72 ஜன்மங்கள் என்னுடன் கூட யிருந்து வருகிறாய். இது வரையில் உன்னை நான் கிள்ளினதில்லை. அப்படி இருந்தும் இப்பொழுது உன்னை தொட்டதற்கு கோபிக்கிறாயே.

சா:—தேவா! சுவர்கலோகம்—விமானம் போன்ற இனிமையான வஸ்துக்களைக் கொடுக்கத்தான் எங்களுக்கு ஒரு தேவர் வேண்டும்.

பா:—ஆம். உண்மையாக அதற்காகவே நான் வந்திருக்கிறேன்.

பிறகு பாபா வழக்கப்படி தமது (காதி=) ஆசனத்தில் உட்கார்ந்தார். அப்போது சாமா அந்தம்மாளை அழைத்தார். அவள் பாபாவின் எதிரில் வந்து, நமஸ்கரித்து, ஒரு தேங்காயையும், ஊதுவத்திகளையும் சமர்ப்பித்தாள். பாபா தேங்காயை கையிலெடுத்துக் குலுக்கினார். அது கொப்பரையாயிருந்ததால் குடுகுடு என்று சப்தம் கேட்டது.

பாபா:—(குடுகுடுப்பாண்டி போல் தேங்காயைக் கையில் வைத்துக் கொண்டு குலுக்கி) சாமா—இது உருண்டு கொண்டிருக்கிறது. இது என்ன சொல்லுகிறதென்று கவனி.

சா:—இது மாதிரியே அவள் கர்ப்பத்திலும் ஒரு குழந்தை குடு குடு என்று ஆடி விளையாடவேண்டும் என்று இவள் வேண்டுகிறாள். ஆகையால் அவ்விதமான ஆசீர்வாதம் செய்து அவளுக்குத் தேங்காயைக் கொடுங்கள்.

பாபா :—சாமா அவளுக்குத் தேங்காய் கொடுத்தால் அது குழந்தையாக மாறுமா? இப்படி நினைப்பது மதியீனம்.

சா :—தேங்காய் ஆசீர்வாத சக்தி எனக்குத் தெரியும். அந்தத் தேங்காயையும் ஆசீர்வாதத்தையும் கொடுங்கள்.

பா :—தேங்காயை உடை.

சா :—வேண்டாம். ஆசீர்வாதமும் முழுத் தேங்காயையும் கொடுங்கள்.

இவ்விதமாக பாபாவிடம் சாமா இரண்டு மூன்று தரம் வாக்குவாதம் செய்தார்.

பாபா :—அவளுக்குக் குழந்தை பிறக்கும்.

சா :—எப்போது?

பாபா :—12 மாத காலத்தில்.

பிறகு தேங்காயை உடைத்தார்கள். அதில் ஒரு பாதி அந்தம்மாளுக்குக் கொடுக்கப்பட்டது.

சா :—அம்மா! அவர் சொன்னதை நீ கேட்டாய். 12 மாதத்தில் உனக்கு சந்ததி ஏற்படாவிட்டால் பாபா தலையில் ஒரு தேங்காய் உடைத்து மசூதியிலிருந்து வெளியே இழுத்துப் போடுவேன். அவ்விதம் நான் செய்யாவிட்டால் என் பெயர் மாதவராவ் என்று சொல்லிக்கொள்ளமாட்டேன்.

ஒரு வருஷத்துக்குள்ளாக அவள் ஒரு மகனைப் பெற்றாள். ஐந்தாம் மாதத்தில் அந்தப் பையனை பாபாவிடம் கொண்டுவந்து 500 ரூ. காணிக்கை செலுத்தினார்கள். அது பாபாவின் குதிரை ஸ்யாமகர்ணவுக்கு லாயம் கட்ட உதவிற்று.

சிந்தாமணிராவ் அனுபவம்

543. பாபா :—மஹல்ஸாபதியை நோக்கி, அந்த சிந்தாமணிராவ் மறுபடியும் கலியாணம் செய்து கொண்டால், ஒரு மகனும், ஒரு மகளும் பிறப்பார்கள் என்று சொல்.

அவ்விதமே சிந்தாமணிராவ் கலியாணம் செய்து கொண்டான். ஒரு மகனும் ஒரு மகளும்தான் பிறந்தார்கள்.

மஹல்ஸாபதி அனுபவம்

544. மஹல்ஸாபதிக்கு ஒரு பெண் குழந்தை மாத்திரம் இருந்தது. இருந்தாலும் பிரம்மசாரியாகவே இருக்கத் தீர்மானித்து, மசூதி அல்லது கோவிலில் படுத்து வந்தார்.

பாபா :—பகத்! போய் உன் வீட்டில் படு. உனக்கொரு மகன் பிறப்பான். மகன் மாம்பழம். பெண் புளியம்பழம்.

அவ்விதமே பகத், ஒரு கோகுலாஷ்டமி தினம் வீட்டுக்குப் போய் தங்கினுன். மறு கோகுலாஷ்டமிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

ரதன்ஜி ஸேட் அனுபவம்

545. நைஜாமில் நாந்தேட் என்னும் ஊரிலிருக்கும் சேட் ரதன்ஜி ஷாபூர்ஜி வாடியா என்பவருக்கு ஆண் சந்ததி இல்லை. அவர் ஒரு சமயம் அவ்வூரில் வசிக்கும் தாஸ்கணு மகாராஜுக்கும், ஒரு மௌலானுவுக்கும் ரூ. 3—14—0 செலவு செய்து விருந்து செய்தார். பிறகு புத்திரலாபமடைய பாபாவிடம் போனுர்.

பாபா :—எனக்கு நீ ஏற்கனவே ரூ. 3—14—0 கொடுத்திருக்கிறாய். இப்போது பாக்கி ரூ. 2—2—0 தக்ஷிணை கொடு.

ரதன்ஜி அந்தத் தொகையைக் கொடுத்தார். ஆனால் பாபாவுக்குத்தான் எப்போதும் ரூ. 3—14—0 கொடுத்த தில்லையே, பாபா ஏன் கொடுத்ததாகச் சொல்லுகிறார் என்று ஆச்சரியப்பட்டார்.

பாபா :—உன் மனோபீஷ்டத்தைக் கடவுள் கொடுப்பார்.

சேட் ஊருக்குத் திரும்பி தாஸ்கணுவிடம் பாபா ஏன் அப்படிச் சொன்னார் என்று கேட்க, தாஸ்கணு அவரை மௌலானா விருந்தின் கணக்கைப் பார் என்றார். அது சரியாய் ரூ. 3—14—0 ஆக இருந்தது. ஆகையால் பாபாவே மௌலானா உருவமாய் ரூ. 3—14—0 பெற்றுக் கொண்டார் என்று தெரிந்துகொண்டார்கள். பாபாவே ஸர்வ சராசரம் என சேட் உணர்ந்தார்.

பிறகு ரதன்ஜீக்கு குமாரன் பிறந்தான்.

VII. குடும்ப விஷயங்களில் உதவி

546. ஒரு சமயம் நானா நிமோன்கர் தம் மனைவியை நோக்கி :—பேலாபூருக்குப் போய் நமது குமாரனைப் பார்த்துவிட்டு உடனே திரும்பவேண்டும்.

மனைவி :—எப்படி முடியும்? அவ்விடத்தில் நம் பந்துக்கள் எத்தனையோபேர் இருக்கிறார்களே.

நானா :—நான் தாமதிக்கமுடியாது. அடுத்த நாள் அமாவாசை தினம். நீ திரும்பித்தான் ஆகவேண்டும்

அம்மாள் அதிக கவலைப்பட்டு மனங்கலங்கி நின்ருள்.

அந்த சமயத்தில் பாபா மசூதியிலிருந்து வந்து அவளை நோக்கி:—அம்மா பேலாபூரில் இருக்கும், காயலாகி சொஸ்தமான உன் மகனைப் பார்க்கப்போகிருயா? சீக்கிரமாய்ப் போ. மனங்கலங்காமல் போ. அவ்விடத்தில் இருக்கும் உன் பந்துக்கள் எல்லோரையும் பார். 2 அல்லது 4 நாள் தங்கிவிட்டு பிறகு சீரடிக்கு வா.

இவ்விதமாக நானுவின் உத்திரவை பாபாவின் (அப்பீல்) உத்திரவு மாற்றிவிட்டது. நானு ஒன்று நினைக்க பாபா தெய்வம் மற்ருென்று நினைத்து முடித்தது.

H. V. ஸாடே அவருடைய மனைவியின் அனுபவம்

547. ஸாடேயின் மனைவி, சீரடிக்குப் பக்கத்தில் தன் கணவன் வாங்கின நிலத்தை அவர்கூடப் போய் பார்க்க ஒப்புக்கொண்டாள். ஆனல் அவள் தந்தை போக வேண்டாமென்றும், அவள் போய்ப்பார்த்தால் தாயாதியின் மனைவி நிலத்தில் பாத்தியம் கொண்டாடி, தொந்தரவு கொடுப்பாளென்றும் போதிக்க, அவள் போவதில்லையென்று தீர்மானித்தாள். ஆகையால் வண்டி வந்து ஸாடேவாடா எதிரில் நின்றபோது வண்டியில் ஏறு என்று கணவன் சொல்லியும் ஏறவில்லை. ஸாடேக்கு ரௌத்ராகாரம் வந்து விட்டது. வண்டிக்காரனிடமிருநது சாட்டையைப் பிடிங்கிக்கொண்டார். அவளை அடிக்க சாட்டையை ஓங்கினர். உடனே மேகா என்னும் பாபா பூசாரி ஓடிவந்து, ஸாடேயை நோக்கி, "பாபா உம்மை துவாரகாமாயிக்கு (மசூதிக்கு)க் கூட்டிவரச் சொன்னர்," என்றான்.

ஸாடே கை சாட்டையை கீழே போட்டுவிட்டார். பாபாவிடம் போனர்.

பாபா :—இது என்ன? என்ன நடந்துவிட்டது? உன் பூமி அங்கேயே இருக்கிறது. என்னத்திற்கு அங்கே போய் அதைப் பார்க்கவேண்டும்?

ஸாடே தன் மனைவியை சாட்டையால் அடிக்க இருந்ததைப்பற்றி வெட்கமடைந்தார். தன் பேரிலும் தனது குடும்பத்தார்பேரிலும் பாபா எவ்வளவு கவனம் வைத்து காப்பாற்றுகிறார் என்று கண்டு சந்தோஷப்பட்டார்.

VIII. தொழில் வியாபாரம் இவைகளில் உதவி

D. S. ராஸனேவின் அனுபவம்

தாமோதர S. ராஸ்னே என்பவருக்கு பம்பாய் தலாலி (தரகுக்காரர்) செய்தி அனுப்பினர். அப்பொழுது பருத்தி ஷேர்களை வாங்கி விற்பனை செய்தால் கைமுதல் சீக்கிரம் இரட்டித்துவிடும். அதனால் லக்ஷக் கணக்காக லாபம் சம்பாதிக்கலாமென்று ராஸனேக்கு கடிதம் எழுதினர். அதைப்பற்றி ராஸனே சாமாவுக்கு எழுதி பாபாவின் அனுமதி உத்திரவை வேண்டினர். கடிதத்தைப் படிப்பதற்கு முன்பே, பாபா சொன்னதாவது: ஆகாசத்தை எட்டிப் பிடிக்க தாமியா விரும்புகிறான். கடவுள் கொடுத்ததோடு அவன் திருப்தியடையவில்லை. அவன் மனம் கலவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் அவன்நிலைமை துக்ககரமல்லவென்று அவனுக்கு எழுது. அவனுக்கு இப்போதிருக்கும் சாதாரணமான சம்பத்தே போதும். லக்ஷக் கணக்கான

லாபத்தைப்பற்றி எண்ணி குழப்பமடைய வேண்டா மென்றெழுது.

இந்த பதில் கிடைத்துத் திருப்தியடையாத தாமியா பாபாவிடம் நேராகப்போய் பாபாவை தரிசித்து அவர் காலைப் பிடித்து அமுத்திக்கொண்டே "இந்த தலாலி வியாபாரத்தின் லாபத்தில் பாபாவுக்கும் ஒரு பங்கு கொடுக்கிறேன்" என்று எண்ணினன்.

பாபா :—தாமியா! நான் எதிலும் (சிக்கிக்கொள் வது) இல்லை, (அதாவது சம்சார லாப நஷ்டங்களில் சம்மந்தப்படவாவது பங்கெடுத்துக் கொள்ளவாவது விரும்பவில்லை)என்ருர். அதனுல் தாமியா டலாலி சொன்ன வியாபாரம் கூடாதென்று விட்டுவிட்டார். பாபா உத் திரவில்லாமல் அவர் ஒரு காரியத்திலும் பிரவேசிக்க மாட்டார்.

மறுபடியும் தானிய விலை மிகவும் அதிகமாய்க் கொண்டு வந்தது. அப்போது, தானியத்தை வாங்கி, இருப்பு கட்டிவைத்து சில மாதங்களோ வருஷங்களோ போனபிறகு விற்கலாம் என்று ஒரு வர்த்தகன் சொல்ல அப்படியே செய்ய தாமியா பாபாவை அனுமதி கேட்க சீரடிக்குச் சென்ருர். பாபாவிடம் "நான் தானிய வியா பாரம் செய்யலாமா?" என்ருர்.

பாபா :—"வேண்டாம். வாங்கும்போது ரூபாய்க்கு 5 சேர் வீதம் வாங்கி விற்கும்போது ரூபாய்க்கு 7 சேர் வீதம் விற்பாய்".

ஆனல் சில வாரங்கள் வரையில் தான்ய விலை உயர்ந்துகொண்டே போயிற்று. பாபாவின் சொல் தவறுதலாக அப்பொழுது எண்ணப்பட்டது. ஆனல், இரண்டொரு மாதமானவுடனே நாலாபக்கத்திலும் விசேஷமாக மழை பெய்ததால் விலைவாசிகள் திடீரென்று

குறைந்துவிட்டது. வெகுகாலம்வரையில் குறைவாகவே இருந்தது. தானியம் சேகரித்தவர் நஷ்டப்பட்டார். அந்த நஷ்டம் தாமியாவுக்கு வராமல் பாபா அவரைக் காப்பாற்றினார்.

பையாஜி படேல் அனுபவம்

549. பைய்ாஜி அப்பாஜி படேல் என்பவருக்கு பாபா தினந்தோறும் 4 ரூபாய் தவராமல் கொடுத்துக் கொண்டு வந்தார்.

பாபா :—இந்தப் பணத்தைக் கடன் கொடுக்காதே. சாப்பிட்டும் செலவழிக்காதே.

அந்த பணத்தைக்கொண்டு, நிலம் வாங்குவதுதான் பாபாவின் கொள்கைபோலிருந்தது. அப்படியே பையாஜி 84 ஏகரா பூமிகளை வாங்கி இன்னும் வைத்துக்கொண் டிருக்கிறார்.

ஒரு சமயம் கரும்பு லாபம் பிரபலமாய் இருந்தது. ஒவ்வொருவரும் கோதாவரித் தண்ணீர் பாயும் பள்ளத் தாக்குகளில் கரும்பு பயிரிட ஆரம்பித்தார்கள்.

பையர்ஜி :—பாபா நானும் கரும்பு நடட்டுமா?
பாபா : வேண்டாம்.

ஆனல் இதர மனிதருடைய செய்கையாலும், கரும்பி னல் அதிகலாபம் சம்பாதிக்கலாம் என்னும் ஆசையாலும் பாபாவின் வார்த்தையைக் கவனிக்காமல், பையாஜி கரும்பு நட்டுவிட்டார். அதன் பலன் என்ன? (1) முத லாவது அதற்காக செலவழித்த ரூ. 300 நஷ்டம் (2) அடுத்தபடி நிலத்தில் வந்திருக்கக்கூடும் மாமூலாகச் செய்யும் பயிர் (புஞ்சை பயிர்) செய்யாமல் தங்களுக்கும் கால்நடைக்கும் நஷ்டம் ஏற்பட்டது.

வக்கீல் S. B. துமால் அனுபவம்

550. S. B. துமால் என்பவருக்கு நாசிக் பப்ளிக் பிராசிகூடர் வேலையை ஸர்க்கார் கொடுப்பதாகச் சொன்ஞர்கள். பாபாவின் சம்மதி வேண்டி துமால் சாமாவுக்கு எழுதினர்.

பாபா :—புதியதை ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்? பழைய வேலையே நன்ருயிருக்கிறது.

பாபாவின் உத்திரவுப்படி துமால் வேலை தேவையில்லையென்று சர்க்காருக்கு பதிலளித்தார். அதனுல் அவருக்கு நன்மையேயொழிய நஷ்டமாகவில்லை.

IX. பாபா பூஜைக்கு சம்மதித்தல்
(பக்தவாத்ஸல்யத்தால்)

551. பாபா முதலிலிருந்து தம்முடைய தேகத்தை, பக்தர்கள் தொழுவதில் பிரியப்படாமல் அதிலிருந்து அதைத் தடுத்துத் தப்பித்துக்கொண்டு இருந்தார். ஆகிலும் மஹலஸாபதி தமது தீவிர பக்தியினல் அவர் பாத சேவையை ஆரம்பித்தார். அதை பாபா தடுக்க முடியவில்லை. N. G. சந்தோர்கரின், 4 வயது குமாரன் பாபு என்பவன் அவர் சிரத்தின் பூஜை அங்கத்தின் பூஜையையும் செய்தான். அது முதல் குழந்தையோடு எல்லோரும் தனித்தனியாக சகலவித பூஜை செய்து வந்தார்கள். இருந்தாலும் தமது நெற்றியில் சந்தனம் இடுவதற்கு பாபா சம்மதப்படவில்லை. ஆனல் ஒரு நாள் டாக்டர் பண்டிட் வந்து பாபா நெற்றியில் சந்தனம் இட்டார். அதை பாபா சாந்தமாய் பொறுத்துக்

கொண்டார். தாதா கேல்கர் பாபாவை நோக்கி:— பாபா இவ்விதமாய் சந்தனம் இடுவதை ஆக்ஷேபித்து வந்த தாங்கள் இப்போது அனுமதித்ததெப்படி?

பாபா:—பண்டிட் தன் மனதில் என்னை தன் பிராம் மணகுரு தோபேச்வர் காகா மகாராஜ், ஆக பாவித்து தன் குருவுக்குச் செய்கிறவிதமே எனக்கும் சந்தனம் இட்டான். ஆகையால் நான் தடை செய்வதற்கில்லை.

இதற்கு நெடுநாளைக்குப் பிறகு அப்துல் ரங்காரி என்னும் மகம்மதியர் வந்து பாபாவைப்பார்த்து பாபா-சந்தனம் தங்களுக்கு இடுவதின் காரணமென்ன? அது நம்முடைய ஆசாரமல்லவே! என்றார்.

பாபா:—"ஜைய்ஸா தேஷ்—வைய்ஸா வேஷ்" (அதாவது, நாம் இருக்குமிடத்துக்கு தக்கபடி அலங் காரம் செய்துகொள்ள வேண்டியது). ஹிந்துக்கள் என்னை தங்கள் தெய்வமாக வணங்குகிறார்கள். நான் ஏன் அவர்களுக்கு அதிருப்தியுண்டாக்க வேண்டும்? அவர்கள் இஷ்டப்படியே செய்ய விடுகிறேன். நானோ கடவுளின் பக்தன்.

X. குரு பௌர்ணமி பூஜை செய்ய உத்தரவு

பாபாவின் சாதாரண ஆரத்தி பூஜை

(அதாவது பக்தர்கள் ஒன்று சேர்ந்து சமூகமாய் செய்யும் பூஜை)

1909-வது வருஷத்தில் ஆரம்பமாயிற்று. ஆனால் குரு பௌர்ணமி உத்ஸவ விசேஷபூஜை செய்வது முதலில் இல்லாமலிருந்தது. ஒரு சமயம் குரு பொர்ணமி தினம்,

பாபா தாதாகேல்கரை வரவழைத்து, “ இன்று குரு பௌர்ணமி தினம் என்று உனக்குத் தெரியாதா? பூஜை சாமான்களைக் கொண்டுவந்து உன் குரு பூஜை செய்.” அவ்விதமே அன்று குரு பூஜை உத்ஸவம் நடந்தது. அது முதல் பாபா குரு பௌர்ணமி உத்ஸவம் பிரதி வருஷம் நடக்கிறது.

ஆனால் H. V. ஸாடே, சிவராத்ரியன்று யாருக்கும் தெரியாமல் நடு ராத்ரியில் பாபாவைப் பூஜைசெய்வதற்கு முயன்றதில் பாபா அதற்கிடம் கொடுக்கவில்லை.

XI. பக்தர்களின்மேல் பாபாவின் அருள் நோக்கம்

N. G. சந்தோர்கர் அனுபவம்

553. சந்தோர்கரை பண்டரிபுரத்துக்கு மாற்றி விட்டார்கள். அதனால் அவ்வூருக்குப் போகும்போது பாபா உத்திரவு பெறலாமென்று சீரடிக்கு வந்துகொண்டிருந்தார். அப்போது பாபா, மஹாலஸாபதி, காசிராம், அப்பா சிந்தே இவர்களை நோக்கி, “நாம் 4 பேரும் பஜனை செய்யலாம். பண்டரியின் கதவு திறந்திருக்கிறது: சந்தோஷமாய் பஜனை செய்யலாம்.” என்று மசூதியில் சொன்னார். பாபா அப்பொழுது பாடின பாட்டென்ன வென்றால்:—

“ பண்டரிக்குப் போகவே போகவே,
அங்கே தங்கி வசிக்கவே,
வசிக்கவே அங்கே தங்கி வசிக்கவே,
என்னீசன் இல்லமதுவே.”

இவ்வாறு பாபா பாட நால்வரும் சக்ராகாரமாய் கைகோத்து சுற்றிக்கொண்டு குதித்த சமயம் .நாஞ சந்தோர்க்கர் அங்கு வந்தார்.

ஜோஷி அனுபவம்

டாணு வக்கீல் ஜோஷி என்பவர் சகோதரன் ஜோஷி பாபாவிடம் போக விரும்பினுன். ஆனுல் முடியவில்லே. ஒரு நாள் ஒரு கொங்கணஸ்த பிராம்மணர் சீரடியில் பாபாவிடம் பம்பாய்போக விடைகேட்டார்.

பாபா :—சரி. இந்த உதி (விபூதி) பொட்டணத்தை எடுத்துக்கொண்டு ரயில் வண்டியில் உன்னே சந்தித்து "நான் உட்காருவதற்கு ஒட்டைசாண் இடம் கொடு" என்று உன்னேக் கேட்பவரிடம் இதைக்கொடு.

பிராம்மணர் :—அப்படிப்பட்டவரை நான் காணு விட்டால், இந்தபொட்டணத்தைத் தஙகளுக்கே அனுப்பி விடுகிறேன்.

பாபா :—நீ அவனேக் காண்பாய்.

பிராம்மணர் கோபர்காமிலிருந்து பம்பாய் போகும் போது கல்யாண் ஸ்டேஷன் வரையில் அப்படி கேட்பவர் யாருமில்லே. கல்யாண் ஸ்டேஷனில் ரைல் நிற்கும்போது ஒவ்வொரு வண்டியிலும் ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தது. அந்த சமயத்தில் ஜோஷி இந்த பிராமணரிருக்கும் வண்டி யில் ஏறி அவரை ஒரு ஒட்டைசாண் இடம் கொடுங்கள் என்று கேட்டான். கொங்கணஸ்த பிராம்மணர் அவ னுக்கு இடத்துக்கு இடமும் கொடுத்து பாபா கொடுத்த உதியையும் கொடுத்து சங்கதி முழுவதையும் தெரியப் படுத்தினர்.

காகா மஹாஜனி—அனுபவம்

555. 1917-ம் வருஷம் அக்டோபர் மாதம்-3வது வாரம் மாலை 5 அல்லது 6 மணிக்கு காகா மஹாஜனி தமது ஆபீசில் இருந்தார். அப்போது அவர் எஜமானர் குமாரன் வந்து அவரை நோக்கி, "என் தகப்பனூர் நாஸிக்கிலிருந்து எழுதுகிறூர். அவ்விடத்திலேயே இன்னும் இருக்கலாமா? அல்லது பம்பாயிக்கு போகலாமா" என்பதைப்பற்றி ஸாயி பாபாவைக்கேட்டு அறியவிரும்புகிறூர். ஆகையால் தயவு செய்து சீரடிக்குப்போய் பாபாவைக்கேளும்,—என்றூன்.

மஹாஜனி:—H. S. தீக்ஷித் சீரடியில் இருக்கிறூர். இதைப்பற்றி பாபாவைக் கேட்டு பாபா உத்திரவைத் தெரியப்படுத்தும்படி நாம் அவருக்கு எழுதினுல் போதும்.

குமாரன்:—இல்லை. இல்லை. நீங்கள் நேரில் உடனே போய் கேட்பது தான் என் தகப்பனருக்கு திருப்திகரமாயிருக்கும். பாபாவின் உத்திரவை நேரில் பெற்றுக் கொண்டு வாருங்கள்.

மஹாஜனி:—சரி, அப்படியானுல் நானே போகிறேன்.

அதே சமயத்தில், பாபா, H. S. தீக்ஷிதருடனும் இன்னுமனேகம் பேருடனும் சீரடி மசூதியில் இருந்தார்.

பாபா தீக்ஷித்தை நோக்கி:—பாபா ஸாஹேப்! என்ன என்ன விஷயங்கள் பிரஸ்தாபம்!! என்ன தீர்காலோசனை!! கலந்து யோசித்தல்!! என்றூர். மறுதினம் காகா மஹாஜனி சீரடிக்கு வந்து சேர்ந்தார்.

பாபா காகாவைப் பார்த்து:—நீ நேரில் வந்தது நல்லதாயிற்று.

பாபா தீக்ஷித்தை நோக்கி: நேற்று சாயங்காலம் இதைப்பற்றி கவனித்திருந்தோம் இல்லையா?

பிறகு தீக்ஷித்தும் காகாவும் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ள, பம்பாயிலும், சீரடியிலும், பக்தர்களை பாபா ஒரே சமயத்தில் கவனிக்கிறார் என்பதை அறிந்து வியந்தார்கள்.

M. W. பிரதான் தாயார் அனுபவம்

556. பாபா, M. W. பிரதான் என்பவரை நோக்கி. என்னுடம்பில் இந்தப் பக்கம், அதிக கடுமையான வலி, இன்னும், 2, 4 நாளில் குணமாய்விடும்.

பாபா இது சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஆரோக்யமாகத்தான் காணப்பட்டார். அந்த சமயத்தில் அவர் சொல்வது விளங்கவில்லை. ஆனால் பம்பாயிக்கு வீட்டுக்குப்போனபோது, M. W. பிரதான் தாயாருக்கு ஒரு பக்கம், பார்ச்வ வாயுவால் கோரமானவலி இருந்தது. 2 அல்லது 4 நாட்களில் அவள் குணமடைந்தாள்.

557. தமது வேலைக்காரன் இடுப்புவலிக்கு என்ன செய்யவேண்டும் என்று பாபாவைக் கேட்கலாம் என்று வந்த மானேஜர் எதிரில் பாபா:—என்கால் நோகிறது. சோற்றுக் கத்தாழையை இரண்டாய்ப் பிளந்து, தணல் மேல் காட்டி, வைத்துக் கட்டினால் குணமாய் விடும். என்றார். அந்த மானேஜருடைய வேலைக்காரன் (Lumbago) இடுப்பு வலிக்கு பாபா சொன்னபடி கத்தாழையை வைத்துக் கட்ட குணமடைந்தான்.

XII. பாபா பக்தர்களைப் பாதுகாத்தல்

(பிளேக் நோயிலிருந்து)

558. 1916 வருஷத்தில் பாபாவின் ஆரத்திக்கு வழக்கமாய் நைவேத்தியம் தயார்செய்து கொடுத்துக் கொண்டு வந்த ஹல்வாக்காரன் பிளேக்கினல் இறந்து விட்டான். பாபா G. G. நார்கேயை நோக்கி "ஹல்வாக் காரன் கடைக்குப்போய் நைவேத்தியம் கொண்டுவா" என்றார். நார்க்கே, ஹல்வாக்காரன் வீட்டுக்குப்போய் அவன் மனைவியைக் கண்டு, "பாபா நைவேத்தியம் கேட் கிறார்" என்று சொன்னர்.

ஹ. மனைவி :—இங்கே பாரும். கணவன் தேகம் கிடக்கிறது. ஹல்வா அலமாரியில் இருக்கிறது. தங்க ளுக்கு இஷ்டமிருந்தால் எடுத்துக்கொள்ளலாம்.

நார்கே அதை எடுத்துக்கொண்டு, தனக்கும், நைவேத்தியத்தை வாங்கிக்கொள்ளும் மற்றவருக்கும் பிளேக் ஒட்டிக்கொள்ளுமோ என்று நடுங்கிக்கொண்டு, பாபாவின் எதிரில் ஹல்வாவை வைத்தார்.

பா :—சீரடிக்கு தூரத்தில் இருந்தால் நீ உயிருடன் இருக்கலாமென்றும் சீரடியில் இருந்தால் இறக்கவேண்டி வருமோ என்றும் நீ நினைக்கிறாய். அப்படியல்ல. யாருக்கு விதியுண்டோ, அவர்கள்தான் அடிபடுவார்கள். யார் இறக்கவேண்டுமோ, அவர்கள்தான் இறப்பார். யார் சீராடப்படவேண்டுமோ அவர் சீராடப்படுவார்.

அந்த ஹல்வா நைவேத்தியமாகக் கொடுக்கப்பட் டது. ஹல்வாவினல் எவருக்கும் பிளேக் வந்துவிடவில்லை.

559. ஒரு சமயம் நாஸிகில் பிளேக் ஆரம்ப மாயிற்று. அவ்வூரில் இருந்த S. B. துமால் என்பவர்

வீட்டிலும் பிளேக்கினல் எலிகள் செத்தன. ஆகையால் துமால், தாம் வீட்டைவிட்டு பங்களாவுக்கு போகலாமா என்று பாபா உத்திரவு அறிவதற்காக, சாமாவுக்குக் கடிதம் எழுதினர். அவ்விதமே பங்களாவுக்குப் போகும்படி பாபாவிடமிருந்து உத்திரவு வந்தது. ஆனல் பங்களாவுக்கு போய்ச்சேர்ந்த இரவே, அவ்விடத்தில் இருந்த படுக்கைகளில் ஒன்றில் பிளேக் எலி இருந்தது. அதனல் மறுபடியும் பாபாவுக்கு எழுதி, வேறு இடம் போகலாமா வென்று துமால் கேட்டார். பதில் வரும் வரையில் துமால் பங்களாவிலேயே தங்கியிருந்தார். அவ்விடமே தங்கியிருக்கலாமென்று சீரடியிலிருந்து பதில் வந்தது. பிறகு எலிகள் வீடு முழுவதும் செத்துக் கிடந்தன. வேலைக்காரர் ஜாகாவிலும், குடிக்கும் தண்ணீர் இருக்கும் கிணற்றிலும், அக்கம்பக்கத்திலும் எலிகள் செத்துக்கொண்டேயிருந்தன. மறுபடியும் பாபாவுக்குத் துமால் கடிதம் எழுதி, தமது சாமான்களை மூட்டை கட்டிக்கொண்டு நாஸிக்கில் இருந்த தமது வீட்டுக்குத் திரும்பி வந்தார். வீட்டுக்கதவண்டை போனபோது பாபாவிடமிருந்து பதில் வந்தது. ''நம் இருப்பிடத்தை ஏன் விடவேண்டும்?'' என்று கண்டிருந்தது. அதைக்கண்டதும் துமால் தம் சொந்த பங்களாவுக்கே மூட்டைகளுடன் திரும்பி வந்துவிட்டனர். பாபாவின் சவரக்ஷணையால் துமாலும் அவர் குடும்பத்தாரும் சௌக்கியமாக இருந்தார்கள்.

பாபா பக்தர்களின் மேலதிகாரி
காகா மஹாஜனி

560. பாபா:—தாகூர்சே சேட், காகா (மஹாஜனி)யின் எஜமான் என்பது எப்படி? ஆனந்தமளிக்க அவனுக்கு வேறொரு எஜமான் இருக்கிறர்.

R. B. புரந்தரே

561. ஒரு பக்தர் ஒரு சமயத்தில் பாபாவிடம்: "புரந்தரே அதிகநாள் தங்கிவிட்டால், அவர் எஜமானன் கோபிப்பார்" என்றார்.

பாபா:—நான்தான் அவன் எஜமானன்.

562. ஒரு சமயம் உத்தியோகத்தில் இருந்த ஒரு பக்தர் பாபாவை நோக்கி: "பாபா! ரயிலுக்குப் போக எனக்கு உத்திரவு கொடுங்கள். இல்லாவிட்டால் வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள்."

பா:—இவ்விடத்தில், என்னைத் தவிற, உனக்கு மேல் அதிகாரி யாரும் இல்லை. போஜனம் செய்து விட்டு, மத்தியானம் போ.

[பாபாவின் உத்திரவுகளுக்கு மறுபேச்சில்லாமல் தாழ்ந்து போவதே க்ஷேமமானது என்று ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்தில் அறிந்தார்கள்.]

குற்றவாளிகளுக்கும் உதவி

563. 1915-வருஷத்தில் தசராதினம். **H. S. D.** (காகா) என்பவரை பாபா பார்த்து:—நல்லோரும் தீயோரும் இங்கு வருகிறார்கள். அவர்களை பக்ஷபாதமில்லாமல் கவனிக்க வேண்டுமெல்லவா? என்றார்.

அப்போது ஒரு குமாஸ்தா வந்து பாபாவை நமஸ்கரித்தான். தன் எஜமானன் பணத்தை எடுத்துக் கொண்டு கையாடினதாக அவன் பேரில் ஒரு வாரண்டு இருந்தது. அந்தச் சமயத்தில் அவன் **(superior)** மேல் உத்தியோகஸ்தர் ஒருவர் பாபா சன்னிதானத்தில் இருந்தார். அவர் குமாஸ்தாவைக் கண்டதும், தாம் போலீஸ்காரருக்குப்போய்ச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணினர். அப்போது, பணம் கையாடிவிட்ட விருத்

தாந்தத்தையும், வாரண்ட் முதலிய விஷயங்களையும் அவரவருடைய உண்மையான பெயர் வெளியிடாமல் வேறு பெயர் வைத்து பாபா மறைபொருளாகச் சொன்னார். அந்தக் குமாஸ்தாவைப் பாபா பார்த்து:—“நீ உடனே போய் சாப்பிட்டுவிட்டு வா.” உத்தியோகஸ்தரைப் பார்த்து:—“நீ இங்கேயே இரு.” மறுபடிம் சாப்பிட்டுத் திரும்பி வந்த குமாஸ்தாவிடம் ரகசியமாகப் பேசினபின்: “நீ உடனே போய்விட வேண்டும்” அதற்குள், அந்த குமாஸ்தாவைத் தப்பித்துப்போகவிட்டதற்குத் தன்மேலதிகாரிகள் கோபிப்பார்கள் என்று அந்த உத்தியோகஸ்தர் எண்ணினார். அவரை நோக்கி பாபா:—“உனக்கு பயமா?” உத்தியோகஸ்தர்:—இல்லை பாபா. உத்தியோகஸ்தர் 3, 4 தினங்களுக்குப் பின்னால் சீரடியை விட்டுப் போனார். அவர் மேலதிகாரிகள் அவர்மேல் குறைகூறவில்லை. குமஸ்தா தானே வந்து கைதியாக்கப்பட்டான். பாபாவின் உத்திரவுபடி குமாஸ்தா விசாரணை காலத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டான். அதனால் அவன் எஜமானர், கடின தண்டனை விதிக்கக் கோராததால், சுவல்ப தண்டனை தான் விதிக்கப்பட்டது.

பிரயாணத்தில் பாபா உதவி

564. 143 (1)ல் அடக்கம்.

565. பாபா ஒரு சமயம் புரந்தரேயை நோக்கி நாஸிகில் இரண்டு நாள் தங்கியிருந்துபோ என்றார். அதற்குத் தகுந்தபடி அவருடைய குழந்தைகள் காயலாவானதால் அங்கே இரண்டு நாள் தங்க நேர்ந்தது.

566. நாசிக்குக்குப் போகவேண்டுமென்றிருந்த வைத்யாவை பாபா நோக்கி:—“நாசிக்கில் பிளேக் இருக்

கிறது. அங்கே போகாதே. குழந்தைகளுடன் வீட்டுக்குப் போ".

567. தாத்யா படேல் என்பவருக்கு கோர்ட்டு சம்மன் வந்தது. பாபா அவரிடம் "இன்றைக்கு நீ கோர்ட்டுக்குப் போகவேண்டாம்" என்றார். கோர்ட் அன்று திடீரென்று மூடப்பட்டிருந்தது.

568. தாத்யாவை நோக்கி, பாபா :—நீ சந்தைக்குப் போகாதே. போகவேண்டுமானால் சாமாவை அழைத்துக்கொண்டு போ.

சாமாவில்லாமல் தாத்யா சந்தைக்குப் போனார். ஆனால் அவருடைய விலையுயர்ந்த குதிரை, வண்டியை இழுத்துப் போகும்போது வலியால் வருந்தி கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது. அதனால் சந்தையைச்சேராமலே திரும்பினார்.

569. ஒரு ஆங்கிலேயனை பாபா நோக்கி, "நீ கோபர்காமுக்குப் போகாதே" என்றார்.

ஆங்கிலேயன் அதை மதிக்காமல் புறப்பட்டுப் போனான். வழியில் வண்டியிலிருந்து விழுந்து பலமான காயத்தால் ஆஸ்பத்திரியில் வெகுநாள் தங்கவேண்டியிருந்தது.

570. ஒரு சமயம் ஒரு டைரக்டரான காகா மஹாஜனி பாபாவிடம் வந்தார். வழக்கமாய் பலநாள் சீரடியில் தங்குவார். அப்போது பாபா அவரை நோக்கி :— "நீ எப்போது திரும்பிப் போகிறாய்"?

காகா : தாங்கள் உத்திரவு கொடுக்கும்போது.

பா : நாளைக் காலை போ.

காகா மஹாஜனி அப்படியே மறுதினம் உதயம் புறப்பட்டுப் போனார். பம்பாய் ஆபீசில் மேல்பார்வை பார்க்க யாருமில்லாததால் அவர் வரவேண்டியது அத்யா

வசியமா யிருந்தது. சரியான சமயத்தில் பாபா அவரை அனுப்பிவிட்டார்.

571. வேலையில்லாமல் இருந்த பூனு மானேஜர் என்பவர் வேலை கிடைக்க பாபாவின் ஆசீர்வாதம் வேண்டுமென்று சீரடிக்கு வந்தார். வந்தவுடன் பாபா அவரை நோக்கி, "ஆமத் நகர் வழியாக உன் ஊருக்குப் போ. தாத்யா படேலுடன் இப்போது ஆமத் நகருக்குப் புறப்படு."

உத்தியோகம் இல்லாமல் மறுபடியும் அவ்வளவு சீக்கிரமாய் திரும்பியது மிக நஷ்டம் என்று மானேஜர் எண்ணினர். ஆனல் தன் ஊர் போய்ச் சேர்ந்தது நல்லதாயிற்று. அவ்விடம் இருந்த ஒரு மில்லில் வேலைநிறுத்தமாய்விட்டபடியால் டைரகடர்கள் இவருக்கு மானேஜர் வேலை கொடுக்கவேண்டும். இவர் எங்கே என்று விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்திலேயே இவர் வந்து சேர்ந்தபடியால் மானேஜராக நியமித்துக் கொண்டார்கள்.

572. ஒரு சமயம் டிப்டிகலெக்டர் N. G. சந்தோர்கர் ஜில்லா கலெக்டரைக் கோபர்காமில் சந்திக்க கடமைப்பட்டிருந்தார். அப்போது பாபா: நீ இன்றைக்குப் போகவேண்டியதில்லை. நாளையதினம் போய்க் கோபர் காமில் கலக்டரைப் பார் என்றார்.

அன்று கலக்டர் கோபர்காமுக்குப் போகவில்லை. மறுதினம் வருவதாகக் கோபர்காமுக்குத் தந்திமூலமாய்த் தெரிவித்துவிட்டார். மறுதினம்தான் வந்தார். இது விஷயம் சாந்தோர்கருக்குத் தெரியாது. ஆனல் பாபா தமது அந்தர்ஞானத்தால் அறிந்துகொண்டு பக்தருக்கு உதவி செய்தார்.

573. ஒரு சமயம் சீரடிக்கு வந்திருந்த பண்டரிபுரம் வக்கீலை நோக்கி பாபா:—"இன்று புறப்படவேண்டியதில்லை. உன் கேசுக்கு நாளை புறப்படு" என்றார்.

எதிர் கக்ஷியில் கவர்மெண்ட் வக்கீல் இவருக்கு அறிவிக்காமலே அன்று 1-நாள் வாய்தா கோர்ட்டாரிடமிருந்து வாங்கிக்கொண்டதாக பிறகு இந்த வக்கீல் அறிந்தார்.

574. H.S. தீக்ஷித் பாபாவை நோக்கி: "6-2-1916 தேதியில் பம்பாய் ஹைகோர்டில் உயில் கேசு விசாரணைக்கு வருகிறது. ஆகையால் பம்பாய் பார்டிகள் சாக்ஷியம் சொல்ல இப்போது என்னைப் புறப்பட்டுவர சம்மன் அனுப்பியிருக்கிறார்கள்" என்றார்.

பா:—அவசரம் இல்லை. நிதானி. பிறகு பார்க்கலாம்.

தீ (8-2-1916ல்):—அந்தக் கேசு 9ஆம் தேதி போட்டிருப்பதாகத் தெரிகிறது.

பா:—நாம் நிதானித்துப் பார்க்கலாம். மறுபடி ஒரு நாள்.

தீ (12-2-1916ல்):—அந்தக் கேசு 13-ஆம் தேதி வாயிதா.

பா:—இன்னும் நிதானிக்கலாம்.

பாபா H. S. தீக்ஷித்தை 14-ஆம் தேதி புறப்படச் செய்தார். 15-ஆம் தேதியன்றுதான் கேசு விசாரணைக்கு வந்தது. தீக்ஷித் வராததால் வாரண்ட் அனுப்ப சித்தமாய் இருந்தார்கள். 14-ஆம் தேதி பாபா அனுப்பிவிட்டதால் வாரண்ட் எடுத்துக்கொள்ளவில்லை.

கலியாணத்துக்குப் பாபாவின் உதவி

575. ஆதம் தலாலி என்பவர் பாபாவை நோக்கி என் மகனுக்குக் கலியாணமாக வேண்டும். தாங்கள்

அனுக்ரஹம் செய்து அனுமதி கொடுத்தாலன்றி எனக்கு எப்படி பணம் கிடைக்கும் என்றார்.

பா:—நிதானி.

சில காலம்கழித்துப் பாபா, தலாலியை நோக்கி இப்போது மகனுக்குக் கலியாணம்செய்யலாம் என்றார். அப்போது தலாலிக்குத் தரகு வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்தது. அந்தப் பணத்தைக்கொண்டு தம் முதல் குமாரன் கலியாணத்தைச் செய்து முடித்தார்.

இவ்விதமே பாபாவின் கிருபையால் தமது மற்ற இரண்டு குமாரர்களின் கலியாணத்தையும் செய்து முடித்தார்.

576. லக்ஷ்மண கோவிந்த முங்கே என்னும் குமாஸ்தா 1890 வருஷத்தில் ரஹாதா என்ற சீரடிக்கடுத்த கிராமத்துக்குப் போனபோது அவ்விடத்தில் பாபாவைக் கண்டார்.

பா:—வா! குழந்தாய்! நேற்று உன்னைப்பற்றி நினைத்திருந்தேன். வா. இந்த மாம்பழத்தைச் சாப்பிட்டு, என் காலைப்பிடி.

பா:—எதற்காக நீ வந்தாய்?

முங்கே:—என் கலியாணம் தீர்மானமாய் இருக்கிறது. அதை நடத்த நகை வேண்டும். என்னிடம் நகைகள் இல்லை. என் பந்துக்களிடமிருந்து நகைகள் இரவல் வாங்கிப் பெண்ணுக்குப் போடவேண்டுமென்று இங்கு வந்திருக்கிறேன்.

பா:—யார் யாருடையவர்? யார் கொடுப்பது? யார் வாங்கிக்கொள்வது? சமயத்துக்கு யாரும் உதவமாட்டார்கள்! உனக்கு ஆயிரம் அல்லது இரண்டாயிரம் (பொருமான நகைகள்) தேவையானல் என்னிடமிருந்து பெற்றுக்கொள்.

முங்கே:—தனக்குள் இந்த ஏழைபக்கீர் எனக்கு 2000 ரூபாய் (நகைகள்) எப்படிக் கொடுக்கமுடியும் என்று யோசித்தார். பிறகு தமது பந்துக்கள் பாபா சொன்ன படி உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். பிறகு சின்னேர் என்னும் தமது ஊருக்குப்போய் அங்கு இருந்த ஒரு குஜராத்தி சவுகார் முங்கேயின் சிநேகிதர் சிபார்சு செய்த படியால் 2000 ரூபாய் பொருமான நகைகளை, (25 ரூபாய் ரொக்கத்திற்காக) இரவல் கொடுக்கச் சம்மதித்தார். இவ் விதமாகக் கலியாணம் நிறைவேறியது.

தாமோதர ராஸ்னே

577. தாமோதர ராஸ்னே என்பவரின் குமாரன் தௌலத்ஷாவுக்குக் கல்யாணம் செய்வதற்காக நான்கு பெண்களின் ஜாதகம் வந்தன. அவைகளில் ஒன்று ரூ. 2500 அல்லது ரூ. 3000 வர தக்ஷிணையுடையது.

தாமோதர ராஸ்னே:—பாபா! என் குமாரனுக்கு இந்தப் பெண்களில் எதை நான் அங்கிகரிப்பது.

பாபா ஒரு ஏழைப் பெண்ணுடைய ஜாதகத்தைப் பொறுக்கி: தர்மியா இவள் உன் மருமகளாக இருக்கட் டும்.

அதே பெண் அவர் மகனுக்கு கலியாணம் செய்யப் பட்டது. அது குடும்ப விருத்திக்கும் குடும்ப சுகத்திற் கும் ஏற்றதாக ஏற்பட்டது.

S. B. துமால்

துமால் என்பவர் 36 வயதிலேயே சந்ததியில்லாமல் மனைவியை இழந்தார். அவருடைய மாமனாரான ராவ் பகதூர் B. D. கின்கேடி துமாலுக்குமறு விவாகம்செய்ய வெண்ணி பாபாவிடம் வந்தார். பாபாவின் கண்கள்

கூடாது என்பதை அறிவித்தன. அவர் கலியாணம் செய்துகொள்ள பாபா அனுமதிக்கவேயில்லே. ஆகையால் தம் ஆயுட்காலம் வரையில் விவாகமில்லாமலே துமால் இருந்தார்.

578. ஆங்கிலப் பயிற்சியடைந்து B. A. பாஸ் செய்த R என்பவர் பாபாவிடம் முதல் முதல் வந்த போது நமஸ்காரம் செய்தார். அப்போது பாபா அவரை நோக்கி என்ன! நீ மனிதனே வணங்குவாயா? என்ருர்.

R பிரமித்தார். வெகு நாழிகை ஒன்றும் தோன்ருமல் உட்கார்ந்தார். பிறகு பாபா தனியாயிருக்கும்போது மறுபடியும் பாபாவை நெருங்கினர். தமதருகில் வரும் படி பாபா சமிக்ஞை செய்தார். பாபாவின் திருவடிகளில் R தலைவணங்கியபோது, பாபா அவரை அணைத்து தம தருகில் உட்கார வைத்துக் கொண்டார்.

பாபா :—நீ என் குழந்தை. மற்றவர்கள் அதாவது அன்னியர் இருக்கும்போது, குழந்தைகளை தூரவே வைத் திருப்பது வழக்கம்.

பிறகு R சாயிநாம ஜபம் ஆரம்பித்தார். பாபா அவரை வரவழைத்து:

பா :—இன்று காலே என்ன செய்து கொண்டிருந் தாய்?

R: ஜபம்

பா :—எந்த நாமம்.

R : என் ஆண்டவனுடையது.

பா :—உன் ஆண்டவன் யார்?

R :—தங்களுக்குத் தெரியும்.

பா :—(புன் முறுவலுடன்) சரிதான்.

இதனால் பாபா, சாயி நாம ஜெபத்தையும், தெய்வீக சாதனத்தின் ரகஸியத்தையும் ஆமோதித்தார்.

ஒரு சமயம் (குருபௌர்ணமி தினம்) R. தவிர மற்ற எல்லா பக்தர்களும், மாலைகளைக் கொண்டுவந்து பாபாவுக்குச் சமர்ப்பித்தார்கள். தான் மாத்திரம் மாலை கொண்டு வராததைக் குறித்து R. மனவருத்தப்பட்டார். அதை உணர்ந்த பாபா தமது தேகத்தின் மேலிருந்து ஒரு சுமை மாலையை எடுத்து R-ஐப் பார்த்து. "இவை யெல்லாம் உன்னுடையவை" என்றார்.

R. பாபா தம்முடன் ஒன்றாயிருக்க வேண்டும் என்று கருதியிருந்தார். 1915-வருஷத்தில் ராமநவமி உத்ஸவம் வந்தது. அப்போது தாமும் பாபாவும் ஒன்றே என்பதை பாபா ஆமோதிக்க வேண்டும் என்றெண்ணினார். ராம நவமியன்று அநேக பக்தர்கள் அநேக புதிய வஸ்திரங்களைப் பாபாவிடம் கொடுத்து, பிறகு அவரிடமிருந்து திருப்பிப் பெற்றுக்கொண்டார்கள். 85 ரூபாய் பொருமான ஒரு நேர்த்தியான (Dacca) டாகா மஸ்லின் துணியை வாங்கி, தமது சொக்காய்க்குள் மறைத்துவைத்துக்கொண்டு, பாபாவை நமஸ்கரிக்கும்பொழுது பாபாவின் (காதி) மெத்தைக் கடியில் யாருக்கும் தெரியாமல் நுழைத்துவிட்டார். தமது அன்பை பாபா அங்கீகரித்தால் தாமும் பாபாவும் ஒன்றே யாதலால் பாபா அந்த மஸ்லின் துணியை தம்மிடம் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும், திருப்பிக் கொடுக்கக்கூடாதென்றும் தீர்மானித்தார்.

எல்லாத் துணிகளும் வாபீசு ஆனபிறகு பாபா எழுந்தார்.

பா: மெத்தைமேல் இருப்பதை எல்லாம் எடுத்து மெத்தையை உதறுங்கள் என்றார். மெத்தையைத் தூக்கினவுடனே அங்கே மஸ்லின் துணி இருந்தது.

பா :—அதை எடுத்து விரித்து, "ஹா! இது என்ன! மஸ்லின! இதை நான் திருப்பிக் கொடுக்கப்போகிற தில்லே. இது என்னுடையது!!"

பிறகு பாபா தமது உடல்மேல் போட்டுக்கொண்டு, R-ஐ திரும்பிப் பார்த்து, "இதைப் போட்டதால் நான் அழகாக இல்லேயா ?" என்ருர்.

இதைக்கேட்டு தாமும் பாபாவும் ஒன்றே என்பதைப் பாபா அங்கீகரித்தார் என்று R சந்தோஷப்பட்டார்.

உயிரைக் காப்பாற்றுவது

S. B. நாச்னே

579. 1913-ஆம் வருஷத்தில் பாபா எதிரில் S. B. நாச்னே மற்றவர்களுடன் இருக்கும்போது

பாபா :—"நாம் பைத்தியக்காரரை நம்பலாகாது" என்ருர்.

1914-ம் வருஷத்தில், தமது வீட்டில் பூஜை அரையில் நாச்னே பூஜை செய்துகொண்டிருந்தார். அப்போது ஒரு பித்தன் அந்த அறைக்கப்பால் நின்றிருப்பதை நாச்னே பார்த்தும் அதனுல் தோஷமில்லேயென்றெண்ணி பூஜை நடத்தினர். ஆனுல் பூஜை நடக்கும்பொழுது அந்தப் பித்தன் அரையில் புகுந்து நாச்னே தொண்டையைக் கைகளால் பிடித்துக்கொண்டு "உன் ரத்தத்தைக் குடிப்பேன்," என்று சொல்லி, தொண்டையைக் கடிக்கத் தன் வாயை விசாலமாய்த் திறந்தான். நாச்னே ஒரு உத்தரணியையும் அதைப் பிடித்திருக்கும் தன் கையையும் அவன் வாய்க்குள் நுழைத்துவிட்டார். உடனே S. B. நாச்னேக்கு ஸ்மரணே போய்விட்டது. இதர ஜனங்கள் அறைக்குள் நுழைந்து அவர் உயிரைக் காப்பாற்றினர்

கள். பிறகு அவர் பாபாவிடம் போனபோது நாச்னேயைச் சுட்டிக்காட்டி அண்ணு சிஞ்சினீகரிடம் பாபா சொன்னதாவது :—

அண்ணு! ஒரு க்ஷணம் நான் தாமதித்திருந்தால், இவன் நிச்சயமாக இறந்திருப்பான். அவன் தொண்டையை அந்தப் பித்தன் தன் கைகளால் பற்றிக்கொண்டான். ஆனால் நான் அவனை விடுவித்தேன். என்ன செய்வது? என் சொந்தக் குழந்தைகளை நான் காப்பாற்ருவிட்டால், யார்தான் காப்பாற்றுவார்கள்?

நிமோன்கரின் குழந்தை

580. ஒரு சமயம் C. I. D. இன்ஸ்பெக்டராயிருந்த S. S. D. நிமோன்கர் பூனுவிலிருந்து, நிமோன் என்னும் தமது ஊருக்குப் போய்க்கொண்டிருந்தார். நிமோனில், அவருடைய சகோதரனுக்குக் குழந்தை பிறந்திருந்தது. வழியில் சீரடிக்கு பாபாவிடம் வந்தார். பாபா வழக்கம் போல் விபூதியைக் கொடுத்து. "குழந்தையின் உயிரைக் காப்பாற்று" என்ருர்.

பிறகு S. S. D. நிமோன்கர் நிமோனுக்குப் போனபோது தமயன் குழந்தைக்கு ஜன்னி வந்து அந்தன் உயிர் போய்விடும் என்னும் நிச்சயம் பெற்ருேர்களுக்குண்டாயிற்று. இதற்காகத்தான் பாபா (விபூதி)யைக் கொடுத்தார் என்று அப்பொழுது தான் S. S. D. N. க்குத் தோன்றி அந்த விபூதி எங்கே என்று தேடிப்பார்த்தும் அகப்படவில்லே. அந்தக் குழந்தை தேகத்தை S. S. D. N. தன் மடியில் வைத்து குழந்தைக்கு உயிர் பிச்சை கொடுக்க வேண்டுமென்று பாபாவைத் தியானித்து பிரார்த்தனை செய்தார். கண் விழிக்காதிருந்த குழந்தை 15 நிமிஷத்தில் கண் விழித்து வர வர சொஸ்தமாயிற்று.

பாபாவுக்கு பயமே கிடையாது

581. டூலியா மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், நகைகளைத் திருடியதாக ஒருவன்மேல் குற்றம் சாட்டினார்கள். அவன் நகைகளைச் சீரடியில் இருக்கும் சாயி பாபா தனக்குக் கொடுத்ததாகச் சொல்லி அவரை சாக்ஷியாய் சம்மன் செய்யும்படி கோரினான். சம்மன் வந்தது. கான்ஸ்டபில் சம்மனைக் கொண்டுவந்து,

கா :—பாபா தங்களுக்கு ஒரு சம்மன் வந்திருக்கிறது.

பா :—அதை வாங்கி நெருப்பில் போடு.

யாரோ ஒருவர் அதை வாங்கி நெருப்பில் போட்டுவிட்டார். பிறகு பாபாவுக்கு சம்மனுக்கு ஆஜராகாமல் இருந்ததால் வாரண்ட் அனுப்பப்பட்டது. கணபதிராம் என்னும் கான்ஸ்டபில் பாபாவை நோக்கி: பாபா: அவர்கள் ஒரு வாரண்ட் அனுப்பியிருக்கிறார்கள் தயவு செய்து என்னுடன் டூலியாவுக்கு வாருங்கள்.

பா :—(கோபத்துடன்) அந்த வாரண்ட் காகிதத்தை ....பில் எரி.

கான்ஸடபில் என்ன செய்வதென்றறியாமல் பிரமித்தான். பிறகு டிப்டி கலெக்டர் N. G. சந்தோர்கர் கூறியபடி ஒரு மஹஜர் தயார் செய்துகொண்டு, அதில், பாபா ஜனங்களால் கடவுளாகத் தொழப்பட்டு வருவதால் அவருக்கு சம்மனும், வாரண்டும் அனுப்புவது சரியல்லவென்றும், அவருடைய சாக்ஷியம் அவசியமானால் கமிஷனரை அனுப்பி, அவர் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் எழுதி அநேகர் கையொப்பம் வாங்கி அனுப்பினார்கள். பிறகு நானா ஜோஷி என்னும் முதல்

கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கமிஷனராக வந்து பாபாவை விசாரித்தார்.

க :—உம்முடைய பெயர் என்ன ?

பா :—ஜனங்கள் ஸாயி பாபா என்று அழைக்கிருர்கள்.

க :—உம்முடைய தகப்பனுர் பெயர் ?

பா :—சாயி பாபா தான்.

க :—உம்முடைய குருவின் பெயர் ?

பா :—வெங்குசா.

க :—மதம்

பா :—கபீர். (கபீர் தாஸ் அல்லது ஈசனுடைய மதம்)

க :—குலம்.

பா :—பர்வர்திகர் (=கடவுள்)

க :—வயது

பா :—லக்ஷக் கணக்கான வருஷம்.

க :—நீர் சொல்வது உண்மை என்று உறுதியாய் சொல்வீரா ?

பா :—உண்மை.

க:—குற்றவாளியைத் தெரியுமா ?

பா :—ஆம். தெரியும் அவனையும் தெரியும், எல்லோரையும் தெரியும்.

க:—அவன் உம்முடைய பக்தனென்றும், உம்முடன் வசித்துவந்ததாகவும் சொல்லுகிருன். அப்படித்தானு ?

பா:—ஆம். நான் ஒவ்வொருவருடனும் இருக்கிறேன். எல்லாரும் என்னுடையவர்கள்.

க :—அவன் சொல்லுகிறபடி, அவனுக்கு நகைகளைக் கொடுத்தீரா ?

பா :—ஆம். நான் அவனுக்குக் கொடுத்தேன். யார் யாருக்கு, என்ன கொடுப்பது?

க :—நீர் அவனுக்கு நகைகளைக் கொடுத்தால், எப்படி அவை உமக்குக் கிடைத்தன?

பா :—எல்லாம் என்னுடையதே.

க :—பாபா இது நகை திருடிவிட்டதாக ஒரு பெரிய குற்றக் கேஸ். அந்த மனிதன் நீர்தான் அந்த நகைகளை தனக்குக் கொடுத்ததாகச் சொல்லுகிறான்.

பா :—இது எல்லாம் என்ன? இவைகளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

கமிஷனர் பிரமித்தார். அப்போது அந்தக் கிராமத்திய தினசரிக் குறிப்பைக்கண்டு, அயலார் யார் வந்தார்களென்று அறியக்கூடும் என்று அவ்விடமிருந்தவர் சொன்னார். அந்தத் தினசரிக் குறிப்பால் அந்தக் குற்றவாளி சீரடியில் இருந்ததாகச் சொன்னகாலத்தில் அவன் இல்லையென்று தெரியவந்தது. பாபாவும் எப்பொழுதும் கிராமத்தைவிட்டு வெளியில் போகவில்லையென்பது எல்லோருக்கும் பிரசித்தமான விஷயம்.

அந்தக் கமிஷனர் மேற்கண்ட விஷயங்களைப் பாபாவிடம் சொல்ல அவைகள் உண்மை என்று பாபா சொன்னார். இவ்விதமாகக் கமிஷனர் விசாரணை முடிந்தது. அதில் கையெழுத்து அல்லது கைக்குறிபோட பாபாவைக் கேட்கவில்லை. எந்தக் காலத்திலும், பாபா, கையெழுத்துப் போட்டதாவது, கைக்குறி செய்ததாவது இல்லை.

கர்டிஸ் வரவு

582. 1910-ம் வருஷத்தில், பாபா துவாரகா மாயியில் சொன்னதாவது :—படவா! என்னைக் காண வருகிறான். என்னிடம் என்ன இருக்கிறது? மற்றவர்

களைப்போல் மனித உருவுடன் இருக்கும் ஒரு நிர்வாண பக்கிரி நான்.

அங்கு யாருமில்லாததால், பாபா யாரைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அங்கு இருந்த ஜனங்கள் அதிசயித்தார்கள். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம், உத்தியோக ஊர்கோலம் ஒன்று மசூதியின் ஓரமாகப் போயிற்று. அதில் கர்டிஸ் என்னும் ரெவினியூ கமிஷனரும், கலெக்டரும், டிப்டி கலெக்டர் வகையருவுடன் போய்க்கொண்டிருந்தார்கள். சாவடிக்குச் சென்றார்கள். உதவிக் கமிஷனர் N. R. S. என்பவரிடம் "சாயிபாபாவை காலைக் கடன்களைச் சீக்கிரமாக முடித்துக்கொள்ளச்சொல். சாஹேபுகள் (உத்தியோகஸ்தர்கள்) அவரைக் காணப் பிரியப்படுகிறார்கள்" என்றார்.

N. R. S. :—பாபாவிடம் இவ்விதமாய் போய்ச் சொல்லுவதா! அது அசாத்தியம். அவரிடம் ஏதாவது காரியம் இருந்தால் அதற்காகக் காத்திருக்கவேண்டும்.

ஒரு அரை மணியில் அந்த வழியாக பாபா சென்றார். கர்டிஸ் மனைவி அவருக்கு ஸலாம் சொல்லி மகராஜ் உம்முடன் நாங்கள் சிறிது வார்த்தையாட விரும்புகிறோம் என்றாள்.

பா :—அரை மணி பொறு. நான் போய் பிக்ஷை எடுக்கவேண்டும்.

இவ்விதம் சொல்லிக்கொண்டே பாபா போனார். 10-நிமிஷத்தில் திரும்பிவிட்டார்.

கர்டிஸ் மனைவி :—மறுபடியும் தலைவணங்கி, "வந்துவிட்டீர்கள். சிறிது வார்த்தை பேச விரும்புகிறோம்" என்றாள்.

பா :—ஒரு மணி பொறு.

இவ்விதம் சொல்லிக்கொண்டே பாபா மசூதிக்குப் போய்விட்டார்.

உத்தியோகஸ்தர்கள் தங்கள் காரியம் முக்கிய மென்று அங்கு தங்காமல் போய்விட்டார்கள். கர்டிஸின் மனைவி பாபாவின் கருணையால் குழந்தை வேண்டும் என்று எண்ணியது ஈடேறவில்லை.

583. இந்துக்கள் பாபாவை முதலில் புஷ்பங்களால் பூஜை செய்துவந்தார்கள். சந்தனம் காலில் தடவலாம். மற்றபடி பூச அவர் இடம் கொடவில்லை. மஹலஸாபதிதான் பாபாவின் கழுத்தில் முதலில் சந்தனம் பூசினார். நெற்றியில் சந்தனம் பூசுவதை பாபா தடுத்தார். ஒருதினம், மஹலஸாபதிக்கு பாபாவின் உருவம் நெற்றியில்சந்தனத்துடன் தோன்றிற்று. அதுமுதல் மஹலஸாபதி,பாபா நெற்றியிலும் சந்தனம் பூசிவந்தார். பாபா ஆக்ஷேபிக்கவில்லை ஆனால் சில மகம்மதியர்கள் ஆக்ஷேபித்தார்கள். பாபா அதைக் கவனிக்கவில்லை. பிறகு மகம்மதியர் ஒன்றுகூடி சங்கமனேர்காஜியுடன் ஆலோசித்து, பாபா முகத்தில் சந்தனம் பூசும் நபரை தடியால் அடிப்பதாகத் தீர்மானித்தார்கள். இதை மஹலஸாபதிக் ஒரு தாம்பூலி சொன்னார். அன்று மஹலஸாபதி, சுவற்றுக்கு வெளியில் நின்றுகொண்டு, அவ்விடத்திலிருந்து பூஜை செய்தார்.

பா :—மஹலஸாபதியை நோக்கி நீ அங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய் ?

ம :—தங்களைப் பூஜை செய்கிறேன்.

பா :—உள்ளே வா. நெற்றியிலும், கையிலும், மார்பின்பேரிலும் சந்தனம் பூசு. உன்னை யார் அடிக்கிறார் நான் பார்க்கிறேன்.

பாபா கர்ஜனையால் முஸ்லீம்கள் திகைத்துப் போனார்கள். சந்தனம் பூசியவரை அடிக்கவில்லை. அது முதல், சந்தனத்துடன் பூஜை கோவில்களில் நடப்பது போல் பாபாவுக்கு மசூதியில் சரிவர நடந்துவந்தது.

584. 1913—1914-ம் வருஷத்தில் பூனாவில் பிளேக் வாரிக்கொண்டிருந்தது. R. K. துபே என்பவர் சீரடிக்குப் போவதாய்ப் பிரதிக்ஞை செய்துகொண்டவர், அங்கு போகாமல்வேறே ஒரு ஊர் (ஸாஸர்வாடாவுக்கு)போனார். அந்தப் பிரயாணத்தில் அவருடைய குழந்தை ஒன்று காலமாய்விட்டது. அவருடைய மனைவிக்கும் அதிக காயலா வந்தது. அப்பொழுது துபே பாபாவுக்குப் பிரார்த்தனை செய்து நித்திரை செய்தார்.

பாபா அவருக்கு நித்திரையில் தோன்றி, "பிரதிக்ஞை செய்தவர் அதை நிறைவேற்றவேண்டும். தவறினால் இவ்விதமான தண்டனைக் குள்ளாகவேண்டும்". என்று சொல்லி பாபா உதியை அதாவது விபூதியை அவர் மனைவியின் நெற்றியிலிட்டு மறைந்தார். எழுந்திருந்து பார்த்ததில் அவளுடைய முகத்தில் விபூதியிருந்தது. மறுதினம் அவள் குணமானாள்.

பிறகு துபேயும் மனைவியும் சீரடிக்குச் சென்று நடந்த சம்பவங்களைப் பக்தர்களிடம் சொன்னார்கள்.

585. பாபா:—"உலகமே வேடிக்கையாயிருக்கிறது. எல்லோரும் என் பிரஜைகள். சமதிருஷ்டியாய் எல்லோரையும் நான் கவனிக்கிறேன். ஆனால் சிலர் திருடர்களாய்விடுகிறார்கள். நான் அவர்களுக்கு என்ன செய்யமுடியும்? தங்கள் மரணமே சமீபித்திருந்தும் அயலாரின் உயிரை வாங்கச் சூழ்ச்சி செய்கிறார்கள். இவர்கள் எனக்கு அதிக வருத்தம் கொடுக்கிறார்கள். ஆனால் நான் எதுவும் சொல்லாமல் சும்மா இருக்கிறேன்.

கடவுளே (அனைத்திலும்) பெரியவர். அவர் எண்ணங்களை நிறைவேற்ற எல்லாவிடங்களிலும் மகாசித்தி சக்தி வாய்ந்த கருவிகள் (ஏஜண்டுகள்) இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தமக்கேற்பட்ட நிலைமையிலே திருப்தியாய் இருக்கவேண்டும். எனக்கு மிகுந்த சக்தியுண்டு. நான் இங்கே எட்டு அல்லது பத்தாயிரம் வருஷங்களுக்கு முன்னால் இருந்தேன்.

586. பா:—கர்பத்தில் குருக்கே நட்டுக்கொண்டால் நம் சொந்தக் குழந்தையையே துண்டித்துப் போடவேண்டியதாகும். இவ்விதம் சொல்லிக்கொண்டு பாபா தாமே தமது முதல் வாசஸ்தலமானதும் தம் குரு சமாதிக்கு நிழல்கொடுப்பதுமான வேப்பமரத்தின் கிளையை, ஸாடே வாடா சுவர் எழுப்ப அட்டமாயிருந்ததால் வெட்டி எறிந்தார்.

587. 284 அடக்கம்.

588. தாமியா (தாமோதர S. ராஸ்னே) என்பவர் வைசிய ஜாதி அவர் பாபாவிடம் சென்று, அவரிடம் ஸதாகாலம் ஊழியம் செய்துவரும் பாலாபடேல் என்னும் தீண்டாத ஜாதியானை, பாபாவுக்குப் பதிலாக தமது வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட அனுப்பவேண்டுமென்று கேட்டார்.

பா :—சரி. ஆனால் தூர நில் தூர நில் என்று சொல்லக்கூடாது. நீ சாப்பிடும் இடத்திலிருந்து தூரமாக அவனை உட்கார வைக்கக்கூடாது.

பாபாவின் உத்திரவுப்படியே தாமியா செய்து, பாலபடேலை தன் விருந்தாக அழைத்துக்கொண்டுபோய், தன்னுடன் உட்காரவைத்துக்கொண்டு, அன்னமிட்டார்.

589. கோபர்காமில். ஒரு கிருஸ்தவர். (சக்ரநாராயன்) (Foujdar) போலீஸ் அதிகாரியாக நியமிக்

கப்பட்டார். அப்பொழுது ஒரு பக்தன் மனவருத்தத்துடன் பாபாவிடம் வந்து "நம்முடைய போலீஸ் ஜெளஜ்தார் இப்பொழுது ஒரு கிருஸ்தவர் பாபா" என்றான்

பாபா:—அதனால் என்ன? அவனும் என் சகோதரன்.

590. 1915-ஆம் வருஷத்தில் G. I. P. Ry. Yard Master (C. S. Peston Jamas) பெஸ்டன் ஜமாஸ் என்பவரும் அவர் மைத்துனரும் ஸாயி மகாராஜ் தரிசனம் செய்ய சீரடிக்குப் போனபோது தங்க இடமுண்டா என்று தீக்ஷீத்வாடாவிற்குப் போனார்கள். அங்கே அதிக கும்பலாக இருந்தது. மாடியின் மேல் பணக்காரர்கள் பிரபுக்கள் இருந்தார்கள். இந்த இரண்டு பாரஸிகர்களும் கீழே தங்க வேண்டியதாயிற்று. இதைப்பற்றி நொந்த மனத்துடன் இருவரும் பாபா எதிரில் மசூதியில் உட்கார்ந்தார்கள்.

"இந்த தர்பாரில் என்ன நியாயம்!! தனிகர்கள் பிரபுக்கள் மாடியில் சுகமனுபவிக்க, ஏழைகள் கீழே கஷ்டப்படுகிறார்கள்!!" என்று எண்ணிக்கொண்டே மசூதியில் இருந்ததை பாபா உடனேயறிந்து அவ்விடம் இருந்த ஒருவரிடம் "இவர்களை மாடிக்கு அழைத்துக்கொண்டு போ." என்றார். அவ்விதமே இவர்களுக்கு மாடியில் இடம் கிடைத்தது.

591. துக்காராம் பர்கு என்னும் ஒரு திண்டாதான் வேலை தேடிக்கொண்டு சீரடியை விட்டுப்போகப் புறப்பட்டான். அவனைப் பாபா சந்தித்து அவன் கழுத்தில் கை போட்டு நிறுத்தி.

பாபா :—போகாதே

பர்கு :—நான் போய்ச் சம்பாதிக்க வேண்டும்.

பா :—போகாதே.

பர்கு அவர் சொல்லைக் கேட்கவில்லை. ஊரைவிட்டுப் போனுன். போனவிடத்தில் காயலாவால் மிகவும் வருந்தி ஒன்றும் சம்பாதிக்க முடியாமல் திரும்பினுன்.

592. நானு சாஹேப் டேங்களே என்பவர் ஒரு சமயம், ஒரு வெள்ளித்தட்டு நிறைய மிட்டாய் கொண்டு வந்து பாபாவைச் சாப்பிட வேண்டினுர். பாபா உரக்கக் கூப்பிட்டதில், ஒரு கறுப்பு நாய் ஓடி வந்தது. மிட்டாயை நக்கிற்று. அப்போது நானு சாஹேப், அருவருப் படைந்து "இந்த பர நாயிக்கா இதையெல்லாம் நான் தயார் செய்தது" என்று நினைத்தார். உடனே பாபா அந்தத் தட்டை விசிறித் தள்ளி "இதை எடுத்துக்கொண்டு போ." என்ருர்.

593. பா:—எல்லாரும் தொழும் கடவுள் ஒன்று தான். ஹிந்துவுக்கும் முஸ்லீமுக்கும் வித்தியாசம் ஒன்று மில்லை. மசூதியும் ஆலயமும் ஒன்றே. ஆகிலும் உங்களுடைய (ஜனங்களுடைய) மனோபாவத்தையனுசரித்து நான் ஆலயத்துக்குள் நுழைவதில்லை.

594. ஒரு சமயம் H. S. தீக்ஷித் ஏசு கிரிஸ்துவைப் பற்றியும் கிரிஸ்தவ மதத்தைப்பற்றியும் தமது வீட்டில் தூஷித்துவிட்டு மசூதிக்கு வந்து பாபாவின் கால்களைப் பிடிக்க வந்தபோது பாபா, "எட்டப்போ என்னைத் தொடவேண்டாம்" என்ருர்.

H. S. D. மனம் வருந்தி, மறுபடியும் சிறிது நேரத்தில் பாபாவின் அருகில் வந்தார். பாபா அப்பொழுது காலைப் பிடிப்பதற்கு ஆக்ஷேபிக்கவில்லை.

595. படே பாபா (பக்கீர் பாபா) ஒரு ஹிந்துவை இஸ்லாம் மதத்தில் சேர்த்து, மசூதிக்கு அழைத்துக் கொண்டு வந்தார். பாபா அந்த மனிதனுடைய தவடை

யில் தட்டி, "ஹா! உன் தகப்பனை மாற்றிக்கொண்டாயா?" என்றார்.

596. பாபா :—நான் இவ்விடம் பேசுகிறேன். அவ்விடத்தில் அவ்விஷயங்கள் நடக்கின்றன. இதெல்லாம் கடவுள் (லீலை) விளையாட்டு.

M. W. பிரதான் பம்பாய்க்குப்போக அப்பொழுது பெய்துகொண்டிருக்கும் மழையால் வழித்தடைகள் நேரிடும். அதனால் ஊர்போக பாபா உத்திரவு கொடுக்க மாட்டார் என்று பாபா எதிர் நின்றார். அப்பொழுது, பாபா: "கடவுளே! மழையை நிறுத்தும். என் குழந்தைகள் வீட்டுக்குப் போகவேண்டும். அவர்கள் சுகமாய் போகவிடும்" என்றார். M. W. P. கோபர்காம் ரயில் ஸ்டேஷன் சேரும் வரையில் மழையின்று இருந்தது.

597. H. V. S. மாமனார் தாதா கேல்கர்:—எங்களுக்கு எப்போ பேரன் பிறக்கும்?

சாயி பாபா :—நான் அல்லாவை வேண்டிக்கொண்டிருக்கிறேன். என் வேண்டுகோளுக்கு அவர் இணங்குவார்.

598. 1886 வருஷத்தில் பாபா மஹலஸாபதியை நோக்கி: "இன்று நான் கடவுளிடம் போகிறேன்".

599. நெருப்பில் பாபா தம் கையை சுட்டுக்கொண்டார்.

பாபா :—இது கடவுளின் லீலை. அவரே குணப்படுத்துவார். நாம் ஏன் கவலைப்படவேண்டும். அல்லா என் வைத்தியர்.

600. பாபா R. B. P.-யைப் பார்த்து:—"இன்னும் 2, 4 நாளில் நான் சுகமடைவேன். அல்லா எனக்கு இந்த பிணியைக் கொடுத்தார். 2, 4 நாளில் என்னை குணப்படுத்துவார். நீ விசனப்படவேண்டாம்.

600 (a). பாபா மசூதியில் உட்கார்த்திருந்தார். சீதாப்பழ காலம் ஆரம்பித்தது. ஒருவள் அந்த பழங்களைக் கொண்டுவந்து, அவைகளை வாங்கும்படி பாபாவை பன்முறை வேண்டினாள். முதலில் அவைகளுக்கு அதிக விலை கேட்டாள்.

பா:—உன் பழம் வேண்டியதில்லை. எடுத்துக் கொண்டுபோ. பிறகு அவள் 10 அணாவுக்கு 6 பழம் வாங்கிக்கொள்ள பாபாவை வேண்டினாள். அப்படியே பாபா வாங்கினார். சிறிது நேரம் சென்றபின் வேறொரு சீதாப்பழக் கூடைக்காரி வந்தாள். பாபா அவளிடம் பேரம் பேசினார்.

பா:—பத்து பழங்களுக்கு 6 அணாதான் கொடுப்பேன் என்றார். அதற்கவள் சம்மதித்தாள். அந்தப் பழங்களையும் வாங்கிக்கொண்டார்.

பா:—(சாமாவைப் பார்த்து) சாமா இவர்களுக்கு மொத்த பணம் எவ்வளவு கொடுக்கவேண்டும்?

சா:—தேவா! ஒரு ரூபாய்.

அவ்விடத்தில் இருந்த ஒருவரைப் பாபா நோக்கி, "பாவ் (தம்பி) எனக்கு 2 ரூபாய் கொடுப்பாயா"?

அந்த 2 ரூபாய் அவர் கொடுத்தார்.

பிறகு பாபா முதல் பழக்காரியை அழைத்து, "இதை எடுத்துக்கொள். பணத்தைப் பெற்றுக்கொள்" என்று 1 ரூபாய் கொடுத்தார். பிறகு பாபா இரண்டாவது பழக்காரியை அழைத்து அவளுக்கும் 1 ரூபாய் கொடுத்தார்.

இரண்டு ரூபாய் கொடுத்த பக்தன் "பாபா இங்கே நடந்தது எனக்கு அர்த்தமாகவில்லை. ஒவ்வொன்றையும் விளக்கவேண்டும்".

பா :—இதென்ன கஷ்டம்? முதல் கூடை வந்த போது பழம் கிடைப்பது அரிது. ஆகையால் 10 அணுவுக்கு 6 தீர்மானித்தது.

இரண்டாவது கூடை வந்தபோது, பழம் அவ்வளவரிதல்ல. கொஞ்சம் மலிந்துவிட்டது. ஆகையால் 6 அணுவுக்கு பத்து பழமாக வாங்கினோம். ஆனால் முடிவில் கொடுத்த தொகை அவளவளுடைய பாக்யம் பூர்வ கர்மம் அனுசரித்து ஏற்பட்டது.

601. 1890-ல் நானு சாஹேப் நிமோன்கர் பாபாவுக்குப் பத்து ரூபாய் நோட்டு கொடுத்தார்.

பா :—நான் இதை எடுத்துக்கொள்ள மாட்டேன். நான் ஒரு பக்கிரி.

602. 1907-ம் வருஷத்தில் கானிட்கர் என்பவர் குடும்பத்தோடு பாபாவிடம் சென்றார். அந்தக் காலத்தில் பாபாசாவடியில் இருந்து துர்ப்பாஷையாகத் திட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அவருடைய குமாஸ்தாக்களில் ஒருவர் பாபா ஒரு சாது என்று சொன்னார். அப்போது கானிட்கர் "என் குடும்பத்தாரிடமிருந்து தக்ஷிணையாகப் பெற்றுக்கொண்ட எல்லாப் பணத்தையும் திருப்பி கொடுத்தால், அவர் சாதுதான்" என்றார். இது பாபா இருக்குமிடத்திற்குத் தூரத்தில் சொன்னது.

பிறகு கானிட்கர் மனைவியும் குடும்பத்தாரும் பாபாவிடம் போனார்கள்.

பா :—இது வரையில் நீங்கள் கொடுத்த பணம் இதோ இருக்கிறது எடுத்துக்கொண்டு போங்கள்.

கானிட்கர் மனைவி :—விறகு முதலியவை வாங்க உதவும். வைத்துக் கொள்ளுங்கள்.

பா :—எனக்குத் தேவையில்லை.

603. பாபா, S. B. நாச்னேயை நோக்கி:—"நீ எது ஏற்றுக்கொண்டாலும், செவ்வையாய்ச் செய். முடியாவிட்டால் செய்வதாக ஏற்றுக்கொள்ளாதே.

604. பாபா:—ஒரு பண்டிகை உத்ஸவம் கொண்டாடவாவது அல்லது விருந்து, யாத்திரை, பிரயாணம் செய்யவாவது கடன் வாங்காதே.

605. பாபா:—எப்போதும் பிரயாணம் புறப்படுவதற்கு முன் சாப்பிடு. பட்டினியாய்ப் புறப்படாதே.

606. பாபா ஒரு சமயம் ஹரிபாவ், K. கார்னிக் என்பவரிடம், "இந்த மசூதியின் படிக்கட்டு ஏருதே. நேராக வீட்டுக்குப்போ. இடையில் ஓரிடத்திலும் தங்காதே." என்ருர். அப்படியே ஹரிபாவ் நேராய் வீட்டுக்குப் போனுர். போய்ச் சேரவே, தன் பேரன் மனைவி (பாபா பேசுவதற்கு இரண்டு மணிக்கு முன்) இறந்துவிட்டிருந்தாள்.

607. கோகளே என்பவரின் பாரியை ஒரு சமயம் மற்றவருடன் மசூதிக்கு வந்துகொண்டிருந்தாள்.

பா:—அவளை நோக்கி, மசூதியின்மேல் ஏருதே.

அவள் திரும்பிப்போய், சுத்தப்படுத்திக்கொண்டு மறுபடியும் மசூதிக்கு வந்தாள்.

மறுபடியும் பா:—உள்ளே வராதே. பிறகு அவள் ஊருக்குப் போய் தன் வீட்டுக்குப் போனுள். தான் பாபாவிடம் போகுமுன் அவளுடைய பந்து ஒருவர் இறந்துவிட்டதையும் அதனுல் தீட்டு ஏற்பட்டிருப்பதையும் அறிந்தாள்.

608. ஒரு சமயம் இயந்தரக்கல்லில் பாபா கோதுமை மாவு அரைத்துக்கொண்டிருந்தார். கிராமப் பெண்கள் பாபாவிடம் வந்து தாங்கள் கோதுமை மாவு

அரைக்கிறீர்கள். நாங்களும் சகாயம் செய்கிறோம் என்றார்கள்.

பா :—செய்யுங்கள்.

அரைத்தான பிறகு,

பெண்கள் :—பாபா, தாங்கள் ரொட்டி செய்வதில்லை. ஆகையால் நாங்கள் எடுத்துக்கொண்டு போகிறோம்.

பா :—இல்லை. இல்லை. இல்லை. வாருங்கள். நாம் எல்லோரும் மாவை எடுத்துக்கொண்டு போகலாம்.

பிறகு பாபா சீரடியின் வடபக்க எல்லையான ஓடைக்குப் போனார்.

பா :—இப்போது இந்த மாவு எல்லாவற்றையும் ஓடை ஓரத்தில் இறைப்போம். காலரா பிளேக் முதலிய தேவதைகள் மாவைத் தின்று திருப்தியடைந்து, கிராமத்தை விட்டுப் போய்விடும்.

அவ்விதமே பாபா மாவை இறைத்தபிறகு, தொத்து நோய்கள் கிராமத்தில் வரவில்லை.

சிற்சில சமயம் பாபா தனியாக இருக்கும்போது விதவிதமான நாணயங்களை எடுத்து, அவைகளைத் தமது விரல்களால் தேய்த்து வருவார். "நானுசே நானுசே" "காகாசே காகாசே" "ஸோம்யாசே ஸோம்யாசே" இவ்வாறு சொல்லிக்கொண்டே தேய்ப்பார். இதனாலந்த நாணயங்கள்பேரிலிருந்த அக்ஷரம் முதலியது அழிந்து போய்விட்டது. இதனால் பெயர்சொன்ன பக்தர்களின் கெட்ட கர்ம பலன்களை அழித்துவந்தார் என்று பக்தர்கள் எண்ணினார்கள்.

அடிக்கடி பாபா அப்துல் என்பவரை நோக்கி அப்துல்! லேண்டி தோட்டத்தில் அகண்டதீபத்துக்குப் பக்கத்தில் சில பக்கட்களில் தண்ணீர் வை. அகண்டம்

அணையாமல் எறியும்படி பார்த்துக்கொள். எப்போதும் விளக்குக்கு எண்ணெ போட்டுக்கொண்டிரு

அகண்ட தீபத்தின் பக்கத்தில் பக்கட்களில் தண்ணீர் வைத்தபிறகு, பாபா தண்ணீரைத் திக்குத்திக்காய் தெளித்து, ஒவ்வொரு பக்கமும் 2 அல்லது 3 அடி நடந்து ஆகாயத்தை நோக்கிப் பேசுவார். தமது பக்தர்களுக்கு ஏற்படும் கஷ்டம் போக்க இவ்வாறு செய்தார்போலும்.

ஒருசமயம், மசூதியில் இருந்த நெருப்பில் பாபா தமது கையை வைத்தார். அது கறுத்துத் தோல் வெந்துவிட்டது.

சாமா :—பாபா, ஏன் அப்படிச் செய்தீர்கள்? இப்படிச் சொல்லிக்கொண்டு பாபா கையை வெளியே இழுத்துவிட்டார்.

பா :—கை பாழாய்ப் போகட்டும். ஒரு குழந்தை நெருப்பில் விழுந்துவிட்டது அதை வெளியே எடுத்தேன்.

பிறகு, ஒரு இடத்தில் ஒரு கருமானுடைய குழந்தை நெருப்பில் விழுந்துவிட்டதாகவும் அதன் உயிருக்கு அபாயம் வருமுன் வெளியே எடுக்கப்பட்டதென்றும் சங்கதி வந்தது.

609. எவ்விதமாய் ஸத்புருஷருடைய ஜீவிய சரித்திரம் எழுதவேண்டும் என்பதைப்பற்றி பாபா :—

(1) பக்தர்களின் உண்மையான அனுபவங்களை பூராவும் விசாரிக்கவேண்டும்.

(2) சரித்திரம் எழுதுகிறவர் கர்வத்துடன், வாதி பிரதிவாதிகள் சண்டையிடுவதுபோல் எழுதக்கூடாது. பக்ஷபாதங்கொண்டாவது, சண்டைக்கு இழுக்கும் உக்கிரகத்துடனாவது எழுதக்கூடாது.

(3) சரித்திரம் எழுதுகிறவர் சாயிபாபாவை ஸ்மரித்து அந்த ஸ்மரணையிலே மூழ்கி தன்னையும், அகம்

பாவத்தையும் அவரிடம் ஒப்புவித்துவிட்டு எழுதவேண்டும். அப்போது பாபா சரித்திரம் பாபாவினுலேயே எழுதப்பட்டதாகும்.

(4) பாபாவின் ஜீவியத்தைப் படிப்பதாலும், எழுதுவதாலும், மனனம் செய்வதாலும், பக்தி தீவிரமாகி, அஞ்ஞானம் அகலும். ஆனுல் புஸ்தகமானது விவாத முறையில் இருந்தால், அதனுல் அஞ்ஞானம் மேலாகும்.

(5) எவனொருவன் என்னை (பாபாவை) விசுவாசத்தோடு சேவிக்கிருனே, கடவுள் அவனுக்குக் கருணை புரிவார்.

610. ஒருசமயம் **H. S.** தீக்ஷித் என்பவருக்கு பண்டரிநாதன் தரிசனம் தமது ஜாகையில் உண்டாயிற்று. பிறகு அவர் பாபாவிடம் போனபோது:

பாபா :—விட்டல் படேல் வரவில்லையா? அவரை நீ காணவில்லையா? அந்த விட்டல் நழுவிப்போகிறவர். அவரைக் கெட்டியாய்க் கட்டு. அஜாக்கிரதையாக, ஒரு விஞடிகூட அவரைப் பார்க்காமலிருந்தால், அவர் மறைந்துவிடுவார்.

611. தாஸ்கணு மகாராஜ், ஈசாவாஸ்ய உபநிஷத்தின் பொருள் அறியாமல் கவலைப்பட்டுப் பாபாவிடம் போனுர்.

பாபா :—இதில் என்ன கஷ்டம்? பம்பாயில் காகாவின் வீட்டுக்குப்போ அவருடைய மோல்காரின் (சூத்திரக் குட்டி) உன் சந்தேகத்தைத் தீர்ப்பாள். தாஸ்கணு அப்படியே பம்பாய்க்குப் போனுர். உபநிஷத்தும் கணுவின் எண்ணத்தையும் அறியாத 8 வயது வேலைக்காரிப் பெண், பாடின பாட்டாலும் அவள் நடத்தையாலும், உபநிஷத் கணுவுக்கு அர்த்தமாய்விட்டது.

விசித்திரமான பாபா பேச்சு

612. ஒருசமயம் சாமாவைப் பாம்புகடித்துவிட்டது. பாபாவிடம் மசூதிக்கு சாமா போனூர்.

பா:—“பாப்பான் மேலே ஏராதே. கீழே இறங்கு இறங்கு”.

இதைக்கேட்டதும், தான் மசூதிமேல் ஏறக்கூடாதென்பது பாபாவின் உத்திரவு என்று அஞ்சினூர்.

பாபா:—(சிறிதுநேரங் கழித்து) மேலே வா. அந்தப் பக்கீர் (கடவுள்) கருணையுள்ளவர். நீ குணமடைவாய்.

பிறகு பாபா முதலில் சொன்ன வார்த்தைகள் “விஷம் தேகத்தில் மேலே ஏறக்கூடா”தென்று சொன்னதாக சாமா அறிந்துகொண்டார்.

613. உத்தவேச பூவா என்பவர் ஒவ்வொரு ஏகாதசி தினம் பாபாவுக்குக் கடிதம் எழுதுவார். பாபா சமாதியடைவதற்கு சில மாதங்களுக்கு முன்னூல் பாபாவைத் தரிசிக்க வந்தார்.

பா :—சரி போ. பதினைந்து தினத்துக்கு ஒருதரம் இவ்விடம் வந்துகொண்டிருக்கவேண்டாம். நான் எப்போதும் உன்னுடன் இருக்கிறேன். அவ்விடத்தில் இருக்கும் எல்லோருக்கும் சொல்.

இது கடைசி உத்திரவாய் இருந்தது. இதை உத்தவேச பூவா அறியவில்லை. ஆனூல் மறதியாக, அதற்குப் பின் ஏகாதசி கடிதத்தை எழுதவில்லை. ஒருவேளை பதினைந்து தினங்களுக்கொருமுறை வருதல் என்பதை இந்த கடிதங்களுக்காகச் சொல்லியிருந்தார்போலும்!

614. பாபா:—(ஏழை பக்தனைப் பார்த்து) “அவன் அதிக பைசாக்காரன் (பைசா என்பது புண்ணியம்).

“பிராம்மணர்கள் தங்கள் ஏற்பாடுகளால் அதிக பைசா சாம்பாதிக்கிறூர்கள்”.

615. ஹர்தாவாசி ஒருவன் இறந்துவிட்டான். அவனைக் குறித்து :

பாபா :—அவன் எப்படி சாவான்? காலையில் அவன் உயிரோடிருப்பான். இதைக்கேட்ட பந்துக்கள் "இறந்தவன் உயிரோடிருப்பான்" என்றதால் ஹர்தாகாரன் பிழைப்பான் என்று எண்ணினார்கள். ஆனால் பாபா சொன்னது மற்றொரு தேகத்தை அடைந்ததைப்பற்றி.

616. அந்த பகீர் (தெய்வம், குரு) எல்லோர் பேரிலும் அன்புள்ளவர்.

617. ஒரு சமயம் H. S. D. (பாபாவை நோக்கி) நானா சாஹேப் காம்பேல்கர் எழுதுகிறது என்னவென்றால் அவர் மனைவியும், சகோதரரும் காயலா. ஆகையால் தங்கள் சகாயத்தைக் கோருகிறார்.

பா :—சகோதரர் குணமடைவார்.

H. S. D. :—அந்த ஸ்திரி!

பா :—அவள் இங்கே வந்திருக்கிறாளா?

H. S. D. :—இல்லை. ஆனால் அவளை நாம் வரவழைக்கலாமா?

பா :—சரி.

சகோதரன் குணமடைந்தான். ஸ்திரீ கர்லமானாள். "அவள் வந்திருக்கிறாளா" என்பதன் பொருள், இறந்தபின் சூக்ஷ்ம சரீரத்துடன் வந்தாளா? பல பக்தர்கள் தேகவியோக சமயத்தில் சூக்ஷ்ம சரீரத்துடன் பாபாவிடம் போய் சேருகிறார்கள்.

618. சீரடியில் ஒரு பக்தர் பணக்கஷ்டத்தில் வாடி இருந்தார். அவருக்கு H. S. D. உதவி செய்ய முன் வந்தும், பக்தர் உதவியைப் பெற்றுக்கொள்வதில்லை. ஆகையால் கொஞ்சம் ரூபாய் ஒரு லிபாபாவில் (கவரில்) போட்டுக்கொண்டு பாபாவிடம் H. S. D. போனார்.

H. S. D. :—பாபா! நான் இந்த கடிதத்தை அனுப்பலாமா?

பா :—சரி.

H. S. D. :—உடனே அனுப்பினார். அதை பக்தர் பெற்றுக்கொண்டார். பக்தர் பிறகு அதற்குக் காரணம் சொன்னதாவது. கவர் வருவதற்கு இரண்டு மணிக்கு முன்பு அந்தப் பக்தரின் மனைவி பாபாவிடம் போனாள். பாபா அவளை நோக்கி

பா :—அம்மா! நான் உன் வீட்டுக்கு வருவேன். என்னைத் தள்ளக்கூடாது என்று உன் புருஷனுக்குச் சொல்லு.

619. ஒரு சமயம் ஒரு ஆடு மசூதிக்குள் வந்தது. அது அதிக கிழடு. எலும்பும் தோலுமாகவும் சாகும் போலும் இருந்தது. ஒன்றுக்கும் உதவாதது.

பா :—(படே பாபாவை நோக்கி) ஒரே அடியில் அந்த ஆட்டை வெட்டு.

படே பாபா :—(கருணையுடன் அதை நோக்கி) இதை நாம் எப்படிக் கொல்வது? இவ்விதமாகச் சொல்லிக் கொண்டே மசூதியை விட்டுப் போய்விட்டார்.

பா :—(சாமாவை நோக்கி) சாமா! நீ அதைவெட்டு! ராதாகிருஷ்ண ஆயிடமிருந்து கத்தி வாங்கிவா.

ஆயி ஒரு கத்தி அனுப்பினாள். ஆனால் அதன் காரணத்தைக் கேட்டு மறுபடியும் திருப்பி வாங்கிக்கொண்டாள்.

சாமா :—நான் வீட்டுக்குப்போய் கத்தி கொண்டு வருகிறேன். சாமா வீட்டுக்குப்போய் அங்கேயே நின்று கொண்டார்.

பிறகு **H. S. D.** யை நோக்கி நீ ஒரு கத்தியைக் கொண்டுவந்து அதைக் கொல்லு.

H. S. D. போய் ஒரு கத்தியைக் கொண்டுவந்தார்.

H. S. D. :—பாபா! நான் அதைக் கொல்லட்டுமா?

பா :—ஆமாம்.

H. S. D. :—கத்தியைத் தூக்கினர். அருவருப்பாய் மேலே வைத்திருந்தார்.

பா :—என்ன யோசிக்கிருய். வெட்டு.

தீக்ஷித் வெட்ட ஆரம்பித்து கத்தியைக் கீழே இறக்கினர்.

பா :—நிறுத்து. ஆடு இருக்கட்டும். நானே அதைக் கொல்கிறேன். ஆனல் மசூதியில் கொல்லக்கூடாது என்று சொல்லி பாபா அதை எடுத்துக்கொண்டு சில கஜம் போனர். ஆடு தானகவே கீழேவிழுந்து செத்துவிட்டது.

620. G. D. பண்டிட் என்பவர் வந்து பாபாவை நமஸ்கரித்தார்.

பா :—(யாரையோ நோக்கி) பாபு சஹேப் என்ன செய்கிருன்?

நாராயணன் :—தூங்கிக்கொண்டிருக்கிருன்.

பா :—அவன் இங்கே வரும்போது அவனை நன்ருய் அடி. எனக்கு 3 அல்லது 4000 ரூபாய் பாக்கி இன்னும் கொடுக்காமல் தொந்திரவு பண்ணுகிருன்.

இது G. D. பண்டிட்டுக்கு ஒரு பாபு சாஹேப் என்பவன் செலுத்தவேண்டிய பாக்கியைச் செலுத்தாதிருப்பதைப் பற்றி பாபா சொன்னர். ஆனல் நாராயணனுக்கும் பாபு ஸாஹேப் ஜோகுக்கும் ஜோகைப்பற்றிச் சொன்னதாகத் தோன்றிற்று. ஜோக் வெகு கோபத்துடனே தான் எவருக்கும் பாக்கியில்லை யென்று உரக்க முறையிட்டார். பண்டிட்மட்டும் பாபாவின் அந்தர் ஞானத்தைக் கண்டு சந்தோஷித்தார்.

621. மாதவபூவா என்பவர் பாபாவின் எதிரில் உட்கார்ந்து, பாபா தமக்கு 'ஹம்ஸர்' "பரமஹம்ஸர்" இவைகளைப்பற்றி உபதேசிக்க வேண்டுமென்று நினைத்தார். அப்பொழுது.

பா:—போய் பாராயணம் கேள். உடனே மாதவபூவா S. D. பாராயணம் செய்துகொண்டிருப்பதைக் கேட்கப்போனார். அப்பொழுது, ஏகநாத பாகவதத்தில் 11 ஸ்காந்தத்தில் 18 அத்தியாயத்தில் 27-37 ஹம்சர் "பரம ஹம்சர்" இவைகளைப்பற்றி விவரிக்கப்பட்டிருப்பதைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார். அதை மாதவபூவா கேட்டார். பாபாவின் அபார சக்தியைக் கண்டு வியந்தார்.

622. பெரும்பான்மையாய்ப் பிரார்த்தனா சமாஜக்காரர்கள், பாபாவின் சக்தியையும், இயற்கையையும், காரியத்தையும் உணர்ந்ததில்லை. அவதாரங்கள் உண்டு என்பதையும், பக்தர்களுக்கு அவதாரங்கள் உதவி செய்கிறார்கள் என்பதையும், அவதாரங்களுக்கும், கடவுளுக்கும் கற்பூரம் நைவேத்தியம் சமர்ப்பிப்பது சரியென்பதையும் அவர்கள் ஒப்பமாட்டார்கள். அவர்களில் ஒருவர் பாபாவிடம் வந்தார். வந்து எதிரில் உட்கார்ந்து, தன் மனதில், "என் பாரத்தையெல்லாம் உம்முடைய பேரில் சுமத்தலாமா" என்று நினைத்தார்.

பா:—(உரக்க) அப்படியே செய்.

பிரார்த்தனா சமாஜக்காரர்:—நான் ஒரு கேள்வி கேட்கலாமா?

பா:—சரி.

பி:—தாங்கள் சம திருஷ்டியுடன் (பார்வையுடன்) எல்லோரையும் காண்கிறீரா?

பா:—கேள்வி கேட்பதற்குப் புத்தி வேண்டும். என்ன அறிவீனமான கேள்வி கேட்கிறாய்? நான் எல்லோரையும் ஸம திருஷ்டியாய்த்தான் பார்க்கிறேன்.

பி:—சமாஜஸ்தர் தம்மனதில் தாம் பூஜிக்க ஒரு இஷ்ட தேவதை அடைய வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவர் பழைய "சாலா" பக்கமாகத் திரும்பிய போது தம்மைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு அழகிய பெண் உருவம் கண்டார். பாபாவின் பக்கம் திரும்பினார். அவரைப் பாபா பார்த்துப் புன்னகை செய்தார். அந்தச் சமயத்தில் அந்த ஸ்திரீதர்சனமும் பாபா புன்னகையும் உண்டாயிற்று. அநேக தடவை தாம்கண்ட பிற்பாடு, சமாஜஸ்தர், அந்த உருவம் அன்னபூர்ணா என்று அறிந்து அதைத் தன் இஷ்ட தேவதையாகச் செய்து கொண்டார். மறுமுறை சீரடிக்கு அவர் வரும்போது, சீரடிக்கு வருவதால் நன்மையுண்டா என்பதைப் பற்றி அவரும் மற்றும் சிலரும் விவாதித்ததால், அவருடைய நம்பிக்கை குலைந்தது. பிறகு அவர் போய் பாபாவின் எதிரில் உட்கார்ந்தார்.

பாபா.—சாமா, இவனை அழைத்துக்கொண்டு போ. இவனுக்கு ஏதாவது சொல்.

சாமா அப்படியே அவரை வெளியே அழைத்துக் கொண்டுபோய்ச் சொன்னார்.

சாமா:—வெளி ஜனங்கள் பேச்சுக்களால் உன் விசுவாசம் கலங்குவது பாபாவின் லீலை. உலகம் சொல்வதைக் கவனிக்காதே. அது கொடுக்கும் கஷ்டத்தையும் கவனியாதே. பாபாவின் திருவடிகளில் உன் மனதை நிறுத்து. பிறகு பாபா உனக்கு சமாதானத்தை அளிப்பார்.

இருவரும் திரும்பிவந்தபோது பாபா:—(சமாஜஸ்தரை நோக்கி) சாமா சொன்னபடி நடந்துகொள்.

623. பாபா :—ராதாபாய் தேஷ்முகிண் என்பவளை நோக்கி :—நான் காதைக் கடித்து உபதேசிப்பதில்லை. எங்கள் சம்பிரதாயமே வேறு.

624. பாபா, உபாசனி மகாராஜ் என்பவரை நோக்கி :—என்னுடன் சும்மா இரு. மீதி எல்லாம் நான் செய்கிறேன்.

நாராயண தீர்த்தர்போன்ற, பக்தருக்கு பாபா தமது இச்சையாலேயே அதாவது ஒருவார்த்தைகூட பேசாமல் மேலான நிலைமையைக்கொடுத்து விசேஷ அனுபவங்களை அடையும்படி செய்தார்.

625. டாணு டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் ரிகார்டு குமாஸ்தாவாக இருந்த சாம ராவ் என்பவர் பாபா எதிரில் சீரடியில் உட்கார்ந்து பாபாவைத் தன் மனதிற்குள் ஒரு கேள்வி கேட்டார்.

பாபா :—பாயியிடம் போ. அவள் கோவிலில் புராணம் படிக்கிறாள்.

அவ்விதமே சாமராவ் போய் புராணம் கேட்டார். அதில் தம் கேள்விகளுக்குப் பதில் கிடைத்தன.

626. ஒரு சமயம் சில பையன்கள் பாபாவைப் "போட்டோ" எடுக்க வந்தார்கள். சாமாவை நோக்கி:

பா :—சாமா! அந்தப் பையன்கள் இவ்விடத்துக்கு ஏன் வந்திருக்கிறார்கள்.

சா :—தங்கள் "போடா" எடுக்க?

பாபா :—என்னைப் போட்டோ எடுக்கக் கூடாதென்று பையன்களுக்குச் சொல். என் உண்மையான ஸ்வரூபத்தை எடுக்கவேண்டுமானால், இந்த சுவரை இடிக்கவேண்டும். அதுவே போதும்.

சுவர் என்பது (1) தேகம் (2) நாம் தேகம் தான் வேறல்ல என்னும் அபிப்பிராயம். பாபாவின் உண்மை ஸ்வரூபம் பிரம்மம்.

627. பா:—தங்கம் வெள்ளிக்கொண்டு அநேக கழுதைகளைக் கொண்டுவந்தேன். வழியில் திருடர்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டார்கள். ஆகையால் திருடர்கள் இருக்கும் வீட்டில் குடியிருப்பது அதிகக் கடினம். (பாவ் சாஹேப் ப்ரதானே நோக்கி) நான் இதை உனக்கு உபதேசம் செய்வதற்காக உன்னை என்னிடம் மாதவநாத் அனுப்பியிருக்கிறார். இந்த ஸாரமில்லாத உலகத்தில் இருப்பது அதிகக் கஷ்டமாய் இருக்கிறது. எனக்கு குரு செய்த உபதேசம் இதுதான். என் சகோதரன் மாதவ்நாத்துக்கு இதைமாத்திரம் சொல்லு.

என் பணமெல்லாம் ஜனங்கள் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நான் ஒன்றும் பேசவில்லை. ஆனால் சும்மா பின்தொடர்ந்து அவர்களைக் கொன்று என் பணத்தைத் திரும்ப அடைந்தேன்.

628. பா :—நான் ஒருதரம் என் தேகத்தின் கீழ் பாகத்தை ஒரு கிளியின் கீழ்பாகத்துக்கு மாற்றிக்கொண்டேன். ஒரு வருஷ அநுபவத்துக்குப் பிறகு அதனால் ஏற்பட்ட அதிக நஷ்டத்தை அறிந்தேன். ஒரு லக்ஷம் (லக்ஷ்யம்) இழந்தேன்.

629. பா :—ஒரு ஸ்தம்பம் பக்கத்தில் உட்கார்ந்தேன். ஒரு பெரிய சர்ப்பம் எழுந்து அதிக கோபமாய் இருந்தது. மேலே குதித்து மேலேயிருந்து கீழே விழும்.

630. பா :—ஒருவன் ஒரு அழகிய குதிரையை வைத்திருந்தான். அவனுடைய முயற்சி எல்லாம் செய்தும் அது ஜோடியாய்ப் போவதில்லை. ஒரு வித்வான்

அது எவ்விடத்திலிருந்து வந்ததோ அவ்விடத்துக்கே அதைக் கொண்டுபோகச் சொன்னான். அப்படியே செய்ய அது அடங்கி உபயோககர்மாக ஆயிற்று.

631. பாபா B. V. தேவ் என்பவரை நோக்கி நீ நான்கு கொடுத்தாய். உண்மைதான். ஆயினும் பாபாவுக்குக் கிடைப்பது ஒன்றுதான்.

632. பாபா. G. S. K யின் மனைவியை நோக்கி:— வானம் மேகத்தால் மூடியிருக்கிறது. மழை பெய்யும். பயிர்கள் வளர்ந்து முதிரும். மேகங்கள் கலையும், நீ ஏன் பயப்படுகிறாய்?

633. **Repetition**

634. சாமா.—தேவா, தாங்கள் இயந்திரக் கல்லில். எதற்காக (கோதுமை) மாவு அரைக்கிறீர்கள்?

பா:—என்னிடம் யார் யார் வருகிறார்களோ அவர்களுக்காக நான் அரைக்க வேண்டியிருக்கிறது.

Printed at The Liberty Press, G. T., Madras, and published by All India Sai Samaj, 2/14 T. S. V. K. St., Mylapore.

The
Liberty Press,
Madras.